306

# தமிழ்ப் பூஞ்சோலை

எட்டாம் வகுப்பு

தி புக் சென்டர்
கோவை

T3
031(8)
N64
147163

# தமிழ்ப் பூஞ்சோலை

(எட்டாம் வகுப்புக்குரியது)

[புதிய ஒன்பதாம் வகுப்புக்குரியது]

306
3-64

ஆசிரியர்கள் :

**வித்துவான் நா. துரைசாமி,** எம்.ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
பி. எஸ். ஜி. கலைக் கல்லூரி, பூளைமேடு, கோவை-4.

**வித்துவான் த. சிவசங்கரனர்,**
தலைமைத் தமிழாசிரியர்,
தி. அ. இராமலிங்கஞ் செட்டியார் உயர்நிலைப் பள்ளி,
கோயமுத்தூர்-11.

MADRAS RECORD OFFICE
MADRAS

**விலை ரூ. 2**

ஸ்ரீ புக் சென்டர்

**ராஜ வீதி : : கோயமுத்தூர்-1**

முதற் பதிப்பு: 1961.
மறு பதிப்பு: 1964.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008
147163
T3
031(8)
N64

*Name of the Book:* TAMIL POONJOLAI (VIII Standard)

*Names of the Authors:* Vidwan N. Doraiswamy, M.A.
Vidwan D. Sivasankaranar.

*Name of the Publishers:* THE BOOK CENTRE,
Raja Street, Coimbatore-1.

*Name of the Printers:* Progressive Printers, Madras-1.

*Kind of paper used:* 14·5 Kg. White Printing.

*Price per copy:* Rs. Two only.

தமிழ்நாடு பாடப் புத்தகக் குழுவினரால்
அங்கீகரிக்கப்பட்டது. ஆதாரம்:
கெஜட் தேதி: 16-5-62 பக்கம்: 24

சென்னை நகர ஏஜன்டுகள்:
**எம். தாமோதரம் & கம்பெனி**
அப்பா பில்டிங்ஸ் : : சென்னை-1.

# முன்னுரை

இந்நூல் அரசியலார் 1958 ஏப்பிரல் 13ஆம் நாள் வெளியிட்ட புதிய பாடத்திட்ட முறைக்கேற்ப எட்டாம் வகுப்பிற்கெனத் தொகுக்கப் பெற்றதாகும்.

பல ஆண்டுகளாக உயர்நிலைப்பள்ளி மாணவர்கட்குத் தமிழ் கற்பிக்கும் பணியில் ஈடுபட்ட நாங்கள், மாணவர் தகுதி, விருப்பு, வெறுப்பு இவைகளை நன்கறியும் வாய்ப்பைப் பெற்றேம். ஆகவே, அவர்கள் விரும்பிக் கற்பதற்கேற்ற வகையில் இந் நூலினை எழிலும் வளமும் கொழிக்குமாறு அமைத்துள்ளோம். இந்நூலில் அறிவைத் தூண்டத்தக்க பயிற்சிகள் அமைத்துள்ளோம். கற்பார்க்கும், கற்பிப்பார்க்கும் பெரிதும் துணைபுரியும் வகையில் மிக விளக்கமாகக் குறிப்புகள் கொடுத்துள்ளோம். ஆதலின், மாணவர் தாமே விரும்பிக் கற்றுத் தமிழறிவும், தமிழ்ப் பற்றும் அடைய இந் நூல் பெரிதும் துணைபுரியும் என நம்புகின்றேம்.

செய்யுட் பகுதியிலும், உரைநடைப் பகுதியிலும் உள்ள பகுதிகளைச் சேர்க்க இசைவு தந்த ஆசிரியர்கள் அனைவர்க்கும் எங்கள் உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

கல்வித் துறையில் உள்ள பெருமக்கள் அனைவரும் ஆதரவு தந்து, மேலும் இத்தகைய பணிகள் புரிய எங்களை ஊக்குவிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேம்.

—தொகுப்பாசிரியர்கள்

## செய்யுட் பகுதி


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| **I.** | வாழ்த்து | | |
| | 1. கடவுள் வாழ்த்து | ... | 1 |
| | 2. மொழி வாழ்த்து | ... | 2 |
| | 3. நாட்டு வாழ்த்து | ... | 3 |
| **II.** | அறவுரை | | |
| | 1. திருக்குறள் | ... | 5 |
| | 2. நாலடியார் | ... | 19 |
| | 3. பழமொழி | ... | 22 |
| | 4. திருமந்திரம் | ... | 24 |
| **III.** | தொடர்நிலைச் செய்யுள் | | |
| | 1. மணிமேகலை | ... | 26 |
| | 2. கம்பராமாயணம் | ... | 30 |
| | 3. நள வெண்பா | ... | 36 |
| | 4. அரிச்சந்திர புராணம் | ... | 43 |
| | 5. திருவிளையாடற் புராணம் | ... | 48 |
| | 6. ஆசிய சோதி | ... | 56 |
| | 7. அன்பின் வெற்றி | ... | 59 |
| **IV.** | பல்சுவை | | |
| | அ. இயற்கை எழில் | ... | 63 |
| | ஆ. சீட்டுக்கவி | ... | 67 |
| | இ. இரட்டுற மொழிதல் | ... | 68 |
| | ஈ. சிறு நூல்கள் | ... | 70 |
| | உ. வழிபாட்டுப் பாடல்கள் | ... | 76 |


## உரைநடைப் பகுதி


| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழோசை<br>டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் | ... | 83 |
| 2. | அவன் யார்?<br>டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் | ... | 89 |
| 3. | ஓர் அரிய படிப்பினை<br>நெ. து. சுந்தரவடிவேலர் | ... | 95 |
| 4. | தமிழ் தந்த பாரதி<br>ம. ரா. போ. குருசாமி | ... | 101 |
| 5. | குடிமக்கள் காப்பியம்<br>தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் | ... | 108 |
| 6. | ஓவியக் கலைஞர்—இரவி வர்மா<br>பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை | ... | 114 |
| 7. | வீரத் தாய்<br>வித்துவான் நா. துரைசாமி | ... | 119 |
| 8. | சேக்கிழார்<br>சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் | ... | 128 |
| 9. | தொழிற் கல்வி<br>வித்துவான் எஸ். ஆறுமுக முதலியார் | ... | 134 |

| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 10. | பள்ளரும் பள்ளியரும்<br>டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை | ... | 139 |
| 11. | பொன்னனைய காந்தியண்ணல்<br>புலவர் அரசு | ... | 145 |
| 12. | மனையினை அழகுபடுத்தல்<br>குமாரி அன்னுவரிது | ... | 151 |
| 13. | தம்பிக்கு<br>டாக்டர் மு. வரதராசனார் | ... | 158 |
| 14. | பெய்யெனப் பெய்யும் மழை<br>பி. சவரிமுத்து | ... | 164 |
| 15. | "நாட்டு வாழ்க்கையே சிறந்தது"<br>புலவர் ஏகாம்பரநாதன் | ... | 172 |
| 16. | போக்கு வரத்தும் பொருளாதாரமும்<br>டாக்டர் ப. நடராசன் | ... | 179 |
| 17. | கோவூர் கிழார்<br>வித்துவான் சிவசங்கரனார் | ... | 187 |


செய்யுட் பகுதி, உரைநடைப் பகுதிகளிலுள்ள உரிமைப் பாடல்கள், கட்டுரைகள் ஆகியவைகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## மனப்பாடம் செய்தற்குரிய பகுதிகள்

| | | | வரிகள் |
|---|---|---|---|
| I. | வாழ்த்து : | | |
| | கடவுள் வாழ்த்து (இராமலிங்க அடிகளார்) | ... | 8 |
| | மொழி வாழ்த்து (சுத்தானந்த பாரதியார்) | ... | 4 |
| II. | அறவுரை : | | |
| | திருக்குறள் 1, 5, 11, 14, 21, 24, 30, 37, 38, 42, 48, 51, 54, 61, 63, 65, 67, 73, 76, 79. | ... | 40 |
| | நாலடியார் — செய்யுள் 4 | ... | 4 |
| | பழமொழி — செய்யுள் 1 | ... | 4 |
| | திருமந்திரம் — செய்யுள் 1 | ... | 4 |
| III. | தொடர்நிலைச் செய்யுள் : | | |
| | கம்பராமாயணம் — செய்யுட்கள் 6, 7 | ... | 8 |
| | நளவெண்பா — செய்யுட்கள் 6, 8 | ... | 8 |
| | திருவிளையாடற் புராணம் — செய்யுட்கள் 14, 15 | ... | 8 |
| IV. | பல்சுவைப் பகுதி : | | |
| | இயற்கை எழில் (வண்டும் மந்தியும்) | ... | 4 |
| | இரட்டுற மொழிதல் ('ஆவலுடன்' பாடல்) | ... | 4 |
| | தேவாரம் ('குனித்த புருவம்' பாடல்) | ... | 4 |
| | திவ்வியப் பிரபந்தம் ('இருளிரிய' பாடல்) | ... | 4 |
| | | ... | 104 |

குறிப்பு: திருக்குறள் பகுதி முழுவதையும் மனப்பாடம் செய்தல் நன்று.

# தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா

த்ராவிட உத்கல வங்கா

விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## தேசீய கீதத்தின் பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்பநாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப் படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

I

செய்யுட் பகுதி

# வாழ்த்து

★

## 1. கடவுள் வாழ்த்து

கடவுளை வாழ்த்துதல் என்பது இதன் பொருள். எடுத்துக் கொண்ட செயல் இனிது முடிதற் பொருட்டுக் கடவுளை வாழ்த்துதல் மரபு. கீழ்வரும் கடவுள் வாழ்த்துப் பாடல் எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவாக அமைந்ததாகும்.

### திருவருட்பா

திரு+அருள்+பா=திருவருட்பா. இறைவன் திருவருளால் பாடப்பட்டமையின் இந் நூல் இப் பெயர் பெற்றது. இறைவன் திருவருளைப் பெறுதற்குக் கருவியாக விளங்கும் பாடல்களால் ஆன நூலாதலின் இந் நூல் இப் பெயர் பெற்றதெனவும் கூறலாம்.

பாடப் பகுதி திருவருட்பாவில் முதல் திருமுறையில் மகாதேவ மாலை என்னும் பகுதியில் 48 ஆம் செய்யுளாகும்.

பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே! எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே! அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை எல்லாம்
தணிக்கின்ற தருவே! பூந் தடமே! ஞானச்
செங்குமுதம் மலரவரு மதியே! எல்லாம்
செய்யவல்ல கடவுளே! தேவ தேவே.

குறிப்புக்கள் :

#### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : இராமலிங்க அடிகள். வேறு பெயர்கள் : திருவருட் பிரகாச வள்ளலார், வள்ளலார், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள். ஊர் : சிதம்பரத்தை அடுத்த மருதூர். பெற்றோர் : இராமையாப் பிள்ளை, சின்னம்மை. குலம் : கருணீகர், (கணக்கர்). சமயம் :

சமரச சன்மார்க்கம். இயற்றிய நூல்கள் : திருவருட்பா, மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் முதலியன. காலம் : கி. பி. *1823* முதல் *1873* முடிய.

அருஞ்சொற் பொருள்

பொங்கு - நிறைந்த. நிறைவாய் - (அதனால்) நிறைவெய்தி. கதியே - உயிர்கட்கெல்லாம் புகலிடமாக விளங்கும் இறைவனே ! மயல் - அறியாமை. சோடை - சோர்வு. ஞானம் - அறிவு. செங் குமுதம் - செவ்வாம்பல் மலர். செம்மை+குமுதம்=செங்குமுதம் ; பண்புத் தொகை. கங்கு - எல்லை. கங்கு கரை : உம்மைத் தொகை.

## 2. தமிழ் மொழி வாழ்த்து

தமிழைத் தாயாகக் கருதி வாழ்த்துதல் என்பது இதன் பொருள்.

காதொளிருங் குண்டலமுங் கைக்குவளை
யாபதியுங் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும் மெல்லிடையில்
மேகலையுஞ் சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க.

குறிப்புக்கள் :

ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : சுத்தானந்த பாரதியார். இயற்பெயர் : வேங்கட ரமணன். பிறப்பிடம் : சிவகங்கை. குலம் : அந்தணர். பெற்றோர் : ஜடாதரர், காமாட்சியம்மை. ஆசிரியர் : தெய்வசிகாமணிப் புலவர். இயற்றிய நூல்கள் : திருக்குறளின்பம், வளையாபதி அகவல், குண்டல கேசி அகவல், தமிழ்க்கனல், பாரத சக்தி மகா காவியம் முதலியன. பிறந்த ஆண்டு : கி. பி. *1897*.

அருஞ்சொற் பொருள்

ஒளிரும் - விளங்கும். மென்மை+இடை=மெல்லிடை ; பண்புத் தொகை. தாள் இணை - இரு திருவடிகள். தாங்கு தமிழ் : வினைத் தொகை. வாழ்க : வியங்கோள் வினைமுற்று. குண்டலம் - காதணி (குண்டலகேசி). வளையாபதி - வளைகள் (வளையாபதி). சிந்தாமணி - ஒருவகை மணி (சீவக சிந்தாமணி). மேகலை - ஒட்டியாணம். (மணி மேகலை). சிலம்பு - காலணி (சிலப்பதிகாரம்). போது - மலர். சூளா மணி - தலையில் அணியப்படும் அணி (சூளாமணி).

## 3. நாட்டு வாழ்த்து

நாட்டைத் தெய்வமாகக் கருதி வாழ்த்துதல் என்பது இதன் பொருள்.

பொங்குபசுங் காடணிந்து பொழிலுடுத்த நாடு
    பூங்கொடியின் செடிவனங்கள் பூண்டுபொலி நாடு
தெங்குபனை கன்னலொடு கமுகுசெறி நாடு
    செவ்வாழை மா பலவின் தேன்சொரியு நாடு
தங்கமெனு மூலிகைகள் தாங்கிநிற்கு நாடு
    தாயனைய கீரைவகை தாதுவளர் நாடு
செங்கதிர்நெல் வரகுதினைச் செல்வம்விளை நாடு
    சீர்பருத்தி நார்மரங்கள் சிறந்ததமிழ் நாடே.

குறிப்புக்கள் :

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனர். பிறந்த ஊர் : செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த துள்ளம். பெற்ரோர் : விருத்தாசல முதலியார், சின்னம்மை. குலம் : வேளாளர். சமயம் : சமரச சன்மார்க்கம். இயற்றிய நூல்கள் : முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், கிறித்து அருள் வேட்டல், பொதுமை வேட்டல் முதலிய செய்யுள் நூல்களும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும், சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து முதலிய உரைநடை நூல்களும் ஆகும். காலம் : கி. பி. 1883-1953.

### அருஞ்சொற் பொருள்

பொங்கு - (செழுமை) நிறைந்த. பொழில் - சோலை. பொலி - விளங்கு. தெங்கு - தென்னை. கன்னல் - கரும்பு. கமுகு - பாக்கு. பசுமை+காடு=பசுங்காடு ; பண்புத் தொகை. பொலி நாடு, வளர்நாடு, செறிநாடு, விளைநாடு : வினைத் தொகைகள்.

### வினக்கள்

1. திருவருட்பா—குறிப்பு வரைக.
2. இறைவனின் எங்கும் நிறைந்த தன்மையை இராமலிங்கர் எவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ?
3. தமிழரசி எவ்வாறு விளங்குவதாகச் சுத்தானந்த பாரதியார் கூறியுள்ளார் ?
4. தமிழ்நாட்டின் இயற்கை வளமாகத் திரு. வி. க. அவர்கள் கூறுவன யாவை ?

## பயிற்சி

(அ) பிரித்து எழுதுக : செங்கோல், போதொளிர், பசுங்காடு.

(ஆ) 'பொங்கு பல' என்று தொடங்கும் பாடலினுல் இராம லிங்கர் கொள்கை யாதென அறிகின்ருய் ?

(இ) ஐம்பெருங் காப்பியம், ஐஞ்சிறு காப்பிய நூல்கள் யாவை என அறிக.

(ஈ) தமிழ் நாட்டின் இயற்கை வளம் பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.

# II

# அறவுரை

★

## 1. திருக்குறள்

**நூல்வகை :** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

**அமைப்பு :** அறத்துப் பால், பொருட்பால், காமத்துப் பால் என்னும் மூன்று பால்களை உடையது. அதிகாரத்திற்குப் பத்துக் குறட்பாக்கள் வீதம் 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் உடையது.

**சிறப்பு :** *(1)* ஆங்கிலம், கிரீக், இலத்தீன் போன்ற பிறநாட்டு மொழிகளிலும், இந்தி, வடமொழி போன்ற நம் நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. *(2)* "ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழியும், "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என்ற பழமொழியும் இந் நூலின் பெருமையை விளக்குவனவாம். *(3)* இந் நூலின் பெருமையை விளக்கியே 'திருவள்ளுவமாலை' என்ற நூல் பாடப் பட்டுள்ளது.

**பெயர்க் காரணம் :** திரு+குறள்=திருக்குறள். மேன்மையான குறள் வெண்பாக்களினால் ஆனநூல் என்பது பொருள். குறள்- இரண்டடி வெண்பா. திரு - அடைமொழி. திருக்குறள் என்பது பாடலை உணர்த்தாது நூலை உணர்த்துவதால் அடையடுத்த கருவி யாகு பெயர்.

**நூலின் வேறு பெயர்கள் :** முப்பால், உத்தரவேதம், தெய்வ நூல், திருவள்ளுவர், பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொது மறை.

**இந் நூலின் பழைய உரையாசிரியர்கள் :** பரிமேலழகர், தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப் பெருமாள், காளிங்கர்.

### கடவுள் வாழ்த்து

வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்(கு)
யாண்டும் இடும்பை இல. 1

### வான் சிறப்பு

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றுங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 2

### நீத்தார் பெருமை

இருமை வகைதெரிங்(து) ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்(று) உலகு. 3

### அறன் வலியுறுத்தல்

சிறப்பீனும் செல்வமும் ஈனும்; அறத்தினூஉங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு? 4

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். 5

### இல்வாழ்க்கை

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்? 6

### வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 7

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. 8

### மக்கட்பேறு

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்(கு) எல்லாம் இனிது. 9

### அன்புடைமை

அறத்திற்கே அன்புசார்(பு) என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 10

### விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 11

### இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 12

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 13

## செய்ந்நன்றி அறிதல்

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 14

## நடுவு நிலைமை

கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின். 15

## அடக்கமுடைமை

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. 16

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 17

## பொறையுடைமை

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 18

## அழுக்காறாமை

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 19

## வெஃகாமை

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 20

## ஒப்புரவறிதல்

ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 21

## ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 22

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. 23

அற்ருர் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி. 24

### புகழ்

ஒன்ரு உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்ருது நிற்பதொன் றில். 25

வசையென்பவை யத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெருஅ விடின். 26

### புலால் மறுத்தல்

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி(து) ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 27

### தவம்

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 28

### கூடா ஒழுக்கம்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். 29

### வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 30

### வெகுளாமை

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 31

### இன்ன செய்யாமை

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 32

### நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. 33

### மெய்யுணர்தல்

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 34

### ஊழ்

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 35

### இறைமாட்சி

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 36

### கல்வி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 37

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 38

### கல்லாமை

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 39

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 40

### கேள்வி

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. 41

### அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 42

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ(டு)
அவ்வ துறைவ தறிவு. 43

### பெரியாரைத் துணைக்கோடல்

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 44

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். 45

### தெரிந்து செயல்வகை

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 46

நன்றாற்றல் உள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந்(து) ஆற்றாக் கடை. 47

### வலியறிதல்

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்(து) ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும். 48

ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை. 49

### காலம் அறிதல்

அருவினை என்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின். 50

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. 51

### இடன் அறிதல்

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின். 52

### தெரிந்து வினையாடல்

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 53

### சுற்றம் தழால்

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. 54

### பொச்சாவாமை

அச்சம் உடையார்க் கரணில்லை; ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 55

### செங்கோன்மை

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 56

### வெருவந்த செய்யாமை

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. 57

### கண்ணோட்டம்

கண்ணோட்டத் துள்ள துலகியல்; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 58

### ஊக்கம் உடைமை

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்கள் ஆதலே வேறு. 59

### ஆள்வினை உடைமை

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. 60

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 61

### அமைச்சு

அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 62

### வினைத் தூய்மை

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 63

### வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற. 64

### குறிப்பு அறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 65

### படைச் செருக்கு

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. 66

### நட்பு

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 67

### நட்பு ஆராய்தல்

ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். 68

### பழைமை

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின். 69

### சூது

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில். 70

### மானம்

புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. 71

### சான்றாண்மை

கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 72

இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு? 73

### நாணுடைமை

அணியன்றே நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்
பிணியன்றே பீடு நடை. 74

### குடிசெயல் வகை

குற்றம் இலனய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 75

### உழவு

இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். 76

### நல்குரவு

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 77

### இரவச்சம்

இரவுள்ள உள்ளம் உருகும்; கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 78

### கயமை

தேவர் அனையர் கயவர்; அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். 79

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 80

குறிப்புக்கள் :

### ஆசிரியர் வரலாறு

*ஆசிரியர்: திருவள்ளுவர். இவர் அரசர்க்கு உள்படு கருமத் தலைவராய் விளங்கியதால் 'வள்ளுவர்' எனப் பெயர் பெற்றார் என நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற அறிஞர் கூறுவர். ஆசிரியரின் வேறு பெயர்கள்: நாயனர், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகன், மாதானுபங்கி, செந்நாப் போதார், பெரு நாவலர். காலம்: கடைச் சங்க காலம்.*

அருஞ்சொற் பொருள்

1. வேண்டுதல் - விருப்பு. வேண்டாமை - வெறுப்பு. சேர்ந் தார் - இடைவிடாது நினைத்தவர். இடும்பை - பிறவித் துன்பங்கள்.

2. விசும்பு - மேகம். இடவாகு பெயர்; ஆங்கே - அப்பொழுதே. பசுமை+புல்=பசும்புல் : பண்புத்தொகை ; காண்பு+அரிது =காண்ப ரிது - காண்பு : தொழிற் பெயர்.

3. இருமை வகை - பிறப்பு, வீடு என்னும் இரண்டனது கூறு பாடுகள். உலகு பிறங்கிற்று - உலகில் உயர்ந்தது ; ஏழாம் வேற்றுமைத் தொகை. பூண்டார் - வினையாலணையும் பெயர்.

4. சிறப்பு - வீடு பேறு, புகழ். ஈனும் -தரும். ஊங்கு - மிக்க. ஆக்கம் - மேன்மேல் உயர்தல். எவன் - யாது? அறத்தினூஉங்கு - இன்னிசை யளபெடை.

5. ஒல்லும் வகையான் - இயலும் திறத்தான். ஓவாது - ஒழியா மல்: எதிர்மறை வினை எச்சம். வாய் - இடம். செயல்: வியங்கோள் வினைமுற்று.

6. அறத்து ஆற்றின் - அறவழியில் செய்தால். புறத்து ஆறு- துறவறம் முதலிய வேறு நெறி. போஒய் : செய்யுளிசை அளபெடை.

7. பெருந்தக்க - பெருமையுடைய பொருள்கள். திண்மை-உறுதி நிலை, வலிமை.

8. நிறை - நெஞ்சைக் கற்பு நெறியினின்றும் மாறாது நிறுத்தல். தலை-முதன்மையானது. எவன் செய்யும்-என்ன பயனை உண்டாக்கும்.

9. மன்னுயிர்க்கு - நிலைபெற்ற அறிவுடைய மக்களுயிர்க்கு. இனிது - இன்பம் பயப்பதாகும் : குறிப்பு வினைமுற்று.

10. மறத்திற்கும் - வீரத்திற்கும் (பாவத்தை நீக்குதற்கும் என்று பொருள் கொள்ளலாம்). சார்பு - துணை. என்ப - என்று கூறுவர் : படர்க்கைப் பலர்பால் வினைமுற்று.

11. வேளாண்மை - உதவி. ஓம்பி - (பொருளைக்) காத்து. விருந்து - விருந்தினர் : பண்பாகு பெயர்.

12. ஈரம் - அன்பு. அளைஇ - கலந்து: சொல்லிசை அளபெடை. செம்பொருள் - மெய்ப் பொருள், அறம். படிறு - வஞ்சனை. ஆல் : அசை.

13. நாடி - ஆராய்ந்து. அல்லவை - பாவங்கள் : வினையாலணையும் பெயர்.

14. ஆற்றல் - ஈடாகக் கொடுத்தல். செய்யாமல் - தான் முன்பு எந்த உதவியும் செய்யாமல் இருக்க. அரிது - அருமையாகும்.

15. ஒரீஇ - நீங்கி: சொல்லிசை அளபெடை. அல்ல - நடுநிலைமை அல்லாதன. கெடுதல் - கெடுவேன். தன்மை ஒருமை வினைமுற்று.

16. ஆக்கம் - செல்வம். அதனினூஉங்கு: இன்னிசை அளபெடை.

17. பணிதல் - பணிவுடையராக ஒழுகுதல். செல்வம் தகைத்து- வேறொரு செல்வமாகும் சிறப்பினையுடையது.

18. ஒன்றாக - ஒரு பொருளாக. வையார் - கருதார். பொதிந்து வைப்பர் - இடைவிடாது நினைந்து போற்றுவர். ஒறுத்தாரை, பொறுத்தாரை : வினையாலணையும் பெயர்கள்.

19. அழுக்காற்றின் - பொறாமையினால். அல்லவை - நல்லவை அல்லாதவை, தீங்கு. ஏதம் - துன்பம். படுபாக்கு - உண்டாதல். 'பாக்கு': ஈற்று வினை எச்சம்

20. அஃகாமை - சுருங்காதிருத்தல். வெஃகாமை - விரும்பாமை.

21. ஒப்புரவு-உலக நடை பேற்றிற்குரிய உதவி. கோள்-கொள்ளு தல். கேடு - பொருள் அழிவு. கோள், கேடு : முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள்.

22. குறி எதிர்ப்பு - ஓர் அளவு குறித்து வாங்கிப் பின்னர் வாங் கியவாறே திரும்பத் தரப்படும் பொருள். நீரது - தன்மையுடையது. ஒன்று :எண்ணலளவை யாகுபெயர்.

23. எவ்வம் - இழிவு, (கேட்பார்க்குத் துன்பம் தரும் சொல் என் றும் பொருள் கூறலாம்). இக் குறளுக்குப் பரிமேலழகர் உரை பாராட் டத்தக்கது.

24. அற்றார் - வறியவர். அழிபசி - அழிக்கும் பசி, கடும்பசி: வினைத்தொகை. தீர்த்தல் - நீக்கிடுக. வியங்கோள் வினைமுற்று. வைப் புழி - வைக்குமிடம்.

25. ஒன்றாக - (தனக்கு) நிகரின்றி. பொன்றாது - அழியாது.

26. வசை - பழி, இகழ்ச்சி. எச்சம் - எஞ்சி நிற்பது (மிச்சம்). பெறாஅ : செய்யுளிசை அளபெடை.

27. தன்ஊன் - தன் உடம்பு (மாமிசம்). பிறிதுஊன் - வேறு ஓர் உயிரின் உடல். உண்பான் : வினையாலணையும் பெயர்.

28. ஈண்டு - இப் பிறப்பில். செய்தவம்: வினைத்தொகை.

29. மழித்தல் - மொட்டையடித்தல். நீட்டல்-சடை வளர்த்தல். உலகம் - உயர்ந்தோர் : இடவாகு பெயர்.

30. படுவது+யாது=படுவதியாது : குற்றியலிகரம். யாதொன் றும் - வேறு உயிர்க்குத் தீங்கு சிறிதும்.

31. காக்கின் - துன்பம் அடையாது காக்க எண்ணின்.

32. நோய் - துன்பம், இன்னாதன. இக் குறள் சொற்பொருள் பின் வருநிலையணி.

33. நெருநல் - நேற்று. பெருமை - சிறப்பு. இங்கு நிலையாமை யைக் குறித்தது.

34. நாமம் கெடக் கெடும் - பெயர் கெட. பெயர் கெட்டால் அவற்றின் காரியமாகிய வினைப் பயனும் கெடும். நோய் - தீவினைப் பயன். மயக்கம் - அறியாமை.

35. நன்றுங்கால் - நல்வினை விளையும்போது. அன்றுங்கால் - நல் வினை அல்லாத தீவினை விளையும்போது. எவன்-எக்காரணம் பற்றியோ?

36. மீக்கூறும் - (உலகம்) உயர்த்திக் கூறும். மன்னன் நிலம் - ஆறும் வேற்றுமைத் தொகை.

37. என்ப - என்று கூறப்படுவன. கண் என்ப - கண் என்று கூறுவர்: பலர்பால் வினைமுற்று; 'என்ப' முதலில் உள்ள இரண்டும் வினையாலணையும் பெயர்கள்.

38. உவப்பத் தலைக் கூடி - மகிழுமாறு சேர்ந்து இருந்து. உள்ள- (அவரை எவ்வாறு அடைவோம் என்று) நினைக்க. அனைத்து - அத் தன்மைத்து.

39. தகைமை- (தன்னை அறிவுடையன் எனக் கருதும்) மதிப்பு. தலைப்பெய்து - (கற்றவனைக்) கண்டு. கல்லா ஒருவன். ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

40. இலங்கு நூல் - விளங்கும் நூல்: வினைத்தொகை. ஏனையவர்- கல்லாதவர்.

41. நுணங்கிய - நுட்பமாகிய. வாயினர் - மொழியினர்.

42. மெய்ப் பொருள் - உண்மையான பொருள்.

43. எவ்வது உறைவது - எவ்வழியில் ஒழுகுவது.

44. தமரா(க) - தமக்குச் சிறப்புடையவராக: தொகுத்தல் விகாரம்.

45. ஏமரா - காவலற்ற. இடிப்பார் - இடித்துக் கூறும் அறிஞர். வினையாலணையும் பெயர்.

46. முதல் - இப்போதுள்ள முதல் பொருள். ஊக்கார் - மேற் கொள்ளார்.

47. நன்று - நல்ல உதவி. ஆற்றுக்கடை - செய்யாத இடத்து.

48. கொம்பர் - கொம்பு என்பதன் ஈற்றுப் போலி. அஃது இறந்து - அவ்வளவினைக் கடந்து; பிறிது மொழிதல் அணி.

49. ஆகாறு - பொருள் வரும் வழி. இட்டிது - சிறிது. போகாறு - பொருள் செலவாகும் வழி. அகலாக் கடை - அகன்றதாக இல்லா திருக்குமாயின்.

50. அருவினை - (செய்தற்கு) அருமையான செயல்: பண்புத் தொகை.

51. கூம்பும் பருவம் - ஒரு செயலை மேற்கொள்ளாதிருக்கும் காலம். சீர்த்த இடம் - வினைமேல் செல்லுங்காலம். உவமையணி.

52. எஞ்சாமை - (எல்லாவற்றையும்) ஒழியாமல்: எதிர்மறைத் தொழிற் பெயர்.

53. தேற்றம் - ஐயமின்றித் தெளியும் ஆற்றல். நான்கும்: முற் றும்மை. உடையான் கட்டே - உடையவன் கண்ணதே.

54. பற்று அற்ற கண்ணும் - செல்வம் அற்ற சுற்றத்தார் இடத் தும். கண்: ஏழன் உருபு. ஏ: பிரிநிலை.

55. பொச்சாப்பு - மறதி: தொழிற்பெயர். அரண் - காவல்: உவமையணி.

56. பசுமை+கூழ்=பைங்கூழ்: பண்புத்தொகை. நேர்-ஒப்பாகும்.

57. அருஞ் செவ்வி - காண்பதற்கு அருமை. கண்டு அன்னது - காணப்பட்டால் போல்வதொரு குற்றம். போஉம்: செய்யுளிசை அளபெடை.

58. கண்ணோட்டம் - இரக்கம், அருள். நிலம் + கு=நிலக்கு-நிலத்திற்கு. உண்மை - உள்ளவராதல்.

59. உரம் - திண்மையான அறிவு. உள்ளம் - ஊக்கம். வெறுக்கை - மிகுதி.

60. தாளாண்மை - முயற்சி. வேளாண்மை - உபகாரம் செய்தல். செருக்கு - மேம்பாடு. தகைமைக்கண் - குணத்தினிடத்து.

61. மெய்வருத்தக் கூலி—உடம்பு வருந்திய வருத்தத்தின் அளவு பயன். தெய்வம் - விதி.

62. அறிகொன்று - (அறிந்து சொன்னவர்) அறிவையும் அழித்து. அறியான் - (தானும்) அறியாதவன். உழை இருந்தான் - அருகில் உள்ள அமைச்சன்.

63. ஈன்றாள் - பெற்றதாய்: வினையாலணையும் பெயர். செய்யற்க: எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

64. திட்பம் - உறுதி. மற்றைய - படை, நட்பு, அரண் ஆகிய வற்றின் திண்மை.

65. கடுத்தது - மிகுந்துள்ளது: உவமையணி.

66. விழுப்புண் - போரில் முகத்திலும், மார்பிலும் ஏற்படும் புண். நாளை எடுத்து - கடந்த நாட்களை எண்ணிப் பார்த்து. வழுக்கினுள் - பயன்படாது கழிந்த நாட்களுள். வைக்கும் - வைப்பான்.

67. நவில் - கல். பயில்தொறும் - பழகுந்தோறும். தொடர்பு - நட்பு. நயம் - இன்பம் செய்தல்.

68. ஊதியம் - பேறு, பயன். ஒரீஇ விடல் - நீக்கி விடல்: சொல்லிசை அளபெடை.

69. நோதக்க - வெறுக்கத் தக்கவை. பேதைமை - அறியாமை. பெருங்கிழமை - மிக்க உரிமை.

70. சீர் - புகழ். சிறுமை - துன்பம். சூதின்: 'இன்' ஐந்தன் உருபு ஒப்புப் பொருளில் வந்தது.

71. புத்தேள்: தேவர். உய்யாது - செலுத்தாது. ஆல்-ஆசை.

72. சான்றாண்மை - பல குணங்கள் நிறைந்திருக்கும் தன்மை. நோன்மை - தவம். சால்பு - பல குணங்கள் நிறைந்திருத்தல்.

73. பயத்தது - பயனையுடையது.

74. பீடு நடை: பெருமிதமாக நடக்கும் நடை.

75. குடி செய்து - குடியை உயரச் செய்து. சுற்றும் - சூழ்ந்திருப்பர்.

76. இலம் - இல்லாதவராவேம். அசைஇ - தளர்ச்சியுற்று. நல்லாள் - பெண் : உருவகம்.

77. நல்கூர்ந்தார் - வறிஞர். சோர்வு - பொருள் இன்மை. 'ஏழை சொல் அம்பலத்தில் ஏருது' என்ற பழமொழி இங்கு நினைவு கூர்தற்குரியது.

78. இரவு உள்ள - இரக்கும் கொடுமையை எண்ணினுல். கரவு உள்ள - உள்ளதை ஒளிக்கும் கொடுமையை நினைக்க. உள்ளதூஉம் : இன்னிசை அளபெடை.

79. மேவன - விரும்பியவற்றை : வஞ்சப் புகழ்ச்சியணி.

80. மறை - இரகசியங்கள். உய்த்துரைக்கலான் — பிறரிடம் வலியச் சென்று கூறுதலால். அறை பறை : வினைத்தொகை, உவமை யணி.

## வினுக்கள்

1. யாருக்கு எப்பொழுதும் துன்பம் இல்லை?
2. அறன் வலியுறுத்தல் பற்றி வள்ளுவர் வகுத்துரைப்பது யாது?
3. மன்னுயிர்க் கெல்லாம் இனிது எது ?
4. மறத்திற்கும் அன்பு துணையாவதை விளக்குக.
5. இன் சொல் இலக்கணமும், இன்சொலால் விளையும் பயனும் கூறுக.
6. வையகமும் வானகமும் ஆற்றலரிது. எதற்கு ?
7. அடக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்து யாது ?
8. திருவள்ளுவர் ஈகைபற்றி யாது கூறியுள்ளார் ?
9. 'விற்றுக்கோள் தக்க துடைத்து'—எது ?
10. புகழ் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
11. எவன் அருளை ஆள முடியாது ?
12. தவம் தரும் நன்மை யாது?
13. வாய்மை என்பது யாது ?
14. உலகம் எத்தகைய பெருமை யுடையது?
15. உண்மை அறிவின் இலக்கணம் யாது?
16. நோய் கெடும்—எப்போது ?
17. எத்தகைய மன்னன் நாட்டை உலகு உயர்த்திக் கூறும் ?
18. வாழும் உயிர்க்குக் கண்கள் யாவை ?
19. புலவர் தொழில் யாது?
20. கற்ருர்க்கும் கல்லார்க்கும் உள்ள வேறுபாடு யாது ?
21. அறிவுடைமை பற்றி வள்ளுவர் வகுத்துரைப்பது யாது ?
22. வன்மையுள் எல்லாம் தலை எது ?
23. கெடுப்பார் இலானும் கெடும். யார் ?
24. தெரிந்து செயல்வகைபற்றி வள்ளுவர் யாது கூறியுள்ளார் ?

25. வலியறிதல் அவசியம்—ஏன் என விளக்குக.
26. காலமறிதல் பற்றி வள்ளுவர் கூறியுள்ளது யாது?
27. நன்குடையான் கட்டே தெளிவு—நன்கு யாவை?
28. 'பைங்கூழ் களை கட்டதனோடு நேர்'—விளக்கி வரைக.
29. 'பெருஞ் செல்வம் பேய் கண்டன்ன துடைத்து'—எத்தகை யோன் செல்வம்?
30. ஆள் வினையுடைமை பற்றி வள்ளுவர் வகுத்துரைப்பது யாது?
31. உழையிருந்தான் யார்? அவன் கடன் யாது?
32. சான்றோர் பழிக்கும் வினையை எப்போதுகூடச் செய்யலா காது?
33. 'நவில் தொறும் நூல் நயம் போல்'—இவ் வுவமையை விளக்குக.
34. சான்றாண்மை பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
35. உலகு யாரைச் சுற்றமாய்ச் சுற்றும்?
36. நிலமென்னும் நல்லாள் யாரைப் பார்த்து நகும்?
37. எவரது சொற்பொருள் சோர்வு படும்?
38. உள்ளம் உருகச் செய்யும் செயல் யாது?
39. கயவர் பண்பு யாது?

**பயிற்சி**

(அ) பிரித்து எழுதுக: படிறிலவாம், செல்வத்திற்கியாதெனின், வறியார்க் கொன்றீவதே, பழித்ததொழித்து, தாளாண்மை.

(ஆ) திருக்குறளின் சிறப்பைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

(இ) ஈகை, புகழ் என்னும் தலைப்பின்கீழ் வந்துள்ள குறட்பாக் களை உரைநடைப் படுத்தி எழுதுக.

(ஈ) செய்யுளிசை, சொல்லிசை, இன்னிசை அளபெடைகள்—இவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு தருக.

## 2. நாலடியார்

**நூல் வகை:** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

**அமைப்பு:** இந் நூல் திருக்குறளைப் போலவே முப்பெரும் பிரிவு களையும், துறவறவியல் முதலாக இன்பவியல் ஈறாகப் பதினொரு சிறு பிரிவுகளையும் உடையது. 40 அதிகாரங்களையும், அதிகாரம் ஒன்றுக்குப் பத்து வெண்பாக்கள் வீதம் 400 வெண்பாக்களையும் உடையது.

**சிறப்பு:** திருக்குறளை ஒத்த சிறப்புடையது. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற தொடர் இந் நூற் பெருமையை விளக்கும். G. U. போப் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

பெயர்க்காரணம் : நான்கு + அடி = நாலடி. நான்காகிய அடிகளை யுடைய வெண்பாவால் ஆகிய நூல் என்பது பொருள் : கருவியாகு பெயர். ஆர் - சிறப்பு விகுதி. வேறு பெயர் : நாலடி நானூறு, வேளாண் வேதம்.

ஆசிரியர்கள் : சமண முனிவர்கள்.

காலம் : கி. பி. 2 ஆம் நூற்றாண்டு.

### கல்வி

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. (1)

### அறிவுடைமை

கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும் ; மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனைய ரல்லர் ; எறிகட ற்றண் சேர்ப்ப !
மனத்தனையர் மக்களென் பார். (2)

### மானம்

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் ;—இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் ; விழுமியோர்
மானம் அழுங்க வரின். (3)

### மேன்மக்கள்

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின். (4)

—சமண முனிவர்கள்

குறிப்புக்கள் :

#### நூல் தோன்றிய வரலாறு

எண்ணாயிரம் சமண முனிவர்கள் பஞ்சத்தால் தம் நாடு விட்டுப் பாண்டிய நாடு அடைந்து பாண்டிய மன்னனால் ஆதரிக்கப் பெற்று வாழ்ந்தனர். சில ஆண்டுகளில் தம் நாடு செழித்தமையின் தம் நாடு

செல்ல மன்னனிடம் விடைகேட்டனர். முனிவர்களைப் பிரிய மன மில்லா மன்னன் விடைதரவில்லை. முனிவர்கள் ஒரு நாள் இரவில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடல் பாடித் தம் இருக்கையின்கீழ் வைத்து விட்டுத் தம் நாடு சென்றனர். அடுத்த நாள் ஏவலர் முனிவர்கள் சென்றுவிட்ட செய்தியைக் கூறி ஏடுகளைத் தந்தனர். பாண்டியன் சினங்கொண்டு ஏடுகளை வையை ஆற்றில் எறியச் செய்தான். அவ்வேடுகளுள் 400 ஏடுகள் நான்கடி எதிரேறிச் சென்றன. அவற்றின் பெருமையை அறிந்து பாண்டியன் பதுமனர் என்னும் புலவரைக் கொண்டு அப் பாடல்களை நாலடியார் என்னும் நூலாகத் தொகுப்பித் தான்.

## அருஞ்சொற் பொருள்

*1.* இம்மை - இவ்வுலக இன்பம்: இடவாகு பெயர். தம்மை - (கற்றவர்) தம்மை. விளக்கும் - (புகழால்) விளங்கச் செய்யும். உளர் - உள்ளவர். கேடு - கெடுதல்: **முதனிலை திரிந்த தொழிற் பெயர்.** மம்மர் - அறியாமை. அறுக்கும் - போக்கும். எம்மை - எத்தன்மை. இச் செய்யுள் **ஏகதேச உருவக அணி.**

*2.* எறி கடல் - (அலை) வீசுகின்ற கடல்: **வினைத்தொகை.** சேர்ப்ப - கடல் துறைமுகத்தை யுடையவனே. ஈண்டு - நிறைந்த. உவரி - உவர் நீர். இனிமை+நீர்=இன்னீர். உப்பு+ஈண்டு+உவரி= உப்பீண்டுவரி. பிறக்கும்: **செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.**

*3.* கடமா - மதங்கொண்ட யானை. தொலைச்சிய - கொன்ற. கான் - காடு. வேங்கை - வேங்கைப்புலி. இடம் வீழ்ந்தது - (தன்னால் கொல்லப்பட்டுத் தனக்கு) இடப்புறத்தில் விழுந்த பிராணி. கையுறினும் - (யாதொரு முயற்சி இன்றியும்) கையில் கிடைப்பதானாலும். அழுங்க - கெட. உண்ணாது: **எதிர்மறை வினையெச்சம்.** இச் செய்யுள் **எடுத்துக் காட்டுவமையணி.**

*4.* அம் கண் - அழகிய இடம் (அகன்ற). பாரிக்கும் - வீசும். மன் ஒப்பர் - பெரும்பாலும் ஒத்திருப்பர். **மன்:** இடைச்சொல்; மிகுதிப் பொருளில் வந்தது. மறு - களங்கம். ஆற்றும் - பொறுத்துக் கொள்ளும். தெருமந்து - வருந்தி. இச் செய்யுள் **வேற்றுமையணி.**

## வினாக்கள்

1. நாலடியார்—நூற்குறிப்பு வரைக.
2. 'எம்மை யுலகத்தும் யாம் காணேம்' என்று சமண முனிவர் எதனைக் கூறுகிறார்? அங்ஙனம் கூறக் காரணம் யாது?
3. 'மனத்தனையர் மக்களென்பார்' இதனை விளக்கக் கூறப்பட்ட உவமைகள் யாவை?
4. வேங்கையின் இயல்பாக நாலடியார் கூறுவது யாது? இதனால் உணர்த்தப்பட்ட உயர் கருத்து யாது?
5. திங்களும் சான்றோரும் எதில் ஒப்பர்? எதில் ஒவ்வார்?

பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: இன்னீர், கடற்றண் சேர்ப்ப, அகனிலா.

(ஆ) நாலடியார் தோன்றிய வரலாற்றைத் தெளிவாகக் கேட்டறிக.

(இ) நும் பாடப் பகுதியிலுள்ள நாலடியார்ப் பாடல்களால் நீவிர் அறிந்துகொண்ட கருத்துக்களைத் தொகுத்து வரைக.

(ஈ) 'அங்கண் விசும்பின்' என்று தொடங்கும் பாடல் 'வேற்றுமை அணி' என்பதை விளக்கி வரைக.

## 3. பழமொழி

**நூல் வகை:** பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.

**அமைப்பு:** இந் நூல் 400 வெண்பாக்களை யுடையது.

**சிறப்பு:** பழமொழி அமைந்த வேறு சில நூல்கள் இருப்பினும் அவற்றுள் சிறந்தது இந் நூலே. சிற்சில பாடல்கள் வரலாற்றுக் குறிப்புக்களைக் கொண்டுள்ளமையால் வரலாற்று ஆராய்ச்சிக்கு இந் நூல் துணை புரிகிறது.

**பெயர்க் காரணம்:** ஒவ்வொரு வெண்பாவின் கடைசி அடியிலோ, கடைசி இரு அடிகளிலோ ஒரு பழமொழி வைத்துப் பாடப்பட்டுள் ளமையின் பழமொழி எனப் பெயர் பெற்றது. வேறு பெயர்: பழமொழி நானூறு.

### குலவிச்சை

உரைமுடிவு காணன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும். (1)

### புல் மேயாது புலி

ஒற்கந்தாம் உற்ற இடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்—வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி(து) ஆயினும்
புன்மேயா தாகும் புலி. (2)

### நுணல் வாயாற் கெடல்

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயால் கெடும். (3)

### அயிரையால் வரால் பெறல்

சிறிய பொருள்கொடுத்துச் செய்த வினையால்
பெரிய பொருள்கருது வாரே—விரிபூ
விராஅம் புனலூர ! வேண்டயிரை விட்டு
வராஅ அல் வாங்கு பவர். (4)

**குறிப்புக்கள் :**

### ஆசிரியர் வரலாறு

*ஆசிரியர் : முன்றுறை அரையனார். நாடு : பாண்டிய நாடு. குலம் : அரசர் குலம். ஆண்ட இடம் : முன்றுறை. சமயம் : சமணம். காலம் : கடைச்சங்க காலம்.*

### அருஞ்சொற் பொருள்

*1. உரை - (வழக்கிடுவோர் கூறும்)* சொல். *முடிவு - முடிவான* உண்மை. சொல்லால் - *(வழக்கிடும் இருதிறத்தாரின்)* சொற்களைக் கொண்டு. முறை - நீதி. விச்சை - கல்வி. இச் செய்யுள் **வேற்றுப் பொருள் வைப்பணி.** *பழமொழி :* குலவிச்சை கல்லாமற் பாகம்படும்.

*2.* வற்பம் - பஞ்சம். நலியும் - வருத்தும். ஒற்கம் - வறுமை. நின்ற - *(தாம் முன்பு)* இருந்த. நிற்ப : படர்க்கைப் பலர்பால் வினை முற்று. இச் செய்யுள் **எடுத்துக் காட்டுவமையணி.** *பழமொழி :* பசி பெரிது ஆயினும் புல் மேயாதாகும் புலி.

*3.* முழுகி - அடிப்பாகத்தில் சென்று. நுணலும் - தவளையும் : உம்மை இழிவு சிறப்பு. வாயால் - வாயொலியால். பொல்லாத - தீயன. துயர்ப்படுக்கும் - துன்பத்தில் அகப்படுத்திக் கொள்வான். இச் செய்யுள் **எடுத்துக் காட்டுவமை யணி.** *பழமொழி :* நுணலுந் தன் வாயால் கெடும்.

*4.* விரா அம் - கலந்திருக்கும் : **செய்யுளிசை அளபெடை.** சிறிய பொருள் - *(இம்மையில் தம்மால் இயன்ற)* சிறிய பொருள். பெரிய பொருள் - *(மறுமையில்)* மிக்க செல்வம். வேண்டு - விரும்பு. அயிரை - வரால், மீன் வகை. *பழமொழி :* அயிரை விட்டு வராஅ அல் வாங்குபவர்.

### வினாக்கள்

1. பழமொழி—நூற்குறிப்பு வரைக.
2. 'குலவிச்சை கல்லாமல் பாகம் படும்'—இதன் கருத்தை விளக்கி வரைக.
3. 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது'—இப் பழமொழி கொண்டு விளக்கப்படும் கருத்து யாது?

4. ‘நுணலும் தன் வாயால் கெடும்’—இவ் வுவமையைப் பொருளொடு பொருத்தி விளக்குக.
5. ‘அயிரை விட்டு வரால்’ கொள்பவர் போன்றவர் யார்? விளக்குக.

பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: முதுமக்கள், புன்மேயாதாகும், வேண்டயிரை.
(ஆ) கரிகாற் சோழன் வரலாறு முழுதும் படித்தறிக.
(இ) ‘நுணலுந்தன் வாயாற்கெடும்’ என்ற பழமொழி கருத்தினை அடிப்படையாகக் கொண்டு சிறு கதை ஒன்று வரைக.
(ஈ) நீவிர் அறிந்த பழமொழிகள் ஆறு வரைக.

## 4. திருமந்திரம்

இந் நூல் சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுகிறது. இது ஒன்பது தந்திரங் (பகுதி) களாக அமைந்துள்ளது; 3000 பாடல்களை உடையது.

**பெயர்க்காரணம்:** நிறைமொழி மாந்தர் உலகம் உய்யக் கூறிய உண்மைகளே மந்திரங்களாகும். அவ்வாறு திருமூலர் என்னும் முற்றுந் துறந்த முனிவர் அருளிய செய்யுள் நூலாதலின் இந் நூல் திருமந்திரம் எனப் பெயர் பெற்றது. வேறு பெயர்கள்: தமிழ் மூவாயிரம், திருமந்திரமாலை.

### சமரசம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி இல்லை நுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. (1)

### அறச் சிறப்பு

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர்! விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே. (2)

**குறிப்புக்கள்:**

ஆசிரியர் வரலாறு

ஆசிரியர்: திருமூலர். கயிலை மலையில் வாழ்ந்த கடவுளருள் பெற்ற முனிவர் ஒருவர் தென்னாட்டுக்கு வந்தார். திருவாவடுதுறை என்னும் தலத்துக்கு அருகிலுள்ள சாத்தனூர் வழி சென்றார்.

வழியில் மூலன் என்னும் இடையன் இறந்து கிடக்க, அவனைச் சுற்றி ஆநிரை நின்று கண்ணீர் விடும் காட்சியைக் கண்டு உள்ளம் உருகினார். அருள் உள்ளத்தால் தன் உடலை ஓர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டு, மூலன் உடலில் தன் உயிரைப் புகுத்தி ஆநிரைகளை வீட்டிற்கு ஓட்டிச் சென்றார். திரும்ப வந்து தன் உடலைத் தேடிக் காணாமல் வருந்தினார். இதுவும் ஆண்டவன் அருட் செயலே என்று எண்ணி அவ்வூரிலே யோகத் தமர்ந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மூவாயிரம் பாடல்கள் பாடினார். பின்பு கயிலை சென்று இறைவனடி சேர்ந்தார்.

காலம் : கி. பி. 6 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்பர்.

### அருஞ்சொற் பொருள்

குலம் - இனப் பிரிவு. நமன் - இயமன். (மரணம்) கதி—வேறு வேறான வழிகள் நின்று - (அடங்கி) இருந்து. உய்ம்மின் - பிழையுங் கள். ஒன்றே, ஒருவனே : ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. நன்றே : ஏகாரம் பிரிநிலை. உய்ம்மின்-ஏவல் பன்மை வினைமுற்று.

2. ஆர்க்கும் - (உம்மிடம் வந்தவர்) அனைவர்க்கும். பார்த்து இருந்து-(விருந்தினர் வருகையை எதிர்) பார்த்து (காத்து) இருந்து. வேட்கை-(உண்ணல்) விருப்பம் : தொழிற் பெயர். விரைந் தொல்லை-மிக விரைவாக : ஒரு பொருட் பன்மொழி. அறிமின்-அறிந்து அதன் படி ஒழுகுங்கள். இடுமின், உண்மின், அறிமின் : உடன்பாட்டு ஏவல் பன்மை வினை முற்றுக்கள். என்னன்மின், போற்றன்மின், உண்ணன் மின் ; எதிர்மறை ஏவல்பன்மை வினைமுற்றுக்கள். பழமை+பொருள்= பழம் பொருள்.

### வினாக்கள்

1. திரு மந்திரம்-நூற்குறிப்பு வரைக.
2. திரு மந்திரம்-ஆசிரியர் யார்? குறிப்பு வரைக.
3. மக்கள் யாவரும் இன்பநிலை அடைவதற்குத் திருமூலர் கூறும் வழி யாது?
4. "காக்கை கரவா கரைந்துண்ணும் காலம் அறிமின்"— இவ்வடியின் கருத்தை விளக்கமாக வரைக.

### பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: நமனில்லை, பழம் பொருள், விரைந் தொல்லை.
(ஆ) பன்னிரண்டு திருமுறைகள் யாவை என அறிந்து கொள்க.
(இ) காக்கையின் செயல்களால் நாமறிந்து கொள்ளக் கூடிய நற்பண்புகள் யாவை?
(ஈ) திருமூலர் வரலாறு முழுதும் படித்தறிக.

# III

# தொடர்நிலைச் செய்யுள்

★

## 1. மணிமேகலை

பாத்திர மரபு கூறிய காதை

நூல் வகை: ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று.

ஐம்பெருங்காப்பியங்கள்: சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

அமைப்பு: இந் நூல், கதையைத் தொகுத்துக்கூறும் பதிகத்தை முதலிற் கொண்டு, விழாவறை காதை முதலாகப் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகளை உடையது. ஆசிரியப் பாவால் ஆனது.

சிறப்பு: *(1)* இந் நூலின் அடிகள் உரையாசிரியர் பலராலும் தத்தம் உரைகளில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. *(2)* சொற்சுவை, பொருட் சுவையோடு அணிகள் பல அமைந்து விளங்குவது. *(3)* 'அமிழ்திற் சிறந்த தமிழெனும் மடந்தை அணி மேகலையாம் மணிமேகலை' எனப் புகழப் பெற்றது.

பெயர்க் காரணம்: கோவலன் மாதவி இருவர்க்கும் பிறந்த மணிமேகலையின் வரலாறு கூறும் நூலாதலின் மணிமேகலை என்று பெயர் பெற்றது. இந் நூல் மணிமேகலை துறவு எனவும் வழங்கப் பெறும்.

*[கீழ்வரும் பகுதி பதினன்காம் காதையாகும்.]*

ஆபுத்திரன் தன்னை அடுத்தோர்க்கு உணவளிக்க இயலாமைக்கு வருந்துதல்

ஆங்கவற் கொருநாள் அம்பலப் பீடிகைப்
பூங்கொடி நல்லாய்! புகுந்தது கேளாய்
மாரி நடுநாள் வல்லிருள் மயக்கத்(து)
ஆரிடை உழந்தோர் அம்பலம் மரீஇத்
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி
வயிறுகாய் பெரும்பசி மலைக்கும் என்றலும்
ஏற்றூண் அல்லது வேற்றூண் இல்லோன்
ஆற்றுவது காணன் ஆரஞர் எய்த

### சிந்தாதேவி அமுதசுரபி என்னும் பாத்திரத்தை ஆபுத்திரனுக்கு அளித்தல்

“கேளிது மாதோ கெடுக நின் தீ”தென
யாவரும் ஏத்தும் இருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
“ஏடா! அழியல் எழுந்திது கொள்ளாய்
நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது
வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்தொலை வில்லாத் தகைமைய தென்றே”
தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும்,

### ஆபுத்திரன் சிந்தாதேவியைப் போற்றி வணங்குதல்

“சிந்தா தேவி! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி!
ஏனோர் உற்ற இடர்களை வாயெ”னத்
தான்தொழு தேத்தித் தலைவியை வணங்கி,

### அமுதசுரபியின் உதவியால் ஆபுத்திரன் மன்னுயிர்களின் அரும்பசி களைதல்

ஆங்கவர் பசிதீர்த் தந்நாள் தொட்டு
வாங்குகை வருந்த மன்னுயிர் ஓம்பலின்
மக்களும் மாவும் மரஞ்சேர் பறவையும்
தொக்குடன் ஈண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத் தீண்டிய பறவையின் எழூஉம்
இழுமென் சும்மை இடையின் றொலிப்ப
ஈண்டுநீர் ஞாலத் திவன்செயல்

### இந்திரன் வருகை

இந்திரன்
பாண்டு கம்பளந் துளக்கிய தாதலின்
தளர்ந்த நடையின் தண்டுகால் ஊன்றி
வளைந்த யாக்கையோர் மறையோன் ஆகி
மாயிரு ஞாலத்து மன்னுயிர் ஓம்பும்
ஆருயிர் முதல்வன் தன்முன் தோன்றி

“இந்திரன் வந்தேன் யாது நின்கருத்(து)
உன்பெருந் தானத் துறுபயன் கொள்”என,

**தனக்கு வரம் வேண்டுவதில்லை என்றும் பிறர் பசிப்பிணி ஒழிக்கும் அரும்பேறு ஒன்றே போதுமென்றும் ஆபுத்திரன் கூறுதல்**

வெள்ளை மகன்போல் விலாவிற நக்கீங்(கு)
எள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோன்
“ஈண்டுச் செய்வினை யாண்டுநுகர்ந் திருத்தல்
காண்டகு சிறப்பினுங் கடவுளர் அல்ல(து)
அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரும் இல்லாத் தேவர்நன் னாட்டுக்(கு)
இறைவன் ஆகிய பெருவிறல் வேந்தே!
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தவர்
திருந்து முகங் காட்டுமென் தெய்வக் கடிஞை
உண்டி கொல்லோ உடுப்பன கொல்லோ
பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ
யாவையீங் களிப்பன தேவர்கோன்” என்(றான்)

குறிப்புக்கள் :

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : சீத்தலைச் சாத்தனார். நாடு : சோழநாடு. ஊர் : திருச்சிராப்பள்ளிக்கு அண்மையிலுள்ள சீத்தலை. தொழில் : மதுரையில் கூல வாணிகம். குலம் : வணிகர். சமயம் : பௌத்தம். வழங்கும் வேறு பெயர்கள் : மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச்சாத்தனார், தண்டமிழாசான் சாத்தன், நன்னூற்புலவன். பிற குறிப்பு : கடைச் சங்கப் புலவர் நாற்பதொன்பதின்மருள் ஒருவர். கண்ணகியின் வரலாற்றைச் செங்குட்டுவனுக்குக் கூறி, கோயில் கட்டச் செய்தார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றத் தூண்டியவர். காலம் : கி. பி. 2 ஆம் நூற்றாண்டு.

## அருஞ்சொற் பொருள்

*1—2* வரிகள் : ஆங்கவற்கு - அந்த ஆபுத்திரனுக்கு. அம்பலம் - பலரும் தங்குவதற்குரிய பொதுவிடம், மன்றில். பீடிகை - ஆசனம். புகுந்தது-நிகழ்ந்த நிகழ்ச்சி. பூங்கொடி நல்லாய் என்றது அறவண அடிகள் மணிமேகலையை விளித்தது ஆகும்.

*3—6* வரிகள் : மாரி-மழை. நடுநாள்-இடையாமம். இருள் மயக்கம் - இருட் கலப்பு. ஆரிடை - அரிய வழி. மரீஇ - சேர்ந்து ;

சொல்லிசை அளபெடை. துயில்வோன் - ஆபுத்திரன். தொழுதனர் - தொழுது : முற்றெச்சம். மலைக்கும் - வருத்தும் : செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

*7—8* வரிகள் : ஏற்றூண் - பிச்சை எடுத்து உண்ணும் உணவு. இல்லோன் - இல்லாத ஆபுத்திரன். ஆர்அஞர் - தீர்ப்பதற்கரிய வருத்தம். காணூன் - காணுது : முற்றெச்சம்.

*9—16* வரிகள் : யாவரும் - எச் சமயத்தினரும். கலை நியமம் - நாமகள் கோயில். தேவி சிந்தா விளக்கு - கலைமகள். சிந்தாதேவி - யாவருக்கும் சிந்தையில் தோன்றிச் சொற்பொருள் உணர்த்துபவள். அழியல் - வருந்தற்க ; 'அல்' ஈற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. வறம் - வற்கடம், பஞ்சம். கூரினும் - மிகினும். வறங்கூராது - வறுமையுறுது. தான் என்றது பாத்திரத்தை.

*17—21* வரிகள் : நந்தா விளக்கே - அழியாத விளக்கே : ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மை விளக்கு அழிதல் மாலைத்தாதலின் 'நந்தா விளக்கு' என்றும், கலைமகள் வாக்கின் மடந்தையாதலின் 'நாமிசைப் பாவாய்' என்றும் கூறினுன். அடுக்கிய விளிகளால் சிந்தாதேவிபால் ஆபுத்திரனுக்குள்ள அன்பின் மிகுதி விளங்கும்.

*22—28* வரிகள் : விலங்கு, பறவை முதலியன உண்பிக்கப்படுதல் நோக்கி 'மன்னுயிர்' என்றூர். விடாஅ - விடாமல் : செய்யுளிசை அளபெடை. ஈண்டி - ஒருமிக்கச் சேர்ந்து திரண்டு. பழுமரம் - பழுத்த மரம், ஆலமரமுமாம். சும்மை - ஒலி. இடையின்றி - இடையீடு இல்லாது. பறவையின் : 'இன்' ஐந்தன் உருபு ஒப்புப் பொருளில் வந்தது.

*29—35* வரிகள் : பாண்டு கம்பளம் - வெள்ளைக் கம்பளமாகிய ஆசனம். துளக்கியது - நடுங்கச் செய்தது. இப் பூவுலகில் தானம், சீலம் முதலியவற்றில் சிறந்த பௌத்தர் உளராயினும், அவர்கட்கு ஏதேனும் துன்பம் உளதாறுலும் இந்திரனுடைய பாண்டு கம்பளம் நடுங்குமென்றும், அக் குறிப்பால் அவற்றை யறிந்து வந்து அவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தலும், தீங்குகளை ஒழித்தலும் இந்திரனுடைய கடப்பாடு என்றும் தெரிகிறது. தண்டு கால் ஊன்றி - தான் பிடித்த கோலையே காலாக ஊன்றி. ஆருயிர் முதல்வன் - ஆபுத்திரன் ; உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தார் ஆகலின் 'ஆருயிர் முதல்வன்' என்றூர். எல்லாத் தானத்தினும் அன்னதானம் சிறந்தது ஆகலின் 'பெருந்தானம்' என்றூர். உறுபயன் - மிக்க பயன்.

*36—48* வரிகள் : வெள்ளை மகன் - பயனில் சொல் பேசுபவன். எள்ளினன் - இகழ்ந்து : முற்றெச்சம். போம் - செல்லும் : ஏவற் பன்மை வினைமுற்று. ஈண்டு - இவ்வுலகு. ஆண்டு - அவ்வுலகு, மேலுலகம் ; செய்வினை - செய்யும் புண்ணியங்களின் பயன். காண்டகு - காணத்தகுந்த, செய்கின்ற. தனக்கு அவர் அயலார் என்ற கருத்தினைக் கொண்டு 'நுங்கடவுளர்' என்றுன். புறங்காத்து ஓம்புநர் - (உயிர்

களைப்) பாதுகாப்போர். யாவரும் - அறஞ்செய் மாக்கள், புறங்காத்து ஓம்புநர், நற்றவஞ் செய்வோர் முதலிய எவரும். விறல் - வலிமை. ‘நன்னாடு’ என்பதுவும், ‘பெருவிறல் வேந்து’ என்பதுவும் இகழ்ச்சி அவர் திருந்து முகம் காட்டும் - அவரது இனிய முகத்தை யான் காணக் காட்டும்.

“உன்னால் கொடுக்கப் படுவன எனக்கு இன்பம் செய்யா, ஆகலின் அவை வேண்டா” என்று கூறினான்.

### வினாக்கள்

1. மணிமேகலை - குறிப்பு வரைக.
2. சீத்தலைச் சாத்தனார் - குறிப்பு வரைக.
3. ஆபுத்திரன் அம்பலப் பீடிகையில் ஆரஞர் எய்தியது ஏன்?
4. சிந்தாதேவி யாது கூறி ஆபுத்திரனிடம் அமுதசுரபியை அளித்தாள்?
5. ஆபுத்திரன் சிந்தாதேவியைப் போற்றிக் கூறிய மொழிகள் யாவை?
6. இந்திரன் வருகையையும், அவனுக்கும் ஆபுத்திரனுக்கும் நடந்த உரையாடலையும் தொகுத்து வரைக. (15 வரிகள்)
7. நிகழிடமும் பொழுதும் காட்டி விளக்கவுரை வரைக.
   (அ) “ஏடா! அழியல் எழுந்திது கொள்ளாய்”
   (ஆ) “இந்திரன் வந்தேன் யாது நின் கருத்து”
8. கீழ்க்காணும் உவமைப் பொருத்தத்தை விளக்கி வரைக.
   “பழுமரத் தீண்டிய பறவையின்”

### பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: வல்லிருள், ஆரிடை, நற்றவம், தொலை வில்லா.

(ஆ) ஆபுத்திரன் வரலாறு முழுதும் ஆசிரியர்பால் கேட்டறிக.

(இ) மணிமேகலை வரலாற்றைப் படித்தறிக.

(ஈ) கலைமகளைப் பற்றி நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து வரைக.

## 2. கம்ப ராமாயணம்

நூல் வகை: இதிகாச வகையைச் சார்ந்தது, வழி நூல். முதல் நூல் வால்மீகி இராமாயணம்.

அமைப்பு: பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களை உடையது. உட்பிரிவுக்குப் படலம் என்று பெயர். விருத்தப்பாவால் ஆகியது.

சிறப்பு : "கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே" என்ற தொடர் இந்நூலின் சிறப்பையுணர்த்தும். வைண வர்க்கு வழிபாட்டிற்குரிய நூலாகும்.

பெயர்க் காரணம் : கம்பர்+ராமாயணம்=கம்ப ராமாயணம். கம்பரது இராமாயணம் என விரியும். கம்பரால் இயற்றப் பெற்ற இராமாயணம் எனவும் பொருள் கொள்ளலாம்.

ராம+அயநம்=ராமாயணம் : வடமொழி தீர்க்க சந்தி. இத் தொடர்க்கு இராமனை அறிவிப்பது என்று பொருள். இராமன் என்ற சொல் பிறரை மகிழ்விப்பவன் என்று பொருள்படும். வேறு பெயர் : இராமாவதாரம்.

## கைகேயி சூழ்வினைப் படலம்

### இராமனிடம் தன் வரத்தைப் பற்றிக் கூற கைகேயி வருதல்

ஆயன நிகழும் வேலை அண்ணலும் அயர்ந்து தேருத்
தூயவ னிருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி
நாயக னுரையான் வாயால் நானிது பகர்வென் என்னுத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள். (1)

### இராமன் வந்த கைகேயியை வணங்குதல்

வந்தவள் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டவான் கன்றினன்னான். (2)

### தசரதன் வரம் தந்ததைக் கைகேயி இராமனுக்குக் கூறல்

நின்றவன் தன்னை நோக்கி இரும்பினால் இயன்ற நெஞ்சிற்
கொன்றுழல் கூற்ற மென்னும் பெயரின்றிக் கொடுமை பூண்டாள்
இன்றெனக் குணர்த்த லாவ தேயதே யென்னி லாகும்
ஒன்றுனக் குந்தை மைந்த உரைப்பதோ ருரையுண் டென்றாள். (3)

### கைகேயியின் கட்டளையாயினும் தான் செய்வதாகக் கூறல்

எந்தையே யேவ நீரே யுரைசெய வியைவ துண்டேல்
உய்ந்தன னடியேன் என்னிற் பிறந்தவ ருளரோ வாழி
வந்ததென் தவத்தினாய வருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையுந் தாயு நீரே தலைநின்றேன் பணிமின் என்றான். (4)

பரதன் அரசு புரிய வேண்டுமென்றும், இராமன் பதினான்கு
ஆண்டுகள் காட்டில் வசிக்க வேண்டுமென்றும் கைகேயி கூறுதல்

ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய நதிக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றேவினன் அரச னென்றாள். (5)

இராமன் கைகேயியிடம் வனம் ஏக விடை பெறுதல்

மன்னவன் பணியன் றாகி னும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ
என்னிதி னுறுதி யப்பா லிப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானமின்றே போகின்றேன் விடையுங்கொண்டேன். (6)

## நகர் நீங்கு படலம்

இராமன் கோசலையிடஞ் செல்லுதல்

குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கி ஏக
மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற உள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் சென்றான். (7)

கோசலை இராமனைப் பார்த்து "முடிசூட ஏற்பட்ட
தடையுமுண்டோ?" என்று கேட்டல்

புனைந்திலன் மௌலி குஞ்சி மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன் என்கொல் என்னும் ஐயத்தாள் நளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன் வணங்கலும் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் இடையூ றுண்டோ நெடுமுடி புனைதற் கென்றாள். (8)

"பரதனே முடி புனைவான்" என்று தாயிடம் இராமன் கூறுதல்

மங்கை யம்மொழி கூற லு மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான். (9)

"இளையவன் முடி சூடுதல் வழக்கமன்று" எனக் கோசலை கூறுதல்

முறைமை யன்றென்ப தொன் றுண்ட தல்லது
நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனாற்

குறைவி லன்எனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினுள். (10)

"தசரதர் கூற்றை மாற்ற வேண்டாம்" என்று கோசலை இராமனிடம் கூறுதல்

என்று பின்னரும் மன்னவன் ஏவிய
தன்றெ ஞமை மகனே உனக்கறன்
நன்று நும்பிக்கு நானிலம் நீகொடுத்
தொன்றி வாழுதி யூழி பலவென்ருள். (11)

"தந்தை இட்ட வேறு கட்டளையும் உண்டு" என்று இராமன் கூறல்

தாயு ரைத்தசொற் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தையத் தோமில் குணத்தினுன்
நாய கன்னெனே நன்னெறி யுய்ப்பதற்
கேய துண்டோர் பணியென் றியம்பினுன். (12)

பதினுன்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டுமென்று கூறல்

ஈண்டு ரைத்த பணியென்னே யென்றலும்
யாண்டோ ரேழிஞெ டேழகன் கானிடை
மாண்ட மாதவத் தோருடன் வைகிப்பின்
மீண்டு நீவரல் வேண்டுமென் ருனென்ருன். (13)

குறிப்புக்கள் :

ஆசிரியர் வரலாறு

ஆசிரியர்: கம்பர். நாடு: சோழ நாடு. ஊர்: தேரழுந்தூர். குலம்: உவச்சர். தந்தை: ஆதித்தன். சமயம்: வைணவம். ஆதரித்தவர்: திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல். பெருமை: 'கல்வியில் சிறந்தவன் கம்பன்', 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்', 'விருத்தம் என்னும் ஒண்பாவுக்கு உயர் கம்பன்' 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு' என்னும் தொடர்கள் இவர் சிறப்பை உணர்த்துவனவாகும். இயற்றிய நூல்கள்: சடகோபரந்தாதி, ஏர் எழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி யந்தாதி, கம்ப ராமாயணம் முதலியன. சமகாலப் புலவர்கள்: ஒட்டக்கூத்தர், ஔவையார், புகழேந்திப் புலவர். காலம்: கி. பி. 12 ஆம் நூற்றுண்டு. கி. பி. 9 ஆம் நூற்றுண்டென்றும் கூறுவர்,

## அருஞ்சொற் பொருள்

1. ஆயன - அத்தகையன. அண்ணல் - பெருமை பொருந்திய இராமன். தேறு - (பின்னர்) தெளிவுற்று. 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். தூயவன் - தூய்மையுடைய தசரதன். துருவினன்- தேடி : முற்றெச்சம். அருள் கொண்ட தூய மனக் கைகேயியாகிய தாயே இப்போது இயமன்போல மனம் தீயளாய்க் கடுமொழி கூற வந்தாள். இயமன் உடலையும் உயிரையும் வேறு பிரித்தல்போல இராமனையும், தசரதனையும் பிரிக்கக் கைகேயி முற்பட்டாள்.

2. வாசச் சிந்துரப் பவளம் - வாசனை பொருந்தியதும், சிந்தூரத்தையும், பவளத்தையும் போன்றதுமாகிய. சுந்தரம் - அழகு. தானை- ஆடை. வாய் புதைத்தலும், ஆடை மடக்கலும், குனிந்து நிற்றலும் அடக்கத்தின் அறிகுறிகளாம்.

3. உழல் - திரிகின்ற. பூண்டாள் - மேற்கொண்டவளாகிய கைகேயி : வினையாலணையும் பெயர். ஏயது - பொருந்தியது. உணர்த்தல் ஆவது - தெரிவித்தல். உன்+தந்தை=உந்தை : மரூஉமொழி. இரும்பினுல்......பூண்டாள்—கைகேயியின் வன்மனமும், கொடுமையும் கூறப்பட்டன.

4. இயைவது - இயைந்து முன் வருவது. என்னில் - என்னைவிட; 'இல்' ஐந்தன் உருபு உறழ்ச்சிப் பொருளில் வந்தது. தலை நின்றேன் - தலைமேற் கொண்டு நின்றேன். வாழி : அசை. எந்தையே...அடியேன் என்ற தொடரால் இராமன் பெற்றோர் மொழிப்படி நடப்பவன் என்பதை அறியலாம்.

5. ஆழி - கடல். தாழ் இருஞ்சடை - தொங்குகின்ற பெரிய சடை. பூழி - புழுதி. தாங்க - ஏற்பதற்கு. பரதன் நாடாள வேண்டும் என்னும் ஆசையை முதலில் கூறி, காட்டில் வாழ்தலால் ஏற்படும் துன்பத்தை மறைத்து அதனுல் ஏற்படும் நன்மையைப் பின்பு கூறினள். 14 ஆண்டுகள் என்பது தோன்றுமல் இருக்க 'ஏழிரண்டு' என்றுள்.

6. அன்று ஆகில் - அன்றுயினும். அப்பால் - பின்பு. மின் ஒளிர்- மின்னல் போல் வெயில் விளங்கும். "தந்தை கட்டளையே அன்றுயினும் தங்கள் கட்டளையை நிறைவேற்றுபவன் நான். அவ்வாறிருந்தும் தாங்கள் 'ஏவினன் அரசன் என்றுன்' என்று கூறியது எனக்கு வியப்பாக உள்ளது" என்று இராமன் கூறியதுபோல் அமைந்துள்ளது.

7. குழைகின்ற-வீசுகின்ற. கவரி-சாமரம். கொற்றம்-வெற்றி. மழைக் குன்றம் - மேகங்கள் படிந்த மலை. மௌலி - மணிமுடி. தழைக்கின்ற - மகிழ்கின்ற. கவித்தனன் - அணிந்து : முற்றெச்சம். கடவுளராயினும் உலகில் பிறப்பின் ஊழ்வினை வழி நடப்பர் என்பதை 'இழைக்கின்ற...செல்ல' என்பதால் குறிப்பிட்டார். இளவரசராய்ச் செல்லின் முன்னும் பின்னும் செல்வர். இப்போதும் இராமர் முன்னே விதியும் பின்னே தருமமும் சென்றன என்று குறிப்பிட்டார்.

8. குஞ்சி - தலை மயிர். மஞ்சனப் புனித நீர் - நீராட்டுதற்குரிய தூய நீர். என்கொல் - (இதற்குக் காரணம்) யாதோ? நளினம் - தாமரை மலர். கழல் - வீரக் கழல். குழைந்து - நெகிழ்ந்து. 'குஞ்சி... நனைந்திலன்' என்பதால் கங்கை முதல் குமரி வரையுள்ள புண்ணிய தீர்த்தங்கள் சேகரிக்கப்பட்டிருந்தமையை அறியலாம்.

9. மானவன் - இராமன். என் + தம்பி = எம்பி : மரூஉமொழி. பங்கம் - குற்றம். துங்கம் - உயர்வு. கோசலை மைந்தர் நால்வரிடமும் வேற்றுமை காட்டாதவள் ஆதலின் பரதனை "நின் காதல் திருமகன்" என்று குறிப்பிட்டான்.

10. மறு - குற்றம். முறைமை அன்று - (மூத்தவன் இருக்க இளையவன் முடிசூடுதல்) அரச நீதி அன்று. ஆல் : அசை. கோசலையிடம் பரதன் இராமனைக் காட்டிலும் அன்பும் பணிவும் கொண்டொழுகியமையால் 'நின்னிலும் நல்லன்' என்றாள்.

11. அன்று - (நீதி) அற்றது. எனுமை - என்று சொல்லாமை. பல ஊழி - பல நெடுங்காலம். ஒன்றி - ஒன்றுபட்டு. "தசரதன் உனக்குத் தந்த நாட்டை நீ பரதனுக்குக் கொடுத்துவிட்டதாக நினைத்துக் கொள்க" என்று கூறுவதுபோல் "நும்பிக்கு......வாழுதி" என்பது அமைந்துள்ளது.

12. தோம் - குற்றம். உய்ப்பதற்கு - செலுத்துவதற்கு. தன்னைக் காட்டுக்குச் செல்லுமாறு கூறியதை முதலில் கூறினால் அவள் வருந்துவள் என்று எண்ணி "நாயகன்......பணி" என்று குறிப்பிட்டான். ஏயது : 'ஏவியது' என்பதன் தொகுத்தல் விகாரம்.

13. ஈண்டு - இப்போது. மாண்ட - பெருமை பொருந்திய. இராமன் 14 ஆண்டுகள் என்பதை இங்கும் 'ஏழிரெண்டு ஏழுயாண்டு' என்று கூறுவதாகக் கம்பர் குறிப்பிடுகின்றார். காட்டில் தனக்குத் துன்பம் நேராது என்பதனை "அகன்......வைகி" என்று கூறி, கோசலை வருந்தாதவாறு இருக்கக் கூறினான்.

**வினாக்கள்**

1. கம்பராமாயணம்—குறிப்பு வரைக.
2. இராமனின் பணிவுடைமையைச் சான்றுடன் கூறுக.
3. கைகேயியின் கொடுமையைக் கம்பர் எவ்வாறு கூறியுள்ளார்?
4. "உந்தை உனக்கு உரைப்பதோர் உரை உண்டு" என்று கைகேயி கூறக் கேட்ட இராமன் யாது கூறினான்?
5. கைகேயி தசரதன் கட்டளையாக இராமனுக்குக் கூறியவை யாவை?
6. இராமன் கோசலையிடம் சென்ற தன்மையைக் கம்பர் எவ்வாறு கூறுகிறார்?
7. பரதன் முடி சூடிக்கொள்ளும் செய்தி அறிந்த கோசலை கூறியன யாவை?

8. இராமன் தான் காடேக வேண்டுமென்பதைக் கோசலையிடம் எவ்வாறு தெரிவித்தான் ?
9. நிகழிடமும் பொழுதும் காட்டி விளக்கவுரை வரைக.
(அ) " தந்தையும் தாயும் நீரே தலைநின்றேன் பணிமின்."
(ஆ) " என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ."
(இ) "இடையூறு உண்டோ நெடுமுடி புனைதற்கு."
10. உவமையைப் பொருளொடு பொருத்தி விளக்குக.
" அந்தி வந்தடைந்த தாயைக் கண்ட ஆன் கன்று."

**பயிற்சி**

(அ) பிரித்து எழுதுக : கன்றினன்னான், இன்றெனக்குணர்த்த லாவது, உள்ளத்தன்னாள், வெங்கானம்.
(ஆ) இராமர் கதையைப் படித்தறிக.
(இ) கம்பரின் கவி நயத்தை நும் பாடப் பகுதி கொண்டு கட்டுரை ஒன்று வரைக.
(ஈ) கைகேயி, கோசலை—இவர்களைப் பற்றிக் கம்பர் நும் பாடப் பகுதியில் கூறியுள்ளமையை எடுத்து எழுதுக.

## 3. நளவெண்பா

### சுயம்வர காண்டம்

நளன்+வெண்பா = நளவெண்பா : நளனது வரலாற்றைக் கூறும் வெண்பாவினால் ஆகிய நூல் என்று பொருள். இந் நூல் வழி நூல். இதற்கு முதல் நூல், வடமொழி மகாபாரதத்தில் உள்ள ' நளோபாக் கியான பருவம் ' என்னும் பிரிவாகும்.

இந் நூல் சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என முப் பிரிவுகளை உடையது. இந் நூல் சொல்லழகும், பொருளழகும் வாய்ந்தது ; கற்பவரைக் களிப்புக் கடலில் ஆழ்த்தும் கற்பனை நலம் செறிந்தது.

நளன் - சந்திர குலத்தில் தோன்றிய வீரசேன மகாராசனின் புதல்வன். இவனது நாடு நிடதம். தலைநகர் மாவிந்த நகரம். இவன் முதல் ஏழு வள்ளல்களில் ஒருவன்.

நளனது வரலாற்றைத் தமிழில் கூறும் வேறு நூல் நைடதம். இது அதிவீர ராம பாண்டியரால் பாடப் பட்டது.

### நளன் சோலைக்குச் செல்லுதல்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூ நாடிச் சோலை புக. (1)

### நளன் முன் அன்னம் தோன்றல்

நீணிறத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தால் பொய்கைத் தலஞ்சிவப்ப--மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. (2)

### நளன் விருப்பப்படி பெண்கள் அன்னத்தைப் பிடித்தல்

நாடிமட அன்னத்தை நல்ல மயில்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. (3)

### நளன் அன்னத்தின் அச்சம் அகற்றல்

" அஞ்சல் மடஅனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்" என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். (4)

### அச்சம் நீங்கிய அன்னம் தமயந்தியின் பெருமை கூறல்

" எழுஅடுதோள் மன்னா! இலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. (5)

நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா,
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு." (6)

### நளன் வேண்ட அன்னம் தமயந்தியை அடைதல்

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய—நன்னுதலும்
தன்ஆடல் விட்டுத் தனியிடம் சேர்ந்(து) ஆங்கதனை
என்நாடல் சொல்என்றாள் ஈங்கு. (7)

### அன்னம் நளனது பெருமை கூறல்

"செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு. (8)

அறம்கிடந்த நெஞ்சும் அருள்ஒழுகு கண்ணும்
மறம்கிடந்த திண்டோள் வலியும்—திறம்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு ? (9)

### தமயந்தி அன்னத்தை வேண்டுதல்

" வாவி உறையும் மட அனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற்(கு) என்நிலைமை சென்றுரைத்தி'' என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. (10)

### தமயந்தியின் மணச்செய்தி அறிந்த நளன் வந்து மண மண்டபத்தில் இருத்தல்

மன்றலங்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீலம்—முன்றில்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதை பெருங்கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். (11)

### தமயந்தி மண மண்டபத்திற்கு வருதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறைஅன்னம் செங்கமலப்
பொய்கை வாய்ப்போவதே போன்று. (12)

### தோழி வந்திருந்த மன்னரை இன்னாரென்று கூறுதல்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியல்அணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. (13)

### தமயந்தி நளனை அறிய முடியாது திகைத்தல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈரிருவர்
தேவர் நளன்உருவாச் சென்றிருந்தார் ;—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்(று)
ஊசலா டுற்றாள் உளம். (14)

### நளனை அறிய அருளுமாறு இறைவனை இறைஞ்சல்

"மின்னுந்தார் வீமன்தன் மெய்ம்மரபில் செம்மைசேர்
கன்னியான் ஆகில் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருள்" என்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே கொண்டு. (15)

### நளனை அறிதல்

கண்இமைத்த லால்அடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. (16)

### நளனுக்கு மாலை சூட்டுதல்

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனம்சுளிக்கக்
கண்ணகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். (17)

### மாலைபெறாத மன்னர் ஏமாற்றம்

திண்தோள் வயவேந்தர் செந்தா மரைமுகம் போய்
வெண்தா மரையாய் வெளுத்தவே ;—ஒண்தாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. (18)

**குறிப்புக்கள் :**

**ஆசிரியர் வரலாறு**

*ஆசிரியர் : புகழேந்திப் புலவர். நாடு : தொண்டை நாடு. ஊர் : பொன்விளைந்த களத்தூர். குலம் : வேளாளர். சமயம் : வைணவம். ஆதரித்தவர் : மள்ளுவ நாட்டரசனாகிய சந்திரன் சுவர்க்கி. சிலகாலம் பாண்டிய மன்னரின் அவைப் புலவராக விளங்கினார். சிறப்பு : 'வெண்பாவிற் புகழேந்தி' என்று பாராட்டப்*

பெற்றவர். இயற்றிய நூல்கள்: நளவெண்பா, இரத்தினச் சுருக்கம், பஞ்சபாண்டவர் வனவாசம், அல்லி அரசாணிமாலை முதலியன. காலம்: கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

### அருஞ்சொற் பொருள்

1. வாங்கு - வளைந்த. 'வாங்குவளை' - விலை கொடுத்து வாங்குகின்ற வளையல் என்றும் கூறலாம். வதன மதி - முகமாகிய சந்திரன்: **உருவகம்.** குவளை - கண்கள் என்னும் நீலமலர். தேம் - இனிமை (மிக்க). தேன் ஆடி - தேனில் மூழ்கி. பூநாடி - பூக்கொய்தலை விரும்பி. நளன் அழகில் ஈடுபட்டு இமை கொட்டாமல் விழித்த கண் விழித்தபடியே நிற்கும் இளம் பெண்கள் தம் கண்களை 'வதனமதி பூத்த பூங்குவளைக் காடு' என்றார்.

2. நீள் நிறத்தால் - நெடுந்தூரத்திலும் விளங்குகின்ற தனது இறகின் வெண்ணிறத்தால். பெயர - மாறுபட. தாள் நிறம் - கால்களின் செம்மை நிறம். மாண்நிறத்தான் - சிறப்புப் பொருந்திய மார்பினையுடைய நளன். அப்பு - நீர்: தொட்டால் ஒட்டுதலை உடையது. முளரி - தாமரை. இறகின் வெண்ணிறம் சோலையை வெண்ணிறமாகவும், தாள்களின் செந்நிறம் நீர்நிலையைச் செந்நிறமாகவும் மாற்றின.

3. நாடி - விரும்பி. மட அன்னம் - இளமை பொருந்திய அன்னம். பசுமை+கூந்தல்=பைங் கூந்தல்: **பண்புத் தொகை.** வல்லியர் - வல்லிக்கொடி போன்ற பெண்கள். கொடு 'கொண்டு' என்பதன் இடைக்குறை. கோ - அரசன். பறவையைப் பிடிப்பார் மற்றொரு பறவையைக் கொண்டே பிடிப்பார் ஆகலான், மயிலின் சாயல்கொண்ட மகளிர் அன்னப் பறவையைப் பிடித்துக்கொண்டு வந்தனராம்.

4. அஞ்சல் - பயப்படாதே: **வியங்கோள் வினைமுற்று.** வஞ்சி - பூங்கொடி. அணி, மணி - அழகு. விஞ்சியது - சிறந்தது. மன் - அரசனாகிய நளன். மாணப் பிடித்த - மிகுதியாக மொய்த்துள்ள. களிவண்டு - (தேனுண்டு) களிக்கும் வண்டு. காண்: **முன்னிலையசை.** 'களி வண்டு......மன்' என்பதால் நளன் அருளுடையான் என்பதை உணர்த்தியவாறும்.

5. எழு - தூண். அடுதோள் - வென்ற தோள். இலங்கு இழை - விளங்கும் நகையணிந்த பெண்டிர்: **வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.** ஏர் தூண்ட - ஏரைச் செலுத்த. நுதி - முனை; மாடு - இடம். கொம்பு - பூங்கொம்பு போன்ற தமயந்தி: **உவமையாகு பெயர்.** அரசன் உனக்குத் தமயந்தியைத் தருவான் என்ற கருத்து புலப்பட 'கொடை விதர்ப்பன்' என்று அன்னம் கூறியவாறும்.

6. நாற்குணம் - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. மடம் - அறிந்தும் அறியாது போன்றிருக்கும் தன்மை. பயிர்ப்பு - உடலில் தொட்டால் உடன் உணரும் உணர்ச்சி. 'ஐம்புலன்' ஈண்டு மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளை உணர்த்திற்று. ஆர்க்கும் - ஒலிக்கும். மதிக்குடை : உவமைத்தொகை. இச் செய்யுள் உருவக அணி.

7. வடிவில் - அழகில். நன்னுதல் - அழகிய நெற்றியையுடைய தமயந்தி : பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. நாடல் - நாடிவந்த காரணம். ஆடல் - விளையாட்டு.

8. செம்மனம் - நடுநிலைமையுடைய மனம். தண்ணளி - குளிர்ந்த அருள். தடம் தோள் - பெரிய தோள். நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகைப்பட்ட நிலங்களையுடைய பூமி. வாங்கும் - இழுக்கும். அன்னம் 'செம்மனம், தண்ணளி, செங்கோல்' இவற்றால் நளனது அக அழகையும், 'தடந்தோள்' என்பதனால் அவனது புறவழகையும் தமயந்திக்கு உணர்த்தியது.

9. கிடந்த - தங்கிய. ஒழுகு கண் : வினைத்தொகை. மறம் - வீரம். திறம் - மேன்மை. ஒப்பரோ : ஓகாரம் எதிர்மறை. மால் - திருமால். அல்லனேல் - ஒவ்வானானால். முறை வேண்டினார்க்கும் குறை வேண்டினார்க்கும் அவை கேட்டு அருள் செய்யும் இரக்கப் பண்பு உடையான் என்பதை 'அருள் ஒழுகு கண்' என்று குறிப்பிட்டுள்ளார்.

10. வாவி - தடாகம். கா - சோலை, ஆதி - ஆவாய். உரைத்தி - சொல்வாய் : முன்னிலை ஒருமை வினைமுற்று. பாவை - பதுமை போன்ற தமயந்தி : உவமையாகு பெயர். நளன் விரைவில் வந்து அருள் புரியலாம் என்ற கருத்துத் தோன்ற 'தேர் வேந்தன்' என்று தமயந்தி கூறினாள்.

11. கார் நீலம் - கருங்குவளை மலர்கள் : பண்பாகு பெயர். முன்றில் - வீட்டு முற்றம் : இலக்கணப்போலி. குறுவிழிக்கு நேர் - குறுகிய பார்வைக்கு ஒத்துச் சுருங்கிக் கிடக்கின்ற. மன்றல் - வாசனை. கோதை - மலர் மாலையை அணிந்த கூந்தலையுடைய தமயந்தி. சேய் - முருகன் போன்ற நளன்.

12. பொன் இன் - திருமகள் போன்ற ; 'இன்' ஐந்தன் உருபு ஒப்புப் பொருளில் வந்தது. மின் - மின்னல். கமலம் - தாமரை மலர் : பொருளாகு பெயர். சிறை - சிறகு.

13. இயல் அணங்கு - நல்லியல்பு வாய்ந்த தெய்வப்பெண் போன்ற தோழி. கொடி - பூங்கொடி போல்பவளாகிய தமயந்தி : உவமையாகு பெயர். இன்ன பரிசு - இத்தன்மையுடையன.

14. சேடி - தோழி. வரைந்த - அணிந்த. பூங்குழலாள் - பொலிவு பொருந்திய கூந்தலையுடைய தமயந்தி. ஊசலாடுற்றாள் - ஊசலாடுவதைப் போன்று தடுமாற்றமடைந்தாள். 'ஊசல் ஆடும்போது' போவதும் வருவதுமாக ஆவதுபோல் தமயந்தியின் மனம் அவர்களை

நாடிப் பார்ப்பதுவும், பின்னர் இவர் யாரோ என மயங்கி வாளா நிற்பதுவும் பின்னர்ப் பார்த்தலுமாக இருந்தது. ஈரிருவர்தேவர் - இந்திரன், வருணன், அக்கினி, இயமன்.

*15.* சூழ்விதியின் மன்னவன் - உயிர்களைச் சூழும் ஊழ்வினையின் தலைவனாகிய இறைவன். (‘சூழும் விதியினால் தனக்குக் கணவனாதற் குரிய நளன்’ என்றும் கூறலாம்). மரபு - குலம். கடிமாலை - மண மாலை : உரிச்சொற்றொடர்.

*16.* நன்னுதல் - அழகிய நெற்றியையுடைய திருமகள். ஆங்கு - அவ்விடத்தில். காசினி - பூமி. தோய்தல் - படிதல். வண்ணம் - அழகு. தேவர்களது கண்கள் இமையாமையின் ‘இமையவர்’ என்று கூறப் பெறுகின்றனர்.

*17.* விண்ணரசர் - வானுலக நாட்டு அரசர்களாகிய இந்திரன் முதலிய தேவர்கள். வெள்கி - நாணமுற்று. சுளிக்க - கோபம் கொள்ள, வருந்த. வன் மாலை - மிக்க மயக்கம். வயம் - வெற்றி. பொன் - திருமகள் போன்ற தமயந்தி: உவமையாகு பெயர். கண் அகல் - இடமகன்ற.

*18.* ஒண்தாரை - ஒளியும் கூர்மையும் பொருந்திய. கோமாலை - சிறந்த அரசர் பண்புகொண்ட. குலமாலை - தன் குலத்தை (அலங் கரிக்கும்) மாலை போன்ற. தாமரை முகம், வேற்கண்: உவமைத் தொகைகள். மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் கொண்ட முகத்திற்குச் செந்தாமரை மலரையும், அஃதன்றி வருத்தமும் கிளர்ச்சியும் அற்ற முகத்திற்கு வெண்டாரை மலரையும் உவமையாகக் கூறல் மரபு.

### வினாக்கள்

1. நளவெண்பா—குறிப்பு வரைக.
2. நளன் சோலையை அடைந்தமை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
3. அன்னப்பறவை நளன் முன் தோன்றிய காட்சியை ஆசிரியர் எங்ஙனம் புனைந்துரைத்துள்ளார்?
4. பணிப் பெண்கள் அன்னத்தைப் பிடித்த வகையைத் தெளிவாக எழுதுக.
5. அச்சம் நீங்கிய அன்னம் தமயந்தியைப் பற்றி நளனிடம் கூறியன யாவை?
6. அன்னம் நளனது சிறப்பாகத் தமயந்தியிடம் கூறியன யாவை ?
7. தமயந்தி மணமண்டபத்தில் புகுந்து நளனுக்கு மாலை சூட்டியதைத் தொகுத்து வரைக. (15 வரிகள்)
8. நிகழிடமும் பொழுதும் காட்டி விளக்கவுரை வரைக.
   (அ) “என்னுடல் சொல்லென்றாள் ஈங்கு” (ஆ) “என்னுடைய ஆவி உவந்தளித்தாய் ஆதி.” (இ) “அன்னந்தான் சொன்னவனைச் சூட்ட அருள்.”

9. உவமையைப் பொருளோடு பொருத்தி விளக்குக.
(அ) "மயில் குழாம் ஓடிவளைக்கின்றது."
(ஆ) "வெள்ளைச்சிறை அன்னம் செங்கமலப் பொய்கை வாய்ப் போவது."

பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: தேனுடி, நீணிறத்தால், நாற்குணம் நறுந்தாமரை, விண்ணரசர், நன்னுதல்.
(ஆ) நளன் வரலாறு முழுதும் படித்தறிக.
(இ) நளன், தமயந்தி இவர்களின் சிறப்பாக நும் பாடப் பகுதி யிலிருந்து அறிந்தவைகளைத் தொகுத்து வரைக.
(ஈ) தேவர்க்கும் மனிதர்க்கும் உள்ள வேறுபாடுகளைக் கேட்டறிக.

## 4. அரிச்சந்திர புராணம்

### மயான காண்டம்

அரிச்சந்திரன் + புராணம் = அரிச்சந்திர புராணம். அரிச்சந் திரனைப் பற்றிக் கூறும் புராணம் என்பது பொருள். அரிச்சந்திரன் என்பதற்குத் 'திசை எங்கும் புகழ் விளங்கப் பெற்றவன்' என்பது பொருளாகும். புராணம் - பழைய வரலாறு.

இந் நூல் நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு இவை நீங்கலாக விவாக காண்டம் முதல் உத்தர காண்டம் ஈருகப் பத்துக் காண்டங் களைக் கொண்டது; 1215 பாடல்களை உடையது. இந் நூலில் உள்ள கவிகள் சந்த இன்பமும், சொல்லழகும், பொருள் அழகும் நிறைந்து கற்போர்க்குக் கழிமகிழ் சிறக்கச் செய்வனவாம்.

இந் நூல் திருப்புல்லாணித்தலத்தில் திருமால் சந்நிதியில் உள்ள சக்கர தீர்த்தக் கரையின் மேல் மண்டபத்தில் கி. பி. 1524 ஆம் ஆண்டில் அரங்கேற்றப்பட்டது என்பர்.

[அரிச்சந்திரன் மெய்ம்மை காக்க வேண்டித் தன் நாடு நகர் இழந்து காசிநகர் சென்று, ஓர் அந்தணரிடம் தன் மனைவி சந்திரமதியை விற்ருன். சந்திரமதியோடு மகன் உலோகிதாசனும் தங்கினுன். அரிச்சந்திரன் சுடலை காக்கும் வீரவாகுவிடம் அடிமை யாகிச் சுடலை காத்து வந்தான். ஒரு நாள் உலோகிதாசன் பிள்ளை களோடு தர்ப்பை கொய்யச் சென்று அரவு கடித்து இறந்தான். மகனிறந்த செய்தியைச் சந்திரமதி அறிந்தாள்.]

### சந்திரமதி மகனைத் தேடி வருந்துதல்

"பாவியேன் மகனே! என்பள்;
பதைப்பள்; மென் முகத்தில் மோதித்
தாவியே விழுவள்; நின்று
தயங்கியே மயங்கி வீழ்வள்;

காவியங் கண்ணீர் பாயக்
கதறுவள் ; பதறி ஏங்கி
ஆவியைத் தேடித் தேடி
அலமரும் உடலம் ஒத்தாள். (1)

### சந்திரமதி மகனைக் காணுதல்

ஓடினுள் ; உள்ள மெல்லாம்
உருகினுள் ; கருகி மேனி
வாடினுள் ; விறகு வைத்த
வடத்தினுக் கருகே வந்தாள் ;
நாடினுள் ; கழுகும் பேயும்
நரிகளும் குறளும் துன்றிக்
கூடிய குழுவின் நாப்பண்
குமரனைச் சென்று கண்டாள். (2)

கண்டனள் ; கதறி வீழ்ந்தாள் ;
கழுகெலாம் இரியல் போகக்
கொண்டதோர் மகவின் ஆசை
ஆவியைக் கொள்ளை கொள்ள
முண்டகக் கரத்தால் ஏந்தி
முருகனை மடிமேல் வைத்து
அண்டரும் மறுகி ஏங்க
வாய்திறந் தரற்ற லுற்ருள். (3)

### மகனைக் கண்டு புலம்பல்

செங்கோல் அறத்தின் முறையே செலுத்து
திறலோன் எவர்க்கும் உறவோன்
வெங்கோப யானை விறல்மன்னன் நம்மை
விடுவிக்க எண்ணி வருநாள்
பங்கே ருகத்து மலர்போல் விளங்கு
வதன ! மகிழ்ந்த பரிவால்
'எங்கேஎன் ஆசை மகன் ? என் றுரைக்கில்
எதிரேது சொல்வேன்' மகனே ! (4)

### சுடலையில் சந்திரமதி மகனுடலைக் கொளுத்துவதை அரிச்சந்திரன் தடுத்தல்

அரவுகடித் தரசிளங்கோ இறந்தான் என்ப
    தறியாமல் வெகுண்டிறைவன் ' ஆரே இந்த
இரவுதனில் பிணஞ்சுடுவார் அறிவோம் ' என்று
    எழுந்திருந்து விரைந்தோடி ஏடி, மூடி !
தரவுரிய பொருள் எனக்குத் தாரா தேநீ
    தனியேஇப் பனியிருளில் சவம்கொ ணர்ந்து
கரவின்அழல் சுடுவதுனக் கடைவோ ? என்னுக்
    கால்வீசிக் கான்முளையை எடுத்தெ றிந்தான். (5)

### சந்திரமதி தன் நிலைமை கூறி வருந்துதல்

' பொருளுடையேன் தமருடையேன் ஆனால் இந்தப்
    புத்திரனைத் தோள்மீது வைத்துப் போந்திவ்
இருளிடையில் சுடலையில்வந் தெய்து வேனோ ?
    எரிந்தகுறைக் கட்டையினில் ஏற்று வேனோ ?
தெருளுடையாய் ! அறமுடையாய் ! வினையேன் ஈன்ற
    சிறுவனையான் சுடக்கருணை செய்யாய் தேயா
அருளுடையாய் ! ஆதாரம் அற்றேற் குன்றன்
    அடியிணையே தஞ்சம்'என அலறி வீழ்ந்தாள். (6)

### அரிச்சந்திரன் கூறுதல்

பொன்அனையாய் விடு ! விடு ! யான் புலையன் என்னில்
    புலையனுமல் லேன் ;புலையற் கடிமை கண்டாய் ;
என்அடிநீ தீண்டுவது தகாது நீதான்
    இப் பொருட்குயான் உரியனலேன் ; என்னை ஆள்வோன்
சொன்னபணம் கால்உண்டு ; கொள்ளி ஆடைத்
    துண்டமும்ஒன் றுண்டு ;தந்து சுடுதி ; அன்பால்
அன்னவன்தான் படியாக எனக்குத் தந்த
    வாய்க்கரிசி யான் அளிப்பேன் ; அறிதி 'என்றான். (7)

### சந்திரமதி கூறுதல்

துஞ்சியமைந் தனைஎடுத்துச் சுமந்து போந்து
    சுடுவார்அற் றிடுகாட்டில் தோள்மேல் ஏற்றிப்
பஞ்சுபடும் பாடுபடும் பாவி யேற்குப்
    பணம்ஏது ? கொள்ளிமுறிப் பாதி ஏது ?

நெஞ்சுதளர்ந் தருவினையேன் வருந்தக் கண்டும்
நீஇரங்காய்!' எனஇரங்கி நிற்குங் காலை
வஞ்சிதிரு மணிமிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்டிறைவன் மறித்தும்சொல்வான். (8)

### அரிச்சந்திரன் கூறுதல்

'நல்லை, நல்லை ; அறச்சமர்த்தி நீயே கண்டேன்
நன்னுதலார் அனைவரினும் இந்த்ர சாலம்
வல்லை, வல்லை ; விறகுகளும் களவே ; செம்பொன்
மங்கலநாண் உன்கழுத்தில் இருக்க ஏதும்
இல்லைஎனச் சொல்லுவது சற்றும் ஏலா
திதனைஎனக் கீவாய்'என் றியம்ப, வேடர்
பல்லம்உயிர் நிலைவாயில் பட்ட மான்போல்
பதைபதைத்துப் பைங்தொடியாள் பதறிவீழ்ந்தாள். (9)

### சந்திரமதி வருந்துதல்

'அலைவி லாஅரிச் சந்திரற் கல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தோ?'என
உலையின் மீது மெழுகொத் துருகினள். (10)

### அரிச்சந்திரன் உண்மை உணர்ந்து வருந்துதல்

'அன்னை யின்றி அருங்கானில் எய்திய
உன்னை ஓடி உரகம் கடித்தலின்
மின்னை யும்உனை யும்விற்ற வெவ்வினை
என்னை எவ்வணம் நொந்தனை? ஏந்தலே!' (11)

### அரிச்சந்திரன் தேறிச் சந்திரமதியைத் தேற்றல்

'தீமை செய்த துனக்கும் சிறுவற்கும்
வாய்மை தான்அது மண்ணுக்கும் விண்ணுக்கும்
தூய்மை யேஇனி என்று துணிந்தனென்
நீம யங்கல் ; அறத்தை நினை' என்றான். (12)

குறிப்புக்கள் :

#### ஆசிரியர் வரலாறு

*ஆசிரியர் : வீர கவிராயர். நாடு : பாண்டியநாடு. ஊர் : இராமநாதபுரத்தைச் சார்ந்த நல்லூர். குலம் : வேளாளர் ; பொற்*

கொல்லர் மரபு என்றும் கூறுவர். சமயம்: வைணவம். சிறப்பு: விரைந்து கவிபாடும் திறம் பெற்றவர். இதனால், இவர் 'ஆசு கவிராயர்' என்று அழைக்கப் பெற்றார். காலம்: கி. பி. 1524.

## அருஞ்சொற் பொருள்

1. காவி அம் கண்ணீர் - நீலோற்பல மலர் போன்ற கண்களிலிருந்து ஒழுகும் நீர். அலமரும் - துன்புறும். பதறி - நடுங்கி. தேடித் தேடி: அடுக்குத்தொடர்.

2. வடம்-ஆலமரம். குறளும்-குறுகிய வடிவமுள்ள பூதங்களும். துன்றி-நெருங்கி. நாப்பண்-நடுவிடம். குழு-கூட்டம்.

3. இரியல் போக-பயந்து ஓட. முண்டகக் கரம்-தாமரை மலர் போன்ற கை. உவமைத் தொகை. முருகன்-இளமையும் அழகும் உடைய மகன். மறுகி-மனங் குழம்பி. அரற்றலுற்றாள்-ஒலி வெளிப்பட அழுதாள்.

4. செங்கோல் - நீதி தவறாத ஆட்சி. திறல் - திறமை, வலிமை. உரவு - அறிவு. வெம்மை+கோபம்=வெங்கோபம். விறல் - வலிமை. பங்கேருகம் - தாமரை (சேற்றில் தோன்றுவது). வதனம் - முகம்.

5. இளமை+கோ=இளங்கோ. இறைவன் - அரசனாகிய அரிச்சந்திரன். என்னு - என்று எண்ணி. ஏடி மூடி - ஏ, மூடத்தன்மை கொண்டவளே. தரவுரிய பொருள்-காற்பணம், முழத்துண்டு, வாய்க்கரிசி. கரவு - மறைவு. அடைவோ - நியாயமோ. கான்முளை-குலத்திற்கு முளை போன்ற மகன்.

6. தமர் - சுற்றத்தார். எய்துவேனோ - அடைவேனோ. ஏற்றுவேனோ - கிடத்துவேனோ. தெருள் - அறிவு. வினையேன் - பாவியாகிய நான். தேயா - குறைவு படாத. ஆதாரம் - ஆதரிப்போர். தஞ்சம் - அடைக்கலம்.

7. பொன் - இலக்குமி. என்னில் - என்றாலும். கண்டாய் - தெரிந்து கொள். ஆள்வோன் - அடிமையாகக் கொண்டு ஆளும் வீரவாகு. கொள்ளி ஆடை துண்டம் - கொளுத்துவதற்குத் தர வேண்டியந் துண்டுத் துணி. படி ஆக - சாப்பாட்டுக்காக. அறிதி - தெரிந்து கொள்.

8. துஞ்சிய - இறந்த. பாவியேற்கு - பாவியாகிய என்னிடத்தில். முறி - ஆடை. அருவினையேன் - பாவத்தைச் செய்த நான். வஞ்சி - வஞ்சிக்கொடி போன்ற சந்திரமதி: உவமையாகு பெயர். மறித்தும் - மறுபடியும்.

9. அறச் சமர்த்தி - மிகவும் சாமர்த்தியம் உடையவள். நன்னுதலார் - நல்ல நெற்றியை யுடைய பெண்கள். இந்த்ரசாலம் - மாய வித்தைகள். மங்கல நாண் - தாலி. பல்லம் - அம்பு. உயிர் நிலை வாயில் - உயிர் நிலை பெற்ற இடத்தில் (இதயத்தில்). பசுமை+தொடியாள்= பைந்தொடியாள்.

10. அலைவு இலா - (பகைவர்களுக்குக்) கலங்கல் இல்லாத. தொலைவு இல் - தொலைதல் இல்லாத (வெளிப்படையாக). தோற்ற ரும் - தெரியாத. எனு - என்று எண்ணி.

11. உரகம் - பாம்பு. மின் - மின்னல் கொடி போன்ற சந்திரமதி. உவமையாகு பெயர், வெம்மை+வினை=வெவ்வினை. எவ்வணம் - எவ் விதம். ஏந்தல் - ஆண்களில் சிறந்தவன்.

12. துணிந்தனென் - நிச்சயித்தேன்; தன்மை ஒருமை வினைமுற்று. மயங்கல் - மயங்க வேண்டாம்.

### வினாக்கள்

1. இறந்த மகனைத் தேடி சந்திரமதி எவ்வாறு வருந்தினாள்?
2. சந்திரமதி மகனுடல் கண்டு புலம்பியதை வரைக.
3. சந்திரமதி தன் மகனுடலைக் கொளுத்த முயன்றதறிந்த அரிச்சந்திரன் யாது செய்தான்?
4. மகனைக் காலால் வீசி எறிந்த அரிச்சந்திரனிடம் சந்திரமதி கூறியன யாவை?
5. தன் அடிபற்றிய சந்திரமதியை நோக்கி அரிச்சந்திரன் கூறியன யாவை?
6. சந்திரமதியின் மங்கல நாண் கண்ட அரிச்சந்திரன் யாது கூறினான்?
7. பிணம் சுடுபவள் தன் மனைவி என்பதை அரிச்சந்திரன் எவ்வாறு அறிந்தான்?
8. அரிச்சந்திரன் தேறி, சந்திரமதியை எவ்வாறு தேற்றினான்?
9. அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் சுடலையில் நிகழ்ந்த உரையாடலைத் தொகுத்து வரைக. (15 வரிகள்)

### பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: முண்டகக்கரம், அரசிளங்கோ, பைந் தொடி.

(ஆ) அரிச்சந்திரன் வரலாறு முழுதும் கேட்டறிக.

(இ) "வேடர் பல்லம்......வீழ்ந்தாள்"—இதனால் நீவிர் அறிந்து கொண்ட செய்தியை வரைக.

(ஈ) 'உண்மை உயர்வளிக்கும்' என்ற தலைப்பில் ஒரு கற்பனைக் கதை வரைக.

## 5. திருவிளையாடற் புராணம்

### விறகு விற்ற படலம்

இந்நூல் மதுரையில் கோயில் கொண்டருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் புரிந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விளக்கிக் கூறும்

புராணம் ஆதலின் திருவிளையாடற் புராணம் என்று பெயர் பெற்றது. இந் நூலில் கூறப்படும் அரிய செயல்கள் இறைவனுக்கு விளையாட்டைப் போல எளியனவாய் அமைந்தன. புராணம் - பழமையான வரலாற்றைக் கூறுவது. திரு - மேன்மை ; அடைமொழி.

இந் நூல் வடமொழியிலுள்ள 'ஹாலாஸ்ய மகாத்மியம்' என்னும் நூலைத் தழுவி இயற்றப்பெற்றமையால் வழி நூலாகும். இந் நூல் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது. உட்பிரிவுக்குப் படலம் என்று பெயர். கீழ்வரும் பகுதி கூடற்காண்டத்தில் நாற்பத்தொன்பதாவது படலமாகும்.

### ஏமநாதன் என்னும் பாணன் மதுரையை அடைதல்

மன்றலங் தெரியல் மார்பன்
வரகுணன் செங்கோல் ஓச்சிப்
பொன்றலங் காவ லானிற்
பொலியுநாள் ஏம நாதன்
என்றெருரு விறல்யாழ்ப் பாணன்
வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதி னேடும்
விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான். (1)

### பாண்டியன் அவையில் ஏமநாதன் பாடுதல்

பூழியர் பெருமான் கோயில்
புகுந்துவேத் தவையத் தெய்திச்
சூழிமால் யானை யானைத்
தொழுதுபல் புகழ்கொண் டாடி
ஏழிசை மழலை வீணை
இடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழிஇன் னிசைத்தேன் மன்னன்
அஞ்செவி வழியப் பெய்தான். (2)

### பாணபத்திரரைப் பாண்டியன் அழைத்து வருமாறு கூறுதல்

மீனவன் வரிசை பெற்ற
செருக்கினும் விருதி னுனும்
மானமேற் கொண்டு தன்னே
டின்னி சைபாட வல்ல

தானயாழ்ப் புலவர் வேறிங்
கில்லெனத் தருக்குஞ் செய்தி
கோனறிந் துழையர்க் கூவிப்
'பத்திரன் கொணர்திர்,' என்ருன். (3)

பாண்டியன் பாணபத்திரரை வினவுதல்

உழையரால் விடுக்கப் பட்ட
பத்திரன் உவரி வென்றேன்
கழல்பணிந் தருகு நிற்பக்
கௌரியன் நோக்கிப் 'பாணி
பழகிசை வல்லா னேடும்
பாடுதி கொல்லோ!' என்ன,
மழலையாழ் இடந்தோள் இட்ட
பாணர்கோன் வணங்கிச் சொல்வான் : (4)

பத்திரர் விடையும் பாண்டியன் கட்டளையும்

'தென்னவர் பெரும! யானுன்
திருவுள வலனும் கூடல்
முன்னவன் அருளும் கூட்டும்
முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி
அவனைவீறு அழிப்பன்!' என்ருன் ;
மன்னவன், 'நாளைப் பாடு;
போகென' வரைந்து சொன்னன். (5)

பத்திரர் சொக்கநாதரை வணங்கித் தம் மனை புகுதல்

மையணி மிடற்றி னனை
மதுரைநா யகனை வந்தித்து,
'ஐயனே! அடியேற் கின்றுன்
அருட்டுணை செய்யல் வேண்டும்!
மெய்யனே!' என்று போற்றி
வேண்டுகொண் டன்பு தோய்ந்த
பொய்யறு மனத்தான் இல்லம்
புக்கினி திருந்தான்; இப்பால் (6)

### சொக்கநாதர் விறகாளாய் வருதல்

வருத்த ஞகிவந் திரந்தவன் இசைப்பகை மாற்ற
விருத்த ஞம்விற காளென விண்ணிழி விமானத்
தொருத்த ஞர்அறி வாகிய உண்மைஆ னந்தத்
திருத்த ஞர்தம திச்சையால் திருவுருக் கொள்வார். (7)

### சொக்கநாதர் விறகு சுமந்து செல்லும் காட்சி

தறிந்த இந்தனம் தினந்தொறும் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை உடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையும் காணுது
எறிந்த இந்தனச் சுமைதிரு முடியின்மேல் ஏற்றி (8)

நடந்து, கொள்ளுநர்க் கருவிலை பகர்ந்து,நான் மாடம்
மிடைந்த வீதியும் கவலையும் முடுக்கரும் மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழ்ச்சியும் பகலும்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச் சார்வார். (9)

### சொக்கநாதர் பாடுதல்

எடுத்த இந்தனம் ஒருபுறத் திறக்கியிட் டூன்றி
அடுத்த வன்புறத் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த இன்னிசை சிறிதெழீஇப் பாடினூர்; சுருதி
மடுத்து, 'யாரவன் பாடுவான்!' என்றிசை வல்லான் (10)

### ஏமநாதன் வினவும் சொக்கநாதர் விடையும்

வண்டறை கொன்றை யான்முன்
    வந்து, 'நீ யாரை?' என்ருன்!
'பண்டரு விபஞ்சிப் பாண
    பத்திரன் அடிமை' என்ருன்
முண்டக மலரோன் மாயோன்
    புரந்தரன் முதல்மற் றேனை
அண்டரும் தன்குற் றேவல்
    அடிமையாக் கொண்ட அம்மான். (11)

'கனியிசைக் கிழவன் தன்கீழ்க்
    கற்பவர் அநேகர் தம்முள்
நனியிசைக் கிழமை வேட்டு
    நானுமவ் வினைஞன் ஆனேன்;

தனிஇசைக் கிழவன் நோக்கித்
'தசையெலாம் ஒடுங்க மூத்தாய்!
இனிஇசைக் கிழமைக் காகாய்,'
என்றெனைத் தள்ளி விட்டான். (12)

இறைவன் விறகு விற்பதற்குக் காரணம் கூறுதல்

'வெவ்விற கெறிந்து கட்டி விலைபகர்ந் தேனும் ஐய!
இவ்வயி றோம்பு கேன்என் றித்தொழில் பூண்டேன்!' என்ன,
நய்வளந் தெரிந்த ஏம நாதனும், 'விறகு மள்ளா!
அவ்விசை ஒருகால் இன்னும் பாடெ'ன, ஐயன்பாடும். (13)

இறைவர் பாடிய இசைச் சிறப்பு

பைத்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய் வல்லியம் மருட்கை எய்தித்
தத்தமா றறியா வாகித் தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளும் இசைவலைப் பட்டஅம்மா! (14)

கண்ணிறை நுதலோன் சாம
கண்டத்தின் எழுந்த முல்லைப்
பண்ணிறை தேவ கீதம்
சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைகள் எட்டும்
விழுங்கித்தன் மயமே ஆக்கி
உண்ணிறை உயிரும் மெய்யும்
உருக்கிய திசைவல் லானை. (15)

ஏமநாதன் எண்ணமும் செயலும்

'இழுக்கி விட்டஇக் கிழமகன் இசையிதேல், அந்த
வழுக்கில் பத்திரன் பாடல்எற் றோ!'என மதியா
அழுக்கம் உற்றெழுந் திசைவலான் அடுத்ததன் பண்டர்
குழுக்க ளுங்குலை குலைந்திட இருள்வழிக் கொண்டான். (16)

சொக்கநாதர் பத்திரர் கனவில் தோன்றுதல்

அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்
'இன்று பத்திர! இசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று, 'பத்திரன் அடிமையாம்,' என்றுபாண் செய்து
'வென்று பத்திரஞ் செய்தும்நின் வேண்டுகோள்,' என்றார்.(17)

### பாணபத்திரர் ஆலயம் சென்று வணங்கல்

கண்மல ர்ந்தெழு பத்திரன் கரையிலா உவகை
உண்மல ர்ந்தெழும் அன்புகொண் டுக்கவெங் கதிரோன்
விண்மல ர்ந்தெழு முன்புபோய் விசும்பிழி கோயில்
*பண்மல ர்ந்தநான்ம றைப்பொருள் அடித்தலம் பணிந்தான்.* (18)

### பாணபத்திரர் வருந்திக் கூறுதல்

'கடிய கானகம் புகுதவோ, கட்டிய விறகை
முடியில் ஏற்றவோ, முண்டகத் தாள்கள்நொந் திடவந்
தடிய னேன்பொருட் டடாதசொல் பகரவோ, வஞ்சக்
கொடிய னேன்குறை இரந்தவா! விளைந்ததே குற்றம்! (19)

'நெடிய னேமுதல் வானவர் நெஞ்சமும் சுருதி
முடிய னேகமும் கடந்தநின் முண்டகப் பாதம்
செடிய னேன்பொருட் டாகவிச் சேணிலங் தோய்ந்த!
அடிய னேற்கெளி தாயதோ ஐய!நின் பெருமை!' (20)

குறிப்புக்கள் :

#### ஆசிரியர் வரலாறு

*ஆசிரியர் : பரஞ்சோதி முனிவர். நாடு : சோழ நாடு. ஊர் : திருமறைக்காடு (வேதாரணியம்). குலம் : அபிடேகத்தார் குலம் என்பர் ; வேளாளர் என்றும் கூறுவர். சமயம் : சைவம். தந்தையார் : மீனாட்சிசுந்தர தேசிகர். இயற்றிய நூல்கள் : திருவிளையாடற் புராணம், திருவிளையாடல் போற்றிக்கலி வெண்பா, மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி, வேதாரணிய புராணம். இவர் காலப் புலவர் : சேதுபுராணம் பாடிய நிரம்பவழகிய தேசிகர். காலம் : கி. பி. 16 ஆம் நூற்றாண்டு. 17 ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர்.*

#### அருஞ்சொற் பொருள்

*1. மன்றல் - மணம் ; தெரியல் - மாலை. ஒச்சி - செலுத்தி. பொன்தலம் காவலானின் - பொன்னுலகமாகிய சுவர்க்கத்தை ஆளும் இந்திரனைப்போல் ;* இன் : ஐந்தன் உருபு ஒப்புப் பொருளில் வந்தது. *பொலியும் - விளங்கும். விறல் - வெற்றி, வலிமை. விஞ்சை - வித்தை, கல்வி.*

*2. பூழியர் - பாண்டியர். கோயில்-அரண்மனை.* இலக்கணப் போலி. *வேத்தவை - அரச சபை.* 'வேந்து' என்பது 'வேத்து' என வலித்தல் விகாரம் பெற்றது. *சூழி : முகபடாம் (நெற்றிப்பட்டம்). மால் யானை - பெரிய யானை ;* உரிச்சொற்றொடர். *தழீஇ - தழுவி ;*

சொல்லிசை அளபெடை. இசைத்தேன் : உருவகம். மழலை வீணை - மழலைச் சொல்போல் இனிய ஓசை உண்டாக்கும் யாழ்.

ஏழ் இசை : ச, ரி, க, ம, ப, த, நி என்பன. ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும் ஏழு சுரங்கள். இவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனத் தமிழில் வழங்கப்பெறும்.

3. மானம் - பெருமை. தானம் - இசை பிறக்கும் இடங்கள் அமைந்த. உழையர் - அருகிலிருப்போர். (ஏவலர்). கொணர்திர் : முன்னிலைப் பன்மை வினைமுற்று. மீனவன் - மீனக் கொடியையுடைய பாண்டியன்.

4. உவரி - கடல்; உக்கிரகுமார பாண்டியன் கடல் வற்றுமாறு தன் வேலை வீசி வென்றான். அதனால் அவன் மரபில் வந்த வரகுணனும் அப் பெயர் பெற்றான். கழல் - அடி ; தானியாகு பெயர். பாணி - தாளம்.

5. வலன் - (அன்பின்) வலிமை. கூடல் - மதுரை. வீறு - செருக்கு. வரைந்து - (நாள்) வரையறுத்து. அழிப்பன் - அழிப்பேன். தன்மை ஒருமை வினைமுற்று.

6. மையணி மிடற்றினன் - (நஞ்சு உண்டமையால்) கருமை பொருந்திய அழகிய கழுத்தினையுடைய சிவன். வந்தித்து - துதித்து. தோய்ந்த - நிறைந்த. இப்பால் - பின்னர்.

7. திருத்தனார் - குற்றமற்ற தூயவடிவினராகிய சிவன். மாற்ற - வெல்ல. விருத்தன் - வயது முதிர்ந்தவன். சொக்கநாதர் எழுந்தருளி யுள்ள விமானம் இந்திரன் அளித்தது என்பது புராணம்.

8. தறிந்த - முறிக்கப் பெற்ற. இந்தனம் - விறகு. பங்கி - தலை மயிர். அழுந்திய - பள்ளமான. மறிந்த - (அலைகள்) மடங்கி வீசும். பங்கு - இடப்பக்கம். மங்கை - பார்வதி. இச் செய்யுள் குளகம்.

9. அருவிலை - (வாங்க) இயலாத விலை : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மிடைந்த - நெருங்கிய. கவலை - இரு தெருக்கள் கூடும் இடம். முடுக்கர் - சிறு தெரு. கடைத்தலை - தலைவாயில் : இலக்கணப் போலி.

10. ஊன்றி இட்டு - நாட்டி வைத்து. அடுத்தவன் - வேற்று நாட்டில் இருந்து மதுரை வந்த ஏமநாதன். எழீஇ - எழுப்பி : சொல்லிசை அளபெடை. சுருதி மடுத்து - சுருதி கேட்டு.

11. அறை - ஒலிக்கும். முண்டக மலரோன் - தாமரை மலர் மீதமர்ந்த பிரமன். புரந்தரன் - இந்திரன். அண்டர் - தேவர். குறுமை+ஏவல்=குற்றேவல். பண்+தரு=பண்டரு. இனிய - ஓசை தரும். விபஞ்சி - யாழ்.

12. கனி - (சுவை) மிகுந்த. கிழவன் - உரியவன் ஆன பாண பத்திரன். வேட்டு - விரும்பி. நனி இசை - சிறந்த இசை : உரிச்சொற் றொடர். ஒடுங்க - சுருங்க. வினைஞன் - கற்கும் தொழில் செய்பவன்.

13. பகர்ந்தேனும் - கூறி விற்றேனும். ஓம்புகேன் - பாதுகாப்பேன். நைவளம் - இசைச் சிறப்பு. பாடும் - பாடுவான்: செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

14. பை - படம். பொறி - புள்ளி. மஞ்ஞை - மயில். நால்வாய் மத்தமான் - தொங்கும் வாயினையும் மதமும் கொண்ட யானை. அரிமான் - சிங்கம். புல்வாய் - மான். வல்லியம் - புலி. மருட்கை - வியப்பு, மயக்கம். மாறு - மாறுபாடு, பகை. தலைத்தலை - இடங்கள் தோறும். அம்மா: வியப்பிடைச் சொல்.

15. நுதலோன் - நெற்றியை யுடைய சிவன். சாமகண்டம் - சாமவேதம் பாடும் கழுத்து. முல்லைப் பண் - முல்லை என்னும் சாதாரி இசை. சராசரம் - அசையும் பொருளும், அசையாப் பொருளும். விழுங்கி - தன்னுள் அகப்படுத்தி.

16. இழுக்கிவிட்ட - (பாணபத்திரர்) நீக்கிவிட்ட. வழுக்கில் - குற்றமற்ற. எற்றோ - எவ்வாறிருக்குமோ. மதியா - எண்ணி: செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சம். அழுக்கம் - வருத்தம். பண்டர் குழுக்கள் - இசைபாடும் கூட்டம். குலைகுலைந்திட - நடுநடுங்கிட; இரட்டைக் கிளவி.

17. ஆடல் - வெற்றி. 'அடல்' என்பதன் நீட்டல் விகாரம். ஏறு+அழகர்=ஏற்றழகர். ஏறு - காளை. இசைவலான் - ஏமநாதன். பாண் செய்து - இசைபாடி. பத்திரம் செய்தோம் - (உன்னைக்) காத்தல் செய்தோம்.

18. ஊக்க - செலுத்த. விண் மலர்ந்து - ஆகாயத்தில் கிரணங்களைப் பரப்பி. நான்மறைப் பொருள் - நான்கு வேதங்களின் பொருளாயுள்ள சோமசுந்தரர்: அடித்தலம்; இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.

19. முண்டகத்தாள் - தாமரை போன்ற அடி: உவமைத் தொகை.

20. நெடியன் - திருமால். சுருதி - வேதம். செடியனேன் - கீழானவன். சேண் - தூரம். சேண்+நிலம்=சேணிலம்.

## வினாக்கள்

1. திருவிளையாடற் புராணம் - நூற்குறிப்பு வரைக.
2. பரஞ்சோதி முனிவரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
3. ஏமநாதன் என்பவன் யார்? அவன் எப்பொழுது மதுரைக்கு வந்தான்?
4. ஏமநாதன் தருக்கடையக் காரணம் யாது?
5. "ஏமநாதனுடன் இசை பாடுதி கொல்லோ?" என்று கேட்ட பாண்டியனுக்குப் பாணபத்திரன் அளித்த பதில் யாது?
6. சொக்கநாதர் விறகு சுமந்து சென்ற காட்சி எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

7. இறைவர் பாடிய இசையின் சிறப்பை வரைக.
8. "நீ யார்?" எனக் கேட்ட ஏமநாதனுக்கு இறைவன் அளித்த விடை யாது?
9. ஏமநாதன் மதுரையினின்று இரவில் நீங்கக் காரணம் யாது?
10. சிவபெருமான் பத்திரரின் கனவில் தோன்றிக் கூறியது யாது?
11. இறைவனின் இன்னருளைப் பத்திரர் எங்ஙனம் வியந்து போற்றினர்?
12. இடஞ்சுட்டிப் பொருளை விளக்குக.
   (அ) 'அன்னவன் விருது வாங்கி அவனை வீறழிப்பன்'.
   (ஆ) 'பண்தரு விபஞ்சி பாணபத்திரன் அடிமை'.
   (இ) 'இவ்வயிறோம்புகேனென்று இத்தொழில் பூண்டேன்'.
   (ஈ) 'பாண்செய்து வென்று பத்திரம் செய்தும்'.

### பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: பொன்றலம், வடபுலம், வேத்தவை, ஏற்றழகர்.
(ஆ) நீவிர் அறிந்த திருவிளையாடற் புராணக் கதை மற்றொன்றை எழுதுக.
(இ) சிவபெருமான் 'மையணி மிடற்றினன்' ஆன வரலாற்றைக் கேட்டறிக.
(ஈ) இசைச் சிறப்பு குறித்துக் கட்டுரை ஒன்று வரைக.
(உ) உவரி வென்றோன் வரலாற்றைக் கேட்டு அறிந்திடுக.

## 6. ஆசிய சோதி

### புத்தர் அவதாரம்

ஆசிய சோதி - ஆசியாக் கண்டத்தின் பேரொளி என்பது பொருள். அப் பேரொளி புத்தராவர். புத்தரது வரலாற்றை அழகிய செந்தமிழ்ப் பாவினால் கூறும் நூலாதலின் இந் நூல் இப் பெயர் பெற்றது. ஆங்கிலத்தில் எட்வின் ஆர்னல்டு என்பவர் இயற்றிய 'Light of Asia' என்னும் நூலை ஒட்டி இஃது எழுதப் பெற்றதாகும்.

### புத்தர் அவதாரம்

புத்தர் பிரான் கபிலவாஸ்து என்னும் நகரில் சுத்தோதனர்க்கும், மாயாதேவிக்கும் திருமைந்தனாக கி. மு. 563 இல் அவதரித்தார். இயற்பெயர் சித்தார்த்தர். புத்தர் என்னும் சொல்லுக்கு 'ஞானோதயம் பெற்றவர்' என்பது பொருளாம். பின்வரும் பகுதி ஆசிய சோதியின் முதற் பிரிவாகும்.

*[அசித முனிவர் என்ற ஒப்பற்ற முனிவர் புத்தர்பிரான் அவதரித்ததைத் தேவர் உரைத்த மொழியால் அறிந்து, மகிழ்வோடு பெருமானைக் காண அரண்மனையை அடைந்தார். சுத்தோதனர் முனிவரை வரவேற்று, தம் மைந்தனை எடுத்து வந்து முனிவர் திருவடிகளில் வைக்குமாறு மாயாதேவியிடம் கூறினர். அவளும் குழந்தையை எடுத்து வந்தாள்.]*

## அசிதமுனி உரைத்தல்

மாமுனி எழுந்து வணங்கி நின்று
“பொறுபொறு, தாயே! பொறு” எனத் தடுத்து,
“மதலாய்! நின்னடி மலரிணை தொழுதேன்;
அவனே நீயாம்! ஐயம் அதற்கிலை.
பகவன் நீயே! பரமன் நீயே!

புனிதன் நீயே! புராணன் நீயே!
தருமன் நீயே! தலைவன் நீயே!
ஆதி நீயே! அறவோன் நீயே!
ஆயிர வாரத் தாழியான் நீயே!
உண்மை ஒளியால் உள்ளிருள் போக்கி,

நன்மை விளக்கும் ஞாயிறு நீயே!
யானும் இன்றுஉன் இணையடி பணிந்து,
பாரிற் பிறந்த பயனெலாம் பெற்றேன்.
மன்னவர் மன்னவ! மானிடத் தருவில்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பால்

ஒரு முறை மலரும் ஒண்மலர் இதுவாம்.
மலரிதன் மணமே அறிவின் மணமாய்
மனத்தின் மாசு மாற்றிடும், ஐயா!
மலரிதன் மதுவே அருளின் மதுவாய்
மன்னுயிர்க்கு இன்பம் வளர்த்திடும், ஐயா!

இம்மா மகனை ஈன்றவர் போல,
மாதவஞ் செய்தோர் மாநிலத்து உண்டோ?
ஆயினும், அரசே! அரிவாள் போல்உன்
நெஞ்சினை அறுக்கும் நெடுந்துயர் ஒன்றுஇம்
மகவால் உனக்கு வருவது திண்ணம்.

மங்கையர்க் கரசி, மாயா தேவி !
வாழ்க்கையோ துன்ப மயமாம்; அதனுல்,
ஏந்திய முத்தினை ஈன்றபின் இப்பி
மாண்டு மண்ணில் மறைவது போல
இற்றைக்கு ஏழாம் நாளில் இறவா
இன்ப வீடுநீ எய்துவது
உண்மை யாம்" என்று உரைத்து ஏகினனே.

குறிப்புக்கள் :

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. ஊர் : நாஞ்சில் நாட்டிலுள்ள சுசீந்திரம் என்னும் ஊருக்கு அருகில் உள்ள தேரூர். குலம் : வேளாளர். பெற்றோர் : சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி அம்மையார். சமயம் : சைவம். இயற்றிய நூல்கள்: மலரும் மாலையும், ஆசிய சோதி, அழகம்மை ஆசிரிய விருத்தம், சுசீந்தை மாலை, உமர் கய்யாம் பாடல்கள், காந்தளூர்ச்சாலை, மருமக்கள் வழி மான்மியம் முதலியன. காலம் : கி. பி. 1876—1954.

### அருஞ்சொற் பொருள்

*1-13* வரிகள் : மாமுனி - பெருமை வாய்ந்த அசிதமுனிவர் ; உரிச் சொல் தொடர். இணை அடி மலர் - இரண்டு அடிகளாகிய தாமரை மலர். அடிமலர் : உருவகம். அவனே நீ ஆம் - இறைவனே நீ ஆவாய். புராணன் - பழமையானவன். தருமன் - அறக்கடவுள். அறவோன் - புத்தர்பிரான். ஆழியோன் - சக்கரத்தையுடைய திருமால். உள் இருள் - (மக்கள்) உள்ளத்திலுள்ள அறியாமையாகிய இருள் : ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை. பொறு பொறு : அடுக்குத் தொடர். பொறு : ஏவல் ஒருமை வினைமுற்று.

*14-22* வரிகள்: மானிடத்தரு-மக்கள் இனமாகிய மரம்; உருவகம். ஒண்மலர்-ஒளி பொருந்திய மலர் : பண்புத்தொகை. அறிவின் மயமாய்- அறிவின் வடிவாய். மது - தேன். உண்டோ : ஓகாரம் எதிர்மறை.

*23 - 32* வரிகள் : நெடும் துயர் - மிக்க துன்பம் : பண்புத்தொகை. மகவு - குழந்தை. திண்ணம் - உறுதி. இப்பி - முத்துச் சிப்பி. இறவா இன்பம் - அழியா இன்பம் : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயர் எச்சம்.

### வினுக்கள்

1. ஆசிய சோதி—சிறு குறிப்பு வரைக.
2. அசித முனிவர் குழந்தையை எங்ஙனம் புகழ்ந்தார் ?
3. புத்தரை எத்தகைய மகன் எனக் கூறுகிருர் ?
4. 'நெஞ்சினை அறுக்கும் நெடுந்துயர்' என்று முனிவர் குறிப் பிட்டதனை விளக்குக.

5. அசித முனிவர் மாயாதேவியை நோக்கிக் கூறியன யாவை ?
6. இடஞ் சுட்டிப் பொருளை விளக்குக :
‘பாரிற் பிறந்த பயனெலாம் பெற்றேன்.’
7. உவமையைப் பொருளொடு பொருத்தி விளக்குக :
‘ஏந்திய முத்தினை ஈன்றபின் இப்பி மாண்டு மறைவதுபோல்.

### பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: ஆயிரவாரத்தாழி, ஒண்மலர், நெடுந்துயர்.
(ஆ) புத்தர் வரலாறு முழுவதும் படித்தறிக.
(இ) அசித முனிவர் கூறிய மொழியால் நீவிர் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து வரைக.
(ஈ) இப் பாடப் பகுதியைக் கொண்டு ஓரங்க நாடகக் காட்சி எழுதுக.

## 7. மலரும் மாலையும்

### அன்பின் வெற்றி

இந் நூல் தனியான மலர்களைப்போலத் தனிப்பட்ட கருத்துடைய பல தனிப்பாடல்களும், மாலைபோலத் தொடர்ச்சியான கருத்துக்களைக் கொண்ட பாடல்களும் கொண்டுள்ளமையால் ‘மலரும் மாலையும்’ எனப் பெயர் பெற்றது.

தமிழ் நாட்டில் ஆண்டாள் வரலாறு வழங்கி வருதல்போல் வட நாட்டில் மீராபாய் என்னும் கடவுள் அன்புடையாள் வரலாறு வழங்கி வருகிறது. ஆண்டாள் பாடிய பாசுரங்களைப்போல இந்தி மொழியில் மீராபாய் பாடிய பாடல்கள் சிறப்புடன் வழங்கி வருகின்றன. மீராபாய் தன் அன்பின் பெருக்கால் கண்ணன் திருவடி அடைந்தமையால் இப்பகுதி அன்பின் வெற்றி என்று பெயர் பெற்றது.

[மீராபாய் இராசபுதனத்திலிருந்த சிற்றரசன் ஒருவனுக்குப் புதல்வியாக கி. பி. 1601 ஆம் ஆண்டில் பிறந்தாள். இவள் சிறு குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்தபோது அவள் தாய் கண்ணன் பொம்மையைத் தந்து “இவரே உன் கணவர்” என்று விளையாட்டாகக் கூறினாள். அன்று முதல் மீரா கண்ணனைக் கணவனாகக் கருதித் தொழுது வந்தாள். ஒரு நாள் இரவில் கண்ணன் தன்னை மணந்ததாகக் கனவு கண்டு, பொழுது புலர்ந்ததும் தாயிடம் கனவைக் கூறுகிறாள்.]

### அன்பின் வெற்றி

அன்னையே! தாயே! அழகன் சகதீசன்
என்னை மணக்க இரவில் கனாக்கண்டேன் ;
நென்னல் இரவுகண்ட நீண்ட கனாமுழுதும்
உன்னை ஒளியாமல் உரைக்கின்றேன் ; கேளம்மா ! (1)

தோரணம் நாட்டித் துழாய்மாலை தொங்கவிட்டுப்
பூரண கும்பம் பொலிவாக முன்வைத்துத்
தாரணி போற்றத் தகுமோர் புரோகிதர்வந்து
ஆரணம் ஓதக் கனாக்கண்டேன் ; அம்மா ! நான். (2)

செய்தற் கரிதாம்அத் திருமணப் பந்தரின்கீழ்
வையம் அளந்து வளர்ந்த வடிவழகன்
ஐம்பத் தறுகோடி ஆட்கள் நடுவேயென்
கையைப் பிடிக்கக் கனாக்கண்டேன் ; அம்மா ! நான். (3)

[மீராவின் அழகையும், பாட்டையும், புகழையும் நேரில் கண்டும் கேட்டும் மகிழ்ந்த மேவாட் மகாராணாவின் மூத்த மகன் போசராசன் அவளை மணந்து தன் நகர்க்கு அழைத்துச் சென்றான். மீரா கண்ணன் உருவம் வைத்து வழிபட, அவன் தாய் அவ்வுருவத்தைப் பிடுங்கி எறிய வருந்திப் பாடுகிறாள்.]

நீடும் மனத்துயரை நீக்கும் மருத்துவனை
நாடும் நகர்ப்புறமும் நான்கு திசையுமுள்ள
காடும் மலையிடமும் கானற் பெருவெளியும்
தேடி யலைந்தலுத்தேன் ; தெரியநான் கண்டிலனே. (4)

[மீராவின் துயர் அறிந்து போசராசன் கண்ணனுக்கு ஆலயம் கட்டித் தருகிறான். மதுயாமினி விரதத்தை மீரா மேற்கொண்டு, மைத்துனி தடுத்தும் கேளாமல் தெருவில் பஜனை பாடுகிறாள்.]

என்றுமே கிரிதரனை யன்றி, வேறிங்கு
ஏதுமொரு துணையறியேன் ; எழுந்து முன்னம்,
குன்றுயர்த்த கோமானே வணங்குந் தெய்வம்
குலப்பெருமை குடிப்பெருமை எல்லாம் விட்டேன்,
நன்றுதருந் திருக்கூட்டம் நாடிச் சார்ந்தேன் ;
நாணிழந்தேன் ; எவரையும் நான் மதிக்கமாட்டேன் ;
துன்று கண்ணீர் விட்டு, அன்புக்கொடிவ ளர்த்தேன்,
சுகமென்னுங் கனியையது தந்த(து) அம்மா ! (5)

[மீராவின் செயல்களால் வெறுப்புற்ற போசராசன் அவளை நாட்டை விட்டு விரட்டுகிறான். தீர்த்த யாத்திரை தொடங்கிய மீரா கூர்ஜர நாட்டில் சாது இரவிதாசனைப் பணிகிறாள். அவர், 'நீ கணவரோடு சென்று வாழ்வாய்' என்று கூற, அதனை ஏற்காது அவர் முன்னிலையில் பாடுகிறாள்.]

காசியிலே இறப்பதனுல் பயனென்று இல்லை ;
காஷாயம் தரிப்பதொரு வேஷமேயாம் ;
ஆசையினை வேருடனே அறுக்க வேண்டும் ;
அழியுமுடல் அபிமானம் அகற்ற வேண்டும் ;
பேசுலகில் அழியாத பொருளொன்று இல்லை ;
பெரியவர்க்கும் சிறியவர்க்கும் மரணம் ஒன்றே,
பாசமுறு சம்சாரம் அந்தி யோடு
பறந்தகலும் பறவைவிளை யாட்டே யாமால். (6)

[ஒருமுறை சமாதியில் கண்ணன் திருமுகம் கண்டு தன் கணவன் நினைவு வரச் சென்று கணவனேடு 10 ஆண்டுகள் வாழ்கிருள். கணவன் போரில் இறக்க, அவன் தம்பி உதயசிம்மன் மீராவைக் கொல்ல முயலத் தப்பிப் பிருந்தாவனம் அடைகிருள். அங்குப் பல நாட்களாக அடைபட்டுக் கிடந்த பழைய கோவில் திறக்கப் பாடுகிருள்.]

ஆளடிமை யாகஎனை அமர்த்திக் கொள்வாய் ;
அழகாக நந்தவன வேலை செய்வேன் ;
நாள்விடிய எழுந்துன்னை நமஸ்க ரிப்பேன் ;
நலமிகவே நின் கதைகள் பாடி நிற்பேன் ;
மீள்கூலி யாயுனது காட்சி போதும் ;
மேற்செலவுக் குன்நாம செபமே போதும் ;
நீள்செல்வம் பத்தியலால் வேறென் றில்லை ;
நித்தியனே ! நின்மலனே ! நிகரில் லோனே ! (7)

[பாடி முடியவும் கதவு திறக்கிறது. பலநாள் அங்கிருந்து கண்ணனைத் துதித்து, தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு கண்ணனை வேண்டுகிருள்.]

என்றும் எனைநீ ஏற்றுக்கொள் ;
எனக்குத் துணைவே றெவருமில்லை ;
கன்று பசியும் எனக்கில்லை ;
கண்ணில் உறக்கம் சிறிதுமிலை ;
துன்றும் உடலும் குறுகி, ஒரு
துரும்பாய்த் தேய்தல் கண்டிலையோ ?
நன்று தருவாய் ; எனக்கூடி
நடுவில் பிரியா தருள்வாயே ! (8)

[கண்ணன் விக்கிரகம் இரண்டாகப் பிளந்து மீராவைத் தன்னுள் அடக்கிக் கொண்டது. இவ்வாறு மீரா, தன் 69 ஆம் வயதில் இறைவ னேடு இரண்டறக் கலந்தாள்.]

குறிப்புக்கள் :

ஆசிரியர் வரலாற்றை ஆசிய சோதி நூற்குறிப்பில் காண்க.

## அருஞ்சொற் பொருள்

1. நென்னல் - நேற்று. ஒளியாமல் - மறைக்காமல். கண்டேன், உரைக்கின்றேன் : தன்மை ஒருமை வினைமுற்றுக்கள்.

2. துழாய் மாலை - துளசிமாலை. ஆரணம் - வேதம். பூரண கும்பம் - நிறைகுடம். பொலிவாக - அழகுவிளங்க. தாரணி - உலகம்.

3. பந்தர் - பந்தல் : கடைப்போலி. வையம் - பூமி. 'வையம்... வடிவழகன்' என்பதில் திருமால் வாமனவதாரத்தில் மகாபலியிடம் மூன்றடி மண் கேட்டு உலகளந்த வரலாறு குறிக்கப்படுகிறது.

4. கானல் - கடற்கரை. அலுத்தேன் - சலித்தேன்.

5. கிரிதரன் - கண்ணன். 'குன்றுயர்த்த கோமான்' என்பதில் கண்ணன் ஆநிரை காக்க, கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த வரலாறு குறிக்கப்படுகிறது. துன்று - பொருந்திய. அன்புக் கொடி, சுகமென்னுங்கனி : உருவகங்கள்.

6. காஷாயம் - காவி உடை. அபிமானம் - பற்று, அன்பு. பாசம் - அன்பு.

7. நின்மலன் - குற்றமற்றவன். நித்தியன் - என்றுமிருப்பவன்.

8. கன்று பசி - வருத்தும் பசி : வினைத்தொகை. துன்றும் - பொருந்தும்.

## வினாக்கள்

1. மீரா தான் கண்ட கனவாகத் தாயிடம் கூறியன யாவை?
2. மீரா கண்ணனைத் தேடி அலுத்த இடங்கள் யாவை?
3. மீரா சுகமென்னுங் கனியை எவ்வாறு பெற்றாள்?
4. கண்ணன் தன்னை வேலையாளாக அமர்த்திக் கொண்டால் மீரா யாது செய்வதாகக் கூறுகிறாள்?
5. மீரா கண்ணனிடம் தன்னை ஏற்றுக் கொள்ள இறுதியில் கூறியன யாவை?

## பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: கானற்பெருவெளி, நாணிழந்தேன், செய்தற்கரிதாம்.

(ஆ) மணவினைக் காட்சியாகக் கூறப்பட்டுள்ளவற்றை எழுதுக.

(இ) "குன்றுயர்த்த கோமான்" என்பதில் அடங்கிய வரலாற்றை ஆசிரியர்பால் கேட்டறிக.

(ஈ) மீராபாய் வரலாறு முழுதும் படித்தறிக.

(உ) ஆண்டாள் வரலாற்றைப் படித்து ஒரு கட்டுரை வரைக.

IV

(அ) இயற்கை எழில்

பல்சுவை

★

## 1. வண்டும் மந்தியும்

கீழ்வரும் பாடல் ஈங்கோய்மலை எழுபது என்ற நூலில் உள்ளது. இந் நூல் சைவத் திருமுறைகளில் ஒன்றான பதினோராந் திருமுறையில் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

பெயர்க் காரணம்: சோழ நாட்டில் உள்ள ஈங்கோய் மலையில் எழுந்தருளி யுள்ள சிவபெருமானைப் பற்றி எழுபது பாடல்களால் பாடப்பட்ட நூலாதலின் ஈங்கோய்மலை எழுபது என்று பெயர் பெற்றது. அகத்திய முனிவர் ஈ உருக்கொண்டு இம் மலையில் உள்ள சிவபெருமானை வழிபட்டமையால் இம் மலை ஈங்கோய்மலை என்று பெயர் பெற்றதென்பது புராண வரலாறு. ஈங்கோய்மலை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலைக்கு அண்மையில் காவிரியாற்றின் வடகரையில் உள்ளது.

வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சி முதுமந்தி—பழகி
எழுந்தெழுந்து கைந்நெரிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந் தெழுந்த செஞ்சடையான் குன்று.

குறிப்புக்கள்:

### ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: நக்கீரர். நாடு: பாண்டிய நாடு. ஊர்: மதுரை. தந்தை: கணக்காயனர். சமயம்: சைவம். காலம்: கடைச்சங்க காலம். இயற்றியவை: திருமுருகாற்றுப்படை, ஈங்கோய்மலை எழுபது, கைலைபாதி காளத்திபாதி அந்தாதி ஆகிய நூல்களும், பல தனிப் பாடல்களும் ஆகும். பிற குறிப்பு: கடைச்சங்கப் புலவர்களுக்குத் தலைவர். பெண்கள் கூந்தலுக்கு இயற்கை மணமுண்டா? என்பது குறித்து இறைவனோடு வாதிட்டவர்.

### அருஞ்சொற் பொருள்

திங்கள் கொழுந்து - மூன்றாம் பிறைச்சந்திரன். எழுந்த - தோன்றி யுள்ள. வழகு - மென்மை. காந்தள் - செங்காந்தள் மலர்: பொருளாகு பெயர். இருப்ப - (தேன் உண்ண) இருக்க. மந்தி - பெண் குரங்கு. பழகி - (இக் காட்சியைப் பலமுறை கண்டு) பழகி இருந்தும். நெரிக்கும் - முறிக்கும். வழகிதழ்: பண்புத் தொகை. இச் செய்யுள் மயக்கவணி.

## 2. நாட்டு வளம்

கீழ்வரும் பாடல் பெரிய புராணத்தில் உள்ளது.

நூல் வகை: இந் நூல் சுந்தரர் பாடிய திருத் தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந் தாதி, காரைக்காலம்மையார் பாடல்கள், தேவாரங்கள் முதலிய வற்றை முதலாகக் கொண்டமையால் வழி நூல். புராண வகையைச் சார்ந்தது.

பெயர்க் காரணம்: பெருமை பெற்ற சிவனடியார்கள் வர லாற்றைக் கூறுவதால் இந் நூல் பெரிய புராணம் எனப் பெயர் பெற்றது. இந் நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும்.

சிறப்பு: சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பன்னிரண் டாந் திருமுறையாக விளங்குவது. இறை அன்பின் பெருமையை விளக்குவதோடு இலக்கிய நயங்களும் காவியச் சுவைகளும் அமைந்தது.

காடெல்லாங் கழைக்கரும்பு காவெல்லாங் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லா நெருங்குவளை
கோடெல்லாம் மடவன்னங் குளமெல்லாங் கடலன்ன
நாடெல்லா நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம்.

குறிப்புக்கள்:

### ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: சேக்கிழார். நாடு: தொண்டை நாடு. ஊர்: குன்றத்தூர். குலம்: வேளாளர் குலம். குடி: சேக்கிழார் குடி. சமயம்: சைவம். இயற்பெயர்: அருண்மொழித் தேவர். காலம்: கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர். பெயர்க் காரணம்: இவர் தாம் பிறந்த சேக்கிழார் குடியைத் தம் கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றால் விளங்கச் செய்தமையால் சேக்கிழார் என்னும் பெயர் பெற்றார். வேறு பெயர்கள்: உத்தம சோழப் பல்லவர், தொண்டர்சீர் பரவுவார்.

### அருஞ்சொற் பொருள்

காடு - (சோழ நாட்டிலுள்ள) வயல்கள். கழைக் கரும்பு - மூங்கில் போன்ற கரும்பு: உவமைத் தொகை; குழைக்கு+அரும்பு= குழைக்கரும்பு - கிளைதோறும் அரும்புகள் உள்ளன. மாடு - பக்கம். வளை - சங்குகள். கோடு - குளக்கரை. கடல் அன்ன - கடலைப் போன்று மிகவும் பெரியனவாக உள்ளன. நீர் நாடு - சோழ நாடு.

### 3. காற்றில் மரக்கிளை அசையும் தோற்றம்

*கீழ்வரும் பாடல் திருவிளையாடற் புராணத்தில் உள்ளது.*

*நூற்குறிப்பை 48 ஆம் பக்கம் பார்க்க.*

சேட்டிகைத் தென்கால் தள்ளத் தெண்மதுச்சி தறத்தும்பி
நீட்டிசை முரலச் சாயா நின்றுபூங் கொம்பர் ஆடல்
நாட்டியப் புலவன் ஆட்ட நகைமுகம் வியர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நின்ற பாவைமார் போன்ற அன்றே.

**குறிப்புக்கள் :**

*ஆசிரியர் குறிப்பை 53 ஆம் பக்கம் பார்க்க.*

அருஞ்சொற் பொருள்

சேண்+திசை=சேட்டிகை - தூர திசையிலிருந்து வரும். தென் கால்-தென்றல் காற்று. தும்பி - வண்டு. மது - தேன். முரல - ஒலி செய்ய. சாயா - சாய்ந்து. 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினை எச்சம். பாவைமார் - நாட்டியப் பெண்கள். கொம்பர் : கடைப் போலி. நகை முகம் - புன்முறுவல் நிறைந்த முகம்.

### 4. நிலா

*கீழ்வரும் செய்யுள் பாரதிதாசன் அவர்களால் இயற்றப் பெற்றது.*

அந்தியிரு ளாற்கருகும் உலகு கண்டேன்;
    அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்;
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ!
    பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்!
சிந்தாமல் சிதருமல் அழகை எல்லாம்
    சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
    எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ! (1)

உனைக்காணும் போதினிலே என்னுள் ளத்தில்
    ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவதில்லை;
    நித்தியத ரித்திரராய் உழைத்து ழைத்துத்

திணைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பந் தானே! (2)

குறிப்புக்கள் :

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : பாரதிதாசன். இயற்பெயர் : கனக சுப்புரத்தினம். ஊர் : புதுச்சேரி. தந்தையார் : கனகசபை முதலியார். பிறப்பு : *16—4—1891*. பெயர்க்காரணம் : தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாரிடம் கொண்ட பற்று காரணமாகத் தமது பெயரைப் 'பாரதிதாசன்' என மாற்றிக் கொண்டார். இயற்றிய நூல்கள் : பாரதிதாசன் கவிதைகள் (மூன்று பாகங்கள்), தமிழியக்கம், பாண்டியன் பரிசு, தேனருவி, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு முதலியன.

### அருஞ்சொற் பொருள்

கருகும் - வாடும். சேகரித்து - ஒன்று சேர்த்து. எழில் - அழகு. ஆர - நிறைய. கவின் - அழகு. வண்ணம் - வகை, விதம்.

### வினாக்கள்

1. ஈங்கோய்மலை இயற்கை எழிலை நக்கீரர் எவ்வாறு கூறியுள்ளார்?
2. "நாடெல்லாம் நீர்நாடுதனை யொவ்வா" எங்ஙனம்? விளக்குக.
3. நாட்டியப் பாவை போன்றுடியது யாது? ஏன் என விளக்குக.
4. நிலவொளியைப் பாரதிதாசன் எவ்வாறு வருணித்துள்ளார்?
5. 'பசித்த மக்கட்குப் பானை சோறு கிடைத்ததுபோல' என்ற உவமையின் சிறப்பை விளக்குக.

### பயிற்சி

(அ) பிரித்து எழுதுக : திங்கட்கொழுந்து, நெடுங்குவளை, சேட்டிகை.
(ஆ) நீவிர் கண்டு களித்த மலை ஒன்றின் வருணனையை வரைக.
(இ) சோழ நாட்டின் நீர் வளம், நிலவளம் பற்றி ஆசிரியர்பால் கேட்டறிக.
(ஈ) நிலாத் தோற்றத்தால் விளையும் நன்மைகளைத் தொகுத்துக் கட்டுரை ஒன்று வரைக.

## (ஆ) சீட்டுக்கவி

சீட்டுக்கவி யென்பது செய்யுள் வடிவில் அமைந்த கடிதமாகும். பாடுவோர் தம் பெருமையும், பாடப்படுவோர் பெருமையும், தேவையும் விளங்கக் குறிப்பிட்டு அனுப்புவர். இச் சீட்டுக்கவி அந்தகக் கவி வீரராகவ முதலியார் சேலத்து வேந்தன் செழியதரையன் என்பானுக்குக் குதிரை வேண்டி எழுதியனுப்பியதாகும்.

ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கு(ம்)ஓலை
சேடாதி பன்சிரம் அசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழிய(ன்)எதிர் கொண்டு காண்க ;
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக்கொ லாத கோணம்
பறவாத கொக்கனற் பண்ணுத கோடைஐம்
படையில்தொ டாதகுந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன் றெங்கும்
துதிக்கவர விடல்வேண்டுமே.

குறிப்புக்கள் :

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : அந்தகக் கவி வீரராகவர். நாடு : தொண்டை நாடு. ஊர் : பூதூர். குலம் : வேளாளர். தந்தை : வடுகநாத முதலியார். இயற் பெயர் : வீரராகவர். பெயர்க்காரணம் : பிறவிக் குருடராக இருந்தும் கவி பாடும் ஆற்றலுடையவராக விளங்கியமையால் 'அந்தகக் கவி வீரராகவர்' எனப் பெயர் பெற்றார். இயற்றியவை : சந்திரவாணன் கோவை, திருக்கழுக்குன்றத்து மாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருவாரூர் உலா, பல தனிப்பாடல்கள் இவர் இயற்றியவை ஆகும்.

### அருஞ்சொற் பொருள்

விரகன் - சமர்த்தன். இமசேது பரியந்தம் - இமயமலை முதல் இராமேசுவரம் வரை. எதிர் - நிகர். சேட அதிபன் - பாம்புகளுக்குத்

தலைவனாகிய ஆதிசேடன். புகழ் பெற்ற - கீர்த்தியைப் பெற்றுள்ள. சிரம் - தலை. திரிபதகை - கங்கை. குலசேகரன் - குலத்தில் தோன்றிச் சிறப்புற்று விளங்குபவன். தாகம் - (குடி மக்களின்) வாட்டம். கந்தருவம் - பண், இசை. கந்துகம் - பந்து. கோணம் - வாள். குந்தம்- வேல். பாடலம் - பாதிரிப்பூ. சடிலம் - சடை. கிள்ளை - கிளி. ஓலை : மங்கல வழக்கு. கந்தருவம் முதலிய சொற்கள் அடைமொழியினால் குதிரை என்னும் ஒரு பொருளையே குறித்தன.

### வினாக்கள்

1. சீட்டுக்கவி என்பது யாது? அதில் கூறப்படும் செய்திகள் யாவை?
2. 'ஏடாயிரம்' என்று தொடங்கும் கவி யாரால் ஏன் பாடப் பட்டது?
3. அந்தகக் கவி வீரராகவரின் சிறப்பு யாது?
4. செழியதரையன் சிறப்பாகக் கவி வீரராகவர் கூறியுள்ளன யாவை?
5. கவி வீரராகவர் குதிரை வேண்டி எழுதிய சீட்டுக்கவியில் உள்ள சொல் நயத்தை விளக்குக.
6. குதிரைக்கு வந்துள்ள பெயர்களில் ஐந்தைக் குறிக்க.

### பயிற்சி

(அ) பிரித்து எழுதுக : செழியனெதிர், ஏடாயிரம், சிரமசைத் திடும்.

(ஆ) வேறு சில சீட்டுக் கவிகளையும் படித்தறிக.

(இ) அந்தகக் கவி வீரராகவர் யானையைக் குறிக்கும் பல பெயர் களை அமைத்துப் பாடியுள்ள பாடலை ஆசிரியர்பால் கேட்டறிக.

## (இ) இரட்டுற மொழிதல்

ஒரு சொல்லாவது, தொடராவது இரு பொருள்படக் கூறுவது இரட்டுற மொழிதலாம். இதனைச் சிலேடை என்பர். சிலேடை— செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இரு வகைப்படும்.

**செம்மொழிச் சிலேடை :** ஒரு சொல்லோ, தொடரோ ஒரே தன்மையாய் அமைந்து ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் தருவது.

**பிரிமொழிச் சிலேடை :** ஒரு சொல்லோ, தொடரோ ஒரு பொருள் கொள்ளும்போது ஒரு வகையாகவும், மற்றொரு பொருள் கொள்ளும் போது பிரிந்து வேறு வகையாகவும் பொருள் தருவது.

## கலைசைச் சிலேடை வெண்பா

கலைசை—தொண்டை நாட்டிலே உள்ள தொட்டிக்கலை என்னும் ஊர். இது கலைசை என மருவி நூல்களில் வழங்குகின்றது.

இவ் வூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவனைப் பற்றிச் செம்மொழிப் பிரிமொழிச் சிலேடைகள் அமைய நூறு நேரிசை வெண்பாக்களால் பாடப்பட்ட நூலாதலின் கலைசைச் சிலேடை வெண்பா எனப் பெயர் பெற்றது.

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே—மேவும்
அரிவையம்பா கத்தான் அரணொருமூன் றெய்தோன்
அரிவையம்பா கத்தான் அகம்.

**குறிப்புக்கள் :**

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : தொட்டிக்கலை சுப்பிரமணிய முதலியார். பிறப்பிடம்: சிதம்பரத்தைச் சேர்ந்த காட்டு மன்னார் கோயில். தொண்டை நாட்டுத் தொட்டிக் கலையில் பலகாலம் வாழ்ந்தவர். குலம் : வேளாளர். இயற்றிய நூல்கள் : துறைசைக் கோவை, கலைசைக் கோவை, கலைசைச் சிலேடை வெண்பா, தணிகை விருத்தம் முதலியன. இவர் சிவஞான முனிவரின் மாணவராவர். காலம் : கி. பி. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

### அருஞ்சொற் பொருள்

பாவலர் - பாக்கள் இயற்றுவதில் வல்லமை வாய்ந்த புலவர். காவலர் - அரசர். கா+அலர் - சோலையில் உள்ள மலர். அரி+வை+அம்பு+ஆக - திருமாலைக் கூர்மையான அம்பாகக் கொண்டு. மூன்று அரண் - தாருகாட்சன், கமலாட்சன், வித்யுந்மாலி என்ற மூன்று அரக்கர்களுடைய பொன், வெள்ளி, இரும்பு இவற்றால் ஆகிய பறக்கும் கோட்டைகள். அரிவை+அம்+பாகத்தான் - (பார்வதியாகிய) பெண்ணை அழகிய (தனது இடப்) பாகத்தில் கொண்ட சிவன். எய்தோன் - அழித்தவன். அகம் - எழுந்தருளியுள்ள இடம்.

### வினாக்கள்

1. சிலேடையின் இலக்கணத்தை வரைக.
2. தொட்டிக் கலைசையின் சிறப்பை வரைக.
3. “ அரிவையம்பாகத்தான்..................அகம்”—இவ்விரண்டு வரிகட்கும் பொழிப்புரை வரைக.

பயிற்சி

(அ) 'அரிவையம்பாகத்தான்'-இருவகையாகப் பிரித்துக் காட்டுக.

(ஆ) காளமேகப் புலவர் பாடியுள்ள சிலேடைப் பாக்களைத் தனிப் பாடல் திரட்டு நூலில் படித்து உணர்க.

(இ) " அரிவையம்பாகத்தான்..............அகம் "—இவ் வடிகளில் குறிக்கப்படும் கதைகளை ஆசிரியர்பால் கேட்டுணர்க.

## (ஈ) சிறு நூல்கள்

### 1. திருவரங்கக் கலம்பகம்

**நூல் வகை :** கலம்பகம், தமிழில் வழங்கும் தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று.

**பெயர்க் காரணம் :** திருவரங்கர்மீது பாடிய கலம்பகம் ஆதலின் திருவரங்கக் கலம்பகம் எனப் பெயர் பெற்றது. திருவரங்கம் வைணவத் திருப்பதிகள் நூற்றெட்டினுள் தலை சிறந்தது. 'கோயில், பெரிய கோயில்' என்று வைணவர்களால் அழைக்கப்படுவது.

**இறைவன் :** திருவரங்கநாதன். **இறைவி :** திருவரங்கநாயகி.
**கலம்பக இலக்கணம் :** கலம்+பகம்=கலம்பகம். கலம் - பன்னிரண்டு ; பகம் - ஆறு. புய வகுப்பு முதல் ஊசல் ஈருகப் பதினெட்டு உறுப்புக்களை யுடையதால் கலம்பகம் எனப் பெயர் பெற்றது என்பர். பலவகைப் பாக்களாலாகிய பாமாலை ஆதலின் இப் பெயர் பெற்ற தென்றும் கூறுவர்.

**மறம் :** மறவர் குடியில் பிறந்த ஒரு பெண்ணைத் தனக்கு மணம் பேசி வருமாறு ஓர் அரசன் தூதுவனை அனுப்ப, மறவர்கள் மணம் மறுத்து, அரசனை இகழ்ந்து பாடுவதாகச் செய்யுள் செய்வது.

#### மறம்

பேச வந்த தூத! செல்ல ரித்த ஓலை செல்லுமோ ?
    பெருவ ரங்கள் அருள்அ ரங்கர்பின்னை கேள்வர் தாளிலே
பாசம் வைத்த மறவர் பெண்ணை நேசம் வைத்து முன்னமே
    பட்ட மன்னர் பட்ட தெங்கள் பதிபு குந்து பாரடா!
வாச லுக்கி டும்ப டல்க வித்து வந்த கவிகை ; மா
    மகுட கோடி தின்ய ளக்க வைத்த காலும் நாழியும் ;
வீசு சாம ரங்கு டில்தொடுத்த கற்றை; சுற்றிலும்
    வேலியிட்ட தவர்கள் இட்ட வில்லும் வாளும் வேலுமே.

குறிப்புக்கள் :

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். வேறு பெயர் : அழகிய மணவாளதாசர். நாடு : சோழ நாடு. ஊர் : திருமங்கை. குலம் . அந்தணர். சமயம் : வைணவம். வாழ்ந்த இடம் : திருவரங்கம். இயற்றிய நூல்கள்: திருவர்ங்கத்தந்தாதி, திருவரங்க்த்து மாலை, திருவரங்கக் கலம்பகம், திருவரங்க நாயகரூசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத் தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி. இவை 'அட்டப் பிரபந்தங்கள்' என வழங்குகின்றன. காலம் : கி. பி. 17 ஆம் நூற்றூண்டின் முற்பகுதி.

### அருஞ்சொற் பொருள்

பேச -(மணம்) பேசுவதற்கு. செல் - கரையான். பின்னை கேள்வர்- நப்பின்னைப் பிராட்டியின் கணவர் ஆகிய எம்பெருமான். பட்ட மன்னர் - பட்டம் தரித்த அரசர். பட்டது - பட்ட துன்பங்கள்: வினையாலணையும் பெயர். கவித்து - பிடித்து. கவிகை - குடை. கால் - மரக்கால். நாழி - படி. குடில் தொடுத்த - குடிசைக்கு மேல் வேயப் பட்ட. கற்றை - கூரை. மறவர் தம் கூற்றுல் மணம் பேச அனுப்பிய மன்னர்க்கும் இக்கதியே நேரும் என்பதை அறியலாம்.

## 2. மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ்

நூல்வகை : பிள்ளைத் தமிழ், தமிழில் வழங்கும் தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று.

பெயர்க் காரணம் : மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளி யுள்ள மீனுட்சியம்மை மீது பாடப்பட்ட பிள்ளைத் தமிழ் ஆதலின் மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் எனப் பெயர் பெற்றது. பிள்ளைத் தமிழ் இலக்கணம் : தெய்வத்தையோ, பெரியாரையோ குழந்தை யாகப் பாவித்து, அக் குழந்தைக்குரிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாடுவது. பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரு வகைப்படும்.

ஆண்பாற் பிள்ளைத் தமிழ்க்குரிய பருவங்கள் : காப்பு, செங் கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்பனவாம்.

பெண்பாற் பிள்ளைத் தமிழ்க்குரிய பருவங்கள் : காப்பு, செங் கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல் என்பனவாம்.

### வருகைப் பருவம்

[வருகை—குழந்தை பிறந்த பன்னிரண்டாந் திங்களில் குழந் தையை வருமாறு அழைத்தல்.]

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்(கு)
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ(கு)
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலையத்து வசன் பெற்றபெரு
வாழ்வே! வருக! வருகவே!

குறிப்புக்கள் :

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : குமரகுருபர சுவாமிகள். நாடு: பாண்டிய நாடு. ஊர்: ஸ்ரீவைகுண்டம் என வழங்கும் கைலாயபுரம். குலம்: வேளாளர். பெற்றோர் : சண்முக சிகாமணிக் கவிராயர், சிவகாம சுந்தரி. சமயம் : சைவம். ஞான குரு : மாசிலாமணித் தேசிகர். இயற்றிய நூல்கள் : கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பரச் செய்யுட் கோவை, காசிக் கலம்பகம், சகல கலாவல்லிமாலை முதலியன. காலம் : கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

இவர் பிறந்து ஐந்து ஆண்டுகள் வரையில் ஊமை போலிருக்க, இவரை அழைத்துக்கொண்டு பெற்றோர் திருச்செந்தூர் சென்று முருகனை வேண்ட, முருகன் அருளால் பேசும் திறன் பெற்றார். தன் ஞான குருவின் கட்டளைப்படி காசிநகர் சென்று மடம் நிறுவிச் சைவத்தையும், தமிழையும் வளர்த்தார்.

## அருஞ்சொற் பொருள்

தொடை - மாலை. நறை - தேன்சுவை. துறை - (அகம், புறம் ஆகிய) துறைகள். அகந்தை - ஆணவம். ஆணவம் எல்லாப் பொருட் கேட்டிற்கும் மூலமாயிருத்தலின் அதனைக் 'கிழங்கு' என்றார். அகழ்ந்து-

தோண்டி. தொழும்பர் - அடியார்கள். சிமயம் - சிகரம். இமயப் பொருப்பு: இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகை. பிடி - பெண்யானை. தரங்கம் - அலை (வீசும் கடல்). புவனம்-பூமி. ஒருவன் - ஒப்பற்ற சிவன். மதுகரம் - வண்டுகள். வாய்மடுக்கும் - தேனை உண்ணுமாறு (மலர்களை அணிந்துள்ள). குழல்காடு - கூந்தல் கற்றை. மலையத்துவசன் - மலையத்துவச பாண்டியன். குழற்காடு, அகந்தைக் கிழங்கு: உருவகங்கள். சுவை, விள்க்கு, ஓவியம், பிடி, கொடி: உவமையாகு பெயர்கள்.

## 3. நால்வர் நான்மணிமாலை

நான்குவகை மணிகளால் ஆக்கப்படும் மாலையைப்போல, வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்னும் நான்கு வகையான நாற்பது செய்யுட்களால் அந்தாதித் தொடையால் பாடப் பெறுவது நான்மணிமாலை. இந் நூல் சைவ சமய குரவர் நால்வரைப் பற்றியது. சம்பந்தரை வெண்பாவாலும், நாவுக்கரசைக் கலித்துறையாலும், சுந்தரரை விருத்தத்தாலும், மாணிக்கவாசகரை ஆசிரியப் பாவாலும் புகழ்ந்து பாடிய நான்மணிமாலை ஆதலால், நால்வர் நான் மணிமாலை எனப் பெயர் பெற்றது.

### சுந்தரர்

போத முண்ட பிள்ளை யென்பு
பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர்
கன்மி தப்ப வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க
மகனை நீய ழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ
னக்கி யம்ப வேண்டுமே.

குறிப்புக்கள் :

#### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : சிவப்பிரகாசர். நாடு: தொண்டை நாடு. ஊர்: காஞ்சீபுரம்., குலம்: கருணீகர் குலம். தந்தை: குமாரசாமிப் பண்டாரம். உடன்பிறப்பாளர் : கருணைப்பிரகாசர், வேலையர், ஞானம்பிகை. ஞானசிரியர் : சிவஞான பாலைய சுவாமிகள். வாழ்ந்த இடம் : துறைமங்கலம். ஆதரித்தவர்: துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியார். இயற்றிய நூல்கள் : நால்வர் நான்மணிமாலை, பிரபுலிங்கலீலை,

சீகாளத்திப் புராணம், திருவெங்கைக் கலம்பகம், நன்னெறி முதலியன. காலம்: கி. பி. 18 ஆம் நூற்றுண்டின் முற்பகுதி.

அருஞ்சொற் பொருள்

போதம் - ஞானப்பால். பிள்ளை - ஞானசம்பந்தர். என்பு - எலும்பு. சொல்லின் மன்னர் - நாவுக்கரசர். கல்+மிதப்ப=கன் மிதிப்ப. நன்று+எனக்கு+இயம்ப=நன்றெனக்கியம்ப.

## 4. கலிங்கத்துப் பரணி

நூல் வகை: பரணி, தமிழில் வழங்கும் தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று.

பெயர்க் காரணம்: முதற் குலோத்துங்கன் என்ற சோழ மன்னன் கலிங்க நாட்டை வென்ற வெற்றியைச் சிறப்பித்துப் பாடப்பட்ட நூலாதலின் இது கலிங்கத்துப் பரணி எனப் பெயர் பெற்றது. பரணி யின் இலக்கணம்: போரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனின் வெற்றியைச் சிறப்பித்துப் பாடுவது இந் நூல். கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, பாலை நில வருணனை, காளிக்குப் பேய் கூறுதல், பேய் கட்குக் காளி கூறுதல் முதலிய உறுப்புக்களை அமைத்து அந் நூலுக் குரிய தலைவனின் இயல்பு, சிறப்பு, வெற்றி முதலியவற்றை ஈரடித் தாழிசைகளில் புறப்பொருள் இலக்கணம் அமையப் பாடுவது.

பரணி நாளில் பேய்கள் கூழ் சமைத்துக் காளியை வழிபட்டு உண்டு மகிழ்வதால் பரணி எனப் பெயர் பெற்றது என்றும், பரணி பாடும் புலவன், அரசன் வேல், வாள் முதலியவற்றால் அமைத்த பரண்மேல் இருந்து பாடுதல் மரபாதலால் பரணி எனப் பெயர் பெற்றதென்றும் கூறுவர்.

[பாடப் பகுதி: கருணாகரத் தொண்டைமான் கலிங்க மன்ன னோடு பொருத போர்க்கள வருணனையில் காளி பேய்களுக்குக் கூறிய தாக உள்ள செய்யுட்கள்.]

### வீரர் முகம் மலர்ந்து கிடந்தமை

விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின்! பார்மின்!! (1)

### கொடியொடு வீழ்ந்து கிடக்கும் யானைகள்

சாய்ந்துவிழும் கடகளிற்றி னுடனே சாய்ந்து
தடங்குருதி மிசைப்படியும் கொடிகள் தங்கள்
காந்தருடன் கனலமளி யதன்மேல் வைகும்
கற்புடைமா தரையொத்தல் காண்மின்! காண்மின்!! (2)

குறிப்புக்கள் :

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் : சயங்கொண்டார். நாடு : சோழ நாடு. ஊர் : தீபங் குடி. சமயம் : சைவம். ஆதரித்தவன் : முதற்குலோத்துங்க சோழன். சிறப்பு : 'பரணிக்கோர் சயங்கொண்டார்' எனப் பாராட்டப் பட்ட வர். காலம் : கி. பி. 12 ஆம் நூற்றுண்டு.

### அருஞ்சொற் பொருள்

1. நெருங்கி - மிகுதியாகத் திரண்டு. பதும முகம் - தாமரை போன்ற முகம் : உவமைத் தொகை. பார்மின் பார்மின் : அடுக்குத் தொடர். இச் செய்யுள் உவமை அணி.

2. சாய்ந்து-(பகைவர் படைக்கலம் பாய்ந்தமையால்) சாய்ந்து. கடம் களிறு - மத நீர் பொழியும் ஆண்யானை. குருதி - இரத்தம். காந்தர் - கணவர். கனல் அமளி - தீயாகிய படுக்கை: இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகை. வைகும் - தங்கி இருக்கும். இச் செய்யுள் உவமை அணி.

### வினுக்கள்

1. கலம்பகத்தின் இலக்கணத்தை வரைக.
2. மறம்—குறிப்பு வரைக.
3. மறவன் தன் பெண்ணை மணம் பேச வந்த மன்னர் பட்ட பாட்டை எவ்வாறு கூறியுள்ளான்?
4. மீனுட்சியம்மையை எத்தகைய சுவை, விளக்கு, உயிரோவி யம், இளவஞ்சிக் கொடி எனக் குமர குருபரர் கூறியுள்ளார்?
5. சிவப்பிரகாசர் நாயன்மார்கள் செய்த அருஞ் செயல்கள் எவை எனக் குறிப்பிட்டுள்ளார்?
6. உவமைகளை விளக்கி வரைக :
   (அ) "விருந்தினரும்.........மேலோர்"
   (ஆ) "தங்கள் காந்தருடன்............மாதர்"

### பயிற்சி

(அ) பிரித்து எழுதுக : இமயப் பொருப்பு, இளமென்பிடி, கன் மிதப்ப.

(ஆ) "வளர் சிமய............இளமென்பிடி" என்று மீனுட்சியைக் குறிப்பிட்டமைபற்றி ஆசிரியர்பால் கேட்டறிக.

(இ) சிவப்பிரகாசர் பாடலில் அமைந்த மூன்று வரலாறுகளையும் படித்து அறிக.

(ஈ) கலிங்கத்துப் பரணியிலுள்ள சுவை மிக்க பாடல்களைப் படித்து அறியுங்கள்.

(உ) நீவிர் படித்த நூல்களிலிருந்து போர்க்களக்காட்சி ஒன்று பற்றிக் கட்டுரை வரைக.

## (உ) வழிபாட்டுப் பாடல்கள்

### 1. தேவாரம்

தேவாரம்: திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சைவசமய குரவர்களால் பாடப்பெற்ற பாக்களின் தொகுதிக்குத் தேவாரம் என்று பெயர்.

பெயர்க் காரணம்: தே+வாரம். தே-தெய்வம். இங்குச் சிவ பெருமானைக் குறிக்கும். வாரம் - சொல் நயமும், இசை நயமும் கொண்ட பாடல். சிவபெருமானைப்பற்றிய இசைப்பாட்டாதலின் இப் பெயர் பெற்றது. தே+ஆரம்=தேவாரம். தே—தெய்வம். ஆரம்—மாலை. தெய்வத்திற்கு அணிவிக்கும் பூமாலை போன்ற பாமாலையாதலின் தேவாரம் எனப்பட்டது என்றும் கொள்ளலாம்.

கீழ்வரும் பாடல் திருநாவுக்கரசர் தில்லைக் கூத்தப் பெருமானைக் கண்டு வியந்து பாடியது ஆகும்.

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சி ரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநி லத்தே.

**குறிப்புக்கள் :**

**ஆசிரியர் குறிப்பு**

ஆசிரியர்: திருநாவுக்கரசர். நாடு: திருமுனைப்பாடி நாடு. ஊர்: திருவாமூர். குலம்: வேளாளர். பெற்றோர்: புகழனர், மாதினியார். தமக்கை: திலகவதியார். இயற்பெயர்: மருள்நீக்கியார். சமயம்: சைவம். காலம்: கி. பி. ஏழாம் நூற்றாண்டு.

**அருஞ்சொற் பொருள்**

குனித்த - வளைந்த. கொவ்வைச் செவ்வாய் - கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாய். பனித்த - குளிர்ந்த. எடுத்த - தூக்கிய. மனித்தப் பிறவி-மனிதப் பிறவி. இனித்தம்-இனிமை. பொன்-அழகு.

### 2. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

இந் நூல், வைணவ சமய ஆச்சாரியர்களாகிய பன்னிரண்டு ஆழ்வார்கள் திருமாலைக் குறித்துப் பாடியருளிய தமிழ்வேதம். இது தெய்வத் தன்மை வாய்ந்த திவ்வியமான நாலாயிரம் பாசுரங்களைக் கொண்டது.

இந் நூலின் பகுப்பு முறை : இந் நூல், முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய் மொழி யென நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் பாடல் குலசேகராழ்வார் பாடிய முதலாயிரம் என்னும் பகுதியைச் சார்ந்தது.

இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணமா யிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்த னென்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை மேவி
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும்நாளே !

குறிப்புக்கள் :

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : குலசேகர ஆழ்வார். குலசேகரப் பெருமாள் என்றும் கூறப் பெற்றவர். நாடு : சேர நாடு. ஊர் : கோழிக்கோடு. தந்தை : திடவிரதர். குலம் : அரச குலம். பிற குறிப்பு : சோழ, பாண்டிய நாடுகளை வென்றவர். திருமாலிடத்தும் திருமாலடியாரிடத்தும் நீங்காப் பற்றுக் கொண்டவர். காலம் : கி. பி. 8 ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற் பொருள்

இரிய - நீங்கி ஓடும்படி. இமைக்கும் - விளங்கும். துத்தி - (பாம்பின் படத்திலுள்ள) புள்ளிகள். பணம் - படம். அனந்தன்-ஆதிசேடன். பொன்னி - காவிரி. திரைக் கை - அலைகளாகிய கைகள் : உருவகம்.

## 3. தேம்பாவணி

இந் நூல் ஏசுநாதரது தந்தையாகிய சூசை முனிவரது வரலாற்றைக் கூறுவதாகும். தேம்பா + அணி = தேம்பாவணி. தேம்பா - வாடாத. அணி - மாலை. தேம்பாவணி - வாடாத புகழ் மணங் கமழும் பாக்களாலாகிய நூல்.

நீர்பாய் உலகிற் குயிரோய்நீ
நிமிர்வீட் டுலகிற் குயிரோய் நீ
சீர்பாய் பாவிற் குரையோய் நீ
திறன்கொண் டாள்வோய் கடலோய் நீ

ஏர்பாய் இரவிக் கொளியோய் நீ
எம்மேல் இரங்கிப் பிறந்தனையாம்
சூர்பாய் துகளற் றுய்வதற்குன்
துணைத்தாள் தொழும்பண் புரையாயே!

குறிப்புக்கள்:

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர்: வீரமாமுனிவர். பிறப்பிடம்: இத்தாலிய நாட்டில், மந்துவா பிரதேசத்திலுள்ள 'கான்சிதிகிளியோனி' என்னும் ஊர். இயற்பெயர்: பெஸ்கி. வேறு பெயர்: தைரியநாதர். இவரது தமிழாசிரியர்: சுப்பிரதீபக்கவிராயர்.

இயற்றிய நூல்கள்: தேம்பாவணி, வேதியர் ஒழுக்கம், தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழிலக்கணம், சதுரகராதி, திருக்காவலூர்க் கலம்பகம், வேதவிளக்கம், வாமன் கதை, அடைக்கலமாலை முதலியன. காலம்: கி. பி. 1680—1746.

அருஞ்சொற் பொருள்

நிமிர் - உயர்ந்த. வீடு - மேலுலகம். சீர் - பாட்டின் உறுப்பு. உரை - பொருள். ஏர் - அழகு. இரவி - சூரியன். சூர் - அச்சம். துகள் - பாவம். அற்று - நீங்கி. தொழும் - வணங்கும். உய்வதற்கு - கரையேறுவதற்கு (மோட்சமடைவதற்கு).

## 4. சீறாப் புராணம்

இந் நூல் இசுலாம் சமயத்தை உலகுக்கு வழங்கிய முகம்மது நபியின் வரலாற்றைக் கூறுவதாகும். 'சீறா' என்பது 'சீறத்' என்ற அரபுச் சொல்லிலிருந்து உண்டானதாகும். 'சீறத்' என்ற சொல்லுக்கு 'வாழ்க்கை வரலாறு' என்று பொருள்.

நெறிநிலை திரியா மருள்மத மிகுந்து
நெடுநிலம் எங்கணும் பரந்து
துறவறம் தவறி இல்லற மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடுங் காலம் இருளெனுங் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே.

குறிப்புக்கள் :

### ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : உமறுப்புலவர். நாடு : பாண்டிய நாடு. ஊர் : கீழ்க் கரை. தந்தையார் : சேகு முதலியார். ஆசிரியர் : கடிகை முத்துப் புலவர். ஆதரித்தவர் : சீதக்காதியின் அமைச்சராகிய அப்துல் காதர். இயற்றிய நூல்கள் : சீருப்புராணம், முதுமொழி மாலே, நொண்டி நாடகம். காலம் : கி. பி. 17 ஆம் நூற்ருண்டு.

### அருஞ்சொற் பொருள்

திரியா - திரிந்து : செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். நெடு நிலம் - அகன்ற நிலம். மடிந்து - மழுங்கி, குறைந்து. குபிரின் குலம் அறுத்து - இசுலாத்தை ஏற்க மறுத்து நின்ற கூட்டத்தினரை அழித்து.

## 5. கந்தர் அலங்காரம்

இந் நூல் முருகப் பெருமான்மீது பாடப்பட்ட பக்திச் சுவை நிறைந்த நூல். கந்தனுடைய அழகு முதலியவை புனைந்து போற்றப் பட்டிருத்தலின் கந்தரலங்காரம் என்று பெயர் பெற்றது.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனை செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்கு வள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

குறிப்புக்கள் :

### ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : அருணகிரிநாதர். நாடு : தொண்டை நாடு. ஊர் : திருவண்ணுமலை. சமயம் : சைவம். பாடிய நூல்கள் : திருப்புகழ், கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், வேல் வகுப்பு, மயில் வகுப்பு முதலியன. காலம் கி. பி. 15 ஆம் நூற்ருண்டு.

### அருஞ்சொற் பொருள்

செங்கோட்டு வெற்பன் - திருச்செங்கோடு என்னும் மலையில் எழுந்தருளியுள்ள முருகன். காந்தன் - கணவன். கந்தம் - வாசனை. கடம்பன் - கடப்பம்பூ அணிந்தவன்.

# தமிழும் தமிழரும்

## 1. மாரி வாயில்

மாரி - மேகம். வாயில் - தூது. மாரி வாயில் - மேகத்தைத் தூதனுப்பும் வரலாற்றைக் கூறும் நூல். பாண்டியன் மகளாகிய சித்திராங்கதை, தன்னை மணந்து, விட்டுப் பிரிந்து சென்ற அருச்சுன னிடம் மாரியைத் தூதனுப்பியதாகக் கற்பித்துக் கூறுவதனுல் மாரி வாயில் எனப் பெயர் பெற்றது.

கீழ்வரும் பாடல் தமிழ்ப் பல்லாண்டு என்னும் பகுதியில் உள்ளது.

பொய்ம்மொழியாப் புலமைவளம் வள்ளுவர்போல் வாரும்
போற்றுமறி வறவுரிமை கீரனனை யாரும்
மெய்ம்மொழியா லுயர்ந்தபுகழ் மடியில்வளர் தமிழை
மேதினியாள் முதல்மகளாய் மேவுதலோர் வியப்போ ?

**குறிப்புக்கள் :**

### ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் : இளசைக் கிழார், நாவலர், டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார். பிறப்பிடம்: இளசை என்னும் எட்டையபுரம். தந்தை: எட்டப்பபிள்ளை. இயற்றிய நூல்கள்: தொல்காப்பிய உரை, தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர் பேரூர், திருவள்ளுவர், சேரவேந்தர் தாய வழக்கு, மாரி வாயில் முதலியன. பிற குறிப்பு: வழக்கறிஞராகப் பணிபுரிந்தவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர். கேட்டார்ப் பிணிக்கும் சொல் வன்மை பெற்றவர். தமிழ்மொழிப் பற்றும், தமிழர் முன்னேற்ற உணர்ச்சியும் மிக்கவர். கி. பி. 1880 இல் பிறந்து அண்மையில் மறைந்தவர்.

### அருஞ்சொற் பொருள்

அறம் உரிமை - நீதி வழியில் ஒழுகும் உரிமை. கீரன் - நக்கீரன். மொழியால் - பாக்களாலும், நூல்களாலும். மேதினியாள் - நிலமென்னும் நற்ருய். மேவுதல் - பொருந்தப் பெற்றிருத்தல். புகழ்மடி : உருவகம். அறிவு அறம் : உம்மைத் தொகை.

## 2. தமிழன் இதயம்

*தமிழன் இதயம்-தமிழனது உள்ளக் கருத்தை எடுத்துக் காட்டும் நூல்.*

தமிழன் என்றெரு இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும். (1)

மானம் பெரிதென உயிர்விடுவான்
மற்றவர்க் காகத் துயர்படுவான்
தானம் வாங்கிடக் கூசிடுவான்
'தருவது மேல்' எனப் பேசிடுவான். (2)

**குறிப்புக்கள் :**

### ஆசிரியர் குறிப்பு

*ஆசிரியர் : நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை. ஊர் : மோகனூர். குலம் : வேளாளர். தந்தை : வேங்கடராம பிள்ளை. பிறப்பு: 10—10—1888. இயற்றிய நூல்கள் : சங்கொலி, அவளும் அவனும், என் கதை, மலைக்கள்ளன், தமிழன் இதயம் முதலியன. பிற குறிப்பு: சென்னை மாநில அரசவைக் கவிஞராக இருந்தவர். தற்போது தமிழ் நாடு மேல் சபை உறுப்பினராக உள்ளார்.*

### அருஞ்சொற் பொருள்

*(1) இனம் - தொகுதியினர். தனி-ஒப்பற்ற. அமிழ்து - இனிமையுடையது.*

*(2) தானம் - நன்கொடை. கூசிடுவான் - (உள்ளம்) நாணுவான்.*

### வினுக்கள்

*1. தேவாரம்—குறிப்பு வரைக.*
*2. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்—குறிப்பு வரைக.*
*3. ஏன் மனிதப் பிறவி வேண்டும் என்று நாவுக்கரசர் நவில்கின்ருர் ?*
*4. குலசேகராழ்வார் எக் காட்சியைக் கண்டு களிக்க விரும்புகிருர் ?*
*5. இயேசுநாதர் பெருமைகளாக வீரமாமுனிவர் கூறுவன யாவை ?*

6. முகம்மது நபி அவர்கள் உலகம் எவ்வாறிருந்தபோது தோன்றினர்?
7. எவர்க்கு ஒரு தாழ்வும் இல்லை என்று அருணகிரிநாதர் கூறுகின்றார்?
8. 'மேதினியாள் தமிழை முதல் மகளாய் மேவுதல் வியப்பன்று' என்பதற்குச் சோமசுந்தர பாரதியார் கூறும் காரணங்கள் யாவை?
9. தமிழினத்தின் குணம், மொழி, வழி ஆகியவற்றின் சிறப்பைக் குறித்து நாமக்கல் கவிஞர் தெரிவிப்பன யாவை?
10. தமிழனின் தனிப் பெரும் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?

### பயிற்சி

(அ) பிரித்து எழுதுக: வெண்ணீறு, பொற்பாதம், துகளற்று, சுடரிலாமனே.
(ஆ) நீவிர் பார்த்த இறைவன் திருக்கோலத்தை வரைக.
(இ) வாய்ப்பு நேரும்போது தில்லை, திருவரங்கம் சென்று அந் நகர் கோயில்கள், இறைவர்க் காட்சிகளைக் கண்டறிக.
(ஈ) இயேசுநாதர், முகம்மது நபிகள் வரலாற்றைப் படித்தறிக.
(உ) திருச்செங்கோடு இன்பச் செலவு சென்று சிற்பக் கலைகளைக் காண்க.
(ஊ) தமிழ், தமிழர் சிறப்புப் பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.

உரைநடைப் பகுதி

# 1. தமிழோசை

செந்தமிழ்க் காவலர், டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள், எம். ஏ., பி. எச். டி., எம். எல். சி.

*[இக் கட்டுரை ஆசிரியர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றியவர். ஆங்கிலப் புலமையும், அருந்தமிழ்ப் புலமையும்வாய்ந்த அருமையான பேச்சாளர். தற்போது தமிழ்நாடு மேல் சபை உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழக அகராதி வெளியீட்டுக் குழுவில் உறுப்பினராகவும் பணியாற்றி வருபவர். சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவராகவும் இருந்து, தமிழ், தமிழாசிரியர்கள் முன்னேற்றத்துக்கு நற்பணிகள் நாளும் செய்து வருபவர்.]*

தமிழ் மொழியைப் பற்றிப் பல கருத்துக்கள் நாட்டில் இருந்து வருகின்றன. சிலர், அது சிவபெருமானுலே அருளப் பட்டது என்றும், வேறு சிலர் முருகப் பெருமான் திருவரு ளால் தோன்றியது என்றும் கூறுவர். அக் கருத்துக்கள் தமிழ் மொழிக்குப் பெருமை தரவேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்திருக்கின்றன என்பது உண்மை. ஆயினும், உற்று நோக்கினுல், எந்த ஒரு மொழியைத்தானும் கடவுள் படைத் துக் கொடுத்தல் இல்லை என்பது ஆராய்ச்சியாளர்களுக்குத் தோன்றக்கூடிய ஒப்ப முடிந்த கருத்தாகும். உலகத்தில் உள்ள மொழிகளில் எதனையாவது ஒன்றைக் கடவுள் படைத்துத் தந்தார் என்று சொல்லப்படுகிற பொழுதுதான், தமிழ் மொழி யையும் கடவுள் படைத்தார் என்று ஏன் கூறுதல் ஆகாது எனத் தோன்றும். உலகத்தில் உள்ள மொழிகளில் எந்த ஒன்றும் கடவுளால் படைக்கப்படவில்லை என்பதும், மொழிகள் எல்லாம் மக்களால் அமைத்துக் கொள்ளப்பட்டன என்பதும் போதருமாயின், தமிழ் மொழியும் மக்களால் நாளடைவில் தம்முடைய கூட்டுறவால் ஆக்கிக் கொள்ளப்பட்ட தொரு மொழி என்பதன்கண்ணே தடையிருத்தல் இயலாது.

உலகில் எழுந்த மொழிக்குள் எபிரேய மொழியும் சமக்கிருத மொழியும் கடவுளால் படைக்கப்பட்டன எனச் சிலர் சொல்லி வந்தாராக, அக் கருத்தினுக்கு ஒப்பவே தமிழ்மொழி தானும் கடவுளால் படைக்கப்பட்டது என்று சொல்ல வேண்டிய இன்றியமையாத நிலை முற்காலத்தில் ஏற்பட்டது. ஆனால், இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக எபிரேய மொழியோ, சமக்கிருத மொழியோ, பிற எந்த ஒரு மொழியோ கடவுளால் ஒரு நாளில் படைக்கப்பட்டது என்று கூறுகின்ற கருத்து வலியுடையது ஆகாது என்பது நிறுவப்பட்டு விட்டது. அக் காரணத்தினால் தமிழ் மொழியைப் பற்றியும், கடவுள் தொடர்புபடுத்திக் கூற வேண்டிய நிலை இன்று இல்லை என்று சொல்வது தவறு ஆகமாட்டாது.

மொழிகள் தோன்றுகின்றவற்றைப் பற்றி ஆராய்ந்து முடிவு கட்டியுள்ள அறிஞர்கள், மனிதன் முதலில் தோன்றிய பொழுது பேசுதற்குரிய கருவிகளைத் தன் உறுப்புக்களோடு பெற்றிருந்தானே யாயினும் ஒரு மொழியைப் பேசிக்கொண்டு அவன் பிறக்கவில்லை என்று நிறுவி யிருக்கிறார்கள். முதலில் தோன்றிய மனிதன் ஒலிகளை வாளா எழுப்பிக் கொண்டிருந்தான். அவன் எழுப்பிய ஒலிகளுக்குப் பொருள் வரையறையில்லை. நாளடைவில் கேட்போர், பேசுவோர் ஆகிய இரு திறத்தாருடைய கூட்டுறவாலும், ஒத்துழைப்பாலும் ஒலிகளுக்குப் பொருள்கள் காணப்பட்டு வழங்கப்பட்டன. அப் பொருள்கள் தாமும் மக்களால் சிலவேளைகளில் கை, கால் அடையாளங்களோடு ஒலிகள் சேர்ந்தபொழுதே உண்டாக்கிக் கொள்ளப்பட்டன.

ஆதலால், தமிழ் மொழியைச் சிவபெருமானோ, முருகக் கடவுளோ ஒரு சம்புடத்தில் அடைத்து அல்லது சுவடிகளில் எழுதித் தந்து விட்டார் என்பது போன்று கூறப்படுகின்ற கருத்து ஒவ்வாது என்பது புலப்படும். பன்னெடுங் காலத்துக்கு முன்னே ஓரிடத்தில் தோன்றிய மக்கள் நாளடைவில் மேலே சொன்னவாறு ஒரு மொழியை வரையறை செய்து கொண்டார்களாக, அதன் பின்னர் அம் மொழிக்குப் பெயர் தமிழ் என்றும், அதனைப் பேசிய மக்களின் பெயர் தமிழ்

மக்கள் என்றும், அவர்கள் வாழ்ந்த நாடு தமிழ்நாடு என்றும் சொல்லத் தலைப்பட்டனர் என்பது அறியப்படும்.

அதே காலத்தில் வெவ்வேறு திசைகளில் வெவ்வேறு திற மக்கள் தம்முள் வேறுபட்ட பழக்க வழக்கத்தால் ஒவ்வொரு மொழியை உண்டாக்கிக் கொண்டிருத்தல் கூடும். அவ்வாறு உலகில் தோன்றிய தொன்மையான மொழிகளில் எபிரேயம், கிரேக்கம், எகிப்தியம், சமக்கிருதம் முதலிய சிலவற்றைக் குறிப்பிடலாம். சமக்கிருத மொழி இந்திய நாட்டில் முற்காலத்திற் பேசப்பட்ட தொரு மொழி அன்று என்பதும், இடைக்காலத்திலே இந்திய நாட்டினுள் வந்து நுழைந்த தொரு மொழி என்பதும் அறிஞர்கள் கருத்து. இந்திய நாட்டில் சமக்கிருதம் குடிபுகும் முன்னர்த் தமிழ் மொழி இவண் செழித்துத் தழைத்து இருந்ததொரு மொழி என்பது நுண்ணறிஞர் பலரது கருத்து.

அவ்வாறு இருப்பவும், சிலர் சிற்சில வேளைகளில் தமிழ் மொழி சமக்கிருதத்தினின்று தோன்றிய மொழி என்று கூறு வதைப் பார்த்தால், இக் கருத்து எத்துணைத் தவறுபட்ட கருத்து எனத் தோற்றுகிறது. ஆயினும், அரசியலிலும் சமுதாயத்திலும் பிற துறைகளிலும் உயர்நிலையில் உள்ள பல பேரறிஞர்களும், செல்வர்களும் தமிழுக்குத் தாய் சமக்கிருதம் என்று சொல்லி வந்திருப்பதும், சொல்லி வருவதும் வேடிக்கை யாகவே இருக்கின்றன. தமிழகத்தில்தானே சென்ற நூற்றுண்டு வரை தமிழ் மக்கள் தம்முள்ளேயே வட மொழியி னின்று தமிழ் பிறந்தது என்று கூறினல், அது காரண மாகத் தமிழுக்கு ஒரு பெருமையுண்டு எனக் கருதியவர்கள் பலர் இருந்தார்கள். ஆயினும், இந் நூற்றுண்டில் மக்களி டையே எழுந்திருக்கின்ற ஒரு விழிப்புணர்ச்சியால் தமிழ் மொழி பிறிதொரு மொழியினின்று பிறந்தது என்று சொல்லிக் கொள்ள நாணுகின்ற மக்கள் பலர் இருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

சிலர், இந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய் சமக்கிருதம் என்று பத்திரிகைகளில் வெளியிட்டார்கள். அவர்தம் கருத்து இந்திய மொழிகள் அனைத்திற்கும் தாயாகச்

சமக்கிருதம் இருப்பதால், இந்தச் சமக்கிருதத்தின் இன்னொரு வகை மொழியான இந்தி எல்லா இந்திய மொழிகளாலும் தழுவிக் கொள்ளும் தன்மைத்தானது என்பதாம். சமக்கிருத மும், இந்தியும் நெருங்கிய தொடர்புடையன என்பதன் கண்ணே யாதோர் ஐயமும் இல்லை. ஆயினும், தென்னிந்திய மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலான மொழிகள் சமக்கிருதத்தின் வழியாகத் தோன்றியன என்று அவர்களால் கருதப்படுகின்ற கருத்து ஒவ்வாது என்பது டாக்டர் கால்டுவேலர் எழுதிய திராவிட ஒப்பியல் நூல் இலக்கணத்தால் அறியப்படும்.

ஒரு மொழிக்கு இன்னொரு மொழி தாய் என்று கூறுவ தாக இருந்தால், அவ்வாறு கூறுதற்கு முன் சில வகைகளில் அவ் விரண்டு மொழிகளும் ஒத்திருக்கின்றனவா என ஆராய்ந்து காணுதல் வேண்டும். ஒரு மொழியினுள்ளே வேறு ஒரு மொழியின் சொற்கள் சில இக்காலத்தில் வழங்கப் படுகின்ற ஒரே காரணத்தால், முன்னைய மொழி பின்னர்ச் சொல்லப்பட்ட மொழியின் வழி வந்தது என்று கூறுதல் ஒவ்வாக் கருத்தாகும். வரலாற்றுக் கண்கொண்டு நோக்கி, தொன்றுதொட்டே அவ் விரு மொழிகளும் தொடர்புடை யனவா என்று அறிவதோடு அன்றிப் பொருட்களைத் தெரிவிப் பதற்கு அடிப்படையான சொற்களை ஒரு மொழி வேறொரு மொழியினின்று கடன் வாங்கியிருக்கின்றதா என ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இவ்வாறு ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய சொற்களில் மக்களினுடைய தலை, முகம், கை, கால் முதலிய உறுப்புக்களைக் குறிக்க வேண்டிய சொற்கள் முதலிடம் பெறும். நாள்தோறும் மக்கள் தம் உரையாடல்களில் வழங்கவேண்டிய சொற்களாகிய நான், நீ, தீ, காற்று, வான் போன்ற அடிப்படைக் கருத்துக்களை குறித்தற்குரிய சொற்களும், உண், உடு, செய், போ, வா, இரு, ஓடு போன்ற அடிப்படை வினைச் சொற்களும் அடுத்த இடம் பெறும். நாள்தோறும் மக்கள் தத்தம் கருத்தைத் தெரிவிக்க உதவுகின்ற இவைபோன்ற அடிப்படையான இன்றியமையாச் சொற்கள் ஒரு மொழியின் கண்ணே தனக்கே உரியனவாக இருக்குமெனின், அம்மொழி அச்

சொற்களுக்காகப் பிற மொழிக்குக் கடன்பட்டது என்று கூறுதலோ, பிற மொழியினின்று தோன்றியது என்று கூறுதலோ ஒவ்வாது என்பது மொழி இலக்கண வல்லவர்கள் யாவரும் அறிந்ததொரு செய்தி.

இவ்வாறு நோக்கினுல், தமிழ் மொழி அடிப்படையான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு உரிய சொற்களையும், சொல் வேர்களையும் தானே நிரம்ப நிரம்பப் பெற்றுள்ளது என்பது விளங்கும். அடிப்படைக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வட மொழிக்கோ பிற மொழிக்கோ அது கடப்பாடுடையது அன்று. ஆதலால், தமிழ், சமக்கிருதத்தினின்று தோன்றிய மொழி என்று கூறுவது அறவே பொருந்தாது என்பது விளங்கும்.

சில வேளைகளில், வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்குகின்ற காரணத்தால் தமிழ், வட மொழியினின்று தோன்றியது என்று சொல்லுவது, இக்காலத்தில் தமிழர் சிலர் ஆங்கிலச் சொற்களை நிரம்பத் தம்முடைய பேச்சில் கலந்து பேசுவதால் ஆங்கிலத்தினின்று தமிழ் பிறந்தது என்று சொல்வதனேடு ஒக்கும். கலைக் கருத்துக்களைத் தெரிவிக்க எல்லா மொழிகளும் வேறு சில மொழிகளினின்றும் கடன் வாங்குதல் என்பது உலகெங்கும் காணப்படுகின்ற ஒரு மரபு. நாம் புதுவதாகப் பெறுகின்ற சில பொருள்களை யொட்டி அவற்றின் பெயரோடு சேர்த்து அப் பொருள்களை நாம் கடன் வாங்கிக் கொள்கிறேம். அதனுல், நமக்கென ஒரு தனி மொழி இல்லை என்பது கருத்தாக மாட்டாது. சில கலைச் சொற்களையும், சமயத்துறைச் சொற்களையும் வட மொழியினின்று தமிழ் மொழி பல நூற்றுண்டுகளில் கடன் வாங்கியிருப்பதும், இக் காலத்தில் பலர் வட மொழிச் சொற்களைத் தம்முடைய கட்டுரைகளிலேயும் நிரம்ப வழங்கி வருவதும் தமிழ் மொழி வட மொழியினின்று பிறந்தது என்று கூறுதற்குரிய சான்றுகள் ஆகமாட்டா.

ஒருவர் விரும்பினுல் வட மொழிக் கலப்பின்றிப் பேசுதலோ எழுதுதலோ இயலும் என்பதை டாக்டர் கால்டு வேலர் மிக்க அழகோடு எடுத்து உரைத்திருக்கின்றுர். மதிப்

பிற்குரிய மறைமலை அடிகள் அவர்களும், திரு. தேவநேயப் பாவாணர் அவர்களும் இதனைச் செயல் முறையில் நன்றாகக் காட்டியுள்ளார்கள். தமிழ்ச் சொற்கள் இருப்பவும், ஒருவர் வட மொழிச் சொற்களைக் கடன் வாங்குகின்றார் என்றால், அஃது அவர் வட மொழியின்மாட்டு வைக்கின்ற விருப்பத் தைக் காட்டுகின்றதே யன்றித் தமிழ் மொழியின் குறை பாட்டைக் காட்டுவதன்று. நல்ல, இனிய, அரிய தமிழ்ச் சொற்கள் பல்வேறு பொருள்களைக் குறிக்கத் தமிழ் மொழியில் இருக்கின்ற காரணம்பற்றி ஒருவர் வட மொழியினின்று தமிழ் மொழி பிறந்தது அன்று எனத் துணிவோடு கூறுதல் கூடும். இக் கருத்தினை வற்புறுத்துவதற்கு நாட்டில் சிலர் கூசுகின்றனர்; அது வருந்தத்தக்கது. தமிழர் தம்முள் உயர்நிலையில் உள்ளவர்களும், பெரிய அலுவல்களிலுள்ள வர்களும், பெருஞ் செல்வர்களும் இக் கருத்தினை உள்ளத்தில் பதித்துக்கொண்டு தாமும் கூறுவதற்குத் தயங்காமல் வெளி வருவார்களானால், அதுவே தமிழ் ஓசை உரிய வகையில் எங்கும் பரவுவதற்கு அடிகோலியது ஆகும்.

### அருஞ்சொற் பொருள்

*நிறுவப்பட்டு விட்டது - ஆராய்ந்து உறுதிப் படுத்தப்பட்டு விட்டது. ஒவ்வாது - பொருந்தாது. இவண் - இங்கு. கடப்பாடு - கடமை. வரையறை - அளவு, எல்லை.*

### விஞக்கள்

1. *ஒரு மொழியைக் கடவுள் தானாகப் படைத்திருக்க முடியுமா? ஆய்க.*
2. *மொழியின் தோற்ற வரலாற்றை விளக்குக.*
3. *உலகில் தோன்றிய தொன்மையான மொழிகள் எவை?*
4. *தமிழுக்குத் தாய் சமக்கிருதம் என்று கூறுவது பொருந்துமா? விளக்குக.*
5. *ஒரு மொழியின் அடிப்படைச் சொற்கள் எவை? அவை களைக் கொண்டு மொழி இலக்கண ஆசிரியர் கூறும் செய்தி யாது?*
6. *வடமொழிக் கலப்பின்றித் தமிழ் விளங்கும் ஆற்றலுடையது என விளக்கிய பெரியோர்கள் யாவர்?*
7. *எச் செயல் தமிழ் ஓசை எங்கும் பரவ அடி கோலும்?*

# 2. அவன் யார் ?

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சுவாமிநாத ஐயர், டி. லிட்.

*[தமிழ்த் தாத்தா என்று தமிழகத்து மக்களால் என்றும் போற்றப்படுவதற்கு உடையவர் டாக்டர் ஐயரவர்கள். ஐயரவர்கள் என்றாலே இக் கட்டுரை ஆசிரியரைத்தான் குறிக்கும். மண்ணுக்கும், நீருக்கும், நெருப்புக்கும், கறையானுக்கும் இரையாகிக்கொண்டிருந்த பழந்தமிழ் இலக்கியங்களை உருவாக்கித் தமிழுக்கு உயிரூட்டம் அளித்தவர் இவரே.]*

தமிழ் இலக்கிய நூல்களுள் இப்போது நமக்குக் கிடைப்பனவற்றுள் மிகவும் பழையன பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பனவாம். இவற்றைச் சங்க நூல்கள் என்று கூறுவர். கடைச்சங்க காலத்தில் இருந்த புலவர்களாற் பாடப்பெற்ற செய்யுட்களை யுடைமை யின், இவை இங்ஙனம் வழங்கப்படுகின்றன. இந்த நூல் களால் தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் இருந்த புலவர் வரலாறுகளையும், அவர்களை ஆதரித்துப் போற்றிய செல்வர் கள் வரலாறுகளையும், அக் காலத்துத் தமிழ் நாட்டினரின் நாகரிக நிலை, ஒழுக்கம் முதலியவற்றையும் செவ்வனே அறிந்து கொள்ளுகிறோம். புறநானூறு முதலிய நூல்களால் பல அரசர்களுடைய வரலாறுகளையும், சிற்றரசர்களுடைய வரலாறுகளையும், வீரப் பெருமக்கள் அருஞ்செயல்களையும் தெரிந்து கொள்ளலாம். அவர்களுடைய குணங்களுட் சிறந் தனவாகக் காணப்படுவன வீரமும், ஈகையுமாம். வென்றிச் சிறப்பும், கொடைச் சிறப்புமாகிய இவ்விரண்டு சிறப்புக்களை யும் அவ் வரசர்கள் தங்களுடைய வாழ்வுக்கு இரண்டு கண் களாகக் கொண்டு வாழ்ந்தார்கள். தங்களுக்குள் எவ்வகை யான குறை நேர்ந்தாலும், அதனை அவர்கள் இழிவாகக் கருதார்கள். வீரமில்லாரென்றேனும், கொடை இயல்பிலரென் றேனும் கூறப்படுவதைக் காட்டிலும் இறந்துபடுவதை அவர்கள் மேலாக விரும்புவார்கள்.

“ விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் ளை யெடுத்து ”

என்ற குறள் ‘வீரமின்மையால் வாழ்வு பயனற்றொழியும்’ என்ற அரிய கருத்தை வெளியிடுகின்றது. இப்படியே,

“ சாதலின் இன்னாத தில்லை ; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை ”

என்ற குறள் ‘ ஈயாமல் இருப்பதினும் இறந்துபடுதல் இனியது’ என்று கூறுகின்றது. இவ் விரண்டும் பண்டைக் காலத்துப் பெருமக்கள் கடைப்பிடித்த பேரறங்களாம்.

இங்ஙனம் வாழ்ந்தவர்களுள் கண்டீரக் கோப்பெரு நள்ளி என்பவன் ஒருவன். அவன் ஒரு சிற்றரசன் ; ஏழு வள்ளல் களுள் ஒருவன் ; தோட்டி என்னும் மலைக்குத் தலைவன். அவனைப் புலவர் பலர் பாடிய செய்யுட்கள் புறநானூற்றில் இருக்கின்றன. அவற்றுள் வன்பரணர் பாடிய 150 ஆம் செய்யுளிற் கண்ட வரலாறு இங்கே சில வேறுபாடுகளுடன் வெளியிடப்படுகிறது.

ஒரு பெரிய மலையின் மேலுள்ள காட்டு வழியில் ஒரு புலவன் தன்னுடைய சுற்றத்தாருடன் நடந்து சென்றான். அவனுடைய ஓய்ந்த நடையும், முகத்திலுள்ள வாட்டமும் பல நாளாக அவன் பட்டினி கிடந்த நிலையைப் புலப்படுத்தின. உடன் வந்த சுற்றத்தாருடைய நிலையும் அப்படியே இருந்தது. அவனது இடையிலுள்ள ஆடை கறுப்படைந்தும், கிழிந்தும், மக்கியும் இருந்தது. குளிர்காலத்தில் மழைத்துளியால் நனைந்த பருந்தினது கரிய சிறகைப்போல் அது தோன்றியது. அவனுக்கு, ‘ நாம் எங்கே போகிறோம் ?’ என்ற நினைவுகூட இல்லை ; ‘ யாரிடம் போகவேண்டும் ?’ என்ற குறிப்பும் இல்லை. கால் போனவழியே போய்க்கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து அந்தப் பட்டினிச் சுற்றத்தார் சென்றனர்.

கால்கள் ஓய்ந்தன. ‘ சிறிது இளைப்பாறலாம் ’ என்ற எண்ணம் புலவனுக்கு உண்டாயிற்று. அம் மலை வழியே இருந்த ஒரு பெரிய பலா மரத்தடியில் அவனும் சுற்றத்தாரும் தங்கினார்கள். ‘ எங்கே போவது ? என்ன செய்வது ?’ என்று திக்குத் தெரியாமல் அலைகின்ற அவர்களுக்கு எதிரே ஒரு

வீரன் தோன்றினன். அவன் அந்தக் காட்டில் வேட்டையாடி விட்டு வந்தான். அவன் கையிலிருந்த வில்லைப் பார்த்தாலே ஒரே காலத்திற் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும்படி அம்பை விடுபவன் அவனென்று தோன்றியது. அவன் காலில் அழகிய வீரக்கழல் இருந்தது. அவனுடைய உச்சியில் ஒரு சிறந்த நீலமணி ஒளி வீசியது. அவனது தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்திலே புலவனுக்கு அவனிடத்தில் ஒரு பெருமதிப்பு உண்டாயிற்று. வணக்கம் செய்தவண்ணமே புலவன் எழுந்தான். பாவம், நெடுந்தூரம் நடந்து வந்த வலியினல் அவன் கால்கள் அவனது வயத்தில் இல்லை; நடுங்கின. வீரன், "பேசாமல் அப்படியே உட்காருங்கள்" என்று கையமர்த்திப் புலவனை இருக்கச் செய்தான். அவனுடைய வார்த்தைகள் அன்பில் ஊறி வெளி வந்தன.

புலவனும் அவனுடைய சுற்றத்தாரும் பசிப் பிணிக்கு இலக்காகி, உயிரை விடும் தறுவாயிலுள்ளன ரென்பதை அவ் வீரன் அறிந்துகொண்டான். "நீங்கள் எந்த ஊர்? எதற்காக வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்? யார் வரச் சொன்னார் கள்? உங்களுக்கு என்னைத் தெரியுமா?" என்ற கேள்விகளை அவர்களிடம் அவன் கேட்கவில்லை. அந்தச் சமயத்தில் அவர்களுக்கு முதலில் வேண்டுவது உணவே என்பதை அவன் நன்ருக அறிந்தான். ஆதலின், தான் வேட்டையாடிக் கொணர்ந்திருந்த மான் தசையை ஓரிடத்திலே வைத்துவிட்டு, அங்கிருந்த சுள்ளிகளைப் பொறுக்கி, ஒரு கட்டையிலே தீயைக் கடைந்து மூட்டினன். அவனுடன் வந்திருந்த இளைஞர்கள் காட்டு வழியில் தனித்தனியே பிரிந்து விட்டார்கள். அவர் களெல்லாரும் வருவதற்கு முன் தன் கையாலேயே மூட்டிய அத் தீயில் அத் தசையைச் சுட்டுப் புலவனுக்கும் பிறருக்கும் கொடுக்க வேண்டுமென்பது அவன் ஆசை. அவ் விளைஞர் கள் வரும்வரையில் பசி காத்திருக்குமா?

மிக்க விரைவில் நெய் விழுதுபோல் இருக்கும் வெள்ளிய நிணத்தைப் பக்குவம் பண்ணிச் சுடச்சுடப் புலவனுக்கும் உடனிருந்தவர்களுக்கும் அவ் வீரன் கொடுத்தான். உண வைக் கண்டு எத்துணையோ நாளான அவர்களுக்கு அந்த

உணவு தேவரமுதத்தைப்போல இருந்தது. சுடச்சுட இருந்த அந்த உணவு, அவர்களுடைய சுடு பசியை நீக்கியது.

அதுவரையில் புலவனுக்குத் தன்னைச் சுற்றிலுமுள்ள காட்சிகளைக் கவனித்துப் பார்க்கும் உணர்ச்சி இல்லை. பசி எல்லாவற்றையும் அடங்கச் செய்து தான் மேலோங்கி நின்றது. வயிற்றில் உணவு விழுந்தவுடன் அவனுடைய கண்ணுக்கும் மூக்குக்கும் மற்றப் பொறிகளுக்கும் உணர்ச்சி உண்டாயிற்று. அவன் அருகிலுள்ள அருவி நீரைக் கையால் அள்ளி அள்ளிக் குடித்தான். யாவரும் குடித்து ஏப்பம் விட்டனர். புலவனுடைய கண்கள் அம் மலையிலுள்ள மலைச் செறிவைக் கண்டு களித்தன; அவனுடைய உடம்பு அந்தக் காட்டின் குளிர்ச்சியை உணர்ந்தது; அவனுடைய மூக்கோ, காட்டு மலர்களின் நறுமணத்தை நுகர்ந்தது. "ஆகா! என்ன அழகிய மலை!" என்று நிறைந்த மனத்தோடு அவன் அந்த மலையையும் காட்டையும் கண்ணுரக் கண்டு மகிழ்ந்தான். அப்பால், தனக்கும் தன் சுற்றத்தாருக்கும் விருந்தளித்த வீரனை நோக்கினன். என்ன அழகிய கோலம்! அவனைப் பிரிவதற்கு மனம் வரவில்லை. ஆயினும், பிரியத்தானே வேண்டும்!

"தெய்வமே போல வந்து உதவி செய்தீர்கள். நாங்கள் போய் வருகிறோம்" என்றான் புலவன்.

"அப்படியா! நீங்களெல்லோரும் நன்றாகப் படித்தவர்களைப்போலவே காணப்படுகிறீர்கள். உங்களுக்குப் பரிசாக ஏதாவது கொடுக்க வேண்டும். காட்டு மக்களாகிய எங்களிடத்தில் என்ன உயர்ந்த பொருள் இருக்கிறது? இவற்றை யாவது பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று பணிவுடன் சொல்லிக்கொண்டே, அவ் வீரன் தன் கழுத்திலிருந்த பல முத்துவடங்களாலாகிய ஆரத்தையும், கையிலணிந்திருந்த பொற்கடகத்தையும் கழற்றினன்; புலவனது கையிற் கொடுத்து வணக்கம் செய்தான்.

புலவனுக்கு உண்டான வியப்பின் அளவை வரையறுத்துச் சொல்ல முடியுமோ? "முன்பின் அறியாத இவன் நம்மை வரவேற்றுப் பாராட்டி இவ்வளவு உயர்ந்த பரிசைத்

தருகிருன். கொடுப்பதோ, மிக அரிய பரிசு; சொல்வதோ 'நான் எதைக் கொடுக்கப் போகிறேன்!'' என்ற பணிவான சொல். "இந்தக் குணக்குன்ருகிய பெரியோன் யாரோ, தெரிய வில்லையே?'' என்ற எண்ணத்துடன், "தங்களுடைய நாடு யாதோ?'' என்று புலவன் மெல்லக் கேட்டான். அவ் வீரன் ஒன்றும் கூறவில்லை. "தங்கள் பெயரை யான் அறிந்து கொள்ளக்கூடுமோ?'' என்று பணிவுடன் பின்னும் புலவன் கேட்க, அதற்கும் விடை இல்லை.

"அவற்றைப் பற்றி நீங்கள் ஏன் அறிந்து கொள்ள வேண்டும்? நல்லது; போய் வாருங்கள்; வணக்கம்'' என்று சொல்லி அரைக்கணத்தில் அவன் காட்டுக்குள் போய் விட்டான்.

"அவன் யார்? அவன் யார்?'' என்று புலவனுடைய நெஞ்சம் கேட்டுக்கொண்டே யிருந்தது.

மிக்க உவகையுடன் புலவன் தன் சுற்றத்தாரோடு புறப் பட்டான். வழியில் கண்டவர்களிடமெல்லாம், தன்னைப் போற்றிய வள்ளலைப் பற்றிச் சொல்லி, "அவன் யார்?'' என்று கேட்டான். "அவனு? அவன்தான் நள்ளி! இந்தத் தோட்டி மலைக்குத் தலைவன்'' என்று அவர்கள் அவனுக்குச் சொன் ஞர்கள்.

"நள்ளியா!'' என்று புலவன் வியந்து அசைவற்று நின்ருன். நள்ளியைப் பற்றியும், தோட்டி மலையைப் பற்றியும் உலகமெல்லாம் புகழ்வதை அவன் கேட்டிருந்தான். தான் வந்த மலை தோட்டி யென்றும், தான் கண்ட வீரன் நள்ளி யென்றும் அதுகாறும் அவன் அறியவில்லை; அவ் வீரனும் அறிவித்துக்கொள்ளவில்லை. அவ் வள்ளல் தன் கடமையைப் பிறர் அறியாமற் செய்துவிட்டு அகன்ருன். புலவனே, அவன் செய்த வண்மையை அதுமுதல் உலக முழுவதும் அறிவித்துக் கொண்டு வாழ்ந்தான்.

### அருஞ்சொற் பொருள்

*செவ்வனே - நன்ருக. விழுப்புண் - போரில் முகத்திலும், மார் பிலும் ஏற்பட்ட புண். வழுக்கினுள் - பயன்படாமல் கழிந்த நாட் களுள். இன்னுதது - துன்பந் தருவது. இயையாக் கடை - முடியாத*

இடத்து. ஏழு வள்ளல்கள்: பாரி, காரி, ஓரி, பேகன், அதியமான், ஆய், நள்ளி என்பவராவர். மக்கி - நைந்து. ஊடுருவி - உள்ளே பாய்ந்து துளைத்து. இலக்கு - குறி, அடையாளம். நெய் விழுது - நெய்த்திரள். வெள்ளிய நிணம் - வெண்மையான கொழுப்பு. செறிவு - நெருக்கம். கடகம் - கையிலணிந்து கொள்ளும் அணி. வண்மை - கொடை.

### வினாக்கள்

1. சங்க நூல்கள் என்று வழங்கப் படுகின்றவை யாவை? அந் நூல்களால் நாமறிவன யாவை?
2. தமிழரிடத்து வீரமும், ஈகையும் சிறந்த குணங்களாகத் திகழ்ந்தன என்று எவற்றால் அறியலாம்?
3. பண்டைக்காலப் பெருமக்கள் கடைப்பிடித்த பேரறங்கள் யாவை? சான்று தருக.
4. காட்டு வழியில் சுற்றத்தாருடன் சென்ற புலவர் நிலையை வரைக.
5. புலவர் கண்ட வீரனின் தோற்றத்தை விளக்குக.
6. வீரன் புலவரையும் சுற்றத்தாரையும் எவ்வாறு உபசரித்தான்?
7. வீரனளித்த உணவை யுண்ட புலவர் நிலையைப் புலப் படுத்துக.
8. விடை பெற்ற புலவருக்கு வீரன் எவ்வாறு பரிவுடன் பரிசளித்தான்?
9. பரிசளித்த வீரனைக் குறித்துப் புலவர் யாது எண்ணினர்? யாது கேட்டார்?
10. கண்டீரக் கோப் பெருநள்ளியின் குணச் சிறப்புக்களைத் தெரிவிக்க.

# 3. ஓர் அரிய படிப்பினை

திரு. நெ. து. சுந்தரவடிவேலர் அவர்கள், எம்.ஏ., எல்.டி.

*[இக் கட்டுரையாசிரியர் நம் தமிழ் நாட்டின் பொதுக் கல்வி இயக்குநராகப் (D. P. I.) பணியாற்றி வருபவர். தமிழ் நாடு கல்வித் துறையில் தலை சிறந்து விளங்க வேண்டுமென்று ஓயாது உழைத்து வருபவர். கல்வித் துறையில் புதிய முறைகளைப் புகுத்தி வெற்றி யடைந்து வருபவர். கடமையுணர்வும், செயல் திறமும் வாய்ந்த இவர், தம் எழுத்தாலும் பேச்சாலும், பிள்ளைகள் அனைவரும் கல்வி பெறுவ தற்கு ஆவன செய்து வருகிறார். இவர் பணியைப் பாராட்டி இந்திய அரசியலார் 'பத்மஸ்ரீ' என்ற பட்டம் அளித்துள்ளனர்.]*

பயணம் ஒரு படிப்பினை. அதிலும் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் ஓர் அரிய படிப்பினை. சில மாதங்களுக்கு முன் அத்தகைய படிப்பினை எனக்கும் என் மனைவிக்கும் வாய்த்தது.

1951 ஆம் ஆண்டு சூலை, ஆகஸ்டுத் திங்களில் பாரிசுக்கு அடுத்த "சேவ்" (Sevres) என்னும் நகரில் ஒரு கல்வி மாநாடு நடந்தது. அம் மாநாட்டிற்குச் சென்னை அரசினர் சார்பில் நான் சென்றேன். அம்மாநாட்டைக் கூட்டியது, "யுனெஸ்கோ" (UNESCO) என்னும் உலகக் கழகம். "ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலைக்கழகம்" என்னும் ஆங்கிலப் பெயரின் சுருக்கமே "யுனெஸ்கோ" என்னும் பெயர்.

இப் பயணத்தில் நாங்கள் இலங்கை, பிரான்சு, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளைப் பார்த்தோம். நம் நாட்டிற்கும் இவ்வைந்து நாடுகளுக்குமுள்ள முதல் வேற்றுமை இந் நாடுகளில் மரஞ் செடி கொடிகள் செழிப்புற்று நிறைந்து இயற்கை எழிலுடன் விளங்குகின்றன என்பதே. தோலுரிக்கப்பட்ட மரங்களையோ, மொட்டை யடிக்கப்பட்ட மரங்களையோ, நம் நாட்டிலன்றி நாங்கள் வேறு எங்கும் பார்க்கவில்லை. பச்சை மரத்தைப் பாழாக்குதல், முல்லைக்குத் தேரீந்த மன்னனின் கதையைக் கேட்ட நமக்குத் தான் தனி உரிமையோ என்ற எண்ணம் எங்களுக்கு எழுந்தது.

இயற்கை எழிலை விட்டு இந் நாடுகளின் செயற்கையின் செம்மையைச் சிறிது பார்ப்போம். போக்கு வரவிற்கான செம்மையான பாதைகளைப் பட்டிதொட்டி யெல்லாம் பார்க்கலாம். வண்டிபோக வழியில்லாத ஊரே இல்லையென்று கூடச் சொல்லலாம். நகரத் தெருக்கள் செம்மையாகவும் குழிப் பள்ளங்கள் இல்லாமலும் இருப்பதோடு, தூய்மையாகவும் இருக்கின்றன. கீழ்நாடுகளில் ஒன்ருகிய இலங்கையின் தலைநகரில்கூடச் சென்னைத் தெருக்களில் கிடக்கும் அளவு குப்பை கூளங்களையோ, மற்றக் கழிவுகளையோ காண முடியாது. அங்கெல்லாம் தெருவில் எச்சில் துப்பும் மனிதர் இலர்; வீட்டில் உள்ள குப்பை கூளங்கள், எச்சில் இலைகள் முதலியவற்றை அண்டை வீடுகளின் அருகிலும் எதிர் வீட்டின் ஓரத்திலும் யாரும் பார்க்காத நேரத்தில் எறிந்து விடும் திறமைசாலிகளைக் காணமுடியாது.

பிரான்சு நாட்டின் தலைநகரமான பாரிசு சரித்திரப் புகழ் பெற்றது மட்டுமல்ல; மிக அழகியதுமாகும். நீண்டு அகன்ற தெருக்களும் அவற்றினூடே உள்ள அழகிய மரவரிசைகளும் சோலைகளும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். அந் நகரில் பொருட்காட்சிச் சாலைகள் பல உள்ளன. முற்கால மன்னர்களையும், குறுநில மன்னர்களையும் மக்கள் புரட்சி செய்து விரட்டி ஓட்டியபோதும், அவர்கள் மாளிகைகளையும், அவர்களால் சேகரிக்கப்பட்ட அரும் பொருள்களையும் அழித்துப் பாழாக்காமல் காப்பாற்றிப் பாதுகாத்து நாட்டின் சொத்தாக்கி வைத்துள்ளார்கள். அவையெல்லாம் அப் பொருட்காட்சிச் சாலைகளில் காட்சியளிக்கின்றன.

சுவிட்சர்லாந்து குடியாட்சிக்குப் பெயர் பெற்றது; பல நூற்ருண்டுகளாகப் போரில் ஈடுபடாமல் நடு நிலைமை வகிப்பது; எம் மொழிக்கும் ஏற்றம் கொடுக்காமல் நாட்டில் வழங்கும் மூன்று மொழிகளிலும் அரசியலை அமைதியாக நடத்துவது; பல மொழியினரும், பல இனத்தவரும், எப்படி ஓர் அரசின்கீழ் வாழ்வது என்பதைக் கற்பிப்பது. இச் சிறப்புக்களை யுடைய இந் நாடு மலைகளையும், மலைகளினிடையே அழகிய பெரும் ஏரிகளையும், அவற்றின் கரைகளில் அழகிய

நகரங்களையும் கொண்டது. இங் நாட்டின் வனப்பையும், இங்குள்ள 'ஆல்ப்ஸ்' மலையின் பனிப்படலத்தையும் கண்டு மகிழ ஆண்டுதோறும் பிறநாட்டு மக்கள் திரள் திரளாக இங் நாட்டுக்கு வருகின்றார்கள். இது கடிகாரங்களுக்குப் பெயர் பெற்றது என்பதை நாமெல்லோரும் அறிவோம்.

பிரிட்டனில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. ஆள் இல்லாத் திண்டாட்டம்தான் ஓரளவு உண்டு. அங்குத் தொழிலாளியை அடிமையாகக் கருதுவதில்லை. வேலைக்காரர் களைக்கூட மரியாதையாக நடத்துவது அவர்கள் பழக்கம். பிரிட்டிஷாரிடையில் நாணயம் மிகுதியாக உண்டு. ஒவ்வொரு வீட்டு வாசற்படியிலும் காலையில் புட்டி புட்டியாகப் பாலும், கூடை நிறையக் காய்கறிகளும் காத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களோ, வழியே போகிறவர்களோ எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள் என்ற பேச்சையே கேட்க முடியாது. தங்களுக்கு உரியதல்லாத எதையும், அது நடுத்தெருவில் கிடந்தாலும் வழிப்போக்கர்கள் தொடமாட்டார்கள். இவ்வளவு நாணய மானவர்களாக இருப்பதாற்றான் பாங்கிகளில் கட்டும் பணத் திற்கு அங்கு இரசீது கொடுப்பதுமில்லை; கேட்பதும் இல்லை; ஆனால் வரவு விட்டுப் போவதுமில்லை.

இனி, பிரிட்டிஷாரின் கல்வி முறையையும் கவனிப்போம். அவர்களுக்குக் கல்வி கட்டாயம். சட்டத்தில் மட்டுமல்ல, நடைமுறையிலுங்கூட. அதற்காக மலைக்காட்டில் இருக்கும் சிறு பட்டிக்காடுகளிலும் வசதிகளோடு கூடிய பள்ளிகள் இருக்கின்றன. கல்வி ஆறும் வயது தொடங்கியது முதல் பதினைந்தாம் வயது முடிய அதாவது பத்தாண்டுகளுக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் கட்டாயம். ஆரம்பக் கல்வியோடு நிறுத்தாமல் உயர்நிலைக் கல்வியையும் கட்டாயமாக்கியுள்ள னர். அங்கு உயர்நிலைப் பள்ளிக்கூடப் படிப்புக்கூட இலவசமே. சம்பளம் வாங்காமல் கற்றுக் கொடுப்பதோடு மாணவ மாணவிகளுக்கு வேண்டிய நூல்கள், குறிப்புப் புத்தகங்கள், எழுதுகோல் ஆகியவைகளும் பள்ளிக் கூடங் களிலேயே இனமாகக்கொடுக்கின்றார்கள். படிக்கும் பிள்ளைகள் உடல் நலத்தோடு இருந்தால் அல்லவா படிக்க முடியும்!

ஆகவே, பள்ளிக்கூடத்திலேயே பகல் 10-30 மணிக்கு எல்லா மாணவர்களுக்கும் பால் கொடுக்கிறார்கள். வாலிபர்கள் கூடப் பகலில் பால் குடித்தாகவேண்டும். நடுப்பகலில் பள்ளிக்கூடங்களிலேயே உணவு கொடுக்கிறார்கள். போதிய சத்துள்ள உணவு அது. பள்ளியுணவைப் பணக்காரர் வீட்டுக் குழந்தைகள் உட்பட எல்லோரும் ஒன்றாய் இருந்து உண்பதன் மூலம் ஏழை—பணக்காரன் என்ற எண்ணம் வளராமல் எல்லோரும் சமமாகப் பழகும்படி கற்பிக்க முடியுமென்று அவர்கள் நம்புகிறார்கள். பள்ளியிற் சாப்பிடும் பிள்ளைகள் எல்லோருக்கும் உணவு இனாமல்ல. நிரம்பச் சம்பளம் பெறும் பெற்றோர்களிடமிருந்து அவர்கள் வருவாய்க்குத் தக்கபடி கட்டணம் வாங்கி விடுகிறார்கள்.

பிரிட்டிஷ் பள்ளிக்கூடங்கள் பலவற்றை நாங்கள் பார்த்தோம். எந்த வட்டாரத்திற்குச் சென்றாலும், எந்த நிலைப் பள்ளிக்குச் சென்றாலும் "அழுமூஞ்சி" மாணவ, மாணவிகளை நாங்கள் பார்க்கவில்லை. அவர்கள் மகிழ்ச்சியோடும் சுறுசுறுப்போடும் இருந்தார்கள். காரணம் என்ன? பள்ளிக்கூடம் சிறைக்கூடமாக இல்லை; வளர வாய்ப்புத் தரும் நிலையங்களாவே இருக்கின்றன. பிள்ளைகள் எப்படியாவது சில பல தகவல்களை மனப்பாடஞ் செய்து மறக்காமல் எழுதிப் பரீட்சையில் தேர்வடைவதைக் கல்வியின் இலட்சியமாக அப் பள்ளிகள் கருதுவதில்லை. தேர்வு என்கிற படிக்கட்டும் அங்குண்டு. இருந்தாலும் அது கனவிலும் நனவிலும் நின்று பயமூட்டும் கருவியாக இல்லை. இன்ன வகுப்பிற்கு இன்ன பாடப்பிரிவில் இவை இவை கற்பிக்க வேண்டும் என்ற இரும்புச் சட்டமும், அதை விட்டு அணுவும் அகலாத பாட நூல்களும் இந்தியருக்கு மட்டும் வாய்த்த வாய்ப்பல்ல. உலகில் எல்லா நாடுகளிலும் காணக்கூடிய முறையாகும்.

ஆனால், ஆங்கிலேய நாட்டில் மட்டும் அத்தகைய திட்டவட்டமான பாடத்திட்டம் இல்லை. அது அங்கு மட்டும் நடக்கும் ஒரு தனிப் புதுமை. பள்ளி வாழ்வில் பதினொரு வயது முடிந்ததும் ஒரு முறையும், பதினாறு வயதில் ஒரு முறையும் முக்கியமான பொதுத் தேர்வுகள் நடக்கும். அதற்கு

வருவோர் இதை இதை அறிந்திருக்கவேண்டு மென்று பொதுவாக வகுத்திருக்கிறார்கள். அதைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு பள்ளியிலும் மாணவ, மாணவிகளின் அறிவுத் திறமைக் கேற்றபடி ஆசிரியர்கள் கூடி எண்ணி, பாட முறையை ஏற்பாடு செய்துகொள்ள ஆங்காங்குள்ள ஆசிரியர்களுக்கே உரிமையிருக்கிறது.

மேலும், பள்ளியில் நல்ல பழக்க வழக்கங்கள், ஒழுங்கு ஆகியவற்றைக் கற்றுக்கொடுப்பதில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். ஆகவே, இவர்கள் வெறும் படிப்பாளி களாக வெளிவராமல் வையத்துள் வாழும் முறையை அறிந்தவர்களாகப் பள்ளியிலிருந்து வெளிவருகிறார்கள்.

பதினைந்து வயது முடிய இலவசக் கல்வி பெற ஏற்பாடு செய்ததோடு ஆங்கில அரசாட்சி நின்றுவிடவில்லை. தொழிற் சாலை முதலிய பெரும் நிலையங்களுள் வேலை செய்யும் 15 வயது முதல் 18 வயது வரையிலுள்ள வாலிபர்களும் தொடர்ந்து கல்விபெற முதலாளிகளும் சர்க்காரும் சட்டபூர்வமாக ஏற்பாடு செய்துள்ளனர். அங்கு முதியோர் கல்வி என்றால் முதற்கல்வி என்ற பொருள் இல்லை. முதிர்ந்த கல்வி என்றே பொருள். முதியோர் கல்வி நிலையத்தில் வகுத்துள்ள பாடங் கள் ஒன்றிரண்டல்ல; அறுபத்து நான்காகும்.

இப்படிப்பட்ட நல்ல முறையின் பயனாக, நாங்கள் அங்குக் காணாதவை தெருச்சண்டை, சோம்பல், பட்டினி, ஏமாற்று, ரிக்ஷாவண்டி, பேரம் பேசுதல், பொருள்களைப் பறிகொடுத்து ஏங்குவோர் முதலியனவாம். நாங்கள் கண்ட வையோ ஒழுங்கு, சுத்தம், சுறுசுறுப்பு, நேர்மை, மரியாதை, ஒரே விலை, அச்சமின்மை ஆகியவைகளாம்.

“நாமும் அந் நிலைக்கு வரமுடியுமா?” என்ற ஏக்கம் எங்களுக்கு அடிக்கடி வந்ததுண்டு. ஆம், முடியும். உண்மையோடும் உறுதியோடும் உழைத்தால் பெறுதற்கரியதையும் பெறலாம். இதுதான் நான் என் வெளி நாட்டுச் சுற்றுப் பயணத்தினால் அறிந்து கொண்ட படிப்பினை. “உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?” என்ற கேள்வி பிறக்கிறது.

## அருஞ்சொற் பொருள்

படிப்பினை - நீதியை உணர்த்துவது. பாரிசு - பிரான்சின் தலை நகர். ஸ்காட்லாந்து - இங்கிலாந்துக்கு வடக்கிலுள்ள நாடு. சுவிட்சர்லாந்து-இத்தாலிக்கு வடக்கிலுள்ள ஐரோப்பிய நாடு. பட்டி தொட்டி - சிறிய கிராமங்கள். நாணயம் - நேர்மை. தகவல் - செய்தி. இலட்சியம் - குறிக்கோள். வையம் - உலகம்.

## வினாக்கள்

1. திரு. சுந்தரவடிவேலர் தாம் கண்ட நாடுகளுக்கும், நம் நாட்டிற்கும் உள்ள வேற்றுமைகளாகக் குறிப்பிடுவன யாவை?
2. பாரிசு நகர் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
3. சுவிட்சர்லாந்துக்கு யாத்திரிகர் ஆண்டுதோறும் ஏன் செல்கின்றனர்? அந் நாட்டு அரசியலில் காணப்படும் அதிசயம் யாது?
4. பிரிட்டிஷாரிடம் நாணயம் மிகுதி என்பதை உதாரணங் காட்டி விளக்குக.
5. பிரிட்டனில் வழங்கும் கல்வி முறையைத் தொகுத்து வரைக. (20 வரிகள்)
6. இங்கிலாந்தில் முதியோர் கல்வித் திட்டம் எப்படி நடத்தப் படுகின்றது?
7. இங்கிலாந்திலுள்ள பள்ளி ஆசிரியர்களின் உரிமையையும் சிறப்பையும் குறிப்பிடுக.
8. திரு. சுந்தரவடிவேலர் தம் சுற்றுப் பிரயாணத்தில் காணாதன, கண்டன எவையெனக் குறிப்பிடுகின்றார்?
9. திரு. சுந்தரவடிவேலர் தம் சுற்றுப் பயணத்தில் அறிந்த படிப்பினை என எதனைக் குறிப்பிடுகிறார்?

147163
சென்னை-600 008.

# 4. தமிழ் தந்த பாரதி

திரு. ம. ரா. போ. குருசாமி அவர்கள், எம். ஏ.

*[இக் கட்டுரையாசிரியர் பூளைமேடு பி. எஸ். ஜி. கலைக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணி புரிபவர். இவர் தமிழும், தமிழரும் சிறப்புற வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன் கட்டுரைகளும், நூல்களும் எழுதி வருபவராவர்.]*

வள்ளித் திருமணக் கதை யாவரும் அறிந்த ஒன்றாகும். அதன்கண் திடீரென்று ஒரு வேங்கை மரம் தோன்றுகின்றதன்றோ? முன்பின் இல்லாத ஒன்று திடீரென்று தோன்றிக் கதைப்போக்கில் என்னென்னவோ மாய நிகழ்ச்சிகளெல்லாம் நிகழ ஏதுவாக உள்ளது. வானொலி எழுகிறது. மரத்தினை வெட்டினால் குருதி கசிகிறது....இங்ஙனமாக வேட்டுவரை மாய மரம் ஏமாற்றுகின்றது. அவர்கள் மாயத்தினால் மருட்சியுற்று மேற்கொண்டு ஆராய்ச்சி செய்யாமல் விட்டு விடுகிறார்கள்.

இந்த வேங்கை மரக் கதையினைத் தமிழ் இலக்கிய உலகிலும் காணுங்கால் வியப்பு மேலிடுகிறது. வித்து, செடி, குறுமரம்....என்ற நிலைகளிலெல்லாம் புலப்படாமல், தழைத்துச் செழித்த ஒரு முழு மரம், எங்கிருந்தோ தோன்றிவிட்டது. இந்த நெறி புராணத்திலும், தெய்வங்களின் போக்குவரவுகள் கேள்வி முறை யில்லாமல் நிகழும் மாயக் கதைகளிலும் சரியாக இருக்கலாம். ஆயின், மனிதனின் வாழ்விலே முகிழ்க்கும் பண்பாடு, அந்தப் பண்பாட்டின் வழி விளக்கும் வரலாறு, வரலாறு விளக்கம் பெறும் இலக்கியம் ஆகிய இந்தத் துறைகளில் மாய வேங்கைக்கு மதிப்பு இருத்தல் இயலாது.

திடீரென்று ஒரு கவிஞன் தோன்றிவிட முடியாது. காலப் போக்கிலே இயங்கும் பண்பாட்டின் முதிர்ச்சியில் புலமை முகிழ்க்கும். அம் முகிழ்ப்பின் மலர்ச்சியிலே கவிதை மணங் கமழும். இலக்கிய மரபு என்பது தெய்வங்களின் மாய விளையாட்டாக அமையவில்லை; அது மக்களின் அன்றாட நல்வாழ்வின் விளைவு. புலவன் ஒருவன் தோன்றுகிறான் என்றால்,

TB
031(8) N64

அவன் தன் இனத்தின் சென்ற காலத்துச் சிறப்பியல்புகளின் சுருங்கிய வித்தாகவே அமைகிருன். அந்த வித்திலிருந்து பல வித்துக்கள், எத்தனையோ பல மரங்கள்....இவ்வாருக உயிர்த் தன்மை நிறைந்து கிடப்பது ஒரு புலவனின் தோற்றம். மாய வேங்கை வேட்டுவர் மனத்திலே மருட்கை எழுப்பி மயங்கச் செய்துவிட்டது. ஆனல், இலக்கிய வரலாற்றிலே மாய வேங்கை தோன்றிற்று எனின், 'அஃது எப்படி முடியும்?' என்று கேட்கவேண்டுமே தவிர, வீண் மருட்கை கூடாது.

பாரதியாருக்குப் புகழ் தேட விரும்பும் சிலர், மேலே காட்டிய மாய வேங்கை மர மனப்பான்மையை மேற்கொள்கின்றனர். முன்னிருந்த மொழிப் பரம்பரையை அடியோடு மறந்துவிட்டோ, அல்லது 'முன்னது என்ருலே மூடத்தனம்' என்ற சீர் திரிந்த மனப்பான்மை கொண்டோ, பாரதியாரிலிருந்து தான் தமிழ்க் கவிதைச் சரிதம் தொடங்குகிறது என்று சொல்லுவோர் சிலர் உள்ளனர்.

பாரதியார் இலக்கியப் பூங்காவிலே திடீரென்று முழு மரமாகத் தோன்றிவிட்ட கவிஞர் அல்லர்; வாழையடி வாழையாக அகத்தியன் முதல் தொடர்ந்துவரும் புலவர் பரம்பரையைச் சார்ந்தவரே ஆவார் என்பதை நினைவூட்டவே இக் கட்டுரை எழுகின்றது.

தமக்குமுன் வாழ்ந்த பெரும் புலவர்களின் பணிச் சிறப்பைப் பாரதியார் ஒருகாலும் மறந்தவரல்லர். தொடர்ந்து வரும் புலவர் பரம்பரையே மொழியின் வாழ்வுக்குக் காரணம் என்பதை அவர் புலப்படுத்தும் பான்மையினைப் பின்வரும் கண்ணிகளால் உணரலாம்:

"கள்ளையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்
தந்தை யருள்வலி யாலும்—முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்"

தமிழ்மொழி இதுகாறும் வாழ்ந்தமைக்குக் காரணராக, முன்பு சான்ற புலவர் அமைந்தனர் என்று பாரதியார் குறித்தது நோக்கத் தக்கது. இனி எதிர்கால வாழ்வுக்குப் புதுப் புலவர் தேவை என்பதை,

"தந்தை யருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்"

என்ற கண்ணியில் விளக்கியுள்ளார். ஆகவே, மாய வேங்கை மரமாகப் புலவன் தோன்ற முடியாது என்பதைப் பாரதியார் வாயிலாகவே நாம் உணர முடிகிறது.

பாரதியார் தமக்குமுன் தோன்றிய புலவர் பெருமக்களின் நூல்கள் பலவற்றையும் பயின்றவர் என்பதில் ஐயம் ஒன்றும் இல்லை. ஆயினும், வேங்கை மரக் கதையால் மருட்சியடைந்துள்ளோர்க்கு இதை விளக்க வேண்டும். தொன்னூல்களைப் படித்த பாரதியார்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை"

என்று பாடிய பாட்டு யாவரும் அறிந்ததுதான். தமிழ் நூல்களிலே மூன்று அவருடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன. அவற்றைப் படித்து, பயின்று, நயங்கண்டு அவர் மதிப்புரை தருவதை நோக்குமின் :

"சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லையொன் றின்மை யெனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும்..."

இச் செய்யுட் பகுதி கொண்டு, பாரதியார் முந்தையோர் நூல்களைப் பயின்ற பான்மை எத்தகைத்து என்பது தெளிவாகும்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் விளங்கும் நம்மாழ்வார் பாசுரங்களைப் படித்தவர்க்குப் பாரதியாரின்,

"அன்றே அப்போதே வீடதுவே வீடு"

(*பாரதி அறுபத்தாறு*)

என்ற அடி எழுச்சி யூட்டுமன்றோ? அதே 'பாரதி அறுபத்தாறு' என்ற கவிதையுள் வரும்,

"வடகோடிங் குயர்ந்தென்னே சாய்ந்தா லென்னே"

என்ற வரி பட்டினத்தார் பாடலின் எதிரொலிதானே? 'மாயையைப் பழித்தல்' என்ற தலைப்பின்கீழ் உள்ள ஒரு பாடலில் வரும்,

"யார்க்கும் குடியல்லேன் யானென்பது
ஓர்ந்தனன் மாயையே"

என்னும் பகுதியில் திருநாவுக்கரசரும், மாணிக்க வாசகரும் தங்கள் உரிமையைச் செலுத்தாமலா விட்டார்கள்?

"நச்சை வாயி லேகொணர்ந்து
நண்ப ரூட்டு போதிலும்...
அச்சமில்லை..."

என்று எக்காளமிடும் பண்டாரப் பாட்டுக்குப் பிறப்பகமாகத் திருக்குறளும் நற்றிணையும் அமைந்தன எனக் கூறின் பாரதியாருக்குப் பெருமைதான் ஏற்படும்.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்ற குறட்பாவினையும்,

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

என்ற நற்றிணை யடிகளையும் பயின்ற உள்ளங்களுக்குப் பாரதியார் மாய வேங்கை யல்லர் என்றுதான் படும்.

"தோள் கண்டார் தோளே கண்டார்..."

என்ற கம்பன் பாடலை அதன் உட்பொதி பொருளோடு உணர்ந்தவர்களுக்கு,

"தோளைப் பார்த்துக் களித்தல் போலே யன்னன்
துணையடிகள் பார்த்து மனம் களிப்பேன் யானே"

என்ற பாரதி வரிகளில், முன்னைய பாடலின் எதிரொலி யேனும் கேட்காமலா போய்விடும்?

> " பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை யருளிலார்க்கு
> அவ்வுலக மில்லாகி யாங்கு "

எனவும்,

> " அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
> புறத்த புகழும் இல "

எனவும் கூறிய வள்ளுவரை அறிந்தவர்கள்,

> " பொருளி லார்க்கிலை யிவ்வுல கென்றநம்
> புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண் "

எனவும்,

> " அறமொன் றேதரும் மெய் யின்பம் என்றநல்
> அறிஞர் தம்மை அனுதினம் போற்று வேன் "

எனவும் பாரதியார் பாராட்டிப் போற்றுவதைப் புரிந்துகொள் வார்கள். இன்று ஒதுக்கப்பெறும் புராண நூல்களைக் கூடப் பாரதியார் விட்டாரல்லர். அவற்றையும் படித்துப் பார்த்திருக் கிறார். செவ்வந்திப் புராணம் அவற்றுள் ஒன்றாகும். அந்த நூலிலே முருகனை வணங்கும் பாடல் ஒன்றுளது. அது வருமாறு:

> " ஓகையால் திரைமுன் றளில் உழக்கும் மா
> வினையும் வாட்டும்;
> ஏகவெவ் வரையி னெல்லை பிடித்திடும்;
> இமையோர் போற்றத்
> தோகைமேல் உலவுங் கந்தன் சுடர்க்கரத்
> திருக்கும்; வெற்றி
> வாகையே சுமக்கும் வேலை வணங்குவ
> தெமக்கு வேலை "

இந்தப் பாடலின் பின் இரண்டடிகள் பாரதியார் உள்ளத்தே தங்கிவிட்டன. உரை நடையில் ஏதோ எழுதும்போது நடுவே அந்த இரண்டு அடிகளும் இடம் பெற்றுவிட்டன. பாரதியார் கவிதைகளைப் பதிப்பித்தவர்களுக்கு இந்த உண்மை தெரியவில்லை. தெரியாமை காரணமாக,

"தோகைமேல் உலவுங் கந்தன்
சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவ தெமக்கு வேலை"

என்று பாரதியார் பாடாத பாட்டு அவர் முத்திரையோடு வெளி வந்துள்ளது!

இனியும் இலக்கிய உலகில் பாரதியாரின் தோற்றம் பற்றி ஐயம் உண்டானால், திரு. வ. வே. சு. ஐயரவர்களின் கருத்தைச் சான்ருகக் கொள்ளலாம். 'கண்ணன் பாட்டு' பாரதியாருக்கு அழியாப் புகழை தருவதன்றோ? தேசியப் பாடல்கள் பொருளிழந்து, புரிந்துகொள்ளவும் முடியாத ஒரு காலம் வரும். அப்போதுகூடக் 'கண்ணன் பாட்டு' பாரதியாரை வாழ்விக்கும். அக் கண்ணன் பாட்டு இரண்டாம் பதிப்பாக வெளிவந்த காலையில் திரு. வ. வே. சு. ஐயரவர்கள் ஒரு முன்னுரை எழுதியுள்ளார். அதன்கண் "கண்ணனுடைய செயல்களும், திருவிளையாடல்களும் பாரதியார் மனம் முழுவதையும் கவர்ந்தனவென்றும், இக் கவர்ச்சிக்குக் காரணம் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பாசுரங்களை அவர் அனுபவித்து உணர்ந்ததே" என்ற கருத்துப் புலப்பட எழுதியுள்ளார்.

"பாரதிக்கு முன்னும் தமிழ் இருந்தது. ஆனால், தமிழ் இல்லாமல் பாரதி இல்லை."

—இது பாரதி மண்டபத் திறப்பு விழாவின்போது திரு. ம. பொ. சி. கூறியது. கருத்து மிகக் கனிந்து, சொற் சிக்கனத்தோடு துலங்கும் இக் கூற்று மிகமிகப் போற்றற்பாலது.

பாரதிக்குத் தெய்வத் தன்மை தேடித்தர அவருடைய கவிதைகள் உள்ளன. வேறு எவரும் அவரை மாய வேங்கை மரமாக்கி மாண்பிழக்கச் செய்யவேண்டா. மிக நெடுங் காலமாக நிலவிவரும் தமிழ்ப் புலவர் பரம்பரையே பாரதியை நமக்கு நல்கியுள்ளது. தமிழ்தான் நமக்குப் பாரதியைத் தந்துள்ளது.—இதனை மறக்க வேண்டா!

"பாரதிக்கு முன்னும் தமிழ் இருந்தது. ஆனல், தமிழ்
இல்லாமல் பாரதி இல்லை."

## அருஞ்சொற் பொருள்

ஏது - காரணம். குருதி - இரத்தம். மருட்சி, மருட்கை - மயக்கம். குறுமரம் - சிறுமரம். முகிழ்க்கும் - அரும்பும். மூடத்தனம் - அறியாமை. தீஞ்சுவை - இன்சுவை. அனுதினம் - நாடோறும். ஓகை - மகிழ்ச்சி. மா - மாமர வடிவில் தோன்றிய சூரபதுமன். வாகை - வெற்றி.

## வினுக்கள்

1. மாய வேங்கை மரத்திற்கு மதிப்பு எவண் உண்டு? எங்கு இல்லை?
2. இலக்கியமரபு என்பது பற்றி திரு. ம. ரா. போ. அவர்கள் கூறுவன யாவை?
3. பாரதியாருக்குப் புகழ்தேட விரும்பும் சிலர் எத்தகைய மனப்பான்மை கொண்டவர்களாக விளங்குகின்றனர்? அவர்கள் கூறுவன யாவை?
4. மொழியின் வாழ்வுக்குப் புலவர் பரம்பரையே காரணம் என்பதைப் பாரதியார் எவ்வாறு தெரிவித்துள்ளார்?
5. பாரதியார் முந்தையோர் நூல்களைப் பயின்றவர் என்பதனைச் சான்றுகளுடன் தொகுத்து வரைக (15 வரிகள்).
6. 'பாரதியார் பாடாத பாட்டு' என்று ஆசிரியர் குறிப்பிடுவது யாது? அது பற்றிய செய்தியை விளக்கி வரைக.
7. வ. வே. சு. அய்யர் அவர்கள் பாரதியாரைப்பற்றி வெளியிட்ட கருத்து யாது?

# 5. குடிமக்கள் காப்பியம்

பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் அவர்கள்,
எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.

*[இக் கட்டுரையாசிரியர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிபவர். பன்மொழியில் வல்ல இவர், ஏனைய மொழிகளோடு ஒப்பிட்டுத் தமிழின் சிறப்பை எடுத்துக்காட்டி வருப வர். ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியும், நூல்கள் பல எழுதியும், சொற்பொழிவாற்றியும் தமிழ்த் தொண்டு புரிபவர்.]*

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த என் இளமை வாழ்க்கை நினைக்க நினைக்க இனிக்கின்றது. இளமையில் கேட்ட கதைகளை நினைத்தாலும் இன்பம் அன்றே பொங்கு கிறது! மின்சார விளக்குகள் வருவதற்கு முன் மினுக்கு மினுக்கு என மின்னும் பூச்சிகளோடு தெரு விளக்குகள் போட்டியிடும் காலம் அது. அதிலும் ஓர் அழகு; ஓர் இன்பம். பொழுது சாய்ந்ததும் ஊர் அடங்கிவிடும். ஒரு மௌனம்—எங்கும் நிறைந்த பெருமௌனம் ஒன்றே அமைதி பொங்கும்; இரவில் இன்பக் கூத்தாடும். மாலை ஆறு மணிக்கெல்லாம் சோறு முடிந்துவிடும். நடுவாசலினை அடுத்துள்ள சரக்காற றில் குழந்தைகள் எல்லாம் கூடிவிடுவோம். எங்கள் வீட்டில் பழைய வேலையாளைச் சுற்றி, "நாயனு நாயனு, ஒரு கதை ஒரு கதை" என்று அன்பு கனியக் கூறிச் சூழ்ந்துகொள்வோம். கதையுலகில் புகுந்து நகையாடுவோம். இருட்டினை மறப் போம்; வீட்டினை மறப்போம்; இந்த உலகினையே மறப்போம்.

அரசரும் அரசியும், வீரரும் சூரரும், பொன்னும் மணியும், அழகும் கடவுளும், பேசும் விலங்குகளும், பாடும் மரங்களும் எங்களைச் சுற்றிச் சுற்றிவர அந்தச் சித்தருலகில் யாங்களும் ஒருவராய் வாழ்வோம். எப்போதும் "ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார்" என்றே அந்த வேலையாள் கதை சொல்லத் தொடங்குவது வழக்கம். ஆம். அரசர் தவிர வேறெவரும் மனத்து எதிர்வரக் காணும். என்ன என்ன கதைகள் என இப்போது எண்ணிப் பார்க்கிறேன். விக்கிரமாதித்தன் கதை; மதனகாமராசன் கதை; திருவிளையாடல்கள்; நளன் கதை;

அரிச்சந்திரன் கதை; துரியோதனன் கதை; இராமன் கதை எல்லாம் முடி மக்கள் கதைகளே. குடிமக்கள் கதை ஒன்றும் கேட்டதாக நினைவுக்கு வரவில்லை. குடிமக்களைப் பற்றி எண்ணுதற்கே இடம் இல்லாமல் போய்விட்டது. இன்று நினைத்தால் பெரிய வியப்பாகத் தோன்றுகிறது.

பின்னர்ப் பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த கதைகளும் முடிமக்கள் கதைகள் அல்லவா? இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம், நளவெண்பா, நைடதம் என்பவையே எப்போதும் பாடமாக வரும். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் என்றால் அரசர்களைப் பற்றிய நாடகங்களே பாடமாக வரும். வரலாறு என்றாலும் அரசர்கள் வரலாறன்றி வேறொன்றும் வரலாறாக அன்று தோன்றுவதே இல்லை. எங்களைக் கதை எழுதச் சொன்னபோதும் "ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான்" என்று எழுதத் தொடங்கியதாகவே நினைவிற்கு வருகிறது. முப்பதாண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலை இது. இதன் பின்னரே பாட்டாளியுலகம் பிறந்து வளர்ந்துள்ளது. பாட்டாளி என்ற சொல்லே வழங்காத காலம் அது.

தமிழில் மட்டுமா இந்த நிலை இருந்து வந்தது? உலகம் தோன்றியதிலிருந்து உலகம் முழுதும் கதை என்றால் முடி மக்கள் கதைதான். வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப் பெறுவது வான்மீகியின் இராமாயணமே. கிரேக்கர்கள் பழங்காப்பியம் எனப் பாராட்டுவது ஹோமர் பாடிய 'இலியட்' என்பதே யாம். மெனலஸ் என்ற அரசர் பெருமானின் அழகிய மனைவியாம் ஹெலன் பெருமாட்டியைப் பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன் சிறை எடுத்ததால் மூண்ட போரினையே பாடுகிறது அந்தப் பழங்காப்பியம். வர்ஜில் என்ற பாவாணர் பாடிய 'ஈனிட்' என்பதே இலத்தீன் மொழியின் பழங்காப்பியமாகும். உரோமப் பேரரசினைத் தோற்றுவித்த 'ஈனியஸ்' என்ற அரசர் பெருமானது வரலாற்றினைக் கூறவே அக் காப்பியம் எழுந்தது. இவ்வாறு எந்த நாட்டுப் பழங்காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அரசர் அல்லது வீரரது வரலாற்றினையே பாடிப் புகழக் காண்கிறோம்.

முடியரசர்கள் காலம் ஏறக்குறைய முடிந்துவிட்டது என்றே சொல்லிவிடலாம். இது குடியரசு காலம். அது மட்டுமா ? முதலாளி என்று புகழ்வதெல்லாம் மலையேறிப் போய்விட்டதன்றோ ? பாட்டாளி என்ற சொல்லே பாட்டைப் போல இனிக்கின்ற காலம் இது. இத்தகைய நாளில் முடிமக்களைப் பற்றிப் பாடிய நூல்களின் வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முயல்வது வியப்பு அன்று. அண்மையில் தமிழிலக்கியத்தினை ஆராய எண்ணிய இளைய அறிஞர் முதலாளி இலக்கியமும் முடிமக்கள் இலக்கியமும் அன்றிக் குடிமக்கள் இலக்கியம் என ஏதேனும் உண்டா என்று நெஞ்சம் குமுறுகிறார். குறம் பாடினாலும் மீனாட்சி குறமாக முடிகிறது. குறவஞ்சி பாடினாலும் சரபேந்திரர் குறவஞ்சியாக நீண்டு ஓடுகிறது.

ஆனால், "பெரியோர்ப் புகழ்தலும் இலமே சிறியோர் இகழ்தல் அதனினும் இலமே" என்று பழந்தமிழன் பாடியுள்ளது நினைவிற்கு வருகிறது. இப் பழந் தமிழன் வாய்ப்பந்தல் போடுகிறானா ? உண்மையைத்தான் கூறுகிறானா ? எண்ணித்தான் பார்ப்போமே ! தமிழில் ஆதிகாவியம் எது ? பாரதமா ? அது பின்னாளில் எழுந்தது. இராமாயணமா ? அது கம்பனால் சீர் பெற்றது. தமிழிலக்கிய வரலாற்றில் முதன் முதலாகக் காப்பியம் எனச் சிறப்புறத் தோன்றியது சிலப்பதிகாரமே ஆம். அது யாருடைய கதை ? சோழன் கரிகாலன் வருகிறான். ஆனால், அவனுடைய கதை அன்று. பாண்டியன் நெடுஞ்செழியன் அரசு கட்டிலில் வீற்றிருக்கிறான். கண்ணகி எதிரே உயிர் விடுகிறான். ஆனால், அவன் கதையும் அன்று. சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர் புரிகின்றான். கண்ணகிக்குக் கோயில் கட்ட இமயத்திலிருந்து கல் எடுத்து வருகின்றான். ஆனால், அவன் கதையும் அன்று. முரசு முழங்கு தானை மூவரும் கதையில் வந்தும் அந்த முடிமக்கள் கதையாகச் சிலப்பதிகாரம் விளங்கவில்லை. குடிமக்களில் ஒருவர் கதை ; அதிலும் ஒரு பெண்ணின் கதை. கண்ணகியின் கதையன்றோ சிலப்பதிகாரம் ! கோவலன் குடிமக்களுக்குள் ஒருவன். மாதவி பரத்தையரில் ஒருத்தி. இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரச் சித்திரம்.

இது, நாம் வேறு எங்கும் காணுத ஒரு வியப்பு. முடி மக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகப் பிற நாடுகளில் எல்லாம் அமைந்து விளங்க, குடிமக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகத் தமிழ் நாட்டில் அமைந்து விளங்குகிறது. குடியரசு உலகிலும் இந்தக் காப்பியத்தைப் பாராட்ட இடம் உண்டு. பாட்டாளி யுலகமும் இதனைப் பரிவுடன் வரவேற்கும். ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வேட்டுவ வரி என்று பாட்டாளி களைப் பாடுவதில் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! எவ்வளவு களிப்பு! முரசு முழங்கு தானை முடிமக்கள் மூவரும் தமிழ் நாட்டின் ஒருமைப்பாட்டினைச் சிதைத்து வந்தனர். குடிமக்கள் வழியாகவே தமிழ் நாட்டின் ஒருமை ஓங்கி வளரக் காண்கிறுர் இளங்கோவடிகள். சோழ நாட்டில் பிறக்கிறுள் கண்ணகி; பாண்டி நாட்டில் கணவனை இழக்கின்றுள்; சேர நாட்டில் தெய்வமாகின்றுள். மூவரசர் பேராசையால் முப்பெருந் துண்டாய் வெட்டுண்டுகிடக்கும் தமிழன்னை கண்ணகியின் வாழ்க்கை வழியே ஓருருவாய் உயிர்பெற்று விளங்குகிறுள்.

என் வாழ்நாளுக்குள்ளேயே ஒரு புரட்சியைக் காண் கிறேன். முடிமக்களைப் பற்றியே கதையைக் கேட்டும் எழுதி யும் வந்த நானே இப்போது குடிமக்கள் கதையைக் கேட்டும் எழுதியும் வருகிறேன். என் இளமை நாட்களில் இதனை நான் நம்பி இருக்க முடியாது. ஆனுல், ஏறக்குறைய இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இதனை நம்பினுர் இளங் கோவடிகள். அரசர் குடியிற் பிறந்து, அரச செல்வத்தில் வாழ்ந்தவர் நம்பினுர். நம்பியது மட்டுமா? நம்பியபடி குடி மக்கள் கதையினைக் காப்பியமாக எழுதினுர்! எழுதியது மட்டுமா? தாம் எழுதியபடி தமிழ் நாடும் அந்தக் காப்பி யத்தை அன்று முதல் இன்றுவரை பாராட்டும்படியும் செய்து விட்டார்.

இளங்கோவடிகள் செய்த புரட்சி பெரிதன்றே? சங்க காலமே ஒரு புரட்சிக் காலம். அந்த நாளைய புலவர்கள் பழைமைக்கு அடிமையாகாது வெற்றிபெற முயன்றுர்கள். அவர்கள் கூறியிருக்கும் உவமைகளைக் கண்டால் இந்த

உண்மை விளங்கும். தாங்கள் நேரிற் கண்ட போர்களேயும் ஊர்களேயுமே உவமை கூறுகின்ற புதுமையை அங்குக் காணலாம். "வஞ்சி மாநகர்போல அழகிய தலேவி; வெண் ணிப் போர் ஆரவாரம்போலப் பழிச்சொல் அம்பலத்தில் ஆர வாரமாகிறது" என்றெல்லாம் பாடுகிற ஒரு புது மரபினேச் சங்கப் புலவர்கள் நிலேநாட்டி விட்டதனே என்ன என்பது? இந்தப் புரட்சியின் பயனுக விளேயும் புரட்சிகள் பல. முடி மக்கள் வாழ்வில் காணும் சிறப்புக்கள் எல்லாம் குடிமக்கள் வாழ்விலும் கண்டால் அன்ருே காப்பியம் இனிக்கும். காதலும் அழுகையும் வீரமும் காப்பியப் பெருஞ்சுவைகள். மாதவியும் கோவலனும் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்கின்ற காதல் வாழ்வே சிலப்பதிகாரப் புகார்க்காண்டம். கணவனேயும் இழந்த கண்ணகியே அவலச் சுவையின் ஆழத்தைக் காட்டு கிருள். அந்தக் கதைதான் மதுரைக் காண்டம். கண்ணகிக் காக எடுத்த கல்லினே வடவரசர் தலேமீது ஏற்றி வந்த செங்குட்டுவன் வீரத்தைப் பாடுவதே வஞ்சிக் காண்டம். அரசனிடம் வீரம் கண்டால் குடிமக்கள் காப்பியம் எழுதற்கு இடம் இல்லே. கோவலனிடமும் வீரம் காண்கிருர் இளங்கோ வடிகள். இன்று உலகம் போற்றும் வீரம்; காந்தியடிகள் காட்டிய வீரம்—இதனே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காண்கிருர் இளங்கோவடிகள். யானேயைக் கொல்லாமலே யானேக் காலிலிருந்து முதியவனேக் காப்பாற்றுகின்ருன் கோவலன். கருணே மறவனுகக் காட்சி யளிக்கின்ருன். கண்ணகி—வீட்டை விட்டு வெளிவராத பெண்—வெளி நாட் டில் பாண்டியனே வெல்கிருள்—கடவுளாக மாறுகிருள். ஈதொரு புதுமை. பரத்தையரைப் பழிப்பதே அன்றும் இன் றும் வழக்கம். பரத்தையர் குடிப் பெண்ணுன மாதவி கற் பரசியாக ஓங்குகிருள். துறவறத்தின் முடிமணியாகச் சிறக் கின்ருள். அவள் மகள் உலக குருவாக விளங்குவதனே மணி மேகலே பாடுகின்றது. குடிமக்கள் சிறப்பினே இதற்கு மேலும் எவ்வாறு கூறுவது? திருவள்ளுவர் தமது பொருட் பாலில் குடிகளது சிறப்பினேக் கடைசி பதின்மூன்று அதிகாரத்தில் கூறுவதன் நுட்பம் இப்போது விளங்குகிறது அன்ருே! குடி மக்கள் சிறப்பினே இடைக்காலத்தில் தமிழ்நாடு மறந்ததும்

உண்டு. அப்போது திருவள்ளுவர் கூறிய குடியியலின் நுட்பத்தினை உணரமாட்டாது அந்த அதிகாரங்களை ‘ஒழிபியல்’ என்று ஒதுக்கி வைத்தது புதுமையோ? ‘ஒழிபியல்’ என்பது அனுமத்துக் கணக்கு—நாட்டின் உயிர் நிலையாய்ப் பொருட்பாலின் முடிமணியாக விளங்குவது ஒழிபியலாக ஒதுக்கப்படுவது காலத்தின் கோளாறன்றோ? இன்று குடிமக்கட் காப்பியத்தின் பெருமையை உணர்ந்து வருகிறோம். குடியரசில் அன்றோ வாழ்கிறோம்! பழைய நூல்களைப் புதிய கண் கொண்டு உண்மை உணர இனி வழியேற்படும்.

### அருஞ்சொற் பொருள்

*சரக்காற்றில் - தாழ்வாரத்தில். சித்தர் - அரும் பெரும் செயல்களை முடிக்கும் ஆற்றல் பெற்றவர். முடிமக்கள் - அரசர்கள். பாட்டாளி - தொழிலாளி. தானை - சேனை. பரத்தை - விலைமகள். சிக்கல் வாழ்க்கை - துன்பம் மிக்க வாழ்க்கை. ஆய்ச்சியர் குரவை - இடைச்சியர் பாடலோடு ஆடும் கூத்து. குன்றக் குரவை - குறவர் ஆடிய கூத்தும் பாடிய பாட்டும். வேட்டுவ வரி - வேடர்கள் பாடிய பாட்டு. ஒருமைப்பாடு - ஒற்றுமை. அவலச்சுவை - அழுகைச் சுவை. அனுமத்து-ஒரு தலைப்பில் அடங்காதது. கோளாறு-கேடு.*

### வினாக்கள்

1. *எந் நாட்டுப் பழங்காப்பியமும் அரசர் அல்லது வீரரின் வரலாற்றையே பாடுகின்றது என்பதற்குச் சான்றுகள் தருக.*
2. *“சிலப்பதிகாரத்தைக் குடிமக்கள் காப்பியம் என்று கூறுவது பொருந்தும்.”—விளக்குக.*
3. *சிலப்பதிகார காவியத்தால் தமிழன்னை உயிர்பெற்று விளங்குவதாகக் கூறுதல் எவ்வாறு பொருந்தும்?*
4. *“இளங்கோவடிகள் செய்த புரட்சி” என்று தெ. பொ. மீ. அவர்கள் எதனைக் குறிப்பிடுகின்றார்?*
5. *சங்க காலத்தைப் புரட்சிக் காலம் என்று எங்ஙனம் கூறலாம்?*
6. *சிலப்பதிகாரத்தில் காணப்படும் பெருஞ்சுவைகள் யாவை? அவை எவ்விடங்களில் காணப்படுகின்றன?*
7. *குடிமக்களின் சிறப்புக்களாகச் சிலப்பதிகாரம் கூறுவன யாவை?*

# 6. ஓவியக் கலைஞர் - இரவி வர்மா

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரை
அவர்கள், எம்.ஏ., எல். டி.

*[இக் கட்டுரையாசிரியர் தமிழ் நாட்டின் தலை சிறந்த இலக்கிய ஆராய்ச்சி வல்லுநர்களில் ஒருவராவர். பன்மொழிகள் பயின்று புலமை பெற்றுள்ளமையால் 'பன்மொழிப் புலவர்' என்ற பட்டம் பெற்றவர். தமது சிறந்த பேச்சாலும், எழுத்தாலும் தமிழகத்தின் சிறப்பையும், தமிழர்களின் ஒப்பற்ற பண்பாட்டையும் விளக்கி வருப வர். நாட்டுப் பற்று மிக்க இவர் இலக்கியத் துறையிலும், வரலாற்றுத் துறையிலும் அரும்பணி புரிந்து தமிழ் மக்கள் பாராட்டைப் பெற்ற வராவர்.]*

"மலரினில், நீல வானில், மாதரார் முகத்தி லெல்லாம்
இலகிய அழகை ஈசன் இயற்றினன், சீர்த்தி யிந்த
உலகினில் எங்கும் வீசி ஓங்கிய இரவி வர்மன்
அலகிலா அறிவுக் கண்ணால் அனைத்தையும் நுகரு மாறே!"

"இயற்கையில் அழகு எங்கும் கனிந்து தவழ்கின்றது. மலரிலே அது புன்னகை பூத்துக் குலுங்குகின்றது. நீல வானிலே அது களிநடம் புரிகின்றது; மாதர்தம் முகங்கள் தோறும் அது தண்ணிலவொளி வீசுகின்றது. இங்ஙனம் தன் அழகு வண்ணத்தை யெல்லாம் காட்டிக் களிகூறுவது எதற்காகத் தெரியுமா?" என்று ஒரு கேள்வி கேட்கின்றார் கவிஞர் பாரதி. "உலகப் புகழ் பெற்ற கலைஞன் இரவி வர்மன், இந்த மெய்வண்ணங்களை யெல்லாம் காணட்டும், கண்டு மகிழ்ந்து, தன் மை வண்ணங்களைத் தோய்த்துக் கை வண் ணங்களைத் தீட்டிக் காட்டட்டும். இதுவே இயற்கையின் உட் கோளாயிருக்க வேண்டும்" என்று அவரே தம் கேள்விக்குக் கவிநயம்பட ஒரு மறு மொழியும் தந்து செல்கின்றார். கவிஞர் பாரதியின் இத் தற்குறிப்பேற்ற அணிநயம் கலைஞரின் கலை நயத்தை எவ்வளவோ திறம்பட எடுத்துக் காட்டுகின்றது. காவியக் கலைஞரால் இத்தகு சீரிய பாமாலை சூட்டிப் பாராட்டப் பெற்ற ஓவியக்கலைஞர், இரவி வர்மா!

இரவி வர்மா மலையாள நாட்டில் பிறந்தவர். மன்னர் குடி யில் பிறந்து வளர்ந்தவர். ஆனால் அவர் கலை வனப்பு மலை யாளம் நாட்டெல்லையையும், மன்னர் பெரு மக்கள் மரபெல்லை

யையும் தாண்டி, தமிழகத்தின் மக்கட் கவிஞர் பாரதியின் உள்ளத்தை அளாவிற்று. அதுமட்டுமன்று; இரவிவர்மா தென்னுட்டுக்கு உரியவர்; தென்னுட்டின் தலைசிறந்த ஓவியக் கலைஞர். ஆனல், அவர் புகழொளி தென்னுடெங்கும் பரவியதுடன் நிற்கவில்லை. வடநாட்டிலும் பொங்கி வழிந்தோடிற்று. அது கீழ்நாடு கடந்து மேலை நாடுகளிலும் பரந்தது. தென்னுட்டுக் கலைஞர் எவரும் அவரைப் போல வட நாட்டில் புகழ் பரப்பவில்லை. அதுபோலவே கீழ் நாட்டுக் கலைஞர் எவரும் அவரளவு மேல் நாடுகளில் புகழ் பெறவில்லை.

அவர் மன்னர் மரபுக்கு உரியவராயிருந்தாலும், மன்னர் பெருமக்கள் மாளிகைக்குரிய கலைஞராய் அமைந்துவிட வில்லை. மன்னர் மாளிகைகளிலும் பெரு மக்கள் மாடங்களிலும் அவர் கலைப் படைப்புக்கள் எந்த அளவுக்கு மதிப்புப் பெற்றனவோ அதிலும் பன்மடங்காக அவை பொது மக்கள் இல்லங்களில் பாராட்டப் பெற்றன. பொது மக்களும் அவற்றைப் பேரளவு விரும்பி வாங்கினர். அவரளவு மக்கள் உள்ளங்களில் உலவி ஊடாடி, அவர்கள் இல்லங்களில் நிலவி அணிசெய்து, அவர்கள் பண்பாட்டை வளர்த்த வேருெரு கலைஞனைத் தென்னுட்டிலோ, வட நாட்டிலோ காண முடியாது. மன்னர் குடியில் பிறந்தும் அவர் பேரளவில் மக்கள் கலைஞராக விளங்கினர் என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று வேண்டுவதில்லை.

கலையுலகில் கீழ் நாட்டில் இரவி வர்மாவுக்குப் பல வகைகளில் சீரிய தனியிடம் உரியது. கீழ்நாட்டுக் கலைஞர் எவரும் அவரைப்போல் மேல்நாடுகளில் புகழ்பெற்றது கிடையாது. இதற்கு ஓர் இயற்கையான காரணமும் உண்டு. அவர் மேனுட்டு முறைகளைத் திறம்படக் கையாண்டார். ஆனல், அவர் மேனுட்டு முறைகளைக் கையாண்டதால், அவர் பண்பு மேனுட்டுப் பண்பாய்விடவில்லை. மேனுட்டு முறையின் உதவிகொண்டே அவர் கீழ்நாட்டுப் பண்பைத் திறம்பட வகுத்துக் காட்டினர். இதன் மூலம் அவர் மேனுட்டவர் போற்றுதலை மட்டுமே பெற்றிருந்தால், நாம் அவர் கலையை உலகக் கலை என்று கூறுவோம்; ஆயினும் அயல் நாட்டுக் கலை என்றே நாட்டுவோம்! ஆனல், உண்மைநிலை இது

வன்று. அவர் மேனுட்டில் கலைவல்லுநரால் பாராட்டப் பெற்றது போலவே, இந்தியா முழுவதும் மக்களிடையே பேரா தரவு பெற்ருர். எனவே, அவர் பொதுப்பட மக்கள் கலைஞரும் உலகக் கலைஞரும் மட்டுமல்லர்; சிறப்பாகக் கீழ்நாட்டுக் கலைஞராகவும், தென்னுட்டுக் கலைஞராகவும் போற்றத்தக்க வரேயாவர்.

காலத்தாலும், வரலாற்ருலும், மரபாலும் இரவி வர்மா தற்கால இந்தியக் கலைஞரிடையே ஒரு வழிகாட்டியும் முன் னணி விளக்கமும் ஆவர். அவர் வாழ்ந்த காலம் பத்தொன்ப தாம் நூற்ருண்டின் பிற்பகுதி. அந் நூற்ருண்டின் தொடக் கத்திலேயே பொதுவாக இந்தியாவின் கலை மரபு தளர்வுற்று நலிந்து விட்டது. தென்கோடியில் மரபருது நிலவிய ஒரு சிற்றிழையைக் கைக்கொண்டு, இரவிவர்மா அதைத் திறம் படப் பேணி வளர்த்தார். அவர் கொடுத்த புத்துயிரால் அது புது வாழ்வு பெற்றுத் தென்னுட்டின் கலைமரபை வளர்த்தது; வடநாட்டிலும் மக்கள் ஆர்வத்தைத் தூண்டிப் பெருக்கிப் புதிய கலை மலர்ச்சிக்கு வழி வகுத்தது. இங்ஙனம், அவர் தென்னுட்டின் கலைத்துறை மலர்ச்சிக்குத் தந்தையாகவும், வடநாட்டின் கலைமலர்ச்சிக்கு முதல் தூண்டுதல் தந்த முன்னணிக் கலைஞராகவும் திகழ்கின்ருர்.

கலை மக்களுக்காக என்று கொண்டவர் இரவி வர்மா. கலை கலைஞருக்கு மட்டுமே என்ருே, கலை கலைக்கூடங்கட்கு மட்டுமே என்ருே அவர் கருதவில்லை. எனவே, அவர் கலையழகு, கலைத் துறை வல்லுநர் மட்டுமே காணக்கூடிய மறையழகாகவோ, பொது மக்களுக்கு எட்டாத மாயச் சரக்காகவோ அமைய வில்லை. மற்றப் பல கீழ் நாட்டுக் கலைஞரைப் போல, அவர் வடிவைப் புறக்கணித்து, வடிவு கடந்த தற்பனைவுப் பண்புகளி லும் கற்பனைகளிலும் மட்டும் கருத்தூன்றவில்லை. வடிவழகி லும் அவர் கருத்துச் செலுத்தினர். வடிவழகின் மூலமாகவே கருத்தழகிலும் அவர் உளம் தோய்ந்தது. இதனுல் அவர் கலைப்படைப்புக்கள் எவர் கண்களையும் எளிதில் கவர்ந்தன; கவர்ந்த பின் அவர்கள் கருத்தையும் அவற்றில் நிலைக்க வைத்தன. அவரைத் தனிச் சிறப்புப்பட மக்கட் கலைஞர் ஆக்கியது இப்பண்பே என்னலாம்.

கலைத்துறை ஆராய்ச்சியாளர், கலை மரபின் வரலாற்றை இரண்டு கூறுகளாக வகுப்பர். ஒன்று மேலை உலக மரபு. மற்றொன்று கீழையுலக மரபு. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மேனாட்டார் மேலை உலக மரபு ஒன்றையே கலை மரபாக மதித்தனர். கீழ்நாட்டுக் கலையை அவர்கள் கலையாகக் கருதவில்லை. இதற்குக் காரணம் யாதெனில், அவர்கள் கலையாராய்ச்சிக்குரிய விதி அமைதியும், இலக்கணமும் அந்நாட்டின் கலை இலக்கியத்தை—கலைப் படைப்பைப் பின்பற்றி அமைந்திருந்தது என்பதே. இலக்கியங் கண்டதற்கே இலக்கணம் அமைய முடியும் என்ற பண்டைத்தமிழர் நுண் கருத்தை உணராமல், அவர்கள் தம் இலக்கணத்தின் அமைதிகொண்டு கீழ்நாட்டுக் கலையை அளக்க முற்பட்டனர்.

எடுத்துக்காட்டாக, மேனாட்டுக் கலைஞர் தம் கலைப் படைப்புக்களைத் திரைச்சட்டத்தில் (Canvas) அல்லது அட்டைச் சட்டத்தில் (Board) தீட்டுவர். அதில் தம் பெயரைப் பெரும்பாலும் பொறிப்பர். அவற்றில் தத்தம் தனித் திறங்களை வற்புறுத்திக் காட்டுவர். இதனால் கலைஞருக்குத் தக்கபடி கலையும் வேறு வேறு வகைப்பட்டதாய் அமைந்தது.

ஆனால், கீழ்நாட்டிலோ, ஓவியங்கள் கல்லிலும் சுவரிலும் மட்டுமே தீட்டப்பட்டன. கலைஞன் பெயரோ, தனித்திறமோ வெளிப்பட வழியில்லை. பெரும்பாலும் கலை இலக்கணத்தின் கட்டுப்பாடு காரணமாக, கலைஞர் திறமை ஒன்று நீங்கலாக, வேறு எந்தப் பண்பு வேறுபாட்டுக்கும் வழி இருப்பதில்லை. எனவே, மேனாடுகளில் ஒரே காலத்தில், ஒரே இடத்தில் உள்ள இரண்டு கலைஞர்களின் பண்பு வேறுபாட்டைக்கூட கீழ் நாட்டில் இரு வேறு காலங்களில், இரு வேறு இடங்களில் உள்ள இரு மரபுகளிடையே காண்பது அரிது.

கீழ்நாட்டுக்கும் மேல்நாட்டுக்கும் நாகரிகத் துறையிலும், கலைத் துறையிலும் உள்ள வேறுபாடுகளைப் போலவே, வட நாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இரண்டிலும் வேறுபாடு உண்டு. எடுத்துக்காட்டாக, இலக்கியத் துறையில் தென்னாட்டு இலக்கியங்கள், வடநாட்டு இலக்கியங்களைக் காட்டிலும் பழைமையும், வளமும், பரப்பும், தனிப் பண்பும் உடையவை என்று காணலாம். மேலும், தமிழில் பிற்கால இலக்கி

யத்தையும், சங்க இலக்கியத்தையும் ஒப்பிட்டுக் காண்போர், பின்னதன் கலவைப் பண்பையும், முன்னதன் தனிப் பண்பை யும் வேறு பிரித்துக் காணக்கூடும்.

இலக்கியத்தில் உள்ள இவ் வேறுபாடே நாகரிகத்திலும், கலையிலும், பண்பிலும் உள்ள வேறுபாட்டை நன்கு குறித்துக் காட்டுகின்றது. சங்க இலக்கியம் இயற்கையோடும் வாழ் வோடும் ஒட்டியது. சமயக் கருத்துக்கள் உடையதாயினும், சமயச் சார்பு அற்றது. தற்புனைவும் அணியழகும் நிறைந்த தாயினும் இயற்கை வாய்மை கடவாதது. பொருந்தாக் கற்பனைக்கு அதில் இடமில்லை. கலைத்துறையிலும் வட நாட்டுக் கலை, தென்னாட்டுக் கலை ஆகியவற்றின் வேறுபாடு இத்தகையதே யாகும். தென்னாட்டுக் கலை வாழ்க்கையையும், இயற்கை வாய்மையையும் பேணுவது. அது மாயக் கற்பனை களில் உலவுவதன்று.

### அருஞ்சொற் பொருள்

சீர்த்தி - புகழ். நுகர்தல் - அனுபவித்தல். புன்னகை - புன் சிரிப்பு, இள முறுவல். களி - மகிழ்ச்சி. உட்கோள் - உள்ளத்துக் கொள்கை, கருத்து. வனப்பு - அழகு. அளாவிற்று - கலந்தது. கலை வல்லுநர் - கலையில் வல்லவர். நலிந்து - மெலிந்து, குறைந்து. சிற்றிழை - சிறு நூல். புனைவு - படைப்பு.

### வினாக்கள்

1. பாரதியார் இரவி வர்மரை எங்ஙனம் பாராட்டியுள்ளார்?
2. இரவி வர்மர் யார்? அவர் கலை வனப்பும், புகழொளியும் எங்ஙனம் புகழ்ந்துரைக்கப் பட்டுள்ளன?
3. இரவி வர்மர் மக்கள் கலைஞர் என்பதனைச் சான்றுகளுடன் வரைக.
4. இரவி வர்மர் கீழ்நாட்டுக் கலைஞராகவும் தென்னாட்டுக் கலை ஞராயும் போற்றத்தக்கவர் என்பதனை விளக்குக.
5. தென்னாட்டின் கலைத் துறை வளர்ச்சிக்கு இரவி வர்மர் வழிகாட்டியாகவும், முன்னணி விளக்கமாகவும் விளங்கினார் என்பதனைத் தெளிவுபடுத்துக.
6. இரவிவர்மரின் கலைப்பண்புகளை விரிவாக எழுதுக.
7. மேனாட்டார் கீழ்நாட்டுக் கலையைக் கலையாகக் கருதாதது ஏன்?
8. மேனாட்டுக் கலைமரபிற்கும், கீழ் நாட்டுக் கலைமரபிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
9. தென்னாட்டுக் கலைக்கும், வடநாட்டுக் கலைக்கும் வேறுபாடு உண்டு என்பதனை விளக்குக.

# 7. வீரத்தாய்

வித்துவான் நா. துரைசாமி அவர்கள், M.A.

“ பெண்ணிற் பெருந்தக்க யாவுள ” என்று பெண்ணினத்தின் பெருமையைப் பாராட்டிக் கூறினர் வள்ளுவர். கற்பு நெறி வழுவாத அப் பெண்டிர் தற்கொண்டான் வாழ்வை வள முறச் செய்தனர். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணமும் நாற்படையாகக் கொண்டு வாழ்ந்தனர், தமிழ் நல்லார். அச்சம் அவர்கட்குரிய பண்பு எனக் கூறப்பட்டிருப்பினும் அவர்கள் எதற்கும் அஞ்சும் கோழைகளாக வாழ்ந்தவர்கள் அல்லர். ‘அஞ்சுவ தஞ்சாமை பேதைமை’ என்ற பொதுமறைக் கேற்ப அஞ்ச வேண்டு மென்பதை அறிந்து அதற்கு மட்டுமே அஞ்சி ஒழுகினர்; தவறு செய்ய அஞ்சினர்; உயிரினும் பெரிதாய ஒழுக்கம் தவறக் கூசினர். ‘அச்சமே கீழ்களது ஆசாரம்’ என்று அறிந்து வாழ்ந்த அப் பெண்கள் தவற்றினைக் கடிய அஞ்சாது எழுந்தனர்.

கற்புக்கரசி கண்ணகி, ‘கணவனை யன்றி, வேறு கடவுளைப் பரவேன்’ என்று வாழ்ந்தவள்; இல்லம் விட்டுத் தனியே போந்தறியாதவள். அவள் பாதங்களை ‘மண்மகள் அறியா மலர்ச் செஞ்சீறடி’ என்று குறிப்பிடுகிறார் இளங்கோ வடிகள். அத்தகைய பெண் தன் கணவன் நெறி முறை தவறிக் கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேட்டதும் கொதித்தெழுந்தாள்; தான் பெண் என்னும் எண்ணத்தையும் மறந்தாள்.

முன்பின் அறியா மதுரை மாநகரில் அரசனைக் காண கண்ணகி தனிமையில் சென்றாள். அச்சமோ, கூச்சமோ அணுவளவும் இல்லாதபடி செய்துவிட்டது அவள் உள்ளத்தே எழுந்த சினம். அரண்மனை சென்று அரசனைக் கண்ட கண்ணகி அஞ்சாது, ‘தேரா மன்னா!’ என்று அவனை விளித்தாள். மண்ணாளும் மாமன்னன் அவள் கண்முன் சிறு துரும்புபோல் காணப்பட்டான் போலும்! நேர்மையை நிலை நாட்ட எழுந்த நேரிழையாள் தன் சிலம்பை உடைத்து மன்ன

னுக்கு உண்மையை உணர்த்தினுள். தன் கணவனின் களங் கத்தைப் போக்கிக் காவலனைக் கள்வனுக்கினுள்; கொண்ட கணவன் இறந்த பின்பும் அவனது நற்பெயரைக் காத்தல் மனைவியின் கடன் என்பதை உலகுக் கறிவித்தாள்; மறக் கற்பு வழுவாத மாபெரும் பத்தினித் தெய்வமாகத் தமிழ் நாட்டில் கோயில் கொண்டும் காவியங் கொண்டும் விளங்கு கிருள்.

இத்தகைய வீரமங்கையர் பலர் இங் நாட்டில் வாழ்ந்து மறைந்தனர். தன் உளம் விரும்பிய கணவனின் கைப் பிடித்து, அவன் செயல்கள் யாவினும் கைகொடுத்து உதவிய பண்புடைய பெண்கள் தமிழகத்தில் பலராவர்; இன்பத்திலும் துன்பத்திலும் தமிழ்ப் பெண்கள் இணைபிரியா வாழ்க்கைத் துணைவியராக இலங்கினர்; இல்லற மென்னும் நல்லறத்தை இனிதே நடத்தினர். 'இல்லென்ப தில்லாள் மேற்று' என்றும் 'மனைக்கு விளக்கம் மடவார்' என்றும் அவர்களைப் புகழ்ந்து போற்றினர் புல்வர்கள்.

தமிழகப் பெண்கள் தங்கள் முதற் கடமையாகக் கருதி யது தாய்மை அறம் பேணலே ஆகும். அவர்கள் பெண்ணி னத்திற்கே உரிமையான அக் கடமையைப் பெருமையோடு ஆற்றினர். சோறு படைத்தளிப்பதில் வல்ல அவர்கள் உயர் மக்களினம் படைத்தளிப்பதினும் சளைத்தவரல்லர்.

'ஆண் மகனைப் பெற்றுப் பாதுகாத்தல் என் கடன். அவனைச் சான்ருேனுக்கல் தந்தையின் கடன். வேல் வடித் துக் கொடுத்தல் கொல்லர் கடன். நன்னடையை நல்கல் நாடாளும் காவலன் கடன். வாளேந்திப் போர்க்களம் சென்று அஞ்சாது பொருது கணக்கற்ற யானைகளைக் கொன்று வெற்றியோடு திரும்புதல் அவ் வீர மகனின் கடன்' என்று பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர் புறநானூற்றில் காணும் ஒரு பாட்டில் விளக்குகிருர். (புறம், 312)

தமிழ்த் தாயின் வாழ்வுக் குறிக்கோள் வீர மகனை ஈன் றெடுத்தல். குழந்தை கருவில் இருக்கும்போதே அவன் புரியப் போகும் வீரச் செயல்களைப் பற்றிக் கற்பனை செய்தாள் அவன்

தாய் ; பாலோடு வீரச் சுவையைக் கலந்தூட்டினுள். துவக்க முதலே அவன் உள்ளத்தில் அச்சம் சிறிதும் தோன்ருதவாறு வளர்த்தாள். அவன் உறுதியான உடலும், உரஞ்சான்ற உள்ளமும் பெற்றுத் திகழ்தற்கேற்ற நல்ல முறைகளைப் பின் பற்றினுள். 'மராட்டிய இனத்துப் பேரரசன் சிவாஜியின் ஒப்பற்ற தீரச் செயல்களுக்குக் காரணம் அவனது அன்னை அவனுக்கு இளமையில் புகன்ற வீரக் கதைகளே' என்று வரலாற்ருசிரியர்கள் கூறுகின்றனர். அவ்வாறே தமிழ் அன்னையரும் தங்கள் குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டிச் சீரிய எண்ணங்களை அவர்கள் சிந்தைகளில் ஊட்டி வளர்த்தனர்.

இவ்வாறு கண்ணின் மணியெனக் காத்து வளர்த்த மகனை நாட்டின் நலங்கருதிப் பிரிய அத் தாய் சிறிதும் வருந்த மாட்டாள். 'மாற்ருன் படையைத் தடுத்துப் போர் செய் தற்குப் பலர் இங்கு உளர். அவர்கள் போர்க்களம் போகட்டும். என் மகன் என்னிடமே இருக்கட்டும்' என்று கருதும் தன்னல எண்ணத்தை அத் தாய் கொள்வதில்லை. தான் ஈன்ற மகனினும் தான் வாழும் நாடு உயர்ந்தது என்று அவள் கருதினுள். தாய் நாட்டைக் காப்பது தனது மகனின் கடமை என்று காட்டத்தான் பொன்முடியார் 'களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடன்' என்று கூறினுர்.

போருக்குச் சென்ற மகன் வெற்றியுடன் திரும்பின் அத் தாய் அவனை அன்போடு தழுவி அகமகிழ்வாள் ; அப் போரில் அச்சமின்றிப் பொருது உயிர் இழந்தான் என்று அறிந்தால், தன் மகன் நாட்டிற்காகப் பொருது வீர உலகம் புகுந்தான் என்னும் உவகையால் வருத்தத்தைத் துடைத்து ஆறுதல் பெறுவாள். ஆனுல், போருக்குச் சென்ற மகன் அஞ்சியோ, புறங்காட்டியோ ஓடிவந்தான் என்று அறிந்தால் அவள் அடையும் துயர்க்கு அளவே இல்லை. அதன்பின் உயிர் வாழ்தலைக்கூட அத் தாய் வெறுத்தாள்.

அத்தகையவனைப் பெற்ற அந்த வயிற்றைப் பழித்து மனம் நொந்து, அத்தகைய இழிமகனைப் பெற்ற தன் பாழும் வயிற்றைப் பீறி எறிந்தனள் வீரத்தாய். (புறத்திரட்டு 1406)

தமிழ்த் தாய்மார் தம் மக்கள்பால் வீரக்கனலை மூட்டினர். அவர் ஈன்ற காளையரோ அன்னை மணிக்கரத்தாணை எனில் அனலையும் விழுங்க அஞ்சோம் என்று வீறிட்டு எழுந்தனர்.

இத்தகைய வீர மகளிர் பலர் இந் நாட்டில் இருந்ததால் தான் தமிழ் நாட்டை ஆண்ட முடியுடைய வேந்தர் மூவரும் தங்கள் நாட்டில் மாற்றார் காலெடுத்து வைக்காமல் காக்க முடிந்தது. 'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று கூறி அதன்மேல் தங்கள் புலி, வில், மீன் இலச்சினைகளைக் கொண்ட தமிழ்க்கொடிகளைப் பறக்கவிட முடிந்தது, முடியுடை மூவேந் தரால். இத்தகைய தாயரிடைத் தோன்றிய ஒரு தாய் மங்கையருள் மாணிக்கம் எனப் பாராட்டுமாறு செய்த அரும் பெருஞ் செயலினைக் காண்போம்.

இத் தாயின் வீரச் செயலை நமக்கு விளக்கிக் கூறினவர் ஒக்கூர் மாசாத்தியார் என்னும் நல்லிசைப் புலவர் ஆவார். இவர் கடைச் சங்க காலத்தவர். இப் புலவர் பாடியதாக ஒன்பது பாடல்கள் எட்டுத்தொகை நூல்களுள் காணப்படு கின்றன. புறநானூற்றில் உள்ள ஒரு பாட்டில் இவ் வீரத் தாயின் செயலை நேரில் கண்டவாறு புலவர் கூறியுள்ளார்.

இவ் வீரத்தாய் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு மறக்குடி மன்னனின் மனைவி. அக்காலத்தில் தமிழ் நாட்டில் மூவேந் தரேயன்றிக் குறுநில மன்னர் பலரும் இருந்தனர். அவர்களிற் பலர் வீரர்களாகவும், ஒப்பற்ற கொடை வள்ளல்களாகவும் விளங்கினர். மயிலுக்குப் போர்வை யீந்த பேகனும், முல்லைக் கொடிக்குத் தேரைக் கொடுத்த பாரியும் அக் குறு நில மன்னர் குழுவைச் சேர்ந்தவர்களே.

அத்தகைய மன்னர் இனத்தைச் சேர்ந்த ஒருவன் மாசாத்தியாருக்கு நெருங்கிய நண்பன். அடிக்கடி அவனிடம் சென்று பாடிப் பரிசு பெற்று வந்தமையின் அவன் மனைவியை யும் நன்கு அறிந்திருந்தார் புலவர். கணவன் மனைவியாகிய இருவருமாகப் புலவரை வரவேற்று அவர் கூறும் பாடல்களைக் கேட்டுப் பன்முறை மகிழ்ந்துள்ளனர்.

இடையில் சில திங்கள் புலவர் பல ஊர்களுக்குச் சென்று விட்டார். இம் மறக்குல மன்னனைக் காண அவரால் இயல

வில்லே. ஒருநாள் தன் அரிய நண்பனையும், அவன் துணைவியை யும் கண்டு வரவேண்டும் என்னும் ஆர்வம் தூண்டப் பெற்ற புலவர் அவனது ஊரை நோக்கிப் புறப்பட்டார். அவ்வூரின் எல்லையை நெருங்கியபோதே அங்கிருந்த வேற்று மன்னனின் பாடி வீட்டைக் கண்டார்; மாற்றான் ஒருவன் நாட்டாசை கொண்டு தன் நண்பன் மேல் படையெடுத்து வந்துள்ளான் எனும் செய்தியை அறிந்தார். புலவர் வந்த நேரம் செங் கதிரோன் இளங்கதிரை வீசும் காலைப் பொழுதாகும். ஆகவே, அப்பொழுது போர் நடைபெறவில்லை. வீரர்கள் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பதை அவர் கண்டார்.

கடந்த சில நாட்களாக கடும்போர் அவ்விடத்தே நடந்தது என்பதைக் காட்டப் பல குறிகள் காணப்பட்டன. அப் போர் களில் வீரர் சிந்திய செங்குருதியால் நனைந்த நிலம் காலைக் கதிரவனின் பசும்பொற் கதிர் ஒளிபட்டு எங்கும் செம் பவளம் பதித்ததைப் போன்ற காட்சியைத் தந்தது. இக் காட்சிகளைக் கண்டு புலவர் நெஞ்சம் துணுக்குற்றது; தம் அருமை நண்பனுக்கு யாது நேர்ந்ததோ என்று பதைபதைத்தது.

அவர் பலவாறு எண்ணிக் கொண்டே ஊரின் எல்லையைக் கடந்து உள்ளே சென்றார். புலவரைக் கண்ட மக்கள் போரினால் அடைந்த மனச் சோர்வு நீங்கினர்; அவரை அன்புடன் வரவேற்றனர்; புலவரின் பொன் மொழிகளால் அறிவுத் தெளிவு பெற்ற மக்கள் ஆதலின் அவரிடம் அன்போடு அளவளாவினர்; தாங்கள் போரில் அடைந்த வெற்றி தோல்விகளை விளக்கினர். நேற்று நடந்த போரில் தாங்கள் அரும்பெருந் தலைவனை, அஞ்சாத வீரனை, மறவர் குலத்தின் மாணிக்கத்தை இழந்துவிட்ட செய்தியை அவர்கள் புலவரிடம் கூறியபோது எல்லாருடைய கண்களும் கலங்கிக் கண்ணீர் சிந்தின. இச் செய்தி புலவருக்குப் பேரிடிபோல் இருந்தது. உடனே இவர் அரண்மனையை நோக்கி விரைந் தார். தலைவனை இழந்த தம் நண்பனின் மனைவிக்கு ஆறுதல் கூற விரைந்தது அவர் உள்ளம்.

அவ் வில்லம் புலவருக்குப் புதிய இடமன்று. பன்முறை வந்து பழகிய இடமாகும். அவ் வீரன் இல்லாதபோது வரினும்

அவன் இல்லக் கிழத்தி புலவரை முறைப்படி வரவேற்று உபசரித்துப் பன்முறை அனுப்பி யுள்ளாள். ஆகவே, அவள் உறையும் இடத்தை முன்பே அறிந்த புலவர் ஒருவரையும் கேட்காமல் நேரே அவ்விடம் அடைந்தார்; அப்போது அவள் இருந்த நிலை, அவள் செய்துகொண்டிருந்த செயல், இவை யாவும் புலவரைத் திகைத்து நிற்கச் செய்தன. ஒக்கூர் மாசாத்தியர் பதுமைபோல் ஒதுங்கி நின்றார். அங்குக் கண்ட காட்சி அவர் நாவை அடக்கி விட்டது.

வெளியில் முற்றுகை இட்டிருந்த வேந்தன் போர்ப்பறை முழக்கினான். அது பேரிடிபோல் ஒலித்துக் கொண்டிருந்தது. கேட்ட யாவரும் கலங்கி நின்றனர். அம் மறவர் குல வீரனின் மனைவியும் அதைக் கேட்டாள்; ஆனால் அதற்காக அவள் கலங்கவில்லை; தன் செல்வச் சிறுவனை வாரி எடுத்து முத்த மிட்டாள்; தும்பைப் பூவைப் போன்று வெண்மையான ஆடை ஒன்றை எடுத்து விரித்து அச் சிறுவனின் இடுப்பில் இறுகக் கட்டினாள்; விரிந்து கிடந்த தலைமயிருக்கு எண்ணெய் தடவிச் சீவி முடித்தாள்; போருக்குச்செல்லும்போது வீரர்கள் சூடும் வெட்சிப் பூவைச் சூட்டினாள்; கூரிய வாள் ஒன்றைப் பொறுக்கி எடுத்து அவன் கையில் கொடுத்தாள்; பகை யரசனின் போர் முரசொலி எழும் திசையைக் கையால் சுட்டிக் காட்டி, 'மகனே, அங்கே சென்று பொருது வெற்றியுடன் திரும்பி வருக' என்று வாழ்த்தினாள். அவ்வமயத்தில் அவள் முகத்தில் எத்தகைய கவலைக் குறியும் இல்லை. அச்சமோ, இச் சிறுவன் எப்படிப் போர் செய்வான் என்ற ஐயமோ அவளுக்குச் சிறிதும் இல்லை; 'பெருவிருப்போடு செல்க' என விடுத்தாள்.

இதை விழித்த கண் இமையாது கண்டு நின்ற புலவர்க்கு என்ன கூறுவதென்றே புரியவில்லை. அப் புலவர் உள்ளத்தே எண்ணற்ற எண்ணங்கள் தோன்றி மறைந்தன. 'இப் பெண்ணின் தந்தை முன் நடந்த போரில் பெரிய யானையை எதிர்த்துக் கொன்று தானும் உயிர் இழந்தான். நேற்று நடந்த போரில் தன் ஆருயிர்க் கணவனை—கல்லெனத் திரண்ட தோள்களைக் கொண்ட காளைபோன்றானைப் பறிகொடுத்தாள்.

இந் நிகழ்ச்சிகள் போரின் கொடுமையையும் எதிரியின் பெரு வலிமையையும் இவளுக்கு உணர்த்தியுள்ளன. உணர்ந் திருந்தும் தம் மகனை அனுப்பும் இவள் உள்ளம் கல்லோ! இவளுக்கு இருப்பதோ ஒரே ஒரு மகன். அம் மகனையும் போருக்குப் போகுமாறு பணிக்கும் இவள் உள்ள உரம்தான் எத்தகையதோ?' என்று எண்ணி வியந்தார் புலவர்.

அச் செயலைக் கண்ட புலவர் மூதாட்டியார், 'தமிழ் நாட்டு வீரக் குடியில் பிறந்த பெண்ணன்றோ இவள்! அதனால்தான் இத்தகைய துணிவு இவளுக்கு உள்ளது. இத்தகைய தறு கண்மை சான்ற பெண்களை 'மூதின் மகளிர்' என்று பாராட்டு வதன் பொருளை இன்று கண்கூடாகக் கண்டேன். மறங் கடைக் கூட்டிய இக் குடி நிலை மகளிரின் மறப் பண்பை என்னென்று பாராட்டுவது!' என்று தன்னுள்ளே கூறிக் கொண்டார்.

பெற்ற தாய் தன் ஒரே மகனைப் போர்க்களம் செல்லுமாறு ஏவுகிறாள். ஆனால், அதைப் பார்த்துக் கொண்டிருந்த பெண் புலவரால் அக் காட்சியைக் கண்டு அமைதியாக இருக்க இயலவில்லை. அவரது மெல்லிய உள்ளம் உருகிவிட்டது. எப்படியும் இக் கொடுமை தடுக்கப்பட வேண்டும். ஆனால் எப்படித் தடுப்பது என்று தோன்றவில்லை. சிங்கம் போல் சீறிநிற்கும் சிறுவனோ 'செல்லாதே' என்றால் கேட்கும் நிலையில் இல்லை. அவன் அன்னையின் ஆணையை மீறி நடவாத மகன். அத் தாயைப் பார்த்து. 'உன் செயல் கொடியது' என்றால் அவள் சினங்கொள்வாள்.

புலவர் உள்ளத்தே ஓர் எண்ணம் உதித்தது. இவளை இங்ஙனம் செலுத்தத் தூண்டுவது எது? அவள் உள்ள உரம். அவ் வுரம் தொலைந்தால் இவள் அமைதி பெறுவாள்; மகனையும் போருக்கு அனுப்பாள். ஆகவே, அவளையும் குறிப்பிட்டுக் கூறாமல், மகனுக்கும் மாசு உண்டாக்காமல் 'கெடுக சிந்தை' (புறம். 279) என்று கதறிவிட்டார். 'வாழ்க வளர்க' என்றே என்றும் கூறிப் பழகிய அப் புலவர் நாவில் இருந்து அவரையும் அறியாமல் 'கெடுக' என்ற சொல் கிளர்ந்து விட்டது.

அவர் கெடும்படி கூறியது அத் தாயின் சிந்தையை; அதாவது உள்ளத்தை. உள்ளம் என்பது இங்கு உள்ளத்தே தோன்றும் ஊக்கமாகிய பண்பை. ஊக்கத்தை உள்ளம் எனக் குறித்தல் மரபு. வள்ளுவரும் ‘உள்ளமுடைமை உடைமை’ என்ற குறளில் ஊக்கத்தை உள்ளம் என்ற சொல்லால் குறித்து, அவ் வூக்கமுடைமையே உயர்ந்த நிலையான செல்வம் என விளக்கினர். ஆகவே புலவர் வேறு ஒன்றையும் கூருமல் அச் சிந்தை மட்டும் கெடுக என வேண்டினர். புலவர் மொழி பொய்த்தலும் உண்டோ?

இதைக் கேட்ட தாய் திரும்பிப் பார்த்தாள்; தனது மகன் போருக்குப் பறப்படும் இந் நல்ல வேளையில் இவ்வாறு கூறியது யார் என இடிபோல் அவள் நா முழங்கியது; ஆனல் அரை நொடியில் ஒக்கூர் மாசாத்தியாரே இதைக் கூறியது என்று அறிந்தாள். புலவர் அப் பெண்ணின்மீது அருள் பொழியும் பார்வையைச் செலுத்தினர். அப் பார்வை, “தாயே, உன் உள்ள உறுதி மலையினும் வலியது. உன்னை மூதின்மகளிர் எனப் பாராட்டல் மிக மிகப் பொருத்தமானதே. உனக்கு இவனன்றி வேறு குழந்தை இல்லை. எதிர்காலத்தே இந் நாட்டையாள வேறு யார் உளர்? ஆகவே, இந் நாட்டு மக்களுக்காகவாவது உன் உள்ளத்தே சிறிது தளர்ச்சி தோன்றலாகாதா?” என்று கேட்பதுபோல் இருந்தது. மறக் குல மகளின் உள்ளத்தே தோன்றி எழுந்த வீரக்கனல் புலவர் மாசாத்தியாரின் அன்பு வெள்ளத்தால் சிறிது தணிந்தது.

மலை கலங்கினும் நிலை கலங்காத உறுதி சான்ற உள்ளங் கொண்ட இத்தகைய மறக்குல மகளிர் பலர் இந் நாட்டில் வாழ்ந்தனர். அவர்களில் ஒருத்தி மாசாத்தியாரின் மணி வாக்கால் சிறப்புப் பெற்ருள். இவர் ஓர் ஒப்பற்ற வீர மகள் என்பதில் ஐயமும் உளதோ! இத்தகைய வீர மகளிர் வாழ்ந்த நாட்டில் ‘பந்திக்கு முந்தி, படைக்குப் பிந்தி’ என்னும் இழிந்த பழமொழி யன்றே வழங்குகிறது! இத்தகைய தாய்மார் வழியில் தோன்றியவர் என்று கூறும் தகுதியும் இல்லாது அஞ்சி அஞ்சிச் சாகும் கோழைகளை யன்றே இன்று காண்கிறேம்! இவ் விழி நிலை நீங்க இத்தகைய தாய்மாரின்

அருஞ்செயலை அடிக்கடி நினைத்துப் பார்ப்போமாக. அதனால் அவர்களது அச்சம் ஒழிவதாகுக. இவ்வீரமகளிர் உறுதியான உள்ளம் நம் தாய்மார்கட்கும் உண்டாகட்டும். வாழ்க வீரத்தாய்மார்!

### அருஞ்சொற் பொருள்

பெருந்தக்க - மேம்பட்ட பொருள்கள். திண்மை - கலங்காத நிலைமை. வழுவாத - தவறாத. கீழ்கள் - கீழ்மக்கள். ஆசாரம்-ஒழுக்கம். பரவேன் - வணங்கேன், துதியேன். தேரா - ஆராயாத. மறக் கற்பு - வீரக் கற்பு. இலங்கினர்-விளங்கினர். மடவார்-பெண்கள். சளைத்தவர்-சோர்ந்தவர். பொருது - போரிட்டு. உரம் - வலிமை. களிறு - ஆண் யானை. பெயர்தல் - வெற்றி வீரனாகத் திரும்பல். காளை - காளை போன்ற வீரன். பீறி - கிழித்து. கனல் - தீ. நல்லிசை - சிறந்த புகழ். குறுநில மன்னர் - சிற்றரசர். ஆர்வம் - விருப்பம். மணிக்கரம்-அழகிய கை. பாடி வீடு - பாசறை, படைகள் தங்கியுள்ள இடம். துணுக்குற்றது - அச்சம் கொண்டது. தறுகண்மை - அஞ்சாத் தன்மை.

### வினாக்கள்

1. பழந்தமிழ்ப் பெண்களின் கற்பு நெறி, அஞ்சாமை—இவற்றைத் தெரிவிக்க.
2. காவலனைக் கண்ணகி எவ்வாறு கள்வனாக்கினாள்?
3. பொன்முடியார் புகலும் ஒவ்வொருவரின் கடன் யாது?
4. தமிழ்ப் பெண்கள் தம் மக்களை எவ்வாறு வளர்த்தார்கள்?
5. தமிழ்ப் பெண்கள் சிறந்த வீரமகளிர் என்பதை எவற்றால் அறியலாம்?
6. புலவரும் மன்னன் துணைவியும் மேற்கொண்டிருந்த நட்பு உயர்வை விளக்குக.
7. தமிழ்த்தாயின் தனி வீரத்தைச் சான்று ஒன்று தந்து விளக்குக.
8. "கெடுக சிந்தை"—இவ்வாறு கூறியதன் விளைவினை விளக்குக.

# 8. சேக்கிழார்

சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய
முதலியார் அவர்கள், பி. ஏ.

[இக் கட்டுரையாசிரியர் வழக்கறிஞர் பணி புரிந்துகொண்டே தமிழ்ப் பணியும், சைவ சமயப் பணியும் புரிந்தவராவர். பெரிய புராணத்திற்கு மிக விளக்கமானதோர் உரை எழுதியவர். 'சிவக் கவிமணி' என்று சிறப்புப் பெயர் பெற்றுத் திகழ்ந்தார். கேட்பார் தமிழ்ப் பற்றும், சைவப் பற்றும் கொள்ளுமாறு இனிமையாகப் பேசி மகிழ்வித்து வந்த இவர், அண்மையில் மறைந்தார்.]

அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தின் ஆசிரியர் ஆவர். அவர் சரித்திரத்தைப் பற்றி அறிவதற்கு உமாபதி சிவாசாரியார் செய்தருளிய திருத் தொண்டர் புராண வரலாறு மிக உதவி புரிகின்றது. அப் புராணத்தில் அறிந்த வகையில் சேக்கிழார் சுவாமிகள் சரிதச் சுருக்கமாவது :

'சான்றோர் உடைத்து' என்று வியந்து ஓதப் பெற்ற தொண்டை நாட்டினுடைய இருபத்து நான்கு கோட்டங்களில் ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்திலே—குன்றத்தூர் நாட்டிலே—குன்றத்தூரிலே—வேளாளர் மரபிலே சேக்கிழார் என்ற குடி சிறப்பாய் விளங்கியது. அந்தக் குடியின் குலதீபம்போல, அருண்மொழித் தேவர் என்ற பெரியார் அவதரித்தார். அவர் இளமையிலேயே பல கலைகளிலும் வல்லவராய், அறிவின் முதியவராய் விளங்கிய செய்தி கேட்டு அந்நாளில் நாடாண்ட அநபாயச் சோழப் பேரரசர் அவரை வரவழைத்து அவரது மேம்பாட்டைக் கண்டு, அவர்க்கு 'உத்தமச் சோழப் பல்லவர்' என்ற பட்டம் கொடுத்துத் தம்மிடத்தே தலைமை அமைச்சராய் அமர்த்திக் கொண்டார்.

சேக்கிழார் சுவாமிகள் சோழநாட்டில் உள்ள திருநாகேச்சுரம் என்னும் கோவிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தியுடையவராய், அவ்வூரைத் தம் உயிர் உறையும் உறைவிடமாகக் கொண்டு வழிபட்டு வந்தார். அந்த அன்பு மேலீட்டினால் அதற்கு அறிகுறியாகத் தம்து குன்றத்தூரிலே ஒரு கோயிலும், அதைச் சுற்றித் திருமட வளாகமும் அமைத்து, அதற்குத் 'திருநாகேச்சுரம்' என்று

பெயரிட்டார். அமைச்சராய் அரசாங்கம் நடத்தி வருநாளில் அரசர் தமது முன்னிலையில், 'சீவக சிந்தாமணி' என்ற சமண நூலைப் பாராட்டிப் படித்து மகிழ்ந்து வந்ததைக் கண்டார். "இந் நூல் நும்போன்ற அரசன் வரலாறுகும். இதனைவிட்டு இம்மை மறுமைகட்குப் பயன் அளிக்கவல்ல சிவ கதைகள் படிக்கக் கேட்டால் மிக்க நலன் அளிக்கும்" என்று அறிவுறுத்தினர். அரசர் அது கேட்டு வியந்து, "அப்படியாயின், அந்த சிவ கதைகள் யாவை? அவற்றைச் சொல்லுங்கள்; கேட்போம்" என்று கேட்டார். அருண் மொழித்தேவர், "அவைதாம் சிவனடியார்களின் சரிதம் ஆகும். அவ் வடியவர்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத் தொண்டத் தொகையினுள் தொகுத்துத் துதித் தருளினர்; திருநாரையூரில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் அவற்றைத் திருத்தொண்டர் திருவந்தாதியால் வகைப்படுத்தி விரித்தருளி னர்" என்று கூறி அச் சரித்திரங்களைச் சொன்னர்.

அது கேட்ட அரசர் வியந்து, நயந்து, உள்ளம் உருகி, "இச் சரிதங்களை ஒரு காப்பியமாகச் செய்து தருதல் வேண் டும்!' என்று வேண்டினர். அருண்மொழியார் அதற்கு இசைந்து, "இங்குத் தங்கி அக் காரியம் செய்தல் இயலாது. அதன் பொருட்டுத் திருத்தில்லைக்குச் சென்று தங்குதல் வேண்டும்" என்று அரசரிடம் விடைபெற்றுச் சென்றார். அரசர் அவருக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து தந்தார். அருண்மொழித்தேவர் திருத்தில்லையிலேயே சென்று, நடராசப் பெருமானை வணங்கி, "என் உயிர்த் தலைவரே! தேவரீரது அடியார் பெருமை அறிதற்கரியது. அதனை எடுத்துச் சொல்ல அடியேனுக்கு அருள்புரிதல்வேண்டும்" என்று போற்றி நின்றார். அப்போது "உலகெலாம்" என்ற திருவாக்கு அனைவரும் கேட்க வானத்தில் எழுந்தது. அவ்வாறு இறைவர் எடுத்து அருளிய வாக்கினை முதலாக வைத்துக்கொண்டு அருண்மொழித்தேவர் தில்லையில் தங்கிச் சில காலத்தில் இப்புராணத்தை இயற்றி முடித்தார்.

புராணம், இரண்டு காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுக்கப் பெற்று, 4253 செய்யுட்களில் முடிந்தது. புராணம் எப்போது முடியுமென்று ஆவலுடன்

எதிர்பார்த்திருந்த அரசர் அது நிறைவெய்தியதனைக் கேட்டதும் உளம் மிக மகிழ்ந்து தனது சேனை முதலிய ஏவல் செய்பவர்களுடன் சிதம்பரத்துக்கு வந்து சிவ வேடப் பொலிவுடன் விளங்கிய அருண்மொழித் தேவரைக் கண்டு வணங்கினர். தம்மை எதிர்கொண்ட தில்லைவாழ் அந்தணர்கள், மடாதிபதிகள் முதலிய அனைவருடன் அரசர் நடராசரைக் கண்டுகளித்தார். அப்போது, "அரசனே, 'உலகெலாம்' என்று நாம் அடியெடுத்துக் கொடுக்க நமது அன்பன் சேக்கிழான் நமது திருத்தொண்டர் புராணத்தைப் பாடி முடித்திருக்கின்றுன். நீ அதை விரும்பிக் கேட்பாயாக!" என்று அம்பலக் கூத்தர் அருள் வாக்கு வானத்தில் அனைவரும் கேட்க எழுந்தது; இறைவன் திருப்பாதத்து அணிந்த திருச்சிலம்பு ஒலியும் உடனே கேட்டது. அரசரும் தில்லைவாழ் அந்தணர்களும் மகிழ்ந்து அந்தப் புராணத்தை வாசித்துப் பொருள் விரித்து உரைக்குமாறு சேக்கிழாரை வேண்டினர்கள்.

அரசர் பல ஊர்களுக்கும் ஓலை போக்கிப் பல சிற்றரசர்களையும் ஏனைய அன்பர்களையும் அது கேட்க வருமாறு அழைத்து, அனைவருக்கும் உண்டி, உறையுள் முதலான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். தில்லைவாழ் அந்தணர்களுக்கும், மடாதிபதிகளுக்கும் நாள்தோறும் படியமுது ஏற்படுத்தினர். நடராசருக்கு நாள்தோறும் சிறப்புப் பூசை நியமித்தார். சேக்கிழார் ஆயிரக்கால் மண்டபத்திலேயிருந்து சித்திரைத் திங்கள் திருவாதிரையிலே புராணத்தை வாசித்துப் பொருள் விரித்துரைக்கத் தொடங்கி, அடுத்த சித்திரைத் திருவாதிரையிலே நிறைவேற்றி முடித்தார். அரசர் தம்முடைய அவையினரோடு இருந்து கேட்டனர். நிறைவேறினவுடன் நடராசர் திருமுன் அறுகாற் பீடமிட்டு, அதன்மேல் பசும் பட்டும், வெண் பட்டும் இட்டு, அதன்மேல் அந்தப் புராணத்தை வைத்துத் தில்லைவாழ் அந்தணர்கள் சிவ மூல மந்திரத்தாலே பூசித்தார்கள். அதன்பின் பொன் தாம்பாளத்தில் அதனை வைத்து யானைச் சிரத்திலே எழுந்தருளுவித்துச் சேக்கிழாரையும் ஏற்றி, அரசர் தாமும் ஏறிப் பின்பாக இருந்து கொண்டு, தமது இரண்டு கைகளாலும் சாமரைகளை வீசிக் கொண்டு நகர் வலம் செய்வித்து, "இதுவன்றே நான் செய்த தவப் பயன்" என்று மகிழ்ந்தார்.

நகர் வலத்தின் பிறகு, நடராசர் திருமுன் வைத்து அதற்குமுன் இராசராச சோழ தேவர் காலத்தில் நம்பியாண்டார் நம்பிகளால் வகுக்கப் பெற்று இருந்த பதினெரு திரு

முறைகளுடன் அதனைப் பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்த்துச் செப்பேடு செய்து, "சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும்" என்று கோவை செய்து, சேக்கிழார் பெருமானுக்குத் "தொண்டர்சீர் பரவுவார்" என்ற பெயரும் ஞான முடியும் சூட்டி அரசர் வணங்கினர். சேக்கிழார் அதன்பின் திருத்தில்லையில் தங்கிப் பெரிய புராணத்தில் உள்ள அடியவர் கதைகளைச் சிந்தித்து உணர்ந்துகொண்டு, சிவனடியார்களுடன் கூடித் தவம் செய்துகொண்டு இருந்து இறைவன் திருப்பாத நிழலை அடைந்தனர். அரசர் அவரது தம்பியாராகிய பாலறுவாயரைப்பற்றி விசாரிக்க, அவர் தமது பெயராலே குன்றத்தூரிலே "பாலறுவாயர் குளம்" என்ற குளம் உண்டாக்கித் திருநாகேச்சுரத்தில் திருப்பணி செய்து கொண்டு இருந்ததனைக் கேள்வியுற்று, அவரை வரவழைத்துத் தமது அமைச்சராக அமர்த்திக் கொண்டார்; அவருக்குத் 'தொண்டைமான்' என்ற பட்டமும் கொடுத்தார். அவர் தமது ஊரிலே இருந்தபடியே அரசு செய்தமையாலே 'தொண்டை மண்டலம் நின்று காத்த பெருமான்' என்று எங்கும் பெயர் வழங்கிற்று. இதுவே உமாபதி சிவாசாரியார் செய்து தந்தருளியபடி அறியப் பெறும் சேக்கிழாரது புராண வரலாருகும்.

சேக்கிழார் சுவாமிகள் காலத்திற்கு இருநூறு ஆண்டுகளின் பின் வாழ்ந்த சைவ சமய சந்தான குரவர்களில் ஒருவரான உமாபதி சிவாசாரியாரால் இவ் வரலாறு நமக்குக் கிடைத்தது, தமிழும் சைவமும் செய்த பெரும் பேறேயாகும். இச்சரிதம் ஏறக்குறைய முழுதும் நமக்குக் கிடைக்கும் பிற சாதனங்களாலே உறுதி பெறுகின்றது. புலியூர்க் கோட்டமும், குன்றத்தூரும் இன்றைக்கும் அப் பெயராலேயே நிலவுகின்றன. குன்றத்தூருக்கு அப் பெயர் வந்ததற்குக் காரணமாகிய குன்றமும், அதில் விளங்கும் முருகன் ஆலயமும் இன்றும் நாம் சென்று, கண்ணுக்கு இனிய காட்சியாகக் காணப் பொலிகின்றன. குன்றத்தூரிலும் பிற ஊர்களிலும் வேளாளர் மரபில் சேக்கிழார் குடி இப்போதும் இருக்கின்றது. பாலறுவாயர் குளமும் இன்றைக்கும் இருக்கக் காண்கிருேம். ஆனுல், அதை மக்கள் "பல்லவராயர் கேணி" என மருவி வழங்குகிருர்கள். சேக்கிழார் தமது அன்பின் உறைவிடமாய் அமைத்த திருநாகேச்சுரக் கோயிலும் இன்றைக்கும் நாம் கும்பிடக்கூடியதாய் விளங்குகின்றது. இவ்வூரிலே சேக்கிழார் சுவாமிகளுக்கு ஒரு சிறு கோயிலும் இருக்கிறது. அநபாயரின் அரச சபையானது, இப்புராணத்து உரையினைக்கொண்டு

விரும்பும் என்று சேக்கிழார் சுவாமிகள் புராணத்திலே பாயிரத்துள்,

> "மேய விவ்வுரை கொண்டு விரும்புமாஞ்
> சேய வன்திருப் பேரம்ப லஞ்செய்ய
> தூய பொன்னணி சோழன் நீடூழிபார்
> ஆய சீர் அநபாயன் அரசவை"

எனப் பாடியிருக்கின்றமையால், அநபாயர் கேட்க அவர் இதைப் பாடினர் என்பது தேற்றமாம். அநபாயர் காலத்திலே அவர் ஆதரவில் இஃது இயற்றப்பெற்றது என்பதற்கு மேலே குறித்த பாயிரச் செய்யுள் அல்லாமல் இனியும் பற்பல இடங்களில் சுவாமிகள் அநபாயரைச் சுட்டிக் குறித்திருப்பது சான்ருகும். "கொற்றவன் அநபாயன் பொற்குடை நிழல் குளிர்வது" சோழ நாடு என்று நாட்டுப் படலத்தில் 35 ஆம் செய்யுளில் நிகழ்காலத்திற் குறிப்பதால் இப் புராணம் பாடப் பட்ட நாளில் சோழ நாடு அநபாயர் செங்கோலின்கீழ் வாழ்ந்தது என்பது துணிபாம். பெரிய புராணத்திற் பேசப்பெற்ற அடியார் சரிதங்கள் அக் காலத்திலே வழங்கி வந்தன என்றும், அவை தமிழ் மக்களாற் பாராட்டப் பெற்றன என்றும், தமது தக்கயாகப் பரணியிலே சைவப் புலவரான ஒட்டக்கூத்தர், திருஞான சம்பந்தப் பிள்ளையாரது சரிதம் கூறும் வகையில் இருந்து தெரிகின்ருேம். திருத் தில்லையில் இப் புராணம் இயற்றினர் என்பதற்கு வேறு புறச் சான்றுகள் இப்போது கிடைக்கவில்லை. ஆயினும் புராணத்தினுள்ளே எங்கெங்கே தில்லையைப் பற்றிப் பேச நேரிடுகின்றதோ அங்கங்கு எல்லாம் சேக்கிழார் சுவாமிகள் அதனை மிகச் சிறப்பித்து விரிவாகப் பேசி உள்ளதால் அங்கே தங்கி நடராசர் தமக்குச் செய்த பேரருளினலே புராணம் இயற்றினர் என்று உறுதியாய் ஊகிக்கலாம்.

தில்லையைப் பற்றி வரும் நூற்றுக் கணக்கான இடங்களில் எல்லாம் சிறப்பு மொழிகளாகிய அடைமொழிகளும், சொற்ருெடர்களும் தராமல் தனியாகத் 'தில்லை' என்று சேக்கிழார் கூறக் காணவில்லை. 'ஆனதசீர்த்தில்லை', 'வீடருள் தில்லை மல்லலம்பதி', 'தேனரு மலர்ச் சோலைத் திருத்தில்லை' என்றெல்லாம் காண்போம். சேக்கிழார் சுவாமிகள் சோழ நாட்டுத் திருநாகேச்சுரம் என்னும் இடத்தைத் தமது அன்பிற்குரிய இடமாகக் கொண்டார் என்பது பல வகையால் விளங்குகிறது. அவ்விடத்திலே அவர் பல காலம் தங்கினர் என்றும் அத் திருக் கோயிலிலே திருப்பணிகள் செய்தார்

என்றும், தமது அமைச்சர் தொழிலுக்கு ஏற்ற உறைவிடமாக அதை வைத்துக்கொண்டு, அதில் பல காலம் வசித்தார் என்றும் சொல்லுகிறார்கள். இத் திருப்பதியிலே அவரும், அவர் தம்பியாராகிய பாலறுவாயரும், அவரது தாயாராகிய அம்மையாரும் பெரிய திருவுருவங்களாக நிலை பெறுதல் செய்யப் பெற்று இன்றைக்கும் அக் கோயில் தென்புறம் உட்பிராகாரத்தில் வைத்து வழிபடப் பெறுகின்றார்கள். அன்றியும் திருநாகேச்சுரத்திலே வழிபட்டு, சுவாமிகளின் தாயார் இக் குழந்தைகளைப் பெற்றனர் எனவும் ஊகிக்க இடம் இருக்கிறது.

"மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி
நாளும் பரவுவார் பிணிதீர்க்கும் நலம்போற்றி"

என்ற சேக்கிழாரது திருப்பாட்டிலே திருஞான சம்பந்த மூர்த்திகளின் திருப்பதிகத்தின் உட்குறிப்பும் சுவாமிகளின் சரிதக் குறிப்பும் ஊகித்துச் சிந்திக்கத் தக்கனவாம்.

### அருஞ்சொற் பொருள்

விதந்து - சிறப்பித்து. ஓதப் பெற்ற - சொல்லப் பெற்ற. மேம்பாடு - மேன்மை, சிறப்பு. இம்மை - இப் பிறப்பு. மறுமை - மறு பிறப்பு. நயந்து - விரும்பி. புதுமை - அதிசயம். தில்லை - சிதம்பரம். களித்தார் - மகிழ்ந்தார். உறையுள் - இருப்பிடம். சிரம் - தலை. மருவி-மாற்றி. ஊகிக்கலாம்-ஆராய்ந்தறியலாம். ஆறாத-குறையாத. மாநாகம் - பெரிய பாம்பு. பக்தி - அன்பு. வளாகம்-வளைந்த இடம்.

### வினாக்கள்

1. சேக்கிழாருக்குப் பெற்றோர் சூட்டிய பெயரும் அநபாயன் அளித்த பட்டமும் யாவை?
2. சேக்கிழார் பெரிய புராணம் பாடக் காரணம் யாது?
3. பெரிய புராணத்திற்கு முதல் நூல்கள் எவை?
4. பெரிய புராணத்தின் முதற் சீர் எது? அதை முதலாகக் கொண்டு தொடங்கக் காரணம் யாது?
5. பெரிய புராணம் எத்தகைய சிறப்புடன் அரங்கேற்றப் பட்டது?
6. 'இதுவன்றோ செய்த தவப் பயன்'—இடஞ்சுட்டி விளக்குக.
7. சேக்கிழார் வரலாற்றை நாம் அறியத் துணை செய்வன யாவை?
8. அநபாயன் கேட்கச் சேக்கிழார் புராணம் பாடினார் என்பதற்கு ஆதாரம் யாது?
9. தில்லையைச் சேக்கிழார் சிறந்த இடமாக மதித்தார் என்பதை விளக்க ஆசிரியர் தரும் சான்றுகள் யாவை?
10. 'தொண்டை மண்டலம் நின்று காத்த பெருமான்' யார்? அவருக்கு இப் பெயர் வரக் காரணம் யாது?

# 9. தொழிற் கல்வி

[உரையாடல்]

வித்துவான் எஸ். ஆறுமுக முதலியார் அவர்கள்
எம். ஏ., பி. ஓ. எல்,, எல். டி.

*[இக் கட்டுரையாசிரியர் மதுரையைச் சேர்ந்த பழனியம்பதியில் உள்ள கீழ்த்திசைக் கல்லூரி முதல்வராவர். சிறந்த கட்டுரைகள் எழுதும் வன்மையுடையார். தமிழினிடத்தும் தமிழரிடத்தும் அளவிலா அன்புடையார். தமிழர்தம் முன்னேற்றத்திற்குத் தக்க வகையில் உழைப்பவர். இக் கட்டுரை இவர் எழுதியுள்ள ''செந்தமிழ்க் கட்டுரை'' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.]*

*(**கண்ணன்:** தொழிற்கல்வி கட்டாயப் பாடம் தேவையில்லை என்பவன்; கமலத்திற்குத் தம்பி.*

*கமலம்: கட்டாயப் பாடம் தேவை என்பவள்; கண்ணனுக்குத் தமக்கை.)*

**கண்ணன்:** அக்கா, எங்கள் பள்ளியில் கைத்தொழிற் கல்வியை விருப்ப பாடமாக வைத்துள்ளனர்.

**கமலம்:** அப்படியா? அது தவறு.

**கண்ணன்:** தவறு? விருப்ப பாடமாக இருப்பதுதான் நல்லது. விருப்பம் உள்ளவர் தொழிற் கல்வி பெறலாம்; விருப்பம் இல்லாதவர் வேறு பாடங்களைப் படிக்கலாம் என்று இருத்தலே நல்ல முறை என்று பலரும் பேசுகின்றனரே!

**கமலம்:** தம்பி, அஃது ஒரு வகையில் பொருத்தமான வாதம்; முற்றும் சரியன்று. தொழிற் கல்வி கற்பிப்பதன் நோக்கம், தொழில் இன்னது என்பதை அனைவரும் அறிந்திருத்தல் நல்லது என்பதே. வெறும் புத்தகப் படிப்பேதான் இதுவரை எல்லாப் பள்ளிகளிலும் இருந்துவந்தது. அதனால் நாடு அடைந்த பலன் யாது? படித்தவர் தொகை பெருகிற்று; ஆனால், பிழைக்க வழி தெரிந்தவர் தொகை பெருகவில்லை. 'பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது' என்பதற்கு ஏற்ப, ஏட்டுக் கல்வி எல்லோருக்கும் பிழைப்புக்கு வழி காட்டவில்லை. அதனால், வேலையில்லாதவர் தொகை பெருகியது. கணக்கற்ற குடும்பங்கள் வறுமைப்படலாயின. ஒரு சமுதாயத்தின் இளங்

கொழுந்துகள்—எதிர் காலத்தில் இங்நாட்டின் குடிமக்களாக இருப்பவர் - இவ்வாறு வறுமைப்படின், நாடு எவ்வாறு உயர்வு பெறக்கூடும்? பதினுன்காண்டுகள் படித்துப் பி. ஏ. பட்டம் பெற்றும் அப் படிப்பு, பிழைப்புக்கு வழிகாட்டவில்லையாயின், அப் படிப்பால் பயன் யாது? இதனை நன்கு ஆராய்ந்தே காந்தியடிகள், கல்வித் திட்டத்தையே மாற்றியமைக்க வேண்டும் என்று திட்டமிட்டார். ஏட்டுக் கல்வியும் கைத் தொழிற் கல்வியும் கலந்து புகட்டப்படின், பள்ளியையோ, கல்லூரியையோ விட்டு வெளிவரும் பிள்ளைகள், வேலை கிடைக்கவில்லை ஆயின், தொழில் செய்தேனும் பிழைக்க வழியுண்டு.

**கண்ணன் :** நீ கூறுவது சரிதான். ஆனுல், கட்டாய தொழிற் கல்வி வேண்டுவதில்லையே !

**கமலம் :** கண்ணு, நீ, ‘ கைத்தொழிற் கல்வி நமக்குத் தேவை இல்லை ; நாம் அப்பாவைப் போல வேலை பார்க்கலாம் ’ என்று நினைத்து உன் விருப்பம்போல் வேறு பாடத்தைப் படிப்பதாகக் கொள்வோம். நீ பி. ஏ. பட்டம் பெற்ற உடனே வேலை கிடைக்கவில்லை. அப்பொழுது நீ என்ன செய்வாய்? அதே சமயத்தில் தொழிற் கல்வியிற் பயிற்சி பெற்ற உன் வகுப்பு மாணவன் வேலையைப்பற்றிக் கவலைப்படாமல், தான் கற்ற தொழிலைச் செய்ய முனைவான் ; பொருள் ஈட்டுவான். ‘ ஐயோ, நாம் அப்பொழுது தொழிற் கல்வியிற் பயிற்சிபெறத் தவறினேமே ! இப்பொழுது வேலையின்றித் தவிக்கிருேமே !’ என்று நீ கவலைப்பட நேரும். தொழிற் கல்வி கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படின், எல்லோரும் நலம் பெறுவர் அல்லவா ? கண்ணு, இதனை நன்கு எண்ணிப் பார்.

**கண்ணன் :** அக்கா, நீ சொல்வது சிறந்த கருத்து எனினும், பட்டம் பெற்ற பிறகு எல்லோருமே வேலையின்றித் தவிப்பார்கள் என்று கூறமுடியுமா ? அதைக் கருதித் தொழிற் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டுமா ?

**கமலம் :** தம்பீ, நான் கூறுவது அது கருதி மட்டுமன்று. ஒவ்வொரு மனிதனும் ஒரு தொழிலிலே அறிவு படைத்த

வனுதல் வேண்டும். வேலை கிடைக்கவில்லையாயினும், கிடைத்த வேலை நிலைக்கவில்லையாயினும், வயிற்றுப் பிழைப்பு நடைபெற வேண்டுமே! அதற்கென்ன செய்வது? மேலும் ஒரு தொழிலிற் பயிற்சி பெறுதல்—ஒன்றில் திறமை பெற்றிருத்தல் — கையிருப்புப் போன்றதன்றோ? அக் கையிருப்பு வேலை உன்னை அடிமைத் தனத்திலிருந்து நீக்கும்; உரிமை மனிதனுக்கும்; ஏறுபோல் பீடுநடை கொள்ளச் செய்யும்; மானவுணர்ச்சியைக் கொல்லாமற் காக்கும். வேலை செய்துகொண்டே, நீ கற்ற தொழிலையும் ஓய்வு நேரத்தில் செய்து வருமானத்தைப் பெருக்கலாம். இத்தகைய பல நன்மைகளைச் செய்யும் தொழிற் கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப் படல் வேண்டும் என்பது என் கருத்து. கண்ணு! படிக்கும் பெண்களை எடுத்துக் கொள். அவர்கள் திருமணம் செய்து கொண்டு கணவருடன் வாழவேண்டுபவர்கள். கணவன் ஏழை; வேலை செய்கிறன். அவன் திடீரென்று இறந்துவிடுகிறன். அப்பொழுது அவன் மனைவியின் கதி என்னவாகும்? அவள் ஏட்டுக் கல்வி கற்றவள்; அவளுக்குத் திடீரென்று வேலை கிடைக்குமா? வேலை கிடைக்கும்வரை அவள் என்ன செய்வாள்? அவள் பள்ளியில் ஏதேனும் ஒரு தொழிற் பயிற்சி பெற்றிருப்பின், எளிதில் அத் தொழில் செய்ய முற்படுவாள் அல்லவா? அத் தொழில் அவளை ஒருவாறு காக்கக்கூடும் அல்லவா? நம் நாட்டில் பின்னல், நூல் நூற்றல், கைத்தறியில் நெய்தல், கூடை முடைதல், பூமாலை கட்டுதல், சமக்காளம் நெய்தல், தையல் வேலை, நெட்டி வேலை, லேஸ் பின்னுதல், களிமண் வேலை முதலிய பல சிறிய கைத்தொழில்களைச் செய்து கணக்கற்ற பெண்கள் பிழைக்கிறார்கள் என்பதை நீ உணரவேண்டும். இங்ஙனம் ஆடவரை நோக்கினும், பெண்களை நோக்கினும் தொழிற் கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப்படவேண்டுவது என்பதில் ஐயமே உண்டாகாது.

**கண்ணன்:** அக்கா, நீ கூறியன யாவும் உண்மையே. ஆனல், உயர் அலுவலர் மகன் தச்சு வேலை, ஆடை நெய்தல் முதலிய வேலைகள் செய்ய விரும்புவானு? விரும்பினும், அவனுல் எளிதில் கற்க முடியுமா? தச்சன் மகனுக்குத் தச்சுவேலை எளிதாக விளங்கும் அல்லவா?

கமலம் : தம்பீ, நீ நினைப்பது சரியன்று. அரசியல் அலுவல் போன்றவை தொழிலைப் போல உரிமை உடையவை அல்ல. அரசியல் அலுவல் வாழ்வு அடிமை வாழ்வு; தொழில் உரிமை வாழ்வைத் தரும். அரசியல் அலுவல் செல்வ வளத்தைத் தராது. தொழில், செல்வ வளத்தைத் தரும். நாட்டில் செல்வராயிருப்பவர் தொழில் செய்பவரே தவிர அலுவலர் அல்லர். ஆகையால், பயிர்த்தொழில், கைத்தொழில் என்பவை பிற அலுவல்களைவிடப் பன்மடங்கு சிறந்தவை.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்னும் தமிழ் மறையை எண்ணிப் பார். இத்தகைய உயர்ச்சியைத் தரும் தொழிற் கல்வியை அனைவரும் கற்க வேண்டும். இது அனைவர்க்கும் எய்ப்பினில் வைப்புப் போன்றது; உற்றுழி உதவி புரிவது.

மேலும் இன்ன தொழிலை இன்னவர்தாம் செய்ய வேண்டும் என்னும் வரையறை இருத்தல் முறையன்று. சலவைத் தொழிலாளி மகன் சலவைத் தொழிலாளியாகவே இருத்தல் வேண்டுமா? அங்ஙனம் இருப்பின், அச் சமூகம் உயர்நிலை அடைவது எப்பொழுது இயலும்? மேலும் ஒரே மரபினரிடம் ஒரு தொழிலை ஒப்படைத்தல் அத் தொழில் வளர்ச்சியைக் கெடுப்பதாகும். தொழிலாளி மகன் படித்து அரசியல் அலுவல் செய்யலாகாதா? இப்பொழுது சிலர் அரசியல் அலுவல் செய்து கொண்டிருக்கின்றனரே. தொழிலைப் பரம்பரை உரிமையாகக் கொண்டதாற்றான் உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இல்லாத சாதிகள் நம் நாட்டில் மட்டும் ஏற்பட்டு வேரூன்றி, இன்று சமுதாய வாழ்க்கையின் அடிப்படையிலேயே அமைதியின்மையை உண்டாக்கிவிட்டது. அதனாற்றான், காந்தியடிகள் போன்றோர் 'தொழில்களை எல்லோருக்கும் பொதுவாக்க வேண்டும்' என்பதை வற்புறுத்தினர்; இன்றும் அறிஞர் பலர் வற்புறுத்தி வருகின்றனர். இந்த நாடு முன்னேற வேண்டுமாயின்—வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டுமாயின்—எல்லோரும் பிழைப்புக்கு வழிகாண வேண்டுமாயின்—எல்லோரும் எவ்வித வேறுபாடும் இன்றி

அவரவர்க்கு விருப்பமான ஒரு கைத்தொழிலை நன்கு கற்பது தான் சிறந்த வழியாகும். ஆகவே, பள்ளிகளில் எல்லோரும் கட்டாயமாகத் தொழிற் கல்வியிற் பயிற்சி பெறும் திட்டமே நமது நாட்டுக்கு ஏற்றது.

**கண்ணன் :** அக்கா, எனக்கு இப்பொழுதுதான் உண்மை விளங்குகிறது. நான் தொழிற் கல்வியிற் சிறப்புறப் பயிற்சி பெறுவேன்.

### அருஞ்சொற் பொருள்

தொழிற் கல்வி - ஏதேனும் ஒரு தொழிலைக் கற்பிக்கும் கல்வி. விருப்ப பாடம் - ஏதேனும் ஒரு பாடத்தைச் சிறப்பாகக் கற்றல். புத்தகப் படிப்பு - ஏட்டுப் படிப்பு. இளங்கொழுந்து - குழந்தை. கையிருப்பு - கையிலுள்ள பொருள். ஏறுபோல் - சிங்கம்போல். பீடு - பெருமை. கதி - நிலை. அலுவல் - தொழில், வேலை. தமிழ் மறை - திருக்குறள். எய்ப்பு - துன்பம். வைப்பு - சேமிப்புச் செல்வம். உரிமை - சுதந்தரம். உற்றுழி - (துன்பம்) ஏற்பட்டபோது, (வேண்டும் போது). வரையறை - அளவு, எல்லை. மரபு - குலம்.

### வினாக்கள்

1. வெறும் புத்தகக் கல்வியால் விளைந்த பயன் யாது?
2. காந்தியடிகள் கல்வித் திட்டத்தை மாற்ற வேண்டும் என்று திட்டமிட்டதேன்?
3. ஆடவர் தொழிற் கல்வியைக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்பதற்குக் கமலம் கூறிய காரணங்கள் யாவை?
4. பெண்டிர்க்குத் தொழிற் கல்வி தேவை என்பதை விளக்குக.
5. பெண்கள் கற்றுக் கொள்வதற்குரிய வேலைகள் யாவை?
6. அரசியல் அலுவல்—தொழில் இவற்றின் உயர்வு தாழ்வுகள் பற்றிக் கமலம் கூறியன யாவை?
7. "தொழிலாளி மகனுக்கு மட்டும் தொழில் கல்வி கற்பித் தால்போதும்" என்ற கருத்தைக் கமலம் எவ்வாறு மறுத் துரைக்கின்றாள்?

# 10. பள்ளரும் பள்ளியரும்

சொல்லின் செல்வர் டாக்டர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை,
பி. ஏ., பி. எல்.

*[இக் கட்டுரையாசிரியர் தமிழ்த்தாயின் தவப் புதல்வர்களில் தலைசிறந்தவராவர். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத்தலைவராக அருந் தொண்டு ஆற்றி வந்தார். தமிழ் மணங் கமழ எதுகை மோனைகள் அமையப் பேசுவதிலும், எழுதுவதிலும் வல்லவர். சென்னைப் பல்கலைக் கழக நூற்றுண்டு விழாவில் 'டாக்டர்' பட்டம் பெற்ற சிறப்புடையராவர். அண்மையில் மறைந்தவர்.]*

வேளாண்மை என்னும் விழுமிய தொழிலில் தலைசிறந்த நாடு தமிழ் நாடாகும். வேளாளர் அணி வயலில் நாற்றுமுடி தழைக்குமாயின் நாடாளும் மன்னரது மணிமுடி தழைக்கு மென்று வேளாண்மையின் பெருமையைப் புகழ்ந்த நாடு தமிழ் நாடாகும். இன்னும் பாராளும் வேந்தரது செங்கோலை நடத்தும் கோல் வேளாளர் ஏரடிக்கும் சிறு கோலே என்று அறிந்து போற்றிய நாடு தமிழ் நாடேயாகும். நன்செய் நிலத்தைப் பண்படுத்திப் பருவத்தில் நீர் பாய்ச்சிப் பயிர் செய்யும் பணியாளர் பள்ளர் என்றும், மள்ளரென்றும் தென்னுட்டில் அழைக்கப்படுவர். வேளாண்மைக்கு மழை யின்றி இல்லையாதலின் மழைபொழியும் கார்மேகத்தைக் காணும்பொழுது அன்னூர் ஆடிப்பாடி அகங் களிப்பர். விண்ணிலே உலாவும் வெண்ணிற மேகம் நீராவியை ஏற்றுக் கருநிறமுற்று மரங்களடர்ந்த மலைகளைச் சார்ந்து மழை பொழியும் தன்மையை மள்ளர்கள் நன்கறிவார்கள்; வானத்தில் மழைக் குறிகள் தோன்றும்பொழுது ஆற்றில் வெள்ளம் பெருகி வருமென்று அறிந்து துள்ளி மகிழ்வார்கள்.

'' ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுது
நேற்று மின்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குது—கேணி
நீர்ப்படு சொரித்தவளை ஆர்ப்பரிக்குது
சேற்று நண்டு சேற்றறைக் கிள்ளி ஏற்றடைக்குது—மழை
தேடியொரு கோடிவானம் பாடியாடுது
போற்றுதிரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணை—சேரிப்
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக்கொள்ளுமே. ''

'மேற்றிசையிலும் கீழ்த் திசையிலும் மின்னுகின்றது. நேற்றும் இன்றும் காற்றுச் சுழன்று வீசுகின்றது. கேணியிலுள்ள சொரித் தவளை கத்துகின்றது. சேற்றில் வாழும் நண்டு வளையின் வாயிலை ஏற்றடைக்கின்றது. வானம்பாடிப் பறவை வட்டமிட்டு ஆடுகின்றது. ஆதலால், இன்று மலையில் மழை பொழிந்து நாளை ஆற்றில் வெள்ளம் வரும்' என்று பள்ளர்கள் அறிந்து மனங் களிக்கின்றார்கள். அவ்வண்ணமே தென் மலையில் மழை பெய்து பொருனை யாற்றிலும் சித்திரா நதியிலும் வெள்ளம் பொங்கிப் பெருகிவருகின்றது. காலையில் ஆற்றை நோக்கி விரைந்து சென்ற பள்ளர்கள், இரு கரையும் பொழிந்துவரும் புதுப்புனலின் அழகினைக் கண்டு மன மகிழ்ந்து சேரிப் பள்ளியரைக் கூவியழைத்து வெள்ளத்தின் பெருமையை வியந்துரைக்கின்றார்கள்.

பொதிய மலையிற் பிறக்கும் பொருனையாறும், திருக் குற்றால மலையிற் பிறக்கும் சித்திரா நதியும், சங்கரன் கோவிலுக்கருகே தோன்றும் செண்பகக் கோதை யாறும் (உப்போடை) கலந்து என்று கூடும் இடத்திலமர்ந்த சிற்றூர் முக்கூடல் என்று பெயர் பெறுவதாகும். பெரியாற்றிலும் சிற்றாற்றிலும் பெருகிவரும் வெள்ளம் முக்கூடலிற் கலந்து கூடும் காட்சியை,

''குற்றாலத் திரிகூட மால்வரை உற்றே மேகம் பொழிந்தநீர்
கூடிப்பொருனை நாடித் திருமுக் கூடற்பதியை வலங்கொண்டே
வற்றா மடுவில் பரவை குரவை வாளைகோளை தேளிமீன்
மயிந்தி உளுவை பயிந்திகூளி மணலி யாரு லோருமீன்
பற்றா அசரை மசரை கெளிறு பருவராலும் அணையிலே
பாயக் காலில் பாயக் குளத்தில் பாயவயலிற் பாயவே
சிற்றா றென்பது பெற்றா லுமொரு சிறிய வர்மனப் பெருமைபோல்
சித்திராநதி பெருகிவார சித்திரம் பாரும் பள்ளியரே''

என்று பள்ளர்கள் வியந்துரைக்கின்றார்கள். சிற்றாறென்னும் பெயரமைந்த சித்திரா நதியில் பெருகிவரும் புனப்புனல், பெரியாறென்னும் பொருனை நதியோடு கலக்கு மிடத்தில் ஆற்று மீன்கள் கரையிலே துள்ளி விழுந்து, மணலிற்புரண்டு மீண்டும் நீரிற் பாய்ந்து விளையாடுகின்றன. வாளையும் வராலும், கெண்டையும் கெளிறும், பரவையும் குரவையும்

வெள்ளத்தில் புரண்டு களிக்கின்றன. இத்தகைய ஆற்று நீர் கால்வழிப் போந்து குளத்தில் நிறைந்து வயலிற் பாய் கின்றது. பள்ளர்கள் நல்ல நாளும் பொழுதும் பார்த்து ஏர் பூட்டிப் பண்ணை நிலத்தை உழுது பண்படுத்துகின்றார்கள்.

"உழுத உழவைக் கண்டு களித்தான்—பள்ளர்
உள்ள பேரை எல்லாம் விளித்தான்
தொழுது தெய்வக்கடன் கழித்தான்—பள்ளன்
தொளியில் விதைக ளெல்லாம் தெளித்தான்"

என்று முக்கூடற் பள்ளுக் கவிஞர் பள்ளன் மணியைப் பாங் குற எழுதிப் போந்தார். பண்ணை நிலத்தை உழவர் பண்புற உழுத பான்மை கண்டு பள்ளன் மனமகிழ்கின்றான்; செவ்வை யாக உழுத உழவரை அருமையாக அழைக்கின்றான்; பயிர் செழித்தோங்குமாறு பரமனைத் தொழுகின்றான்; தொளியாகிய சேற்றில் விதையைத் தெளிக்கின்றான். இவ்வாறு பண்ணை வயலிற் பணி செய்து பள்ளன் சேரிக்குச் செல்கின்றான். சில நாள் சென்ற பின்பு விதைத்த வயலைச் சுற்றிப் பார்க்க வரு கின்றான்; வயலெங்கும் நெல் முளை கிளம்பி யிருக்கக் கண்டு மனங் களிக்கின்றான்.

"முளைத்த முளைக்குத் தண்ணீரடைத்தான்—கொல்லை
முழுதும் மறுநாள் வெட்டி விடுத்தான்
வளைத்து வேலிசூழ நட்டான்—நாற்று
வளர நாளும்எரு விட்டான்"

என்று கவிஞர் கூறுமாறு பள்ளன் முளைத்த முளைக்குத் தண்ணீரடைக்கின்றான். நீர் கட்டி நின்று முளை அழுகாத வாறு அதிக நீரை வெட்டி வடிக்கின்றான். வளரும் முளையை விலங்குகள் மிதித்து வருத்தாவண்ணம் நாற்புறமும் வேலி யடைக்கின்றான். நாற்று நன்றாக வளருமாறு நாள்தோறும் எரு விடுகின்றான். இவ்வாறு கண்ணுங்கருத்துமாய்ப் பள்ளன் பார்த்து வளர்க்கும் பயிர் நாளுக்குநாள் உயர்ந் தெழுந்து தழைக்கின்றது. ஏராலே சேறாக்கி, எருவாலே உருவாக்கிய செம்மை கண்டு பள்ளன் இன்புறுகின்றான். பசுமை நிறம் வாய்ந்த பயிர் முகங் கண்டு மனங் களிக்கின்றான்.

"வளர்ந்த நாற்றுமுகங் கண்டான்...........
..................................

அளந்திடா மகிழ்ச்சி கொண்டான் பண்ணை
ஆண்டவர்க்குச் செய்தி விண்டான்.''

நாற்று முகங் கண்டு நயப்புற்ற பள்ளன் சேரிப் பள்ளருடன் சேர்ந்து பாடி மகிழ்கின்றான். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நாற்று வளரும் செய்தியைப் பண்ணையார்க்குத் தெரிவிக்கின்றான்.

இவ்வாறு செழித்து வளர்ந்த நாற்றைப் பருவத்தில் பறித்துப் பண்படுத்தப்பட்ட வயல்களில் பதிப்பது வழக்கம். நடுகை தொடங்குமுன்னே பள்ளியர்கள் முக்கூடல் அழகர் பதத்தை வந்தித்துத் துதித்து, நாற்று முடியை எடுத்து நெற்றியில் வைத்து, நான்கு திசையும் நோக்கி வணங்கிக் கூட்டமாய் நின்று குரவையிட்டுப் பயிர் நெருங்காமலும் கலந்து போகாமலும் நடுகின்றார்கள்.

''படைகொண்டே வருகரனையும்—பொரு
விடையும் சேர்திரி சிரனையும்
பண்டுமுடித்த கணையினர்—குகன்
கண்டு பிடித்த துணையினர்
குடைகுன்றுப் பசுக்கிடை நின்றார்—முக்
கூடல் அழகர் வயலுள்ளே''

அங்குமிங்கும் அசைந்து பள்ளியர் நாற்றைப் பதிக்கும் பான்மை அழகு வாய்ந்ததாகும். கானகத்தில் கடும்படை கொண்டு எதிர்த்த கரனையும், ஏறுபோல் எழுந்த திரிசிரனையும், வில்லம்பால் அழித்த அழகர் ஆழநீர்க் கங்கையில் ஓடஞ் செலுத்திய ஏழை வேடனை ஏற்று, 'அருமையில் எளிய அழகி'னைக் காட்டிய கதையையும், கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்துக் கோவலரைக் காத்த முறையையும் நாவாரப் பாடி நாற்று முடியைப் பள்ளியர் நடுகின்றார்கள். இன்னும்,

''கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்
கஞ்சனார்க் கொரு நஞ்சனார்
கடையும் அமுதம் உடையுந் திரையில்
காட்டி அண்டருக் கூட்டினார்
அடிக்குள் அடங்கும் படிக்கு முதல்வர்
அழகர் முக்கூடல் வயலுளே.''

பள்ளியர் நாற்றை நட்டுக் கரையேறுகின்றார்கள்.

முக்கூடற் பதியில் வாழையடி வாழையெனப் பழங் குடியில் வந்த வடிவழகக் குடும்பனுக்கு வாய்த்த பள்ளியர் இருவர். மூத்த பள்ளி முக்கூடலாள்; இளையபள்ளி மருதூ ராள். முன்னவள் வைணவப் பள்ளி; பின்னவள் சைவப் பள்ளி. நடுகைக்காலத்திற்கும் அறுவடைக் காலத்திற்கும் இடைப்பட்ட திங்களில் இரு பள்ளியரும் இகலிப் பேசுவது வழக்கம். மாமன் மகள் என்னும் முறைபற்றி அழகன் மணந்த மூத்த பள்ளி ஒட்டுத் தாலி கட்டிய இளையாளை நோக்கி,

"வழக்கிட்டு வந்தேனே மருதூர்ப் பள்ளி—பள்ளன்
மாமன்மகள் என்றென்னை மறித்துக் கொண்டான்"

என்று பெருமை பேசினாள். அதற்கு மாற்றம் உரைக்கப் போந்த மருதூர்ப் பள்ளி,

"உழக்கில் கிழக்கு மேற்கோ முக்கூடற்பள்ளி—மறித்து
உன்னைக்கொண்டான் என்னைக் கண்டென் ஊரிலே வந்தான்"

என்று அழகக் குடும்பன் வலிய வந்து தன்னை மணந்த மாண் பினை எடுத்துரைத்தாள். இவ்வாறு எழுந்த பூசல் இருவரும் வழிபடும் இறைவர்மீது பாய்ந்தது. கூடலழகரைக் கும்பிடும் மூத்த பள்ளியும், மருதூர் ஈசனை வழிபடும் இளைய பள்ளியும் ஒருவரையொருவர் ஏசும் முறை இன்பம் விளைப்பதாகும். செஞ்சடை வானவன் நஞ்சுண்டு பிழைத்ததும், மாயவன் மண் பிசைந்துண்டதும் பள்ளியர் சண்டையில் வெளிப்பட்டது.

"நாட்டுக்குள் இருந்துபசிக் காற்றமாட்டாமல்—வாரி
நஞ்சையெல்லாம் உண்டான் உங்கள் நாதனல்லோடி"

என்று முக்கூடற்பள்ளி பழித்துரைக்கக் கேட்டு முனிவுற்ற மருதூர்ச் சைவப்பள்ளி,

"மாட்டுப்பிற கேதிரிந்து சோற்றுக் கில்லாமல்—வேறு
மண்ணையுண்டான் உங்கள்கடல் வண்ண னல்லோடி"

என்று மாயவனை இழித்துரைத்தாள். இன்னும் அவ்விறைவர் இருவரும் ஏற்றமின்றித் திரிந்த எளிமையறிந்து பள்ளியர் இருவரும் ஏளனம் செய்யலுற்றார்.

"ஏறவொரு வாகனம் தானுமில்லாமல்—மாட்டில்
ஏறித்திரிந் தான்உங்கள் ஈசனல்லோடி"

என்று நரை வெள்ளே றூர்ந்த நாதனை மூத்தவள் பழித்துரைக்க,

> "வீறுசொன்ன தென்னமாடு தானுமில்லாமல்—பட்சி
> மீதிலேறித் திரிந்தானுங்கள் மாயனல்லோடி."

என்று பருந்திலேறிப் பறந்த திருமாலை இளையவள் பரிகசித்தாள். இவ்வாறு அரியையும் அரனையும் வரம்பின்றி ஏசிய பள்ளியரின் பிணக் கறுத்து அழகக் குடும்பன் அரியும் சிவனும் ஒன்றென்னும் உண்மையை விளக்கிச் சேரியில் அமைதியை நிலைநிறுத்தினன்.

### அருஞ்சொற் பொருள்

வேளாண்மை - உழவுத் தொழில். ஏற்றடைத்தல் - வளையின் வாயை மூடுதல். தென் மலை - பொதியமலை. பொருனை ஆறு - தாமிர வருணி ஆறு. மால்வரை - பெரிய மலை. பரவை முதல் பருவரால் வரை கூறப் பெற்றவை மீன் வகைகள். தொளி - சேருக்கிய வயல். பாங்குற - அழகாக. பயிர் முகம் - பயிரின் தோற்றம். வந்தித்து - வணங்கி. குரவை - கைகோத்தாடும் ஒருவகைக் கூத்து. கரன், திரிசிரன் - அரக்கர்கள்; தண்டகாரணியத்தில் இராமனுல் கொல்லப்பெற்றவர். விடை - எருது. குன்று - கோவர்த்தன மலை. கஞ்சனுர் - கம்சன். வாழையடி வாழையென - வாழையின் கீழ் வாழையைப் போல (பரம்பரையாக). இகலி - மாறுபட்டு, சண்டையிட்டு. ஒட்டுத்தாலி - இரகசியமாகக் கட்டிய தாலி. மறித்துக் கொண்டான் - தடுத்து மணந்து கொண்டான். பூசல் - சண்டை. ஏற்றம் - பெருமை. வீறு - பெருமை.

### வினுக்கள்

1. உழவுத் தொழிலின் பெருமையைத் தமிழ்நாடு எங்ஙனம் போற்றியுள்ளது?
2. மழை வருமுன் தோன்றும் குறிகள் யாவை?
3. ஆற்றில் புதுப் புனல் பெருகிவரும் காட்சியைக் கண்டு பள்ளர் வியந்து கூறியன யாவை?
4. பள்ளர் உழுது நாற்று நட்டுப் பயிர் செய்த வகையை முக்கூடற் பள்ளுக் கவிஞர் எங்ஙனம் வருணித்துள்ளார்?
5. முக்கூடல் அழகரின் சிறப்புக்கள் எங்ஙனம் கூறப்பட்டுள்ளன?
6. பள்ளியர் இருவர் யாவர்? அவர்கட்குள் நடந்த உரையாடலைத் தொகுத்து வரைக. (20 வரிகள்)
7. அழகக் குடும்பன் பள்ளியரைச் சமாதானப்படுத்தியது எங்ஙனம்?

# 11. பொன்னனைய காந்தியண்ணல்

புலவர் அரசு அவர்கள்

*[இக் கட்டுரையாசிரியர் சென்னையில் தமிழ்ப்பணி ஆற்றி வருகிருர். 1952 டிசம்பர் முதல் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் துணையாசிரியராகப் பணிபுரிபவர். பிறமொழி கலவாது தூய செந்தமிழ் நடையில் சீரிய உரைநடை நூல்கள் பலவற்றை எழுதித் தமிழ்ப்பணி ஆற்றுபவர்.]*

காந்தியடிகள் கி. பி. 2—10—1869 இல் வட இந்தியாவிலுள்ள போர்பந்தரில் பிறந்தார். இவருடைய முழுப் பெயர் "மோகனதாச கரம் சந்த் காந்தி" என்பது. இவர் உயர்தரப் பள்ளியிற் சேர்ந்தபோது இவருடைய வயது பன்னிரண்டு. இவருடன், இவர் சிறிய தமையனுரொருவரும் படித்துக் கொண்டிருந்தார். அவருடன் ஒரே வகுப்பில் படித்துக்கொண்டிருந்த ஒருவரிடம் நம் மோகனதாசர் நட்புக் கொண்டார். அங் நண்பர் பிறரைக் கவர்ச்சி செய்யும் தோற்றமும் சொல் நயமும் உடையவர். எனவே, எளிதில் நம் அடிகளும் அவர்பால் பெரிதும் ஈடுபாடுடையவரானுர்.

'எனைவகையான் தேரியக் கண்ணும் வினைவகையான்
வேருகும் மாந்தர் பலர்'

என வள்ளுவர் கூறியுள்ளாரல்லவா? நாடாது நட்புக் கொள்வதினும் கேடு பயப்பது பிறிதொன்றுமில்லை யெனினும், நட்டபின் எளிதில் பிரிவதும் இயலாது. காந்தியடிகளும் உணர்ந்தார் தம் நண்பரின் பிழைகளை. எனினும், அவரைப் பிரிய நினையாமல் அவரைத் திருத்தி விடலாமென்று துணிவு கொண்டார்.

அங் நண்பருடன் கூடவேண்டாமென மோகனதாசரின் அன்னையாரும், மூத்த அண்ணனுரும் எச்சரித்தனர். அவர்களுடைய அறவுரையைப் புறக்கணிக்கும் பழக்கமில்லாத இவர், "நீங்கள் கூறுங் குறைகள் அவரிடம் உள்ளன என்பதை உணர்கிறேன். எனினும், சில நற்பண்புகளும் அவரிடம் உள்ளன. என் நட்பினுல் அவருடைய தீய பண்புகள் அகலுமாறு புரிவேன். அவ்வாறியற்றினுல், அவர் சிறந்த

பெரியாராவார். ஆகவே, என்னைப்பற்றிக் கவலையுற வேண்டா மெனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்றனர்.

ஆனால், நடந்தது வேறு. நண்பரைச் சீர்திருத்தப் போனவர் நண்பரின் வலையிலேயே வீழ்ந்தார். 'உண்மை நட்பென்பது ஆன்ம ஒருமைப்பாடு. ஒருவரைச் சீர்திருத்த விரும்பினால் அவருடன் நெருங்கிய நட்பு வைத்துக்கொள்வது தவறு' என அடிகளே பின்னர்க் கூறியுள்ளார்.

அந்த நண்பர் ஊனுண்பவர். அவர் சேர்க்கையால் இவருடைய சிறிய தமையனாரும் ஊனுண்ணப் பழகிவிட்டார். அடிகளையும் அப்பழக்கத்திலே அடியெடுத்து வைக்கச்செய்ய நண்பர் முயன்றார். அவர் பல சமயங்களில் தம்மையும் அடிகளையும் ஒப்பிட்டுக் காட்டுவார். அடிகளுள்ளம் மென்மையானது. அச்சத்தினாலும், நாணத்தினாலும் நிறைந்து விளங்குவது. அதை அவர் சுட்டிக்காட்டித் தம் உடற் கட்டையும், வலிமையையும், சோர்வின்றி விரைந்தோடும் பயிற்சியையும், தாவிக் குதிக்குந் திறன் முதலியவற்றையும் விளக்குவார். தமக்கு அந்த நிலைமை ஊனுணவாலேயே கிடைத்த தென்பார்.

அங்குள்ள படித்த ஆசிரியர் பலர் அக் காலத்திலே ஊனுண்ணப் பழகியிருந்தனர். அவர்களைப் புகழ்ந்து கூறி, ஊனுண்பதாலே ஒரு குறையும் வாராதென்பார். 'ஊனுண்டால் உடல் வலிமையுறுவதோடு புண்ணும் பொருந்தாது; பொருந்தினும் விரைவிலே போய்விடும்' எனக் கொஞ்சங் கொஞ்சமாக அன்பு கலந்த மொழியாலே தெருட்டுவார். நாட்டுப்பணி செய்யவேண்டுமானால் நல்ல உரம் பெற்ற உடல் வேண்டும் என்றும் உறுதி கூறுவார். அக் காலத்திலே ஒரு பாட்டொன்று பள்ளிச் சிறுவர்களிடம் பயின்று வந்தது.

"வலிமை படைத்த ஆங்கிலேயனைப் பார்! சோகை பிடித்த இந்தியரை அவன் அடக்கி ஆள்கிறான். ஊனுண்டு ஐந்து முழவுயரம் வளர்ந்திருப்பதாலேதான் அவ்வாறு அவனால் இயல்கிறது!" என்ற பொருளில் அப்பாட்டு அமைந்திருந்தது.

இவைகளெல்லாம் மோகனதாசரின் உள்ளத்தைச் சிறிது சிறிதாக மாற்றத் தொடங்கின. நாடெங்கும் உணவுச் சீர்திருத்தம் நடைபெறுவதும் நாட்டின் உயர்வுக்குக் காரணம் என அவர் எண்ணினர்; அஞ்சா நெஞ்சும் அசையா உடல் வலிமையும் பெற ஆர்வங் கொண்டார்.

ஊனுணவைச் சுவை பார்க்க இவர் நண்பர் ஒரு நாளுங் குறிப்பிட்டு விட்டார். ஒருவரும் அறியாத மறைவான ஓர் ஆற்றங்கரையிலே உள்ளம் ஒடுங்க, நாணம் பின்னே இழுக்க நாட்டுச் சீர்திருத்த உணர்ச்சி முன்னேயிழுக்க அந்த நிகழ்ச்சியிலே அடிகள் கலந்துகொண்டார். விருந்து வைத்தோர் இவர் நண்பர். விருந்துண்டோர் இவர் ஒருவரே! விருந்துணவு கடை ரொட்டியும், சிறிது வெள்ளாட்டூனுமே. தோலைப் போல் தடித்த ஊனையும், ரொட்டியையும் புதிய பயிற்சியாக முதன் முறை உண்டது இவருக்குச் சற்றேனும் பிடிக்கவேயில்லை.

அன்றைய இரவெல்லாம் அடிகளுக்கு உறக்கம் வரவில்லை. மன அமைதியின்றிப் பெரிதும் வருந்தினர். சிறிது இமை மூடினல் அச்சந் தரும் தோற்றம்! வெள்ளாடு வயிற்றிலே கத்துவது போன்ற நினைவு! திடுக்கிட்டெழுவார்! மனம் இரங்கும். எனினும், ஊனுண்ணல் தம் கடமையென வுன்னியுன்னித் தம் உள்ளத்தை உறுதி செய்து கொண்டார்.

அதற்குப் பின் ஏறக்குறைய ஆறுமுறை ஓராண்டுக் காலத்திலே ஊனுணவு உண்டாராம்! அவைகளெல்லாம் அரசமாளிகையிலே திருட்டுத்தனமாகவே நடைபெற்றனவாம். ஆனல், நல்ல முறையிலே பக்குவஞ் செய்த இனிய ஊனுணவு! அவற்றின் செலவெல்லாம் நண்பருடைய செலவே! ஓராண்டுக்குமேல் இப் பழக்கம் நடைபெறவில்லை!

அடிகளின் குடும்பம் ஊனுணவைத் தொடாத குடும்பம். அடிகளோ அன்னையாரிடம் பேரன்பும் மதிப்பும் உடையவர். ஊனுணவு கொண்ட அந்த வேளைகளில் வீட்டிலே உண்ண முடியாதாகையால் அன்னை இவரை ஏன் உண்ணவில்லையென்றல், அடிகள், 'வயிற்றிலே ஏதோ கோளாறு!' என உண்மையை ஒளித்துக் கூறிவந்தார். அவ்வாறு அன்னையை

ஏமாற்றுவது அவருடைய உள்ளத்தை அரித்துக்கொண்டே வந்தது.

ஆகவே, அவர், "புலால் உண்பதும் நாட்டிலே உணவின் சீர்திருத்தம் புரிவதும் வேண்டுவனவே. எனினும், ஊனுண்ணுமல் இருப்பதைவிடப் பெற்றோரிடம் பொய் புகன்று ஏமாற்றுவது மிகவும் கொடியது. ஆதலின், அவர்கள் உயிருடனிருக்கும் வரையில் அவர்களை ஏமாற்றமாட்டேன். அவர்களுக்குப் பின் நான் உரிமை யெய்தும்போது வெளிப்படையாகவே ஊனுண்பேன். அதுவரையில் ஊனுண்ணேன்" என்ற முடிவுக்கு வந்தார். நண்பரிடமும் நவின்று விட்டார். பிறகு, எப்போதும் ஊனுண்ணவில்லை. பெற்றோரிடம் பொய் சொல்லி ஏமாற்றக்கூடாது என்ற தூய நினைவு காரணமாகவே ஊனுணவை விட்ட உயர் பண்பு நம் காந்தியடிகளுக்கே உரியது.

### தந்தையாரிடம் மன்னிப்பு :

அடிகளின் தமையனுரொருவர் இருபத்தைந்து ரூபாய் கடன்பட்டிருந்தார். இவர் அக் கடனை அடைக்கத் தமையனுருடைய கைக்காப்பிலே ஒரு துண்டு பொன்னை வெட்டியெடுத்து விற்றுக் கடனை யடைத்துவிட்டார். ஆனுல், அத் திருட்டுச் செயல் இவர் உள்ளத்தை எரித்துவிட்டது. ஆகவே இனி எப்போதுந் திருடலாகாதென முடிவு செய்தார். மேலும் அக் குற்றத்தைத் தந்தையாரிடம் உரைத்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் விரும்பினுர். தந்தையார் இவரையும் பிற பிள்ளைகளையும் கடிந்தறியாத அன்புடையவர். இவர்கள் தவறு செய்தால் தாமே மனம் வருந்துவார். அவரிடம் இதனை உரைத்தால் மனம் வருந்துவது திண்ணம். மற்றும், அப்போது தந்தையார் நோயினுல் படுக்கையாகவே யிருந்தார். அந்நிலையில் எப்படி அறிவிப்பதென அண்ணல் கலங்கினுர். எனினும், எங்ஙனமேனும் தாம் செய்த தீச்செயலுக்குக் கழுவாய் பெறுதல் இன்றியமையாதென முடிவு செய்தார்.

ஆகவே, இறுதியாக ஒரு கடிதத்திலே தாம் செய்த தவறுகளையெல்லாம் எழுதித் தம் குற்றத்திற்குத் தண்டனை விதிக்க

வேண்டுமென்றும், எக்காரணத்தாலும் தந்தையார் வருந்தக் கூடாதென்றும், இனிமேல் திருடுவதில்லையென்றும் எழுதி யிருந்தார்.

அப்போது நிகழ்ந்ததை அடிகளே பின்வருமாறு கூறு கிறார் :—

" தந்தையிடங் கடிதத்தைக் கொடுக்கும்போது என் உடல் நடுங்கியது. கொடுத்துவிட்டு அவர் படுத்திருந்த மரப் பலகைக்கு எதிரில் அமர்ந்தேன்.

தந்தையார் எழுந்தமர்ந்து என் கடிதத்தை முற்றும் படித்தார். அவர் கண்களிலிருந்து முத்து முத்தாக நீர் வழிந்தது; கடிதமும் நனைந்தது. ஒரு நொடி தம் கண்களை மூடியிருந்தார். பிறகு கடிதத்தைக் கிழித்துப் போட்டார். மீண்டும் படுத்துக்கொண்டார். அவருடைய அளவிறந்த உள்ளக் குமுறலை நான் உணர்ந்து அழுதேன். ஓவியக் கலைஞனாகமட்டும் நான் இருந்தால், அக் காட்சியை அப் படியே வரைந்து காட்டுவேன். அக் காட்சி இன்னும் என் மனக் கண் முன்பு அப்படியே தெளிவாகத் தோன்றுகிறது.

அவருடைய அன்புக் கண்ணீரினால் என் உள்ளம் தூய்மையாகக் கழுவப் பெற்றது; என் தீமை விலகியது. அத்தகைய அன்பைப் பயின்றவரே இதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளக் கூடியவர்.

**'அன்பு என்னும் அம்பினால் எய்யப்படுபவனே அன்பின் ஆற்றலை அறிவான்'** என்பது உண்மையல்லவா ?

இஃது எனக்கு அருணெறிக்கு வழிகாட்டியது! அப் போது தந்தையின் அன்பைமட்டுமே உணர்ந்தேன். இப் போதோ உலகமே அன்பின் வழியது என உணர்கிறேன். **தொட்டதை யெல்லாம் பொன்னாக்கும் வன்மை அந்த அன் பிற்கே உரியது !"**

சிறுபோதிலே இத்தகைய அன்புத்தீயிலே புடம் போட்டுப் போட்டுத் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்ட வர் நம் காந்தியண்ணல்.

### அருஞ்சொற் பொருள்

தேறுதல் - தெளிதல். வினைவகையான் - தொழில் வகையால். வேருகும் - உள்ளம் வேறுபடும். நாடாது - ஆராயாது. புறக்கணிக்கும் - அலட்சியம் செய்யும். ஆன்மா - உயிர். ஊன் - புலால். தெருட்டுவார் - அறிவுறுத்துவார். சோகை - உடல் வெளுக்கச் செய்யும் ஒருவகை நோய். உன்னி - எண்ணி. கடிந்து - கண்டித்து. கழுவாய் - போக்கும் வழி. (பிராயச் சித்தம்). குமுறல் - மனத்துள் வருந்தல்.

### விளுக்கள்

1. நண்பருடன் சேர வேண்டாமென்று எச்சரித்த அன்னையார்க்கும் மூத்த அண்ணனுக்கும் காந்தியடிகள் அளித்த விடை யாது ?
2. காந்தியடிகள் ஊனுண்ண முற்பட்டதற்குரிய காரணங்கள் யாவை ?
3. காந்தியடிகள் முதலில் ஊனுண்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடுக.
4. முதன் முதலில் ஊனுண்ட இரவு காந்தியடிகள் எவ்வாறு துயருற்ருர் ?
5. அன்னையை 'ஏமாற்றக் கூடாது' என்று எண்ணிய காந்தியடிகள் எந்த முடிவுக்கு வந்தார் ?
6. காந்தியடிகள் ஊன் உண்ட தீச் செயலுக்குக் கழுவாய் தேடயாது செய்தார்?
7. தந்தையிடம் கடிதம் கொடுத்தபோது நிகழ்ந்ததைக் காந்தியடிகள் எவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ?

---

இக் கட்டுரைப் பகுதி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

# 12. மனையினை அழகுபடுத்தல்

குமாரி அன்னவரிது அவர்கள், பி.எஸ்ஸி.

நாம் எல்லோருமே அழகின் நடுவே வாழ விரும்புகிறோம். நம்மைச் சுற்றிலும் அழகின் பிரதிபலிப்பைக் காண விழைகிறோம். ஆனால் அன்றாட வாழ்க்கையின் கடமைகளிலும் கவலைகளிலும் உழன்று வரும் நாம், அழகுக்கலை நமக்கு எவ்வளவு தேவை என்பதனை மறந்து விடுகிறோம். களைத்து வரும் நமக்கு உணர்ச்சியூட்டி, வாழ்க்கையில் சுவையூட்டுங் கலை அழகுக் கலையே. இந்த அழகுக் கலை நன்கு வளர்ந்து மனையில் இடம் பெறவேண்டும். அழகுள்ள மனையில் அமர்ந்தால் சிறிது நேரத்திற்காவது நம்மை வருத்தும் துன்பங்களை மறக்கலாம். கடன்காரர்கள் கூறிய துயர்தரு மொழியையோ அல்லது அலுவலகத்தின் தலைவர் எரிந்து விழுந்ததையோ உள்ளத்தினின்றும் சிறிது நேரத்திற்காவது ஒதுக்கி வைக்கலாம்.

அழகுள்ள பொருட்களைப் படைப்பது என்றால் அது பணப்பையைக் காலியாக்கக்கூடிய காரியம் என்று பெரும்பாலோர் தவறாகக் கருதுகிறார்கள். ஆனால், எல்லா அழகுள்ள பொருட்களும் செலவை உயர்த்துவன அல்ல. உண்மையிலேயே மனையை அழகு படுத்த விரும்பினால் எளிய முறையிலும் மனையில் அழகைப் புகுத்தலாம் என்பதைத் தெளிவாக விளக்க விரும்புகிறேன்.

“எனக்குக் கலையுணர்வு கிடையாது. ஆகவே, என்னால் அழகுள்ள பொருள்களைப் படைக்க முடியாது” என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், கதிரவன் மறையும் காட்சியைக் காணும் யாவரும் அக் காட்சி அழகுடையதே என்று கூறுவர். அழகினை உணர்ந்து சுவைக்கும் ஆற்றலுடைய ஒவ்வொருவரும் அழகிய மனையினை அமைக்க முடியும். மனையில் அழகுத் தெய்வத்தையே குடியேற்ற முடியும்.

மனித உள்ளத்தையும் கண்களையும் ஈர்ப்பன அழகிய நிறங்கள். கதிரவன் மறையுங் காட்சியில், பல எழில் நிறங்களின் சேர்க்கையே நம்மை மயக்குகிறது. கண்கொட்டாது அந்த நிறங்களைக் கண்டு மகிழ்கிறோம். அதே போன்றே,

அழகிய நிறங்களைக் கருத்துடன் தேர்ந்தெடுத்து அலங்கரித்தால் இல்லம் அழகுடன் திகழும்.

சிறிது காலத்திற்கு முன் நடந்த ஆராய்ச்சி நிறங்கள் மனிதர்களைப் பல முறையில் பாதிக்கின்றன என்று வெளியிட்டுள்ளது. சில நிறங்கள் நமக்குக் களிப்பை யூட்டுகின்றன. சில நிறங்கள் நமது களைப்பைப் போக்குகின்றன. வருந்தும் உள்ளத்தின் உணர்ச்சிகளைத் தூண்டி மேலும் துயரத்திலாழ்த்தும் நிறங்களும் உள.

நிறங்களின் தன்மையைப் பற்றி ஆராயும்பொழுது, நிறங்களைப் பற்றிய சில விவரங்களை அறிந்து கொள்ளுதல் நல்லது. எல்லா நிறங்களும் மூன்று அடிப்படை நிறங்களினின்றும் பிரிக்கப்பட்டவையே. சிவப்பு, நீலம், மஞ்சள் என்ற மூன்று நிறங்களும் அடிப்படை நிறங்களாகும். இவைகளை ஒன்றுடன் ஒன்று சமமாகக் கலந்தால், புதிய நிறங்கள் அல்லது இரண்டாந்தர நிறங்கள் (Secondary Colours) பிறக்கின்றன.

சிவப்பு + நீலம் = ஊதா.
நீலம் + மஞ்சள் = பச்சை.
மஞ்சள் + சிவப்பு = ஆரஞ்சு நிறம்.

ஊதா, பச்சை, ஆரஞ்சு ஆகிய இம்மூன்று நிறங்களும் இரண்டாந்தர நிறங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த அடிப்படை நிறங்களையும், இரண்டாந்தர நிறங்களையும் கலந்தால், நம்மைக் கவர்ந்து களிப்பூட்டும் பல நிறங்கள் தோன்றுகின்றன. வெள்ளை, கறுப்பு, சாம்பல் என்ற மூன்று நிறங்களும், ஏனைய எல்லா நிறங்களோடும் பொருந்தக் கூடியவை. ஆகவே, இந் நிறங்கள் சார்பற்ற நிறங்கள் (Neutral Colours) என்றழைக்கப்படுகின்றன.

இந் நிறங்களுள்ளும் சில நமக்கு ஊக்க மூட்டிக் களிப்பூட்டுகின்றன. சில நிறங்கள் நம் கண்களுக்குக் குளிர்ச்சியூட்டிக் களைப்பை மாற்றுகின்றன. களிப்பூட்டும் நிறங்கள், வெப்ப நிறங்கள் (Warm Colours) என்றும் அழைக்கப்படுகின்றன. இவை நெருப்பில் காணப்படும் நிறங்களாகிய மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு என்ற நிறங்களாகும். இந் நிறங்கள் சேய்மையில் இருக்கும் பொருள்களை அண்மையிலிருப்பவை

போன்று காட்டுகின்றன. இவை முற்போக்கு நிறங்கள் (Advancing Colours) என்றழைக்கப்படுகின்றன. குளிர்ச்சியூட்டும் நிறங்கள் அல்லது தட்ப நிறங்கள், (Cool Colours) நாம் நீரில் காணும் நீலம், பச்சை என்னும் நிறங்களாகும். இவை பொருட்களைச் சேய்மையில் இருப்பவைபோல் காட்டுகின்றன. ஆதலால், இவை பின்வாங்கும் நிறங்கள் (Retreating Colours) என்றழைக்கப்படுகின்றன.

வீட்டை அலங்கரிப்பதில் ஏதாவது ஒரு வழியில் நாம் நிறங்களைப் பயன்படுத்துகிறோம். பலவகை நிறங்களைக் கொண்ட பொருள்களைக் கையாளுகிறோம் என்பதை மறுக்க முடியாது. ஆதலால், வீட்டை அலங்கரிக்க விரும்பினல் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்; அடுத்த முறை கடைக்குச் சென்று பொருள்கள் வாங்கும்போது, எந்த நிறத்தில் வாங்குவது என்று தீர்மானிப்பதற்குச் சிறிது நேரம் செலவழியுங்கள். நீங்கள் திரைகள் போடுவதிலும் நிறங்களைப் பொருந்துமாறு பொறுக்கி எடுங்கள். உங்களுக்கு அமைதியளித்துக் களைப்பை நீக்கும் நிறங்கள் தேவையாக இருந்தால், அதாவது ஒரு படுக்கை அறையை நீங்கள் அலங்கரிக்க விரும்பினல், குளிர்ச்சியளிக்கும் நிறங்களையே பொறுக்குங்கள். அஃதாவது சிவப்பு, மஞ்சள் என்ற வெப்ப நிறங்களை நீக்கிப் பச்சை, நீலம் என்ற குளிர்ந்த நிறங்களையே பயன்படுத்துங்கள். களிப்பூட்டும் நிறங்களை வேறு அறைகளில் பயன்படுத்தலாம். சிவப்பு, மஞ்சள் என்ற நிறங்கள் கண்ணுக்குக் கவர்ச்சி ஊட்டி உள்ளத்தை மகிழ்விக்கும். உங்கள் வீட்டில் சிறு அறைகளாக இருந்தால் அவை பெரிதாகத் தோன்றுமாறு குளிர்ந்த நிறங்களையே பயன்படுத்துங்கள். மிகப் பெரிய அறைகளாக இருந்தால் நீங்கள் சிவப்பு, மஞ்சள் என்னும் வெப்ப நிறங்களைப் பயன்படுத்தினல் அறைகள் சிறியனவாகத் தோன்றும்.

மனையை அலங்கரிப்பதில் பெரும்பாலோர் செய்யும் தவறு இதுதான்; இவர்கள் ஓர் அறையில் பல நிறங்களுடைய திரைகளைத் தொங்க விடுகிறார்கள். எல்லா நிறங்களும் ஒன்றோடொன்று பொருந்துவனவாக இல்லாவிடில் அவை எழுப்பும் கவர்ச்சியும், உணர்ச்சியும் குலைந்து விடுகின்றன.

ஓர் அறையில் இரண்டு அல்லது மூன்று நிறங்களுக்கு மேல் பயன்படுத்தாமலிருப்பதே சிறந்த முறை. அதிகக் கவர்ச்சி வேண்டுமென்று விரும்பினுல் அந் நிறங்களின் அடர்த்தியான நிறங்களுடன் எளிய சாயல் நிறங்களையும் சேர்க்கலாம். அடர்த்தியான நிறங்கள் (Thick Colours) மிகுந்து விட்டால் அழகுக்குப் பதிலாக வெறுப்புணர்வை ஊட்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். சார்பற்ற நிறங்களான வெள்ளை, கறுப்பு, சாம்பல் நிறம் எல்லா நிறங்களோடும் பொருந்துவன. ஆகவே, அவற்றையும் பயன்படுத்தலாம்.

துணிகளைப் பொறுக்கும்போது வேறு வேறு வேலைப்பாடுகள் கொண்ட துணிகளைப் பொறுக்காதீர்கள். கட்டம் போட்ட துணிகளுடன், பூவேலை செய்யப்பட்ட துணிகள் இணைந்து செல்லா. இவை ஒன்று எழுப்பும் பயனை மற்றொன்று குலைத்து விடும் தன்மையுடையன. பூ வேலையிடப்பட்ட அல்லது பெரிய கட்டங்கள் போடப்பட்ட துணிகளைப் பெரிய அறைகளில் வேண்டுமானுல் பயன்படுத்துங்கள். ஏனென்றுல், அவை பெரிய அறைகளைச் சிறிதாகக் காட்டும் வன்மை பெற்றிருக்கின்றன. வேலைப்பாடுகளற்ற துணிகளே சிறிய அறைகளுக்கு ஏற்றவை. சிறிய பூக்கள் போடப்பட்டிருந்தால் தவறில்லை.

திரைகள் எவ்வளவுதான் விலையுயர்ந்தனவாக, உயர்ந்தவையாக இருந்தாலும், வீட்டிலுள்ள பொருள்கள் அழகாக வைக்கப்படவில்லை என்றுல் பயன் இல்லை. வசதியளிக்கும் முறையில் நாற்காலி, பலகைகள், மேசை போன்றவற்றை ஒழுங்காக வைக்க வேண்டும். அறையில் நெருக்கமாகப் பொருள்களைப் பரப்பி வைத்தல் கூடாது. நாம் அறையினுள் சுற்றிவர இடம் விட்டுப் பொருள்களை வைத்தல் வேண்டும். மேலும் சிறிய அறையில் மிகப் பெரிய பொருள்களையோ, மிகப் பெரிய அறையில் சிறிய பொருள்களையோ வைத்தல் கூடாது; அவ்வாறு வைப்பது அழகை எடுத்துக் காட்டாது. ஒரு சிறு படுக்கை அறைக்கு மிகப் பெரிய கட்டில் அழகைக் குறைக்கும். மேலும் அறையின் ஒரு பகுதியில் பொருட்கள் நெருக்கமாகவும் மற்றொரு பகுதியில் ஒன்றும் இல்லாமல் வெற்றிடமாகவும் இருக்கக் கூடாது.

ஓர் அறையை அலங்கரிக்கும்பொழுது, மிகவும் அழகான பொருட்களைக் கவர்ச்சிகரமாக வைத்தல் வேண்டும். காண்பவரது கருத்தைக் கவர்ந்து தன்னிடத்தே இழுக்குமாறு அதற்கு எனத் தனியிடம் ஒதுக்குதல் வேண்டும். மற்றைய பொருட்களின் மீது நாட்டம் செல்லாதவாறு, அந்தப் பகுதியில் அடர்த்தியான நிறங்களைப் பயன்படுத்தலாம்.

பூக் கிண்ணங்கள் (Vases), படங்கள், அலங்காரப் பொருட்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்று கூற வில்லை. ஆனால், வாழ்க்கையைச் சுவையாக்கி, மனைக்கு அழகு ஊட்டுவன இவை. இவைகளை அமைப்பதில் ஒரு பெண் தன் திறமையைக் காட்ட முடியும். இவை அனைத்தையும் ஒரே அறையில் நெருக்கமாய் வைக்கக் கூடாது. எவ்வளவுதான் அழகான பொருட்களாக இருந்தாலும், அவற்றை ஒரே அறையில் நெருக்கி நிறைத்துவிட்டால், அழகு எழும்பும் பயன் குறைந்து விடும். காண்போரும் எதை நோக்குவது என்று அறியாது திகைக்கக் கூடும்.

பெரும்பாலான வீடுகள், சுவர்கள் முழுவதும் புகைப் படங்களால் நிரப்பப்பட்டுவிடுகின்றன. படங்களைப் பொறுக்கி எடுப்பதும் ஒரு கலை. படங்கள் அறையின் அழகினை உயர்த்துவனவாக இருக்கவேண்டும். படத்தைத் தேர்ந்து எடுப்பது, சட்டம் போடுவது, தொங்கவிடுவது எல்லாம் கவனத்துடன் செய்யப்பட வேண்டும். நான்கு புறங்களிலும் நல்ல இடம் விட்டு நடுவில் படத்தை அமைத்தல் வேண்டும். படத்தை அட்டையில் ஒட்டும்போது மூன்று பக்கங்களைவிட அடியில் சற்று அகலமாக இருக்கும்படியாகச் செய்ய வேண்டும். படம் நேராகத் தொங்கவிடப்பட்டால் கவர்ச்சி யூட்டும். படங்களைச் சுவரில் மாட்டும்பொழுது, கயிறுகளோ, கம்பிகளோ வெளியே தெரியாதபடி படத்தின் பின்பக்கம் மறைந்திருக்குமாறு மாட்டுதல் வேண்டும். மேலும் படங்கள் எளிதாகப் பார்க்கக்கூடிய உயரத்தில் தொங்கவிடப்பட வேண்டும்.

மனையை அழகுபடுத்துவதில் மலர்களைப் பயன்படுத்து வது எளிய முறையாகும். பூக்கிண்ணங்களில் மலர்களை

வைத்து அழகுபடுத்தும்போது நிறைய மலர்களை நெருக்கி வைக்காதபடி கவனித்துக் கொள்ளல் வேண்டும். நிறத்திலும் உருவத்திலும் எளிய தோற்றமுடைய பூக்கிண்ணங்களே சிறந்தவை. ஏனெனில், அவை மலர்களின் அழகினை மிகைப்படுத்திக் காட்டும். பூக்கிண்ணங்கள் மங்கலான பச்சை நிறமாகவோ, அன்றிப் பழுப்பு நிறமாகவோ இருக்க லாம் அல்லது பித்தளை, வெள்ளி நிறத்திலோ அல்லது கறுப்பு, வெள்ளை, சாம்பல் நிறம் போன்ற சார்பற்ற நிறங் களிலோ கிண்ணங்கள் இருக்கலாம். அதிக ஆழமற்று வாயகன்று இருக்கும் கிண்ணங்கள் சிறந்தவை. விலையுயர்ந்த பூக்கிண்ணங்களைக் காட்டிலும் சாதாரண வாயகன்ற புட்டி களும் (Bottles), சாடிகளும் (Jars), கிண்ணங்களும் நல்ல பூக்கிண்ணங்களாகப் பயன்படுகின்றன.

சப்பானியர்கள் மலர்களை ஒழுங்குபடுத்தி வைப்பதில் திறமையும் தேர்ச்சியும் உடையவர்களாகக் கருதப்படு கிறார்கள். அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உண்டு. அவர்கள் மிகச் சில மலர்களையும் இலை களையும் கொண்டு அழகுற அமைக்கிறார்கள். மலர்களின் அழகு எடுத்துக் காட்டப்படும் முறையில் அமைக்கிறார்கள். மலர்களை மூன்று நிலைகளில் அமைக்கிறார்கள். உயர்ந்த நிலையில் காணப்படுவது விண்ணையும், நடுவில் அமையும் மலர்கள் மக்களையும், தாழ்ந்த நிலையில் இருக்கும் மலர்கள் மண்ணையும் குறிப்பதாக அமைக்கிறார்கள். அவர்கள் ஒற்றை எண்களில் முடியும் எண்ணிக்கைகளிலேயே (1, 3, 5, 7, 9) மலர்கள் அமைக்கிறார்கள்.

பூக் கிண்ணங்களில் இலைகளுக்கிடையே ஒவ்வொரு மலராக வைக்க வேண்டும். பெரிய மலர்களை, அடர்த்தியான நிறங்களுடைய மலர்களைக் கிண்ணத்தின் அடியில், விளிம்பில் வைக்கலாம். மலர்களையும், இலைகளையும் கிண்ணத்தில் நிறுத்துவதற்காகக் கிண்ணத்தினுள் மணலையோ அல்லது கம்பி வலையையோ வைக்கலாம். நன்கு அழகுற மலர்களை ஒழுங்குபடுத்திய பின்னர்ப் பூக்கிண்ணத்தை நன்கு எடுத்துக் காட்டக்கூடிய இடத்தில் வைக்கலாம்.

அழகான பொருட்களை அழகிய மனையில் அமைத்து விட்டால் மட்டும் போதாது. தூய்மையாகவும் ஒழுங்காகவும் பொருட்கள் வைக்கப்படவேண்டும். பொருட்களை நல்ல முறையில் பேணிக் காப்பாற்றினால் நீண்ட நாட்கள் உழைக்கும். ஒரு தடவை நன்றாக ஒழுங்குபடுத்தி அமைத்து

விட்டு, அது அழியும் வரை விட்டுவிடக் கூடாது. புதிய பொருட்களை வாங்கி அறையில் நிரப்ப வேண்டியதில்லை. அறையில் பொருட்களின் இடத்தை மாற்றுவதிலும் புதிய அழகுத் தோற்றத்தை உண்டாக்கலாம். எடுத்துக்காட்டாக, நாற்காலியின் இருப்பிடத்தை மாற்றினால்கூட அறைக்குப் புதிய அழகு தோன்றுவதைக் காணலாம்.

மனையினை அழகுபடுத்தல் என்பது ஒரு பெருங்கலை யாகும். அதனை விரித்துரைக்க முயலவில்லை நான். மனையை அழகுபடுத்தத் தேவையான அடிப்படைக் கருத்துக்களை ஓரளவு காட்ட முனைந்துள்ளேன். இவற்றிற்குமேல் உங்கள் சுவைக்கும்; திறமைக்கும் தகுந்தவாறு மனைக்கு அழகு ஊட்ட லாம். அழகையூட்ட அதிகப்பொருள் செலவழிக்க வேண்டுவ தில்லை. செங்கல்லாலும் சுண்ணும்பாலும் கட்டப்பட்டதே வீடு என்ற எண்ணத்தை மாற்றி, அழகிய இல்லமாக அகத்தின் இருப்பிடமாக அதனை மாற்ற முயல்வதே ஒவ்வொருவரது கடமையாகும்.

### அருஞ்சொற் பொருள்

உழன்று - வருந்தி. படைக்க-தோற்றுவிக்க. ஈர்ப்பன-இழுப்பன. பாதிக்கின்றன - வருத்துகின்றன. சேய்மை-தூரம். அண்மை-சமீபம், அருகு. தட்பம் - குளிர்ச்சி. குலைந்து - கலைந்து. நாட்டம் - நோக்கம். திகைக்க - மயங்க.

### வினாக்கள்

1. அழகுள்ள மனை அளிக்கும் நன்மை யாது ?
2. செலவின்றி மனையினை அழகுபடுத்தல் எவ்வாறு ?
3. நிறங்களின் தன்மையும், அவைகளுக்குள் இருக்கும் மாறுபாடு களும் யாவை ?
4. வீட்டை அலங்கரிக்க எத்தன்மையான நிறங்களையே பொறுக்க வேண்டும் ?
5. மனையை அலங்கரிப்பதில் பெரும்பாலோர் செய்யும் தவறு யாது ?
6. அறையை அலங்கரிக்க ஏற்ற திரைத் துணிகள் எவை ?
7. பூக் கிண்ணங்கள், புகைப்படங்கள் வைப்பதைப்பற்றி ஆசிரியர் கூறும் கருத்து யாது ?
8. மலர்களைப் பயன்படுத்துவதில் சப்பானியர் பெற்றுள்ள தேர்ச்சி யாது ?
9. புதிய பொருள்கள் இன்றியும் அறையை அழகுபடுத்த வழி யாது ?

---

இக் கட்டுரை கலைக்கதிர் வெளியீடு மனையியல் மலரிலிருந்து எடுக்கப்பட்டது ஆகும்.

# 13. தம்பிக்கு

டாக்டர் மு. வரதராசனர் அவர்கள்,
எம். ஏ., எம். ஓ. எல், பிஎச். டி.

*[இக் கட்டுரை யாசிரியர் பல்லாண்டுகள் சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றித் தற்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிகின்றார். உயர் பண்பும் உன்னத நோக்கமும் கொண்டவர். தலைசிறந்த எழுத்தாளர். இவர் எழுதிய நூல்கள் பல மத்திய அரசாங்கத்தார், சென்னை அரசாங்கத்தார் பரிசுகளைப் பெற்றுள்ளன.]*

அன்புள்ள தம்பி,

இனி எந்த முயற்சி செய்தாலும், தமிழராகிய நாம் சிறுபான்மையோர் என்பது நினைவில் நிற்க வேண்டும். கிணற்றுக்குள் இருக்கும் தவளை கடலில் வாழ்வதாக எண்ணுமாம். அதுபோல வடவேங்கடம் தென் குமரி எல்லைகளைப் பார்த்துக்கொண்டு நாம் பெரிய இனம் என்று இறுமாப்புக்கொண்டால் அது வீழ்ச்சிக்கு வித்தாகிவிடும். அந்த எண்ணம் நீராவி கண்டுபிடிப்பதற்கு முன்பு இருந்திருக்கும்; தவறு இல்லை. அந்தக் காலத்தில் போக்கு வரவு குறைவு. ஒரு நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் தொடர்பு குறைவு. வடவேங்கடம் தென் குமரி என்ற எல்லைகளை மட்டும் அன்று பார்த்துப் பெருமிதம் கொண்டிருந்ததால் தீங்கும் ஒன்றும் இல்லை. இன்று நிலைமை முற்றிலும் மாறியுள்ளது. வட துருவத்தையும் தென் துருவத்தையும், ஆப்பிரிக்காவையும் அமெரிக்காவையும் பார்த்து நாம் எம்மாத்திரம் என்று எண்ணவேண்டிய காலம் இது. நாம் சிறுபான்மையோர் என்று உணருவதற்கு உலகத்தைப் பார்க்கத் தவறினாலும் இந்தியாவைப் பார்த்தால் போதும். இந்தியர் முப்பத்தைந்து கோடி. தமிழர் மூன்று கோடி; சிறுபான்மையோர் தானே?

சிறுபான்மையோர் எந்த முயற்சி செய்தாலும் ஒற்றுமையும் கட்டுப்பாடும் கட்டாயம் தேவை. இந்த இரண்டும் இருந்திருந்தால், தமிழர் வல்லமையான இனம் என்ற எண்ணம் எவர்க்கும் ஏற்பட்டிருக்கும். அதற்கு மாறாகவே இப்போது உள்ளது. இப்போது தமிழரைப் பற்றிப் பிறர்

என்ன நினைக்கிருர்கள்? மூளையர் சிலரும், முரடர் சிலரும், ஏமாளிகள் பலரும் உள்ள கூட்டம் தமிழர் என்று தான் நினைக்கிருர்கள். ஆங்கிலேயர் - இலண்டனில் தலைமை நிலையமும், டில்லியில் கிளை நிலையமும் வைத்து ஆட்சி நடத்தியபோதும் அப்படித்தான் நினைத்தார்கள். தமிழரில் மூளையரை விலை கொடுத்து வாங்கிவிடுவது—முரடரை நயத்தாலும் பயத்தாலும் அடக்கிவிடுவது—இந்த இரண்டும் செய்தால் போதும்; மற்றத் தமிழர் பேசாமல் கிடப்பார்கள். இப்படித்தான் வெளியார் நம்மைப் பற்றிக் கருதுகிருர்கள்.

அதற்கு ஏற்ருற்போலவே, நாம் நம்முடைய பொதுத் தேவைகளுக்காக ஒன்றுபட்டுப் போராடுவதில்லை. ஆனல், நமக்குள் இருக்கும் கட்சி வேறுபாடுகளுக்காகப் பிரிந்தும், பிளந்தும் போராடுவதில் மட்டும் வீரம் காட்டி வருகிருேம். இந்த வேறுபாடுகளும் இருக்கலாம்; ஒரு மூலையில் இருக்க லாம்; மேடையில் இருக்கவேண்டியதில்லை. இங்கிருக்கும் பத்திரிகைகளும் பொதுப் போராட்டங்களுக்கு விளம்பரம் தருவதில்லை; சில்லறைப் பூசல்களையே விளம்பரப்படுத்து கின்றன; சேர்ந்து தாளமும் போடுகின்றன.

தமிழரிடையே பொதுவாகப் பிரிக்கும் ஆற்றல் வளர்ந்து விட்டிருக்கிறது. பிணைக்கும் ஆற்றல் வளரவில்லை. ஒரு மேடையில் இரண்டு கட்சிகள் சேர்ந்து பொதுத்தேவை பற்றிப் பேசுவது தமிழகத்தில் கண்டு வியக்கும்படியான புதுமையாகவே உள்ளது. அஃது என்றைக்குப் பழக்கமான-இயல்பான-நிகழ்ச்சியாகப் பெருகுமோ, தெரியவில்லை.

தேர்தல் காலங்களில் தமிழரைக் கண்டு மற்றவர்கள் சிரிக்கிருர்கள். ஓர் இடத்திற்குப் பத்துப் பதினைந்து பேர் நின்று போட்டியிடுவார்கள். கடைசியில் தமிழரல்லாத ஒருவன் தன்னைச் சார்ந்தவர்களின் ஓட்டுக்கள் எல்லாவற்றை யும் சிதருமல் ஒருசேரப் பெற்று இத்துணைத் தமிழரையும் தோற்கடித்துவிடுவான். பிறகு அந்தப் பொது எதிரியைக் கண்டு இத்துணைப் பேரும் நாணித் தலைகுனிந்தாலும் ஒருபடி முன்னேற்றம் என்று கருதலாம். அவன் வென்ருனே என்று கவலைப்படுவதற்கு மாருக, தன்னேடு போட்டியிட்ட தமிழர்கள்

தோற்றதை நினைந்து ஒவ்வொரு தமிழனும் தனித்தனியே மகிழ்வான். பொதுவாகத் தமிழினம் தோற்கிறதே என்ற உணர்ச்சி தோன்றுவதில்லை; மற்றத் தமிழரை வீழ்த்தியது பற்றிய வீணான வீர உணர்ச்சியே தோன்றுகிறது. தன் இரண்டு கண்களும் போனாலும் சரி; தன் எதிரியின் ஒரு கண்ணாவது போக வேண்டும் என்று ஒருவன் முயன்றதாகக் கதையில் படித்திருப்பாய். அத்தகைய வீண் வீரம், வீரம் அல்ல. ஆணவம் தமிழரிடையே மிகுதியாக உள்ளதே!

இவற்றை எல்லாம் எண்ணிப் பார்! தமிழன், பொதுவாக, தன்னலம் மிகுந்தவன் என்று உணரலாம். தனித்தனியே தன்னலம் நாடிப் பொதுநலம் மறக்கும் கூட்டம் எப்படி ஒற்றுமை அடைய முடியும்? எப்படி முன்னேற முடியும்? மற்ற இனத்தாரை விடத் தமிழர்க்குள் தன்னலம் மிகுதியா என்று நீ கேட்கலாம். ஆம் என்ற மறுமொழி சொல்லத் தோன்றுகிறது.

எண்ணிப் பார்; நான் தோற்றாலும் சரி, நம்மவன் எவனாவது வெற்றி பெறட்டும் என்ற உயர்ந்த எண்ணம் எத்துணைத் தமிழரிடையே காண முடியும்? என் சொந்தக் கொள்கை புறக்கணிக்கப் பட்டாலும் சரி, தமிழினம் வளர்ந்து செழிக்கட்டும் என்ற உயர்ந்த நோக்கம் எத்துணைத் தமிழரிடையே காண முடியும்? என் கட்சி அழிந்தாலும் சரி, தமிழ்நாடு வாழ்ந்து விளங்கட்டும் என்ற உயர்ந்த குறிக்கோள் எத்துணைத் தமிழரிடையே காண முடியும்? தமிழரிடையே தன்னலம் மிகுதியா, பொதுநலம் மிகுதியா என்று ஆராய்ந்து அறிவதற்கு இந்த மூன்று 'தேர்வு' வைத்துப் பார். நான் சொல்வதன் உண்மை தானாகவே விளங்கும்.

விதிவிலக்கு உண்டு. உயர்ந்தவர்கள் தமிழினத்தில் இல்லாமற் போகவில்லை. ஆனால், அத்தகையவர்கள் மிகச் சிலரே; ஒரு சிலரே. அவர்களால் மட்டும் நாடு முன்னேறி விடமுடியுமா? ஒற்றுமை ஏற்பட முடியுமா? பொதுவாக மக்களின் மனம் சீர்பட்டால்தானே முடியும்?

பொதுவாகத் தமிழன் முதலில் தன்னை நினைக்கின்றான்; தன்னையே நினைக்கின்றான். பிறகுதான் சில வேளைகளில் மேற்

போக்காக மொழியையும் நாட்டையும் நினைக்கிருன். இவ்வளவு தன்னலம் முதிர்ந்திருப்பதால்தான், மிகப் பழங்காலத்தி லிருந்தே பண்பாடு மிக்க இனமாக விளங்கியிருந்தும் தமிழினம் இன்று தாழ்வான நிலையில் கிடக்கின்றது.

தன்னலம் மிகுந்தவனுக—முதலில் தன்னையே நினைப்ப வனுக—தமிழன் இருக்கிருன் என்பதற்கு இன்னெரு சான்று சொல்லட்டுமா? தமிழன் ஒருவன் அதிகாரி ஆனுல், தான் அதிகாரி என்ற எண்ணமே அவனுக்கு எப்போதும் இருக் கிறது. அலுவலகத்தை விட்டு வெளியே வந்த பிறகும், மாலை 5 மணிக்குப் பிறகும், கோயில் முதலிய பொது இடங் களிலும், விருந்து முதலிய பொது நிகழ்ச்சிகளிலும் அதிகாரி என்ற எண்ணமே நிறைந்து, மற்றவர்களிடமிருந்து விலகி உயர முயல்கின்ருன். குடும்பத்தில் மனைவி மக்களின் முன்னும் அதிகாரியாகவே விளங்குவான் போலும்! ஆங்கி லேயன் அப்படி அல்ல என்பது சொல்லாமலே அறிவாய். அலுவலகத்தில் ஆங்கிலேயன் கடுமையாக நடந்துகொள் வான்; மாலை 5 மணிக்குப்பின் விளையாட்டுக் கழகத்தில் தோழன்போல் பழகுவான்; விருந்தில் களித்து மகிழ்வான்; கோயிலில் அமைந்து ஒழுகுவான். காரணம் என்ன? அவன் மனம் இடத்திற்கும் வேளைக்கும் சூழ்நிலைக்கும் நெகிழ்ந்து மாறி அமைகின்றது. அவன் உள்ளத்திலும் தன்னலம் உண்டு; ஆனுல் குறைவு; அதனுல்தான் அவன் நெகிழ்ந்து தோழனுக, மனிதனுக, அன்பனுக மாறி அமைய முடிகின்றது. தமிழனுடைய தன்னலமோ இடம், வேளை, சூழ்நிலை, மொழி, நாடு எதுவும் ஊடுருவி இடம் பெருதவாறு இறுகியுள்ளது. அதனுல் தமிழரில் அதிகாரி எங்கும் அதிகாரியாகவே இருக் கிருன்; கட்சி ஆள் எங்கும் (பொது மேடையிலும் பொது இடங்களிலும்) கட்சி ஆளாகவே இருக்கிருன்.

தமிழனைத் தனியே பெயர் சொல்லிப் பழித்துப் பார், உடனே சீறி விழுவான்; ஆனுல் அவனுடைய நாட்டையும் மொழியையும் இனத்தையும் பழித்துச் சொல்; பொறுமை யோடு பேசுகிருன். ஆங்கிலேயனைத் தனியே பழித்துப் பார்; உன்னைப் புறக்கணிப்பான். அவனுடைய நாட்டையும் மொழியையும் பழித்துச் சொல்; பகையுள்ளம் கொள்வான்.

காரணம் மேலே சொன்னதுதான். தன் மொழியைவிடத் தன் நாட்டைவிடத் தானே முக்கியம் என்ற எண்ணம் தமிழனிடம் அவனை அறியாமல் ஊறிக் கிடக்கிறது. அதுமட்டுமல்ல; கட்சிப் பற்று மிகுந்தவனாய்த் தோன்றும் தமிழனும், நெருக்கடி நேருமானால், கட்சி நலத்தைவிடத் தன்னலத்தையே பெரிதாக நாடுவான். கட்சி சீர்குன்றினாலும் தான் வாழவேண்டும் என்று முயலவும் முயல்வான். இந்நிலையில் இவனுடைய நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் என்ன என்று சொல்வது?

உண்மையான நாட்டுப் பற்று இருக்குமானால், நாட்டை நினைக்கும்போதாவது தன்னை—தன்னலத்தை—மறக்க வேண்டாமா? அவ்வாறு மறக்கும் பண்பு இருந்தால், நாட்டின் பொதுத் தேவைகளுக்குப் போராடும்போது ஒற்றுமை ஏற்படாதா? ஒற்றுமை இல்லாதிருப்பதற்குக் காரணம் இப்போது விளங்கும் என எண்ணுகிறேன். பொதுத் தேவையை முதன்மையாக எண்ணும் மனம்தான் பலரையும் பிணைக்க முடியும். தன்னையே முதன்மையாக எண்ணும் மனம் சேர்ந்தவர்களையும் பிரிக்கவே முயலும்.

தேர்தல் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது. அன்று மட்டும் திடீரென்று ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் உரிய வகையில் கடமையைச் செய்ய முடியுமா? அதுவும் பழக்கத்தில் வந்திருந்தால்தான் முடியும். ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் உரிய வகையில் பல நாளும் பழகியிருந்தால், ஒருநாள் கூத்தாக நடைபெறும் தேர்தலிலும் அவ்வாறு வெற்றி காண முடியும்.

ஒரு கதை சொல்வார்கள். இரும்பைப் பொன்னாக்கும் கல் ஒன்று ஒரு மலையோரத்தில் இருப்பதாக ஒரு மந்திரவாதி சொன்னானாம். ஒரு சிறு இரும்புத் துண்டைக் கையில் வைத்துக்கொண்டு, அங்கிருக்கும் கற்களை ஒவ்வொன்றாக எடுத்து அதன்மேல் வைத்துப் பார்க்கச் சொன்னானாம். எந்தக் கல்லை வைத்தவுடன் அந்த இரும்பு பொன்னாகிறதோ அதுவே மந்திரக்கல் என்றானாம். கேட்டவன் அவ்வாறே மலையோரத்தில் நின்றுகொண்டு ஒவ்வொரு கல்லாக எடுத்து

இரும்பின்மேல் வைத்து, அது பொன் ஆகாதது கண்டு உடனே வீசி எறிந்து வந்தானும். வீசிய கற்கள் குவியல் குவியலாக குவிந்தனவாம். அவனும் இரவு பகலாகக் கற்களை எடுத்து எடுத்து எறிந்து களைத்துவிட்டானும். கடைசியில் ஒருநாள் திடீரென இரும்புத் துண்டு பொன்னுக ஒளி வீசியதாம். ஆனுல், பாவம்! அதற்குள் பொன்னுக்கிய அந்தக் கல் கையை விட்டுப் போய்விட்டதாம். எறிந்து எறிந்து பழகிய பழக்கத்தால் உடனே அந்த மந்திரக்கல்லையும் கை எறிந்துவிட்டதாம். அவன் கதி என்ன ஆயிற்று? அப்படித்தான் தேர்தலிலும்; பிரிக்கும் ஆற்றல் வளர்வதைக் காண்கிருேமே தவிர, பிணைக்கும் ஆற்றலைக் காணேம். காரணம் பழக்கம்தான். மற்றக் காலங்களில் பிறர்மேல் பொருமை கொண்டும், பிறர் மனத்தைப் புண்படுத்தியும், சேர்ந்தவர்களைப் பிரித்தும் தமிழர் வாழ்கின்றனர். இந்தப் பழக்கம் அன்ருட வாழ்க்கையில் ஊறிப்போன பிறகு, திடீரென ஒருநாள் காலையில் மாற்றிவிட முடியுமா? முடியாது. அதனுல் தேர்தலிலும் பொருமை, இடையூறு, பகை இவைகளே விளைகின்றன. மந்திரக்கல் தேடியவனைப்போல் களைத்துச் சோர்வடைவதே கண்ட பயன்.

உன் அன்புள்ள,
**வளவன்.**

### அருஞ்சொற் பொருள்

வேங்கடம் - திருப்பதி மலை. இறுமாப்பு - செருக்கு. வீழ்ச்சி - அழிவு. வித்து - விதை, காரணம். பெருமிதம் - களிப்பு, வீரம். ஆணவம் - ஆங்காரம். (தான் பெரியவன் என்ற குணம்) புறக்கணித்தல் - வெறுக்கப்படுதல். குறிக்கோள் - நோக்கம். சான்று - எடுத்துக்காட்டு. நெகிழ்ந்து - இளகி.

### **வினுக்கள்**

1. தமிழரைப் பற்றித் தற்காலத்தில் பிறர் என்ன நினைக்கின்றனர்?
2. தமிழர்களிடையே எத்தகைய ஆணவம் மிகுந்துள்ளதாக எடுத்துக் காட்டப்படுகிறது?
3. தமிழன் தன்னலம் மிகுந்தவனு, பொதுநலம் மிகுந்தவனு என்பதை உதாரணத்துடன் விளக்குக.
4. பண்பாடு மிக்க தமிழினம் இன்று தாழ்வான நிலையிலிருக்கக் காரணம் என்ன?
5. தமிழனுக்கு உண்மையான நாட்டுப்பற்று இல்லை யென்பதற்கு ஆசிரியர் கூறும் காரணத்தை விளக்குக.
6. இரும்பைப் பொன்னுக்கும் கல் கதைச் சுருக்கம் எழுதி அதன் படிப்பினையையும் கூறுக.

# 14. பெய் எனப் பெய்யும் மழை

திரு. பி. சவரிமுத்து அவர்கள், எம்.ஏ.

*[இக் கட்டுரை யாசிரியர் திருச்சிராப்பள்ளி தூய சூசையப்பர் கல்லூரியில் விஞ்ஞானப் பேராசிரியராகப் பணிபுரிபவர். இவர் விஞ்ஞானத் தொடர்பான கட்டுரைகளை எளிய, இனிய தமிழ் நடையில் எழுதித் தமிழ்ப் பணிபுரிந்து வருபவராவர்.]*

"மழையின்றி மாநிலத்தார்க்கு (வாழ்வு) இல்லை" என்று அதன் இன்றியமையாமையை நன்குணர்ந்ததால்தான் "வான் சிறப்பு" என்று ஒரு தனி அதிகாரமே படைத்துவிட்டார், வள்ளுவப் பெருந்தகை தமது அரிய திருக்குறளில். ஆனால், இங்ஙனம் உலகிற்கு வாழ்வளித்துதவும் இதே மழை சில வேளைகளில் அதனைப் பாழ்படுத்திவிடுவதையும் காணுகின்றோம். வேண்டும்போது வேண்டிய இடத்திலே பெய்வதில்லை. வேண்டாதபோதும், வேண்டாத இடங்களிலும் மழை பெய்து வைக்கின்றது. அதன் திருவிளையாடல்களை என்னென்று இயம்புவது! எனினும், மழையானது நமக்கு மிகுதியாய் வேண்டியதுதான ஒன்றே. தமிழ்நாட்டின் பெரும் பகுதி "வானம் பார்த்த பூமி"யாகவே விளங்குகின்றது என்பதில் ஓர் ஐயமும் இல்லை. இங்கிலையில், பெய் என்றவுடன் மழை பெய்யும் வித்தையை அறிவியலார் கண்டுவிட்டார்கள் என்றால் யார்தான் வியப்படையாமல் இருப்பர்! அதுபற்றி ஒரு சிறிது இங்கு ஆராய்வோம்:

"வெட்டி யடிக்குது மின்னல்—கடல்
வீரத்திரைகொண்டு விண்ணையிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம்—கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா—எனத்
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்"

என்பது கவிஞனின் இயற்கையழகுக் கற்பனை. மழைக்கு அறிகுறியானவற்றையெல்லாம் இங்குப் பார்க்கிறோம். ஆனால், இத்துணை அடையாளங்களெல்லாம் தோன்றியும் மழை பெய்யாமல் போய்விடலாமல்லவா? "அடடா, வந்த மழை போய்

விட்டதே!" என்று நாமே எத்துணையோ தடவைகளில் நமது ஏமாற்றத்தைத் தெரிவித்திருக்கிறோம். இந்த வருத்தக் குரலோடு நமது ஏக்கம், ஏமாற்றம் எல்லாம் மறைந்துவிடு கின்றன. அவ்வளவுதான். ஆனால், விஞ்ஞானி இங்ஙனம் எளிதில் விட்டுவிடுவானா? "வந்த மழை போய்விடுவதாவது! ஏன், எப்படி?" என்று ஆராயலானான். மழைபெய்கிற இயல்பு களை யெல்லாம் விரிவாகப் பரிசோதிக்கலானான். முடிவுகளைப் பாகுபாடு செய்துகொண்டான்.

மழை எப்படிப் பெய்கிறது? என்ன பேதைமையையுடைய கேள்வி என்று உங்களுக்குப் படலாம். ஆனால், இந்தக் கேள்வி மேலே கேள்விதான் விஞ்ஞானத்தின் உயிர்நாடி என்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. உலகிலுள்ள நீர் நிலைகளினின்றும் நீரானது சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறுகிறதென்பதை நாமறிவோம். நீராவி, காற்றைவிட இலேசானது; கனமில்லாதது. ஆகையால், மேலே எழுந்து சென்று காற்றில் படிந்து நிற்கின்றது. இங்ஙனம், காற்றில் நீராவி நன்கு படிந்து நிற்கும் நிலையைத் 'தெவிட்டிய நிலை' (Saturated Condition) என்பார்கள். சாதாரணமாகக் காற்றில் நீராவி போதிய அளவு படிந்து நிற்பதில்லை. இதனைத் 'தெவிட்டாத நிலை' (Unsaturated Condition) என்பார்கள்.

காற்று அல்லது வேறெந்த வாயுவினுடையவும் பரிமாணத்தைச் சட்டென்று சுருக்கினால் அதன் அமுக்கம் (Pressure) அதிகரிக்கின்றது; அதில் வெப்பமும் உண்டா கிறது. ஈருருளி (Cycle) குழாய்க்குள் காற்றடிக்கும்போது, அதில் அமுக்கம் மிகுந்து வெப்பமடைவதை நாம் பார்க்கிறோம். இதற்கு மாறாக, வாயுவானது திடீரெனப் பெருக்கமடையு மானால் அதன் அமுக்கம் சட்டென்று குறைந்து குளிர்ச்சி யுறும். இதுபோலவே வாயுவின் அமுக்கம் சட்டெனக் குறைவுபடுமானால், அது விரிவடைந்து குளிர்ச்சியடைவதும் இயல்பே.

நீராவி படிந்த காற்று மேல் நோக்கிச் செல்லுங்கால், காற்று மண்டலத்தில் ஏதோ காரணத்தால் காற்றின் அமுக்கம் திடீரெனக் குறைவுபட்டால், அங்குக் குளிர்ச்சி உண்டாகிறது.

இதனுல், நீராவி குளிர்ந்து தெவிட்டாத நிலையிலிருந்து தெவிட்டிய நிலைக்கு மாறுகிறது. இதையே மேகம் என்கிரேம். நூற்றுக்கு நூறு விகிதம் தெவிட்டிய நிலையில் உள்ளபோது தான், கரிய இருண்ட மேகமாக விளங்குகிறது. இன்னும் அதிகப்படியாகக் குளிர்ச்சியுறுமானுல் மழையாகப் பொழியத் தக்க பக்குவத்தை அடையும்.

தெவிட்டிய நீராவி, நீர்த்துளிகளாகத் தோன்றுவதற்கு நுண்ணிய கருக்கள் (Nuclei) அவசியம். மையப் பொருளாக ஏதாவதொன்று இல்லாமல் நீராவியானது நீர்த்துளிகளாக மாருது. காற்று மண்டலத்திலுள்ள தூசுகள், புகையுடன் மேலே செல்லும் துகள்கள் முதலியன சாதாரணமாக நீர்த் துளிகளுக்கேற்ற கருக்களாக அமைகின்றன. ஆக, மேகம் குளிர்ச்சியுறும்போது இத் துகள்களை மையமாகக் கொண்டு நீர்த்துளிகளாக மாறுகின்றது. இவ்வாறு ஏற்படும் நீர்த்துளி கள் ஆயிரக்கணக்கான அடிகள் கனமுள்ளதும் பல சதுர மைல்கள் பரப்புள்ளதுமான மேகத்தினுள்ளே ஆங்காங்குப் படிந்திருக்கின்றன; இந் நீர்த்துளிகள் மேகத்தினூடே கீழ் நோக்கி ஊடுருவிச் செல்லுவதற்கேற்ற பருமனும் எடையும் பெற்றனவாக இருக்க வேண்டும்; அன்றியும், மேகத்தை விட்டுக் கீழிறங்கினதும், கீழுள்ள வெப்பக் காற்றினுல் திரும்பவும் நீராவியாக மாறிவிடாது இருப்பதற்கேற்ற பருமனுள்ளனவாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் அந் நீர்த்துளிகள் மழையாகப் பெய்ய முடியும். மழை தூறிக் கொண்டிருக்கும்போது துளிகளின் குறுக்களவு சுமார் $\frac{1}{50}$ அங்குலம் இருக்கும்; கனத்த மழை பெய்யும்போது அந் நீர்த் துளிகளின் பருமன் கால் அங்குலம் வரை இருக்கும்.

மேகத்தினுள் உண்டாகிப் படிந்து கிடக்கும் நீர்த் துளிகளெல்லாம் ஒரே அளவு பருமனுக இருப்பதில்லை; ஏனென்ருல் அவற்றிற்கான கருக்கள் ஒரே அளவு பருமனுக இருக்கமாட்டா. இவற்றுள் பெரியதாக உள்ளவை சிறிதாக வுள்ள நீர்த்துளிகளை விடப் பூமியின் கவர்ச்சித் திறனுல் வேகமாகக் கீழிறங்கும். இதனுல், கீழுள்ள நீர்த்துளிகளில் பட்டுக் கலந்து பெரிய நீர்த்துளிகளாகி விடுகின்றன. திரும்பவும் கீழிறங்கும்போது மற்ற நீர்த்துளிகளில் பட்டு

உருவத்தில் வரவரப் பருத்துக்கொண்டே வருகின்றன. இம் முறையில் மேகத்தைவிட்டுக் கீழிறங்கும்போது, இவை தகுந்த பருமனுள்ளனவாக ஆகிவிடுகின்றன. கீழேயுள்ள காற்றினூடே கீழிறங்கும்போது ஓரளவு நீராவியாக்கப் பட்டாலும், தகுந்த உருவங் கொண்டிருப்பதால் மழையாகப் பெய்கின்றன. ஆனால், மேகத்திலுண்டான நீர்த்துளிக ளெல்லாம் ஒரே பருமனுடையனவாக இருப்பின், மழை பெய்வ தற்கான வசதி ஏற்படாது. ஆகவே, மழை உண்டாவதற்குப் பெரிய பெரிய நீர்த்துளிகளும் ஆரம்பத்திலேயே ஏற்படுவது இன்றியமையாததாகும். இன்றேல், எவ்வளவு இருண்ட மேக மாக இருந்தாலும் மழையில்லாமல் ஏமாற்றி விடும்.

இன்னொரு முறையிலும் மழையுண்டாகிறது. கரிய மேகம் வெகுவாகக் குளிர்ந்து திடீரெனச் சுமார் (—40°C) வரை வெப்ப நிலை குறையுமானால் நீராவி நேரடியாக உறைந்து, பனிக்கட்டியாக மாறுகின்றது. இப் பனிக்கட்டித் துகள்களும் வெகு நுண்ணிய பொடிகளாகவே ஆரம்பத்தில் உண்டாகின்றன. ஆனால், குளிர்ச்சியின் மிகுதியால் பனிக்கட்டிப் பொடிகளின் மேல் நீர்த்துளிகள் வந்து படிவதால் உறைந்து, பனிக்கட்டி உருவத்தில் பருத்துக்கொண்டே போகின்றது. இவ்வாறு, உருவத்தில் பெருக்கமடைந்த பனிக்கட்டிகள் புவிக் கவர்ச்சியால் மேகத்தினூடே கீழிறங்கி மேகத்தை விட்டு அப்பால் காற்றினூடே கீழிறங்கி விடுகின்றன. காற்றின் வெப்பத்தால் இவை உருகிப் பல நீர்த்துளிகளாகி, மழையாகப் பெய்கின்றன. காற்றில் பூராவும் இறுகாதிருப்பின் அவை பனிக்கட்டிகளாகவே ஆகிவிடு கின்றன. இதைத்தான் அத்திக்காய் ஆலங்காய் மழை என்கிறோம்.

வெப்பப் பகுதிகளில் முக்கியமாக முதலில் குறிப்பிட்ட நீர்த்துளிகள் சேர்க்கை முறையால்தான் பெரும்பாலும் மழை பெய்கின்றது. குளிர்நாடுகளில் பெரும்பாலும் பனிக்கட்டி முறையாலேயே மழை உண்டாகிறது; ஏனெனில், குளிர்ப் பகுதிகளில்தான் நீராவி எளிதில் உறைந்து பனிக்கட்டி யாவதற்கான வசதி யுள்ளது.

மற்றெரு முறையாலும் மழை உண்டாகிறது. மேகத்தினூடே ஏற்படும் நீர்த்துளிகள் சிறியனவும் பெரியனவுமாக இருப்பதோடு பெரிய நீர்த்துளிகள் சேர்க்கை முறையால் தகுந்த பருமனை அடைவதற்கு வேண்டிய கன முள்ளதாக மேகமானது அமைந்திருக்கவேண்டும். மேகம் குறைந்த கனமுள்ளதாக இருந்தால், மேகத்தை விட்டுக் கீழிறங்கினதும், தகுந்த பருமன் இல்லாமற்போகவே காற்றின் வெப்பத்தால் நீராவியாகிவிடும். மேகம் வந்து கூடின போதிலும் பல மணி நேரங்கள் மேகமாக வானில் இருந்த போதிலும் மழையே பெய்யாது. இத்தகைய நிலையிலும் மழையாகப் பெய்வதற்கு இயற்கை ஒரு புதுமை முறையைக் கையாளுகிறது. சமுத்திரத்தில் அலைகள் ஒன்றோடொன்று மோதி எழும்போது நீர்த் துளிகள் சிதறி ஓடுகின்றன. இவற்றிலுள்ள நீர்த் துளிகள் வெகு நுண்ணியனவாக இருக்கும். செங்குத்தாகக் காற்றோட்டம் ஏற்படும்போது இந் நுண்ணிய நீர்த் துளிகள் காற்றோடு சேர்ந்து மேல் நோக்கிக் கிளம்புகின்றன. இவ்வாறு மேல் நோக்கிக் காற்றால் உயர்த் தப்பட்ட கடல் நீர்த் துளிகள் மேகத்தை அடைந்து, மேல் நோக்கி ஊடுருவிச் செல்லுகின்றன. மேகத்தில் ஆங்காங்கு நுண்ணிய நீர்த்துளிகள் படிந்து கிடக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. கடல் நீர்த் துளிகள், தாம் கொண்ட வேகம் காரணமாக மேகத்தினூடே மேல் நோக்கிச் செல்லும் போது மேகத்திலுள்ள நீர்த் துளிகளுடன் கலந்து சிறிது சிறிதாக உருவத்தில் பருத்துவிடுகின்றன. இவ்வாறு இவற்றின் கனம் மிகுதியானவுடன், புவிக் கவர்ச்சி மிகுதியால் மேல் நோக்கிச் செல்ல இயலாது; இந் நீர்த் துளிகள் கீழ் நோக்கிச் செல்லுகின்றன. இப்போதும் இவை மேகத்திலுள்ள நுண்ணிய கணக்கற்ற நீர்த் துளிகளுடன் கலப்பதால், உருவத்தில் மேலும் மேலும் பருத்து, மேகத்தைவிட்டுக் கீழிறங்குகின்றன. தகுந்த பருமன் கொண்டவைகளாக இருப் பதால் இவை மழையாகப் பொழிகின்றன. ஆக, தானாக மழையாகப் பெய்யாமல் மறையும் மேகங்கள், கடல் நீர்த் துளிகள் காரணமாக மழையாகப் பொழியும் விந்தையைப் பாருங்கள்!

இதுவரை நாம் அறிந்துகொண்டதென்ன? மழை பெய்வதற்கு மேகத்தில் சிறியனவும் பெரியனவுமான நீர்த் துளிகள் ஏற்படவேண்டும். அல்லது குளிர்ச்சி மிகுதியால் சின்னஞ்சிறு பனிக்கட்டிகள் உண்டாக வேண்டும். இந்த நுணுக்கத்தைக் கண்டுபிடித்தவுடன் மனிதன் செயற்கை முறையில் மேகத்தை பொழியச் செய்வதில் முனைந்து விட்டான். இம் முறையில் எண்ணிறந்த ஆராய்ச்சிகள் நடந்தன. மேகம் உண்டாவது சாதாரணமாக ஓரிரண்டு கல்கள் (Miles) உயரத்தில்தான். வானவூர்தியை மேகத்திற்கு மேலாகச் செலுத்தி, வானவூர்தியிலிருந்து அரை அங்குலப் பருமனுள்ள சிறு சிறு பனிக்கட்டித் துண்டுகளை மேகத்தின் மேல் வீசி எறிகிறார்கள். ஒவ்வொரு பனிக்கட்டித் துண்டும் அதைச் சுழ்ந்துள்ள நீராவியை (—40°C) வரை குளிர வைத்து விடுகிறது. இதனால், நீராவி உறைந்து சுமார் நூறாயிரங்கோடி நுண்ணிய பனிக்கட்டித் துகள்களை உண்டுபண்ணுகிறது. இவை ஒவ்வொன்றும் முன் விவரித்தபடி வர வர உருவத்தில் பருத்துக் கீழிறங்குகின்றன. மேகத்தைவிட்டுக் கீழிறங்கின தும் கீழுள்ள காற்றின் வெப்பத்தால் உருகி, பல நீர்த் துளிகளாகி மழையாகப் பெய்கின்றன. ஒரு பெரிய மேகமானது மழையாகப் பொழிய ஒரு சில பவுண்டு பனிக் கட்டித் துண்டுகளை வீசி யெறிந்தால் போதுமானது. இவ் விதமாக ஆஸ்திரேலியா, கனடா, தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களில் நூற்றுக்கணக்கான பரிசோதனைகள் நடத்தி மழை பெய்வித்துள்ளார்கள்.

ஆனால், ஒரு சந்தேகம்! இவர்கள் பனிக் கட்டிகளைத் தூவினதால் மழை பெய்ததா அல்லது மழை இயற்கையாகப் பெய்யும் தறுவாயில் இருந்தபோது பனிக்கட்டியைத் தூவினார்களா? ‘காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததா?’ என்று யாரும் கேட்கலாம் அல்லவா? அதற்கென்ன தக்க விடை கூறுவது? சொல்லுகிறேன். இம் மேகங்கள் போன்று அண்மையில் தோன்றிய பல மேகங்கள் மழை பொழியாமல் மறைய, பனிக் கட்டி தூவின மேகங்கள் மட்டும் மழையாகப் பெய்ததால் இவர்கள் செயற்கை முறையாலேயே மழை பெய்வித்துள்ளார்கள் என்ற முடிவு தெளிவாகின்றது.

மேகமானது ஆயிரக் கணக்கான சதுர கல் பரப்பில் கலந்திருந்தால், வானவூர்தியிலிருந்து பனிக் கட்டிகளைத் தூவும் முறைக்கு மிகுந்த செலவாகும். இதற்கென விஞ்ஞானிகள், 'சில்வர் அயோடைட்' (Silver Iodide) என்னும் பொருளைப் புகை வடிவில் தரையிலிருந்து அனுப்பு கிறார்கள். காற்றானது இப் புகையை மேல் நோக்கி மேகத்தி னிடமாகச் செலுத்துகிறது. இது மேகத்தை அடைந்தவுடன், பனிக்கட்டி போன்று தொழில் புரிகின்றது; மழையும் பெய் கின்றது. ஆனால், இதில் பல இடையூறுகளுண்டு. காற்றடிக் கும் திசை மாறிவிட்டால், போதிய அளவு 'சில்வர் அயோடைட்' மேகத்தை வந்தடையாவிட்டால், பயனற்ற தாகி விடுகிறது. எனவே, இம் முறையினால் தவறாமல் மழை பெய்விக்கலாம் என்று சொல்வதற்கில்லை. 'சில்வர் அயோடைட்' துகள்கள் எவ்வாறு தொழில் புரிகின்றன வென்று விஞ்ஞானிகள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், அதைப் பயன்படுத்தி மழை பெய்விக்கச் செய் துள்ளார்கள் என்பது மட்டும் உண்மை.

இப்போது, ஒரு புதிய முறையைக் கையாளுகிறார்கள். வானவூர்திகளில் தண்ணீரை ஏற்றிக்கொண்டு மேக மண்ட லத்திற்கு மேலாகச் சென்று இயந்திர வசதிகள் மூலம் நீர்த் துளிகளாகத் தெளிக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் இவ்வாறு நடத்திய பதினொரு ஆராய்ச்சிகளுள் பத்து ஆராய்ச்சிகளில் தவறாது மழை பெய்தது. மேகத்தின் கனம் 5000 அடிக்கு மிகைப்பட்டபோது கனத்த மழை பெய்தது. தண்ணீருக்குப் பதிலாகக் கடல் நீர் உப்பையும் பயன்படுத்துகிறார்கள். அதனை நுண்ணிய பொடிகளாகத் தூவினாலும், தண்ணீரைத் தெளிப்பது போன்ற விளைவு ஏற்பட்டு மழை பெய்கின்றது.

இந்தச் செயற்கை மழைக் கலையானது, துவக்க நிலை யிலுள்ளது என்பது உண்மை. விஞ்ஞானிகள் இன்னும் அதிகமாக உற்சாகங் காட்டி இக் கலையை வளர்த்தால், வேண்டும்போது வேண்டிய அளவு மழை பெய்யச் செய்யும் திறன் மனிதன் கைக்கு எட்டிவிடும். ஆயினும், இயற்கை யான மேகம் வானில் இருந்தால்தான் விஞ்ஞானி தன்

கைவரிசையைக் காட்ட முடியும் என்பதை மறந்து விடக் கூடாது. இயற்கையின் ஒத்துழையாமைப் போராட்டத்தை வெற்றிகரமாகச் சமாளிப்பதில் மனிதன் மற்றோர் அடி எடுத்து வைத்திருக்கிறான் என்பதே இதனால் நாம் அறியும் உண்மையாகும்.

---

இக் கட்டுரை 'கலைக்கதிரி'லிருந்து எடுக்கப்பட்டது.

### அருஞ்சொற் பொருள்

வான் சிறப்பு - மழைச் சிறப்பு. இயம்புவது - சொல்வது. அறிவியலார் - விஞ்ஞானிகள். ஆய்வோம் - ஆராய்வோம். திரை - அலை. கனைக்குது - ஒலிக்குது. பேதைமை-அறியாமை. பரிமாணம் - அளவு. கவர்ச்சி - இழுக்கும் ஆற்றல்.

### வினாக்கள்

1. மழை பெய்யுமுன் தோன்றும் அறிகுறிகளைக் கவிஞர் எவ்வாறு வருணித்துள்ளார்?
2. மழை எப்படிப் பெய்கிறதென விளக்குக.
3. இருண்ட மேகமும் மழை பெய்யாமல் ஏமாற்றிவிடுதற்குக் காரணம் யாது?
4. பெரிய பனிக்கட்டியுடன் மழை பெய்வது எதனால்?
5. கடல் நீர்த் துளிகள் எவ்வாறு மழை பொழியச் செய்ய உதவுகின்றன?
6. மேகம் தவறாது மழை பொழியச் செய்ய மேற்கொள்ளப் படும் முறைகளை விளக்குக.
7. செயற்கை மழைக் கலையில் மனிதன் அடையக்கூடிய முன்னேற்ற அளவு யாது?

# 15. " நாட்டு வாழ்க்கையே சிறந்தது "

(சொற்போர் மன்ற நிகழ்ச்சி)

புலவர் ஆர். ஏகாம்பரநாதன்

*[இக் கட்டுரையாசிரியர் தஞ்சை வீரராகவர் உயர்நிலைப் பள்ளியில் துணைத் தலைமை ஆசிரியராகவும், தலைமைத் தமிழாசிரியராகவும் பணியாற்றுகின்றார். இவர், அன்பும், நல்ல பண்பும், நேர்மையும் உடையவர். அருந்தமிழொடு ஆங்கிலம் வல்ல இவர், செகப்பிரியரின் நாடகங்கள் சிலவற்றைத் தமிழில் நூலாகத் தந்து தமிழ் வளர்ச்சி புரிபவர். தஞ்சையிலுள்ள பொதுநல இயக்கம் பலவற்றுள் மதிப்புமிகு இடம் பெற்றுப் பணிபுரிபவர்.]*

இடம் : *திருத்தவத்துறை கழக உயர்நிலைப்பள்ளி மன்றம்.*

காலம் : *பிற்பகல் 4-45 மணி.*

இருப்போர் : *பேராசிரியர் நக்கீரர் (தலைவர்), திருவாளர்கள் நச்சினார்க்கினியன், பரிமேலழகன், இளம்பூரணன், பேராசிரியன், அடியார்க்கு நல்லான், கல்லாடன் (சொற்போரில் பங்குகொள்ளும் மாணவர்கள்), ஏனைய ஆசிரியரும் மாணவ மாணவியரும்.*

*(திரு. ஞானசம்பந்தன் இறைவணக்கம் பாட நிகழ்ச்சி தொடங்குகிறது.)*

**நக்கீரர் :** (தலைவர்) அன்புள்ள ஆசிரிய நண்பர்களே! அருமை மாணவ மாணவியர்களே! இக் கூட்டத்தில் என்னைத் தலைமை தாங்கச் செய்த உங்கள் அன்புக்கு முதற்கண் என் நன்றி. "நாட்டு வாழ்க்கையே சிறந்தது" என்னும் பொருள் பற்றிய சொற்போர் இங்கு இப்போது தொடங்க இருக்கிறது. இப் பொருளை ஒட்டியும் வெட்டியும், தாங்கியும் தாக்கியும் மாணவர் சிலர் பேச இருக்கின்றனர். முதலில் திரு. நச்சினார்க்கினியனைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**நச்சினார்க்கினியன் :** தலைவர் அவர்களே! நண்பர்களே! வணக்கம். நான், "நாட்டு வாழ்க்கையே சிறந்தது" என்று பேச விழைகிறேன். நாட்டு வாழ்க்கை என்பது கிராம வாழ்க்கையைக் குறிப்பதாகும். சிலர் நகரத்தில் மோகங்கொண்டு திரளாக அங்குக் குடியேறுகின்றனர். அவ்வாறு குடியேறும் மக்கள் நகர வாழ்க்கையின் தீமை

களை நன்கு உணரவில்லை. உலகம் தோன்றிய ஆரம்ப காலத்தில் நகரம் தோன்றவில்லை. நகரத்தை உண்டாக்கிக்கொண்டவர் மக்களே. பல காரணங்களால் அவர்கள் நகரத்தை உண்டாக்கிக் கொண்டனர். எந்த நாட்டைப் பார்த்தாலும் அங்கு நகரங்கள் ஒரு சிலவாகவே இருப்பதைக் காணலாம். ஆனால், உலகில் கிராமங்களே ஏராளமாக உள்ளன. அங்கு மக்களும் மிகுதியாக வாழ்கின்றனர். இதனால் மக்கள் வாழ்க்கைக்கு ஏற்றது கிராமமே என்பது சொல்லாமலே விளங்கும்.

நகரங்கள் எவ்வாறு தோன்றின? தோன்றுகின்றன? வாணிகம், கைத்தொழில், அரசியல் அலுவலகங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றின் பெருக்கம் ஓரிடத்தில் ஏற்படுவதால் அங்கு நகரங்கள் தோன்றுகின்றன. செயற்கை அழகால் நகரங்கள் பொலிவடைகின்றன. அங்கு இயற்கை அழகைக் காணல் அரிது. வியாபாரப் பெருக்கால் மிகுந்த ஆரவாரமும். தொழிற்சாலைகளால் பலவித ஓசையும், மக்கள் நடமாட்டத்தால் மட்டில்லாத இரைச்சலும் நகர் எங்கும் நிரம்பியுள்ளன. அதனால், அங்கு அமைதி கெடும். நகரில் மக்கள் நெருங்கி வசிக்க நேர்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் பல குடும்பங்கள், சிறு சிறு இடங்களில் நெருக்கி யடித்துக் கொண்டு வாழ்கின்றன. தாராளமாகப் பரந்த இடத்தில் அவர்கள் வசிக்க இயலுவதில்லை. அதனால், தூய்மை கெடுகிறது; நோய்கள் உண்டாகின்றன. இத் துன்பங்கள் எல்லாம் கிராமங்களில் இல்லை. எனவே, கிராம வாழ்க்கையே சிறந்தது என்று நான் கூறுகிறேன்.

தலைவர்: இப்போது பரிமேலழகன் பேசுவார்.

பரிமேலழகன்: தலைவர் அவர்களே! தோழர்களே! வணக்கம். நண்பர் அவர்கள், நாட்டு வாழ்க்கையின் நன்மைகளைக் கூறுது, நகர வாழ்க்கையின் தீமைகளையே கூறிச் சென்றார். நான், 'நகர வாழ்க்கையே சிறந்தது' என்று பேசுகிறேன். நகர வாழ்க்கை இன்பமும் துன்பமும்

வாய்ந்ததுதான். இந் நாளில் எங்கும் நகரங்கள் பெருகி விட்டன. நாளுக்கு நாள் நகரங்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. மக்கள் நகரங்களில் விரும்பிக் குடியேறுகின்றனர். இஃது ஒன்றே போதும், நகர வாழ்க்கையே சிறந்தது என்பதற்கு. முன்காலத்தைப்போல் இக் காலம் இல்லை. முன்பு மக்கள் தொகை மிகக் குறைவு. இப்போது நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருகி வருகிறது. பெருகி வரும் தொகையை நோக்கும்போது, எவ்வாறு மக்கள் கிராமங்களிலேயே வசிக்க முடியும் என்று தோன்றவில்லை. எல்லோருக்கும் கிராமங்களில் போதுமான வேலை இல்லை. கிராமங்களை விடுத்து நகரங்களில் குடியேறினால் அவர்களில் சிலருக்குப் பிழைப்பதற்கு வழி இருக்கிறது.

அரசாங்க அலுவலகங்கள் எல்லாம் நகரங்களில்தான் இருக்கின்றன. அவ்வலுவலகங்களில் பணியாற்றுவோர் நகரங்களில்தான் வசிக்க வேண்டியவர்களாக உள்ளனர். முன்காலம்போல் இல்லாமல், இக் காலத்தில் வியாபாரம் விரிவு அடைந்திருக்கிறது. அதனால், பல்வேறு வியாபார நிலையங்களும், தொழிற்சாலைகளும், இயந்திர சாலைகளும், போக்குவரவு சாதனங்களும் பெருகலாயின. இவற்றின் பெருக்கத்தால் எவ்வளவு பேர் குடியேறினாலும் அவர்களுக்கு எல்லாம் வாழ்வு அளிக்கிறது நகரம். மற்றும் நமக்கு இக் காலத்தில் பலவகையான தேவைகள் உள்ளன. தேவைப்படும் பொருள்கள் எல்லாம் கிடைப்பது நகரத்தில்தான். எனவே, ‘நகர வாழ்க்கையே சிறந்தது’ என்பது என் துணிவான கருத்து.

தலைவர் : இளம்பூரணன் தன் கருத்தைத் தெரிவிப்பார்.

இளம்பூரணன் : தலைவர் அவர்களே ! நான் நச்சினார்க்கினியனை ஒட்டிப் பேசுகிறேன். நாட்டு வாழ்க்கையே மிக சிறந்தது. கிராமங்களில் ஆடம்பர வாழ்க்கைக்கு இடமில்லை. வீடுகள் அங்குப் பெரும்பாலும் சிறியனவும் எளியனவுமாக இருக்கும்; நெருக்கமாக இல்லாமல் தனித்தனியாகவே அமைந்திருக்கும். வீடுகளுக்கு முன்னும்

பின்னும் அகன்ற இடம் இருக்கும். அதில், மரம், செடி, கொடிகள் இருக்கும். அதனுல், நல்ல நிழல், காற்றைப் பெற முடிகிறது. வீட்டில் பின்புறம் பெரும்பாலும் கிணறும் தோட்டமும் உண்டு. கிராமத்தில் ஆங்காங்கே காய்கறித் தோட்டங்கள் நிறைந்திருக்கும். அதனுல் பச்சைக் காய்கறிகளும், கீரைகளும் தாராளமாக அங்குக் கிடைக்கின்றன. கிராம மக்களுக்கு வேளாண்மையே முதன்மையான தொழில். உழுது பயிரிட்டு அவர்கள் உணவுப் பொருள்களை உலகத்தாருக்கு அளிக்கிருர்கள். அநேகமாக ஒவ்வொரு வீட்டிலும் மாடு கன்றுகள் இருக்கும். அதனுல், தாராளமாகப் பால், தயிர், நெய் முதலியவை கிடைக்கின்றன.

உணவுப் பொருள்களும், காய்கறிகளும், பால், தயிர் முதலியனவும் எளிதில் கிடைப்பதால் கிராமத்தில் சிக்கனமாகவும், செழுமையுடனும் வாழ முடிகிறது. வீண் செலவுக்கு அங்கு இடமில்லை. எனவே, நாட்டு வாழ்க்கையே சிறந்தது என்பது என் கருத்தாகும்.

**தலைவர் :** பேராசிரியன் இனிப் பேசுவதைக் கேளுங்கள்.

**பேராசிரியன் :** தலைவர் அவர்களே ! நான், நச்சினுர்க்கினியன் கூற்றினை வெட்டிப் பேசுகிறேன். நகர வாழ்க்கையே சிறந்தது. நகர வாழ்க்கை நாகரிகம் நிறைந்தது. அங்கு மக்கள் வாழும் முறையும் நெறியும் வேறு. அவர்கள் தங்கள் வேலைகளிலேயே கண்ணும் கருத்து மாக இருப்பார்கள். அங்குப் பல வசதிகள் இருக்கின்றன. பெரிய மருத்துவ மனைகள் இருக்கின்றன; பல்வேறு கல்வி நிலையங்கள் இருக்கின்றன ; பலவகைப்பட்ட போக்குவரவு வசதிகள் உண்டு. மக்கள் எல்லோரும் அங்குச் சமமாகப் பழகுகின்றனர். நாடு, மொழி, மதம், குலம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்ருல் வேறுபட்ட மக்கள் பலர் வாழ்ந்தாலும், அனைவரும் வேறுபாடு இன்றி ஒன்ருகப் பழகுகின்றனர். பிற ஊர்களிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் இனம், மொழி, நெறி இவற்ருல் வேறுபட்ட மக்கள் பலர் நகரத்துக்கு வந்து போவதால்,

அங்கே பல்வேறு நாகரிகங்கள் வளர்கின்றன. புது வகைத் தொழில்களும் பெருகுகின்றன. எனவே, நகர வாழ்க்கையே சிறந்தது என்பதே என் முடிவு.

தலைவர்: அடியார்க்கு நல்லான் அவர் எண்ணத்தைத் தெரிவிப்பார்.

அடியார்க்கு நல்லான்: தலைவர் அவர்களே! நான், நண்பர் நச்சினார்க்கினியனைத் தாங்கிப் பேசுகிறேன். கிராமங்களில் தோப்பும் துரவும், மரமும் சோலையும், வயலும் குளமும் சூழ்ந்து, பசுமை நிறைந்து இயற்கை எழில் எங்கும் நிறைந்திருக்கும்.

கிராம மக்கள், வந்தவர்களை வரவேற்றுப் போற்றும் பண்புடையவர்; தங்கள் தொழிலைச் சரிவரக் காலாகாலத்தில் செய்பவர்; சோம்பலின்றி வாழ்பவர்; ஒற்றுமையாக வசிப்பவர்; பொறாமை, சூழ்ச்சி முதலியவற்றை அறியாதவர்; தம்மைப் போலவே பிறரையும் மதிக்கும் பண்புடையவர். இத்தகைய மக்களுடன் வாழும் கிராம வாழ்க்கையே சிறந்தது என்பது என் வாதம்.

தலைவர்: கல்லாடரே! நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

கல்லாடன்: தலைவர் அவர்களே! நான், திரு. பரிமேலழகனை ஒட்டிப் பேசுகிறேன். நகர வாழ்க்கைதான் சிறந்தது. மக்கள் அறிவை வளர்த்துக்கொள்வதற்குரிய வசதிகளும் வழிவகைகளும் நகரத்தில்தான் உண்டு. மக்களுக்குக் கண் போன்றது கல்வி அல்லவா? பள்ளிகள், கல்லூரிகள், நூல் நிலையங்கள், படிப்பகங்கள் ஆகியவை நகரங்களிலேயே மிகுதியாக இருக்கின்றன. அக் கல்வியைக் கற்க வசதிகள் வேண்டாவா? நாட்டுப்புறத்தில் வாழும் மக்களுக்கு இவ் வசதிகள் ஏது?

எனவே, கல்வி கற்கவும், அறிவைப் பெருக்கவும், தொழில் செழிக்கவும், செல்வம் திரட்டவும், நாகரிகம் வளர்க்கவும் ஏற்ற இடம் நகரமேயாகும்.

தலைவர்: இவ் விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. நச்சினார்க்கினியன் இப்போது வெட்டிப் பேசியோர்

எழுப்பிய வினுக்களுக்கு விடை அளிக்கும் முறையில் தம் கருத்தைத் தொகுத்துக் கூறுவார்.

நச்சினுர்க்கினியன் : தலைவரவர்களே ! நண்பர்களே ! "நாட்டு வாழ்க்கையே சிறந்தது" என்று கொண்டு நான் கூறிய கருத்துக்களைத் தாக்கியும் தாங்கியும், வெட்டியும் ஒட்டியும் நண்பர்கள் பேசியவற்றை நீங்கள் கேட்டீர்கள். என்னை வெட்டிப் பேசிய நண்பர்களின் பேச்சுக்களை வெட்டிப் பேச்சு என நான் கூறமாட்டேன், அவற்றிடையேயும் நல்ல சில கருத்துக்கள் இருந்த காரணத்தால். ஆயினும் அவர்களின் பேச்சுக்கள் என் கருத்தினை மாற்றிக்கொள்ளும் வகையில் அமையவில்லை என்பதை மட்டும் நான் கூருமலிருக்க முடியவில்லை. நகரத்தில் தொழிற்சாலை உண்டு; இயந்திரசாலை உண்டு. கல்விக் கூடம் உள்ளது; நூல் நிலையங்கள் உள்ளன; நாகரிகம் வளர்கிறது; தொழில்கள் பெருகுகின்றன—என்றெல்லாம் கூறி அவற்றைக் கொண்டு நகரமே சிறந்தது என்றனர் எதிர்ப்பக்கம் பேசிய நண்பர்கள். இவைகளால் எல்லாம் நகர வாழ்க்கை சிறந்தது என்று கூற முடியாது என்பதே என் முடிவான—அழுத்தமான கருத்தாகும். "பொம்மை கோபுரத்தைத் தாங்குவதாக நினைப்பது போல" என்று நாட்டவர் கூறும் உவமை எனக்கு இங்கு நினைவுக்கு வருகிறது. கோபுரத்தின் உதவியில் தான் நிற்பது பொம்மைக்குத் தெரிய வேண்டும். நாட்டு அடிப்படையில் நகரம் நிற்கவேண்டும்; நகரம் வளரவேண்டும். எனவே, நகர வாழ்க்கைக்கு நாட்டு வாழ்க்கையே அடிக்கல் என்பதை அப்பக்கத்து நண்பர்கள் உணர்ந்து திருந்துவார்கள் என நம்பி, என் உரைகளை முடித்துக் கொள்ளுகிறேன். எல்லோருக்கும் வணக்கம்.

தலைவர் : மாணவ மணிகளே ! உங்கள் சொற்போர் நன்முறையில் அமைந்திருந்தது. எடுத்த பொருளைத் தழுவி ஒவ்வொருவரும் பேசினர்; பேச்சில் கலந்துகொண்ட அனைவரையும் பாராட்டுகிறேன். எத்துறையிலும் வளர்ச்சி காணும் இந்நாளில் இரண்டு இடத்து வாழ்க்கை

யும் வேண்டுவனவே. நாட்டு வாழ்க்கையும் நகர வாழ்க்கையும் இரண்டும் சிறக்க வேண்டும். நாடு இல்லாமல் நகரமோ அன்றி நகரில்லாமல் நாடோ அமையாது. ஒன்றற்கொன்று முரண்பாடு இல்லாமல் தனித்தனியே இரண்டுமே வளரவேண்டும். பழமையும் புதுமையும் இணைந்து வளரவேண்டும். பழமையின் அடிப்படையாக விளங்கும் நாட்டு வாழ்க்கையும், புதுமை வளர்ச்சியின் உறைவிடமாக விளங்கும் நகர வாழ்க்கையும் சமநிலையில் வளரவேண்டும் என்பது என் கருத்து. இது சிறந்ததா, அது சிறந்ததா என்று முடிவுகட்ட முடியாத நிலையில் உங்கள் சொல்திறன் அமைந்திருந்தது. உங்கள் அனைவரையும் பாராட்டி, வாழ்த்தி, இச் சொற்போர் நிகழ்ச்சிகளை முடித்து வைக்கிறேன். உங்கள் அனைவர்க்கும் மறுமுறையும் என் நன்றி.

*(அனைவரும் எழுந்து நிற்க, செல்வி, கரும்படு சொல்லி "வாழிய செந்தமிழ்" பாட நிகழ்ச்சி முடிவுறுகிறது.)*

### அருஞ்சொற் பொருள்

முதற்கண் - முதலில். ஒட்டியும் - ஆதரித்தும், சார்ந்தும். வெட்டியும் - மறுத்தும். விழைகிறேன் - விரும்புகிறேன். மோகம் - ஆசை. திரள் - கூட்டம். பொலிவு - விளக்கம், அழகு. ஆரவாரம் - ஒலி. மட்டில்லாத - அளவில்லாத. வாய்ந்தது - அமைந்தது, பொருந்தியது. நனி-மிகவும். கூற்று - மொழி. நெறி - வழி. துரவு - கிணறு. விவாதம் - தருக்கம், சொற்போர். வெட்டிப் பேச்சு - பயனற்ற பேச்சு. முரண்பாடு - மாறுபாடு.

### வினாக்கள்

1. சொற்போர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் யாவர் ?
2. நாட்டு வாழ்க்கை சிறந்தது என்பதற்கு நச்சினார்க்கினியன் நவின்ற காரணங்கள் யாவை ?
3. நகர வாழ்க்கை சிறந்தது என்பதற்குப் பரிமேலழகன் பகர்ந்த காரணங்கள் யாவை ?
4. இளம்பூரணன் நச்சினார்க்கினியன் கருத்தை ஒட்டிப் பேசிய கருத்துக்கள் யாவை?
5. பேராசிரியன் நச்சினார்க்கினியன் கருத்தை வெட்டிப் பேசிய கருத்துக்கள் யாவை ?
6. அடியார்க்குநல்லான் நாட்டு வாழ்க்கை சிறந்தது என்பதனை எவ்வாறு எடுத்து இயம்பினான் ?
7. கல்லாடன் பரிமேலழகனை ஒட்டிப் பேசிய கருத்துக்கள் யாவை ?
8. நச்சினார்க்கினியன் இறுதியில் இயம்பிய மொழிகள் யாவை ?
9. தலைவர் முடிவுரையில் கூறியன யாவை ?
10. சொற்போர் மன்ற நிகழ்ச்சி ஒன்று எழுதுக.

# 16. போக்கு வரத்தும் பொருளாதாரமும்

டாக்டர் ப. நடராசன் அவர்கள், எம். ஏ., டி. லிட்.

*[இக்கட்டுரை யாசிரியர் தமிழகத்துப் பொருளாதாரத் துறை வல்லவர்களில் ஒருவராவர். சென்னை அரசாங்கத்தின் பொருளா தாரத்துறை அறிவுரை அறிஞராகப் பணிபுரிந்தவர். இப்பொழுது டில்லிப் பயன் துறைப் பொருளியல் ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்கு நராகப் பணியாற்றி வருகின்றார். சிறந்த தமிழ்ப் பற்றும், கட்டுரை வன்மையும் வாய்ந்தவர்.]*

"சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்தே
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்"

என்றார் அமரகவி பாரதி. காலத்திரையைக் கிழித்து நாளை நடப்பதை அறிந்து சொல்லும் ஆற்றல் வாய்ந்த அருட்கவி, இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளும், மாநிலங்களும் ஒன்றோ டொன்று கலந்து உறவாடும் காட்சியைக் கண்டார். இத் தகைய உறவும் நேசக் கலப்பும் உண்டாவதற்குப் போக்கு வரத்துச் சாதனங்கள் இன்றியமையாதனவாகும். எனவே, நடையும் பறப்புமுணர் வண்டிகளையும், ஞாலம் நடுங்க வரும் கப்பல்களையும் நாம் செய்ய வேண்டுமென்று அவர் ஆணை யிட்டார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே அவர் எதிர்கால நோக்குடன் அறிந்து பாடியவை இன்று மெய்யா யின. பாரதியாரின் மாணவப் பரம்பரையில் வந்த பாரதிதாச னாரும் பட்டணத்தை வந்து பார்க்கையில்,

"நடுவினில் புகையில் வண்டி ஓடும் நடைப் பாதைக்குள்
இடைவிடா தோடும் தம்மில் இயங்கும் ஊர்தி யெல்லாம்
கடலோரம் கப்பல் வந்து கணக்கற்ற பொருள் குவிக்கும்
படைமக்கள் சிட்டுப்போலப் பறப்பார்கள் பயனை நாடி"

என்ற காட்சியைக் காணலானார்.

இவ்வாறு போக்குவரத்து வசதிகள் அண்மைக் காலத் தில் பல்கினவேனும், நாட்டின் எத்தனையோ பாகங்களில் நேரான, போதுமான சாலைகள் இல்லை. ஏனைய நாடுகளோடு

ஒப்பிடுங்கால், இந்தியாவின் குறைபாடு இவ்வளவு என்று விளங்கும். மக்கள் தொகை விகிதமாய்ப் பார்க்கும்போது சராசரி ஆயிரம் பேருக்கு அமெரிக்காவில் இருபத்து மூன்று கல் அளவு சாலைகள் இருக்கின்றன; செருமானியில் பதினேழு கல்; பிரான்சில் பத்துக் கல்; சப்பானில் எட்டுக்கல் எனச் சாலைகள் இருக்கின்றன. இந்தியாவிலோ மொத்தம் சாலையின் நீளத்தையும் மக்கள் தொகையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஆயிரம் பேருக்கு அரை அல்லது முக்கால் கல் நீளம் தான் உண்டு. இந்தச் சாலைகளாயினும் நல்ல நிலைமை யில் இருக்கின்றனவா? அதுவும் இல்லை. மொத்தமுள்ள மூன்றிலக்கம் கல் நீளமுள்ள சாலையின் முக்கால் பங்கு பேருக் குத்தான் சாலையாகும். அதில் பெரும்பகுதி செப்பனிடப்படா தது. மழைக் காலங்களில் மனிதரோ, வண்டிகளோ செல்ல முடியாத நிலைமையில் நாட்டுப்புறங்களில் உள்ள சாலைகள் எண்ணிறந்தன. நல்ல சாலைகள் அன்றோ நாட்டின் உயிர் நாடி? சிற்றூர்களில் விளைகிற பொருள்களை நகரங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் அனுப்பவும், அச்சிற்றூர்களுக்கு இன்றியமையாத பொருள்களை, நகரங்களிலிருந்தும், அயல் நாடுகளிலிருந்தும் கொண்டுவரவும் நல்ல சாலைகள் வேண்டும். வாழ்க்கை வளர்ச்சிக்குச் சாலைகள் தீராத தேவை என்று உணர்ந்தே நம்முடைய முன்னோர்கள் அவற்றை அமைப்பதும், அவற்றின் ஓரங்களில் நெடுக மரங் கள் வளர்ப்பதும் தண்ணீர்ப் பந்தர், சுமைதாங்கி முதலியன ஏற்படுத்துவதும் அறச் செயல்களாமென வரையறுத்துக் கூறினர். அரசி மங்கம்மாள் அமைத்த சாலை, தமிழர்கள் இத்துறையில் எவ்வளவு ஊக்கம் காட்டினார்கள் என்பதற்கு அழியாத அறிகுறியாக இன்றும் பாண்டி நாட்டில் இருக் கின்றது.

பண்டைக் காலத்தில் போக்குவரத்துக்கள் தரைமட்டிலு மன்றி நீரிலும் கூடச் சிறந்திருந்தது. ஆனால், தரையில் வண்டிகளும், நீரில் மரக்கலங்களுமே போக்குவரவுச் சாதனங் களாயிருந்தன. "காலிலும் கலத்திலும்" என்ற சிலப்பதி காரச் சொற்றொடருக்கு உரைகூறப் போந்த அடியார்க்கு நல்லார், கால் என்ற சொல்லிற்குக் கால்களையுடைய சகடம்

அல்லது வண்டி என்றே பொருள் கொண்டுள்ளார். ஆனால், இக் காலத்தில் தரைச் சாதனங்களாகப் பழைய மாட்டு வண்டிகளோடு வேறு பலவும் தோன்றியுள்ளன. மாட்டு வண்டிகள் நாட்டுப்புறங்களில் பயிர்த் தொழிலுக்குத் துணை யாகவே பெரும்பான்மையாகப் பயன்படுகின்றன. நெடுவழி செல்வதற்கோ, நெடுந்தொலைவிலிருந்து பொருட்சுமைகளைக் கொண்டு வருவதற்கோ மாட்டு வண்டிகள் ஏற்றவையல்ல. பொறி ஊர்திகளாகிய ‘பஸ்’, ‘லாரி’, ‘நீராவி வண்டி’ முதலி யனவே ஏற்றவை. இவை இயங்கும் சாலைகளுள் நீராவி வண்டிச் சாலைகள் மிகமிகப் பயனுடையன என்று கூறலாம்.

இந்தியாவில் இப்பொழுது ஏறக்குறைய நாற்பதினாயிரம் கல் அளவு புகைவண்டி வழி இருக்கின்றது. இந்தச் சாலைகள் எல்லாம் அரசாங்கத்துக்கே உரிமையாவன. உயிரினங்களின் போக்குவரத்துக்கும், உள்நாட்டு வெளிநாட்டு வாணிகத்திற் கும் இச் சாலைகள் பெரும்பயன் தருவதோடு, இவற்றால் அர சாங்கத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ, ஐம்பது கோடி ரூபாய் வருமானமும் கிடைக்கின்றது. அவற்றுடன் போர்க் காலங்களில், இவைகளே ஒரு நாட்டுக்கு உயிர்நாடியாக இருக்கின்றன. நாற்பதினாயிரம் கல் நீளம் உள்ள புகைவண்டி வழி, இந்தியாவின் தேவைக்கு மிகவும் குறைந்ததேயாகும். வாணிகம் செழித்துப் பொருளாதாரம் வளரவேண்டுமானால் இன்னும் பல வகையாக அச் சாலைகள் தேவை. அவற்றோடு நீராவிப் பொறிகள் முதலிய பொறிகளையெல்லாம் நம் நாட்டி லேயே உண்டாக்குதல் வேண்டும். தேவையான பொறி களும், சாமான்களும் இல்லாமையால்தான் தற்பொழுது ஓர் இடத்தில் தேவையான அளவு கூலப் பொருள்கள் இருந்தும் அவற்றைக் கொண்டு செல்ல முடியாது மற்றோர் இடத்தில் வற்கடம் வாட்டுகின்றது. துணி முதலிய பொருள்களின் விலை, ஊருக்கு ஊர், மாகாணத்துக்கு மாகாணம் வேறு வேறா யிருப்பதும் இதனால்தான். போக்குவரத்து என்ற வெள்ளத் தின் ஒழுக்கு தேங்கி நிற்கின்றது. ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியா, புகைவண்டி வழியிலும் எவ்வளவு தாழ்ந்த நிலைமையிலிருக்கிறதென்பது விளங்கும்.

நூறு சதுரக் கல் பரப்புக்குச் செருமானியில் ஏறக்குறைய பதினெட்டுக் கல் அளவு. அமெரிக்காவில் எட்டுக் கல். இங்கிலாந்தில் இருபத்தொரு கல். பிரான்சில் பன்னிரண்டு கல் அளவு புகை வண்டி வழி இருக்கின்றது. ஆனால், இந்தியாவிலோ நூறு சதுரக் கல்லுக்கு இரண்டரைதான் இருக்கிறது. ஆகவே புகைவண்டிப் பாதைகளை மிகுதியாக்குவதோடு இழுப்புப் பொறிகள், வண்டிகள் முதலியவற்றிற்கு இறக்குமதியை எதிர்பார்ப்பதை நிறுத்தி நம் நாட்டிலேயே உண்டாக்க விரைதல் வேண்டும். இதற்குரிய முயற்சியை மத்திய அரசாங்கம் மேற்கொண்டிருத்தல் பாராட்டத்தக்கது.

பண்டைக் காலத்தில் போக்குவரத்துச் சாதனங்கள் நிலத்தில் மட்டுமின்றி நீரிலும் சிறந்திருந்தன என்பது முன்னே காட்டிய சிலப்பதிகாரச் சொற்றொடரால் விளங்கும். நிலப்போக்குவரத்துச் சாதனங்கள் எவ்வளவு சிறந்தவையோ அவ்வளவு சிறந்தவை நீர்மீது செல்லும் ஊர்திகளும். கப்பல் கட்டும் தொழிலில் தென்னாடு பழங்காலத்திலேயே சிறப்புற்றிருந்தது. திரைகடலோடி யவனம், சீனம் முதலிய நாடுகளுக்குத் தமிழர் சென்று வாணிகம் நடத்தினதோடு, இலங்கை, புட்பகம், சாவகம் முதலிய தீவுகளிலும் தங்கள் புலிக்கொடியையும், மீன் கொடியையும் நாட்டி அரசியல் வலிமையையும் அவர்கள் நிறுவியுள்ளனர். சங்க காலத்தில் தென்னாட்டுக் கப்பல்கள் கறி அல்லது மிளகொடு சென்று பொன்னொடு மீண்டதாக இலக்கியம் சான்று பகர்கின்றது. இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றிருந்த கப்பல் தொழில், பிற்காலத்தில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று. கரையோரம் கப்பலோட்டும் உரிமை பெற முயன்ற தமிழர் காலஞ்சென்ற வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் சிறையிருக்கலானார்.

இந்தியாவின் கடற்கரை ஏறக்குறைய நாலாயிரம் கல் நீளம் கொண்டது. எழுபது நூறாயிரம் டன் அரிசி, நிலக்கரி, மரத்தடி, உப்பு, எண்ணெய் முதலிய பொருள்களின் கடலோரக் கப்பல் போக்குவரத்து இன்று நடைபெறுகிறது. வெளி நாட்டு வியாபார வகையில் ஏறக்குறைய நானூறு

கோடி ரூபாய் கொண்ட சரக்கு கப்பல்களில் செல்கின்றது. ஆனால், இந்தியக் கப்பல்களுக்கு இவற்றில் இருபதில் ஒரு பங்குதான் உரியது. எனவே, நமது கப்பல் தொழில் இன்னும் எவ்வளவு மிகுந்த விரைவில் விரிவடைதல் வேண்டும் என்பது விளங்கும். அண்மையில், விசாகப்பட்டினத்தில் கப்பல் கட்டும் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. விரைவில் நமது கடலோர வியாபாரம் மட்டுமன்றி அயல் நாட்டு வியாபாரங்கூட மூந் நிறக் கொடி பறக்கும் இந்தியக் கப்பல்களில் நடைபெறு மென்று எதிர்பார்க்கலாம். அன்றுதான்,

"எட்டுத் திசைகளிலும் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்"

என்ற நம் புலவர் வாக்குப் பலிக்கும் நாளாகும்.

நீர் வழிகள் கடலோர வாணிகத்துக்கும், வெளி நாட்டு வாணிகத்துக்கும் மட்டுமே கருவியா யிருக்குமென்று கருதுவ தற்கில்லை. உள் நாட்டு வாணிகத்துக்கும் பெரும் பயனளிக் கும் நீர் வழிகளும் உள. அவைதாம் கால்வாய்களும் ஆழ முள்ள வற்றாத ஆறுகளும். தோணிகளிலும் படகுகளிலுமாய் நடக்கும் உள்நாட்டு வியாபாரம், பல காரணங்களால் சிறப் பானதாகும். போர்க் காலத்தும், சிறிது அதன் பின்னரும் புகை வண்டிகள் கிடைக்காமையால், ஊண், உடை முதலிய இன்றியமையாத பொருள்கள் இடமிருந்து இடம் பெயர்வ தற்குத் தடை உண்டான காலத்தே, இந்தக் கால்வாய்களே உடுக்கை யிழந்தவன் கைபோல் உதவின. ஆனால், ஆதியில் புகை வண்டிக் 'கம்பெனி'களின் தன்னலத்தாலும், பேராசை யாலும் இந்தக் கால்வாய்ப் போக்குவரத்து வளராது போயிற்று. "நாம் உழைக்கும் நாடு நமது நாடே" என்ற செம்மைக் கொள்கை கொண்ட சர் ஆர்தர் காட்டன் என்னும் ஆங்கிலேய எஞ்சினியர், கங்கை முதல் காவிரி வரை இணைக் கும் ஒரு கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவோ முயன்றார். ஆனால், புகைவண்டிக் 'கம்பெனி' முதலாளிகளின் கையில் பம்பரமாய் ஆடிய அன்றிருந்த வெள்ளையர் அரசாங் கம் ஆர்தர் காட்டன் அரு மொழிகளை எள்ளி நகையாடியது. இன்றுங்கூட 'முழுவதும் கற்றோம்' என்ற வீறுடைய சில

வல்லுநர்கள் இந்தக் கால்வாய் வழியின் எளிமைச் சிறப்பை அறிந்தார்களில்லை. இன்று சென்னை மக்களுக்கு உண்ண உணவும், அந்த உணவு சமைக்க விறகும் தடங்கலின்றிக் கிடைப்பது பக்கிங்காம் கால்வாயின் புண்ணியமே. வேதாரணியம் கால்வாயோடு பக்கிங்காம் கால்வாயை இணைக்க இருபத்தைந்து நூறாயிரம் ரூபாய்ச் செலவில் சென்னை அரசாங்கத்தில் ஒரு திட்டமிருக்கிறது. இது நடைபெற்றால், காக்கினாடா முதல் வேதாரணியம் வரை அறுநூறு கல் நீளம் கொண்ட ஒரு கால்வாய் உருவாகி, தென்னாட்டுக்கு மிகுந்த பயனளிக்கும். இதுபோன்று மேலைக்கரையோரத்திலும் செய்யவிருக்கும் ஆறு திட்டங்கள் உள்ளன. அவை முடிவடைந்தால் பொன்னானித் தாலூகா வழியாகக் கோழிக்கோடு முதல் கொச்சி முடிய நீண்டதொரு நீர்வழி தோன்றிவிடும்.

நீர்வழி, நிலவழிகளின்றி இன்று, வான் வழியும் போக்குவரத்தில் தனியிடம் பெற்றுவிட்டது. சீவகன் மயிற் பொறியில் சென்றதும், இராவணன் விண் தேரில் சீதையை எடுத்துச் சென்றதும் கவியோ கற்பனையோ எனவிருந்த காலம் மாறி, இன்று ஊர்திகள் விண்ணினை மின்னெனக் கிழித்து உலகின் நாலா பக்கங்கட்கும் செல்கின்றன. கண் மூடி விழிப்பதற்குள் வானவூர்தி காதம் பறக்கின்றது; காலையில் சென்னை! மாலையில் டில்லி! ஆள் போக்குவரத்தில் புகைவண்டிக்கும் வான ஊர்திக்கும் போட்டி மும்முரமாகிறது. பாரமிகுந்த சாமான்களை எடுத்துச் செல்வதிலும் போட்டி எழுவதற்கு இன்னும் பல நாளில்லை. நாளுக்கு நாள் மக்களுக்கும் வான் வழி விருப்பம் மிகுந்து வருகிறது.

பொருளாதார நிலை உயர வேண்டுமானால் போக்குவரத்து வசதிகள் பெருகவேண்டும். நீர்வழி, நிலவழி, வான் வழி என்ற மூன்று துறைகளிலும் வளர்ச்சி வேண்டும். மூன்று துறைகளும் ஒன்றோடொன்று முரணாது ஒற்றுமையோடு இயங்கவேண்டும். நாட்டின் பொருளாதார நலம் என்ற ஒரே அடைவை மேற்கொண்டு நடைபெறவேண்டும். வீண் போட்டியால் தனி மனிதர்க்கே யன்றி பொதுச் சமுதாயத்துக்குமே பெரு இழப்பு ஏற்படும். லாரிக்கும் புகைவண்டிக்கும்,

மோட்டாருக்கும் புகைவண்டிக்கும், அவற்றிற்கும் படகுக்கும், அவற்றிற்கும் வானவூர்திக்கும் போட்டி தோன்ருது காக்க வேண்டும். நிலவழிக்கும் நீர்வழிக்கும் வானவழிக்கும் இணங்கிய தொடர்பு வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்பது வெறும் அரசியல் மந்திரம் அன்று. போக்குவரத்துப் பொருளாதாரத்தில் ஆழ்ந்த நுட்பமும் அதுவே.

பொருளாதார வல்லுநர்கள் போக்கு வரத்தைப் பெரிதென்று மதியாத காலம் ஒன்றிருந்தது. போக்குவரத்துத் துறையில் உழைப்போரை வீணுக் குழைக்கும் மக்களென்று பதினெட்டாம் நூற்ருண்டில் பிரான்சில் தோன்றிய 'பிஸியக்கிராட்ஸ்' என்ற பொருளாதாரக் குழுவினர் கருதி வந்தனர். இன்றைய போக்கு வரத்துச் சாதனங்கள் அன்று தோன்றவில்லை. அவ்வப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் பொருள்களை ஆங்காங்குள்ள மக்கள் துவரத் துய்ப்பதே பொருளாதார அடைவாக இருந்தது. பின்னர்ப் பொறிக் கப்பல்கள் தோன்றின. புகை வண்டிகள் தோன்றின. போக்குவரத்துச் சாதனங்களிலேயே புரட்சியான மாறுதலேற்பட்டது. நாடுகள் ஒன்ருேடொன்று இணைக்கப்பட்டன. உள் நாட்டு வாணிகத்திலும் வெளி நாட்டு வாணிகம் மேலிடம் பெற்றது. பொருள்களை இடமிருந்து இடம் கொண்டு செல்வோரும் பொருள்களை ஆக்குவோருக்கு நிகரே என்ற உண்மையைப் பொருளாதார நூலாசிரியர்கள் வலியுறுத்தலாயினர்.

ஆஸ்திரேலியத் திராட்சைப் பழம் சென்னைப் பழக்கடையிலும், அஸ்ஸாமின் தேயிலை இலண்டன் சிற்றுண்டிச் சாலைகளிலும், அமெரிக்காவின் பென்சிலின் உலகத்தில் நாலா பாகங்களிலும் கிடைக்கின்றன. தானுய் நிற்றலென்பது இன்று தனி மனிதர்க்கும் முடியாதது. சமுதாயங்களுக்கும் முடியாத தொன்று. உரிமை என்பது அரசியலுலகில் எத்துணைத் தனியிடம் பெறினும் பொருளாதார உலகத்தில் வீணேயாகும். நாடுகள் ஒன்றையொன்று சார்ந்து நிற்றலே பொருளாதார வளர்ச்சிக்கு நிலையான பயனைத்தரும் நெறியாகும்.

தாயுமானவப் பெருமான் சொன்னவாறு 'வரும் போம்' என்னும் இரு நிலைமை மன்னுது ஒரு தன்மைத்தாகிய கடந்த நிலை எய்துவோர்க்குப் போக்குவரத்து இன்றியமையாத தன்றுதான். ஆனால், பொருளிலே மலிந்த இந்த உலக வாழ்க்கை வெற்றியுறவேண்டுமேல் போக்குவரத்துக் கருவிகளைப் பெருக்கிப் பயன்படுத்தியேயாக வேண்டும்.

### அருஞ்சொற் பொருள்

சுந்தரம்-அழகு. அமரகவி-அழியாத புகழுடைய கவிஞர். காலத் திரை-காலமென்னும் திரைச்சீலை. போக்கு-போதல். வரத்து-வருதல். சாதனம்-கருவி. ஆணை-கட்டளை. பல்கின-பெருகின. அறிகுறி-அடையாளம். பொறியூர்தி - இயந்திர வண்டிகள். வற்கடம் - பஞ்சம். உடுக்கை-ஆடை. செம்மைக் கொள்கை-நடுநிலைக் கொள்கை, சிறந்த கொள்கை. வீறு-பெருமை. முரணுது-மாறுபடாமல். துவர-முற்ற, முழுவதும். துய்ப்ப-பயன்படுத்த. மன்னுது-பொருந்தாது.

### வினாக்கள்

1. போக்கு வரத்துபற்றிய பாரதியார் பாடற்கு திரு. ப. நடராசன் அவர்கள் கூறும் விளக்கம் யாது?
2. இந்தியச் சாலையின் அமைப்பை ஏனைய நாடுகளின் சாலைகளோடு ஒப்பிடுக.
3. பண்டைத் தமிழர் அமைத்திருந்த சாலையின் சிறப்பை விளக்குக.
4. நம் நாட்டுச் சாலைகள் எங்ஙனம் முன்னேறுதல் வேண்டும்?
5. நீர்வழிப் போக்குவரத்து, தமிழ் நாட்டில் பழங்காலத்தே இருந்தது என்பதனைத் தக்க சான்றுடன் விளக்குக.
6. இந்தியக் கடற்கரையின் அமைப்பை விவரிக்க.
7. நீர்வழிப் போக்கு வரத்தின் நன்மைகள் யாவை?
8. சர் ஆர்தர் காட்டன் செய்த முயற்சி என்ன? அது தோற்றதற்குக் காரணம் யாது?
9. நம் நாட்டில் அமைக்க விருக்கும் நீர்வழித் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுக.
10. வான்வழிப் போக்கு வரத்தால் விளையும் பயன்களைக் கூறுக.
11. பண்டைக் காலப்பொருளாதார வல்லுநர் போக்கு வரத்துச் சாதனங்களைப் பற்றிக் கருதியன யாவை?

# 17. போர் நீக்கிய புலவர்

(கோவூர்கிழார்)

வித்துவான் த. சிவசங்கரனுர்

## காட்சி 1.

(நெடுங்கிள்ளி ஆவூர்க்கோட்டையைக் கைப்பற்றியிருக்கிறுன். நலங்கிள்ளி அக் கோட்டையைப் பெறுவான்வேண்டி அதனை முற்றுகையிட்டுள்ளான். கோட்டைக்குப் புறத்தே, குடிமகன் ஒருவனேடு கோவூர்கிழார் என்னும் புலவர் உரையாடுகிருர்.)

புல்வர்: நண்பரே! கோட்டைக்குள்ளிருந்து இடி முழக்கம் போன்ற ஒலி கேட்கின்றதே. உம் செவிகட்கு அவ்வொலி கேட்கவில்லையோ?

குடிமகன்: கேட்காமலென்ன! நன்ருகக் கேட்கின்றது.

புலவர்: எதனுடைய ஒலி அது?

குடிமகன்: யானைகள் பிளிறும் ஒலிதான் அது.

புலவர்: ஏன் அப்படி அவை பிளிறுகின்றன?

குடிமகன்: ஆவூர்க் கோட்டையை நலங்கிள்ளி முற்றுகையிட்டிருக்குஞ் செய்தியைத் தாங்கள் அறியவில்லையோ?

புலவர்: அச் செய்தியை நன்கு அறிவேன். அம் முற்றுகைக்கும் இம் முழக்கத்திற்கும் என்ன தொடர்பு?

குடிமகன்: கோட்டையின் உள்ளேயிருக்கும் யானைகள் கவளம் பெருமல் வருந்தித்தான் இப்படிப் பிளிறுகின்றன.

புலவர்: யானைகளின் நிலைகலங்கிய ஒலியைக் கேட்கும் போது உள்ளம் குழைகின்றதே! அந்தோ, மிகக் கொடுமை!

குடிமகன்: யானைகளின் நிலை இவ்வாறுள்ளது. அன்றிக் கோட்டை முற்றுகையிடப்பட்டிருப்பதால் உள்ளே வாழ்வோர் தம் குழந்தைகளெல்லாம் பாலின்றி அழுகின்றதையும், மகளிர் பூவின்றிப் பொலிவிழந்த கூந்தல் முடிவதனையும், இல்லங்கள் தோறும் அழுகுரல் எழுவதனையும் தாங்கள் அறிந்திருந்தால்.......

**புலவர் :** அறிந்திருந்தால் உம்மை அணுகிக் கேட்பேனு? இந்நிகழ்ச்சிகளைக் கேட்டதிலிருந்து என்னெஞ்சம் எல்லையில்லாத் துயரப்பட்டுத் துடிக்கின்றது. இந்த நிலை இப்படியே நீடிக்குமாறு விடுதல் கொடுமையல்லவா?

**குடிமகன் :** கொடுமைதான்! என்போன்ருேர் இதற்கு என்ன செய்ய இயலும்? தங்களைப் போன்ருேரால்தான் இக் கொடுமையைத் தவிர்த்துக் குற்றுயிராய்த் துடிக்கும் குடிமக்களின் குறையைப் போக்கமுடியும்.

**புலவர் :** நீர் சொல்வது உண்மைதான்! முற்றுகையிட்டிருக்கும் மன்னனை எதிர்த்துப் பொருது, ஒரு முடிவுக்கு வராமல் கோட்டையினுள்ளே ஒடுங்கியிருக்கும் கொற்றவனிடம் சென்று 'எது அறம்?' என எடுத்துச் சொல்லவும், 'இது மறமல்ல' என்பதை இடித்துக் கூறவும் இப்பொழுதே செல்கின்றேன்.

*(புலவர் கோட்டை வாயிலை நோக்கி விரைந்து செல்கிருர்)*

**குடிமகன் :** புலவர் பெருமானே! சென்று வாருங்கள்.

*(இருவரும் பிரிகின்றனர்.)*

## காட்சி 2

*(ஆவூர்க்கோட்டை அரண்மனையிலே நெடுங்கிள்ளி மக்கள் படும் துயர் அறியாதவனுக இனிது அமர்ந்திருக்கின்ருன். கோவூர் கிழார் கோட்டையுட் சென்று அவனைக் காணுகின்ருர்.)*

**நெடுங் :** புலவர் பெருமானே! வருக! இவண் அமர்க!

**புலவர் :** நின் வரவேற்பினை ஏற்க நான் வந்தேனில்லை.

**நெடுங் :** செந்தமிழ்ப் புலவரே! தங்கள் விடையில் சினம் தோன்றுகிறதே. அதற்கு அடிப்படையாக அமைந்தது ஏதேனும் இருப்பின் என்னிடம் தயங்காமல் இயம்புங்கள். அத்தகைய சிறுமை யாதேனும் யான் தங்கட்கோ, பிறருக்கோ செய்திருப்பின் அதனை இப்போதே சிந்தை கூசாமல் செப்புங்கள்!

**புலவர் :** ஆம்! சொல்லத்தான் வந்துள்ளேன். கோட்டைக்குள் நிகழும் நிகழ்ச்சிகள் எதனையும் நீர் அறியவில்லையோ!

நெடுங் : ஐய! தாங்கள் எவற்றைக் குறிப்பிடுகிறீர்கள் என்று எனக்குச் சற்று விளக்கிக் கூறவேண்டுகின்றேன்.

புலவர் : கோட்டைக்குள் கவலையின்றி இன்பமுடன் தங்கியிருக்கும் நும்மையொத்த அரசர்க்குத் துயர நிகழ்ச்சிகளைச் சுருங்கக் கூறி விளங்கவைக்க இயலாதுதான்! கூறுகிறேன், கேளும். உமக்குரிய யானைகள் நீர் நிலையிலே இறங்கி, உடல் கழுவப் பெருதும், கவளம் பெருமலும், கட்டுத் தறிகளில் கட்டுண்டபடி கையசைத்து இடிபோல் முழக்கி வருந்தும் நிகழ்ச்சியை நுமது கண்கள் காணவில்லையோ ? நுமது செவிகளும் உணராமல் போயினவா ? அதனையே உணராத நும்மால் ஆவூர்க் குழந்தைகள் பாலின்றி அலறும் ஓசையையும், இல்லங்கள் தோறும் எழும் அழுகுரலையும், மகளிர் பூவின்றிக் கூந்தலை வறிதே முடித்துள்ள காட்சியையும் எங்ஙனம் கேட்டிருக்கவும் கண்டிருக்கவும் கூடும்.

நெடுங் : புலவர் பெரும! இவற்றை யான் அறியவில்லை என்பது என் குற்றமே. ஆயினும், போர் நிகழ்ச்சிகளுள் ஒன்ருகிய ‘கோட்டை முற்றுகை’யால் இத்துயரெல்லாம் குடிமக்கட்கு ஏற்படுவது இயல்புதானே !

புலவர் : இயல்பு எது என்பதைப் பிறகு உரைக்கின்றேன். கோட்டையை நலங்கிள்ளி ஏன் முற்றுகையிட்டிருக்கின்ருர் ?

நெடுங் : ஆவூரின் உரிமையின் பொருட்டு!

புலவர் : ஆவூர் யாருக்கு உரியது ?

நெடுங் : ‘எனக்கு உரியது’ என்று கோட்டையைக் கைப்பற்றி இருக்கிறேன் நான். தனக்குரியது என்று முற்றுகையிட்டிருக்கின்ருன் அவன்.

புலவர் : தமக்குரியது என்று முற்றுகை யிட்டிருக்கிருர் நலங்கிள்ளி. நுமக்கு உரியது என்று நீர் கோட்டையைக் கைப்பற்றி அதனுள் அச்சமொழிந்து இனிது அமர்ந்திருக்கின்றீர் ! அப்படித்தானே !

நெடுங் : ஆம், அதிலென்ன ஐயம் ?

புலவர்: கோட்டையின் உரிமை முற்றுகையிட்டிருக்கின்ற அவருக்கா, அதனைக் கைப்பற்றியிருக்கும் உமக்கா என்பதை உறுதிப் படுத்தும் வழி நீவிர் இருவீரும் போர் புரிவதுதானே? அதனைச் செய்யாமல் நீர் கோட்டைக் கதவை அடைத்துக்கொண்டு குடிமக்களைத் துன்பமடையச் செய்வது பெருந்தவறு,

நெடுங்: அது எப்படித் தவறாகும்?

புலவர்: உரிமையின் பொருட்டு நிகழ்த்தும் உம் செயல் ஏற்றுக்கொள்வதற்கு உரியதன்று. குடிமக்களின் துன்பத்தைப் போக்குதலே கொற்றவர் கடமை. அஃது உணர்ந்த நீர் இங்ஙனம் செய்தல் சிறிதும் ஏற்புடைத்தன்று.

நெடுங்: பொதுநலம் கருதுவதால் உண்டாகும் கொடுமைகளைக் கண்டு அஞ்சி, அதற்காகக் கொண்ட கொள்கையை விடுத்தல் கொற்றவனின் குற்றமாகாதா? குவலயம் பழித்துக் கூறாதா?

புலவர்: ஒருபோதும் பழித்துக் கூறாது, உம் செயல் பொதுநலத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை நான் மறுக்கின்றேன். இத்தகைய உரிமை காக்கும் உம் செயலால் ஒரு குற்றமும் அறியாக் குடிமக்கள் உள்ளம் வருந்தி வாடுகின்றனர். இதனைத் தன்னலத்தின் விளைவன்றிப் பொதுநலத்தின் விளைவென்று எப்படி உரைக்க முடியும்? பொதுநலமே நும் நோக்கமெனின் ஊரார் வருத்தத்தை உணர்ந்து உடனே அதைப் போக்கியிருக்க வேண்டும். அதனை விடுத்து இன்பமுடன் இக் கோட்டைக்குள்ளே நீர் இருத்தல் நேர்மையன்று. நும் செயல் அறத்தின் பாற்பட்டதுமன்று; மறத்தின்பாற் பட்டதுமன்று.

நெடுங்: ஏன்? புலவர் பெரும!

புலவர்: நலங்கிள்ளி முற்றுகையிட்டதை உணர்ந்தபோதே ‘நீயும் சோழ இனத்தவனே, நீயே இக் கோட்டையை உரிமையாக்கிக் கொள்’ என்று கூறிவிட்டுக் கொடுத்திருப்பின் அஃது அறமாகும். அன்றி, ஆண்மையுடன்

அவனுடன் போர்புரிந்து வெற்றி பெற்று ஆவூர் மக்கள் படும் அல்லலைத் தீர்க்க முயன்றிருப்பின் அது மறத்தின் பாற்பட்ட செயலாகும். நும் செயலோ நாணுத்தக வுடைய தாகவுள்ளது.

நெடுங் : புலவரே! இந்நிலையில் என்னை யாது செய்யச் சொல்கின்றீர் ?

புலவர் : வேந்தே! அறம் போற்ற விரும்பின் ஆவூரை அவனுக்களித்துவிடு. மறம்போற்ற விரும்பின் கோட்டை யின் கதவைத் திறந்து போருக்குப் புறப்படுக.

*[சிந்தனையிலாழ்ந்துள்ள நெடுங்கிள்ளி மனந்தெளிந்தவனாய்]*

நெடுங் : புலவர் தலைமணியே! உம் பொன்னுரைகளால் அறத்தையும், மறத்தையும் அறிந்தேன். கோட்டைக் குள் இருந்து துயருறும் உயிர்களின் இன்னல் நீங்க இப்பொழுதே ஆவன செய்கின்றேன்.

*[நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையை விடுத்து உறையூர் நோக் கிச் செல்லல். புலவர் முகத்தில் தன் கடமையைச் செய்துவிட்ட களிப்பு காணப்படுகின்றது.]*

## காட்சி 3.

*[உறையூர் நெடுங்கிள்ளியால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை நலங்கிள்ளி முற்றுகையிட்டுள்ளான். இச்செய்தி உணர்ந்த கோவூர் கிழார் நெடுங்கிள்ளியைக் காணக் கோட்டையினுள் செல்கின்றார்; கொற்றவனைக் காணுகின்றார்.]*

நெடுங் : வண்டமிழ்ப் புலவரேறே! வருக! வணக்கம். இவ் விருக்கையில் அமர்க!

*(புலவர் இருக்கையில் அமர்கிறார்)*

புலவர் : வேந்தே! உறையூர் முற்றுகையை உணர்ந்த அளவிலே ஓடோடியும் வந்தேன்.

நெடுங் : என்னைக் காணும் பொருட்டா? அல்லது நலங் கிள்ளியைக் காணும் பொருட்டா ?

புலவர் : உம்மைத்தான்.

நெடுங் : மிக்க மகிழ்ச்சி. அறிய அறிவுரைகளை வழங்கும் ஆன்றோர் வருகைக்காக என்றும் காத்திருப்பவன் யான்.

புலவர்: எம்போன்ருேர்மீது பெருமதிப்பு வைத்துள்ள உம்மிடம் அன்றுபோல் இன்றும் ஒன்று கூறிச் செல்ல என்னுள்ளம் விழைகின்றது.

நெடுங்: புலவரே! தங்கள் நன்மொழியை இன்றுமட்டுமன்றி என்றுமே ஏற்றுக்கொள்ளக் காத்திருக்கும் என்னிடம் இப்போதே அதனை இயம்புங்கள்.

புலவர்: நீரும் நலங்கிள்ளியும்....

நெடுங்: ஆம்! களத்திலே கடும் போர் புரியும் காலம் நோக்கிக் காத்திருக்கின்ருேம். இம்மற நிகழ்ச்சி தங்கள் மகிழ்ச்சிக்கு உரியதுதானே?

புலவர்: இல்லை. மகிழ்ச்சிக்கு மாருனது.

நெடுங்: இல்லையென்ற சொல்லால் என் உள்ளத்தையும், ஒப்பற்ற முயற்சியையும் ஒரே நொடியில் உடைத்தெறிந்துவிட்டீர்களே?

புலவர்: உண்மை அதுவன்று! உங்களிடையே ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணம் என்னுள்ளத்தில் தோன்றி என்னை உம்மிடம் வருமாறு பிடர் பிடித்துந்தியது.

நெடுங்: அறவழி, மறவழி இரண்டினையும் அன்று எனக்கு அறிவித்த தாங்கள் இன்று எவ்வழியைக் காட்ட விரும்பி வந்துள்ளீர்களோ? யான் அதை அறிந்துகொள்ளலாமா?

புலவர்: அறிந்துகொள்ளும் இப்போதே. ஒரு குடியில் பிறந்த உங்களில் ஒருவருக்கு வாழ்வும் மற்ருெருவருக்குத் தாழ்வும் உண்டாக எவரேனும் விரும்புவரோ?

நெடுங்: ஒரே குடியில் பிறந்ததால் பகை மன்னரோடு இகல் விளைத்து அதனுல் வரும் புகழை அடைவதற்கும் தாங்கள் தடை விதிப்பீர்களென்று யான் கனவிலும் கருதவில்லை.

புலவர்: உண்மைதான்! என்ருலும் உம்முடன் பகை கொண்டவன் சோழ குலத்தவன்தானே?

நெடுங் : ஆம்.

புலவர் : சேர குலத்தவனுடனே, பாண்டிய குலத்தவனுடனே நீர் போர் தொடுக்க முனைந்தால் உம்மைத் தடுத்திருக்க மாட்டேன். உம்மோடு பகைமை கொண்டு போர் புரிய வந்திருப்பவன் உம்மைப்போல் ஆத்திமாலை சூடியுள்ள வனே. வேப்பந்தாரோ, பனந்தோடோ அணிந்தவன் அல்லன். உங்களிடையே போர் நிகழ்ந்தால் அப்போரின் முடிவிலே உங்களிருவரில் ஒருவர் தோல்வியுறுவது உறுதி. அத் தோல்வி சோழர் குடிக்கு ஏற்பட்ட தோல்வி யாகாதா? அத்தகைய இழுக்கு உமது குடிக்கு ஏற்படா மலிருக்க வேண்டுமாயின் இருவரும் போரில் வெற்றி பெறுதல் வேண்டும். ஒரு போரில் இருவரும் வெற்றி பெறுதல் இவ்வுலகில் இயலாததொன்று.

நெடுங் : (சிந்தித்து) இயலாதுதான்!

புலவர் : உங்கள் போரால் சேரரும் பாண்டியரும் சிந்தை மகிழ்வர். சோழர் குடியோ சீரழிந்து சிறுமையுறும். இதை நின் உள்ளம் ஒப்புமா? ஒப்பாதெனின் போர் செய்யும் எண்ணத்தை இப்பொழுதே விடுக. யான் வருகிறேன்.

நெடுங் : புலவர் பெருமானே! தன்னல நோக்குடன் தகை சால் சோழக் குடிப்பெருமையை மாய்க்கவிருந்த என்றன் அகக் கண்ணைத் திறந்தீர். தண்டமிழ்ப் புலவரே! தங்கள் பொன்னுரையை என்றும் மறவேன். (சிறிது நேரம் சிந்தித்து) ஆயினும் ஒன்றுரைக்க விரும்புவல்.

புலவர் : குடிப் பெருமை கருதும் கோமானே! உள்ளத் துதித்ததை ஒளிக்காமல் உரைப்பீர்.

நெடுங் : தங்கள் ஒப்பற்ற மொழியால் போரிடும் முயற்சியை யான் மட்டும் விடுத்தால் போர் எங்ஙனம் நீங்கும்? நலங் கிள்ளியும் தங்கள் கருத்தை உணர்ந்து செயலாற்ற முற்படினன்றே நுந்தம் முயற்சி பயனளிக்கும்.

புலவர் : இரவலர் இரப்பின் சேரன் தலைநகராம் வஞ்சியை யும், விறலியர் அவன் மகிழ ஆடி, 'பொற்பூ தருதி' என

வேண்டின் பாண்டியன் தலைநகராம் மாடமதுரையையும் மனமுவந்து ஈயும் நலங்கிள்ளி, யான் உரைக்கும் மொழியினை நன்றெனக் கொண்டு இன்றே முற்றுகை தவிர்ப்பான். ஐயம் சிறிதும் இல்லை. இன்னே ஏகுவன். [புலவர் புறப்பட்டுச் சென்று நலங்கிள்ளியிடம் நெடுங்கிள்ளியிடம் கூறியவாறு கூற அவனும் முற்றுகையிடுதலை விடுத்தான். புலவர் தனது நற்பணி நிறைவேறியமையை நினைந்து மகிழ்ந்து தம்மூர் செல்கிறார்.]

['இரும்பிடித் தொகுதி, இரும்பனை வெண்தோடு' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடல்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதியது.]

### அருஞ்சொற் பொருள்

பெறுவான் - அடைய. பிளிரும் - ஒலிக்கும். குழைகின்றது - நெகிழ்கின்றது. பொருது - போரிட்டு. இயம்புதல் - கூறுதல். குவலயம் - உலகம். மறம் - வீரம். விழைதல் - விரும்புதல். இழுக்கு - குற்றம்.

### வினாக்கள்

1. ஆவூர்க்கோட்டை முற்றுகையால் விளைந்த இன்னல் யாது?
2. கோவூர் கிழார் ஆவூர்க்கோட்டைக்குள்ளிருந்த நெடுங்கிள்ளியிடம் சென்றது சரி என்பதை விளக்குக.
3. கோவூர் கிழாரின் அஞ்சாத் தன்மையைப் புலப்படுத்துக.
4. ஆவூர்க்கோட்டைக் கதவை மூடி உள்ளிருந்த நெடுங்கிள்ளியின் செயல் தன்னலம் கருதியது என்பதைப் புலவர் எங்ஙனம் எடுத்துரைத்தார்?
5. உறையூர்ப் போரைத் தவிர்க்கக் கோவூர் கிழார் யாது செய்தார்?
6. உறையூர்ப் போரைத் தடுத்த செயலைக்கொண்டு புலவரின் நுண்ணறிவுத் திறனை விளக்குக.

TB 31 (8) N64
ஆவணக்காப்பகம் சென்னை-600 008
14/7/63

RSR/656